


# எமது எதிர்காலப் பயணம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்
ஆண்டறிக்கை 2023/24

# உள்ளடக்கம்

**கண்ணோட்டம்**
தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு / 02-03
அறிக்கைக்கான அறிமுகம் / 04
நிதியியல் சிறப்பம்சங்கள் / 06

**தலைமைத்துவம்**
தலைவரின் செய்தி / 08
பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு / 12
பணிப்பாளர்கள் சபை / 16
சிரேஷ்ட முகாமைத்துவ அணி / 20

**முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு**
தொழிற்படுகின்ற சூழல் / 26
எமது தொழிற்பாடுகள் / 26
எமது மக்கள் / 28
வாடிக்கையாளர் அனுபவம் / 31
சமூகங்களை மேம்படுத்துதல் / 33
நிலையாதார செயற்திறன் / 35
தரமான காப்புறுதி / 36
நிதி மீளாய்வு / 37
வியாபாரப் பிரிவு செயலாற்றுகை / 40

**கூட்டாண்மை பாரபத்தியம்**
கூட்டாண்மை ஆளுகை அறிக்கை / 45
தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவம் / 47

**நிதிக் கூற்றுக்கள்**
பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை / 50
சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை / 54
பணிப்பாளர்களின் பொறுப்புக்களின் கூற்று / 55
சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை / 56
நிதி நிலைமை அறிக்கை / 60
இலாபம் அல்லது நட்டக் கூற்று / 61
விரிவான வருமானக் கூற்று / 62
உரிமை மாற்றல் கூற்று / 63
காசுப் பாய்ச்சல் கூற்று / 64
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் / 65

**துணைத் தகவல்கள்**
அருஞ்சொற் களஞ்சியம் / 116
பத்து வருட பகுப்பாய்வு / 118
பயண வழி வரைபடம் / 120
மைல்கற்கள் / 122
கூட்டாண்மைத் தகவல்கள் / 124
கூட்டத்திற்கான அறிவித்தல் / 125
குறிப்புகள் / 126
பதிலாள் படிவம் / 127



# எமது எதிர்காலப் பயணம்

போட்டிமிக்க புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் முன்னேற்றங்கள் என்பன மூலம் இயக்கப்படும் தொழிற்துறையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய நாம், சாத்தியத் தன்மைகள் எல்லையற்றுக் காணக்கிடைக்கின்ற, மாறுதலடைவுமிக்க தசாப்தம் ஒன்றின் பாகமாகத் திகழ்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளோம்.

ஏற்றவாறு ஆகிக்கொள்ளும் தன்மையும், தொடர்ச்சியாகக் கற்றுக்கொள்ளும் இயலளவுகளும், எமது பங்குதாரர்குழு அனைத்துடனும் ஒருமித்து, முன்னோக்கிச் செல்கின்ற அதேவேளை, அவர்களின் தேவைகளைப் புரிந்து கொள்வதிலும், தீர்த்து வைப்பதிலும், நாம் அதிகரித்தளவில் தேர்ச்சிமிக்கவர்களாக உருவாகின்றோம் என்பதனை உறுதி செய்துள்ளன. வெறுமனே, உள்ளடக்குவது மாத்திரமன்றி, கூட்டுமுயற்சியாகவும் காணப்படுகின்ற விமானப் போக்குவரத்துத் துறையின் எதிர்காலத்தின் எப்போதும் மாறி வருகின்ற தோற்ற அமைப்பினை இயக்குவதில் ஏற்றதாக ஆகிக்கொள்ளும் தன்மை இன்றியமையாததாக அமைந்திருக்கும்.

ஆகையினால், எதிர்கால வளர்ச்சிக்கான எமது தோலைநோக்கு, அளவு கடந்த உறுதிமொழியினைக் கொண்டுள்ளதுடன், இம்மாறுதல் மிக்க பயணத்தில் எமது உபாயம் வினையூக்கியாக விளங்கும். எனவே. நிலைபெறத்தக்க முன்னேற்றம் கொண்ட எமது எதிர்காலத்தை நாம் திசைப்படுத்துகின்ற வேளையில், தொடர்ச்சியான வளர்ச்சியையும், அளவுகடந்த வாய்ப்பினையும் எதிர்பார்க்கின்றோம்.

SriLankan Airlines oneworld

## எமது நோக்கம்

**அக்கறை, அரவணைப்பு மற்றும் உபசாரத்துடன் வழங்கப்படும் தனித்துவமானதும், உண்மையானதும் மற்றும் இலங்கைக்கே உரித்தானதுமான அனுபவமொன்றைத் தேடும் பயணிகளின் விருப்பத்திற்குரிய விமான சேவையாகத் திகழ நாம் விரும்புகின்றோம்.**



## எமது குறிக்கோள்



இலங்கையின் நாமத்தை உலகெங்கும் பறைசாற்றுகின்ற, சுற்றுலாத்துறை, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றை ஆதரிக்கும் நிலைபேறான, இலாபகரமான விமான சேவையாக வளர்ச்சியடையும் அதேவேளை, எமது தனித்துவமான இந்து சமுத்திர அமைவிட அனுகூலங்களின் துணையோடு, விமானப்பயண மையம் ஒன்றை விருத்தி செய்தல்.

விமான சேவை மற்றும் துறைசார் நலனுக்காக, திறமை வாய்ந்தவர்களை உருவாக்கி, விசேடத்துவமான விமானத்துறை நிலையம் ஒன்றாகத் திகழ்தல்.

எமது தேசம் மற்றும் நாம் சேவையாற்றும் சமூகங்களுக்காக நீண்டகால, நிலைபேறான நலன்களை வரமாக்கும் நெறிமுறையான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் உறுதி பூண்டுள்ளோம்.

# அறிக்கைக்கான அறிமுகம்

இது, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் ஆண்டறிக்கையாகும். நிதியாண்டு 2023/24 1 ஏப்ரல் 2023 முதல் 31 மார்ச் 2024 வரைக்குமான செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

1979 ஆம் ஆண்டில் தனது தொழிற்பாடுகளைத் தொடங்கிய இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், பிரதானமாக, பரந்த அடைவிட வலையமைப்பிற்கான பயணிகள் மற்றும் சரக்குத் தொழிற்பாடுகளை நடத்தி வருகின்றது. இதற்கு மேலதிகமாக, குழுமம், வான் தளக் கட்டுப்பாட்டுச் சேவைகள், வானூர்த்திக்கு உள்ளக உணவு வழங்கல் சேவை, பொறியியல் பராமரிப்புச் சேவைகள் மற்றும் துணைச் சேவைகள் என்பன ஊடாக வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருகின்றது. விருது வென்ற விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அதன் உயர்தரம் மிக்க சேவை மற்றும் சௌகரியம், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை என்பனவற்றுக்கு, பல ஆண்டுகளாக அதன் உறுதியான நற்பெயரைப் பேணி வளர்த்து வந்துள்ளது,

விமான நிறுவனமானது, அதன் பிரதான மையமான கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து செயற்படுவதுடன், மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டில் 62 நாடுகளிலுள்ள 114 பயண இலக்குகளைக் கொண்ட ஒரு உலகளாவிய வலையமைப்பிற்கு வசதியான இணைப்புகளை வழங்கியது.

**நோக்கெல்லையும் வரையறையும்**
இவ்வறிக்கையானது, மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில், குழுவின் நிதிசார் மற்றும் நிதிசாரா அபிவிருத்திகளுடன் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்குகின்றது. தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் செயலாற்றம், இடர்நேர்வு முகாமைத்துவம், நிறுவன ஆளுகை மற்றும் நடைமுறைகள் என்பன பற்றி அனைத்தையும் இது உள்ளடக்கி, அறிக்கையிடுகின்ற காலப்பகுதியில் குழுமத்தின் முழுமையான நோக்கு மற்றும் அதன் செயலாற்றுகையை எமது பங்குதாரர்களுக்கு வழங்குகின்றது.

**நியமங்கள் மற்றும் தயாரிப்பின் கொள்கைகள்**
இந்த அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. கூட்டாண்மை ஆளுகையிலான எடுத்துரைப்பானது, பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வழங்கப்பட்ட அரச உடைமை நிறுவனங்களுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான வழிகாட்டிகள் மற்றும் செயற்பாட்டுக் கையேட்டுடனும் இணக்கப்பாடு கண்டுள்ளது.

**எதிர்காலத்தை நோக்கிய கூற்றுகள்**
இடர்நேர்வுகளையும், நிச்சயமின்மைகளையும் ஈடுபடுத்துகின்ற குழுமத்தின் எதிர்கால செயலாற்றுகை தொடர்பில் "எதிர்காலத்தை நோக்கிய கூற்றுகள்" இனையும் இவ்வறிக்கை உள்ளடக்குகின்றது. ஆகவே, உண்மையான பெறுபேறுகளும், குழுவின் எதிர்கால செயலாற்றலும் முன்னோக்கி நோக்குகின்ற கூற்றுகளில் ஆக்கப்பட்ட எதிர்வுகூறல்களில் இருந்து வேறுபடலாம். எனவே, அத்தகைய முன்னோக்கி நோக்குகின்ற கூற்றுகள் மீது அளவுகடந்து தங்கியிருக்க வேண்டாம் என வாசகர்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

குறிப்பு:
இந்த தமிழ் ஆண்டறிக்கை, ஆங்கில ஆண்டறிக்கையின் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பில் குழப்பங்கள் காணப்படுமிடத்து, ஆங்கில அறிக்கையை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



# நிதியியல் சிறப்பம்சங்கள்

| எண்ணிக்கை | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | 2024 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2024 ரூ. மில். | 2023 ரூ. மில். |
| **நிதியியல்** | | | | | |
| வருமானம் | ரூ. மில். | 339,591.65 | 369,470.04 | 333,614.09 | 365,171.77 |
| செயற்பாட்டுச் செலவினம் | ரூ. மில். | 312,929.37 | 329,856.52 | 312,739.14 | 330,568.53 |
| பரிமாற்றல் நட்டத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்) | ரூ. மில். | 28,147.92 | 43,371.56 | 22,360.59 | 40,743.58 |
| வருடத்திற்கான நட்டம் | ரூ. மில். | 7,925.01 | (71,306.66) | 3,870.86 | (73,621.53) |
| மொத்த சொத்துக்கள் | ரூ. மில். | 201,648.71 | 211,176.41 | 194,258.01 | 199,454.76 |
| பங்குதாரர் நிதியங்கள் | ரூ. மில். | (381,723.67) | (494,429.99) | (400,534.71) | (509,174.88) |
| **போக்குவரத்து** | | | | | |
| பயணிகள் கொள்திறன் | ASK மில். | | | 15,425.45 | 15,188.00 |
| ஏற்றிச்சென்ற பயணிகள் | RPK மில். | | | 12,198.65 | 11,793.72 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 79.08 | 77.65 |
| ஒட்டுமொத்த கொள்திறன் | ATK மில். | | | 2,072.57 | 2,044.45 |
| ஏற்றிச்சென்ற ஒட்டுமொத்த சுமை | RTK மில். | | | 1,394.50 | 1,355.99 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 67.28 | 66.33 |
| **ஊழியர் ஆக்கத்திறன்** | | | | | |
| சராசரி ஆற்றல் | எண்ணிக்கை | 6,648 | 6,203 | 5,935 | 5,440 |
| பணியாள் ஒருவருக்கான வருமானம் | ரூ. மில். | 51.08 | 59.56 | 56.21 | 67.13 |
| **விமானத் தொகுதி** | | | | | |
| ஒடுங்கிய உருவம் | எண்ணிக்கை | | | 12 | 12 |
| அகன்ற உருவம் | எண்ணிக்கை | | | 9 | 11 |
| வருட இறுதியில் சேவையிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | | | 21 | 23 |

**நிதிச் செயலாற்றம்**




**தொழிற்பாட்டுச் செயலாற்றம்**



**தலைமைத்துவம்**


தலைவரின் செய்தி / 08

பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு / 12

பணிப்பாளர்கள் சபை / 16

சிரேஷ்ட முகாமைத்துவ அணி / 20


# புதிய வாய்ப்புகளை நாடுவதற்கேற்ப **எமது எதிர்காலத்தை நாம் திசைப்படுத்துகின்றோம்**



# தலைவரின் செய்தி

**நாம் விமான நிறுவனத்தின் உலகளாவிய சேவைகள் வலையமைப்பு மற்றும் நிகழ்நிலை சந்தைப்படுத்தல் என்பன மூலமாக வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளையும், இலங்கை வெளிநாட்டவர்களையும் இலங்கைக்குள் வருகைதருவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.**

கொரோனா தொற்றின் காரணமாக, நீண்டகாலம் மந்தகதியில் இருந்த உலகளாவிய பொருளாதார வளர்ச்சி, இந்த நிதியாண்டில் வலுவான இடத்தைக் காட்டியுள்ளது. இந்த தொடர்ச்சியான மீட்பானது, விமானப் போக்குவரத்துத் துறையிலும் தென்பட்டது. இம் மீட்சி, உலகளாவிய விமானப் போக்குவரத்துக்களை அதிகரித்ததன் காரணமாக, தொழிற்பாட்டு ரீதியான சவால்களும் ஏற்பட்டன. பிரயாணிகளின் கேள்வி விரைவாக மீண்டதைத் தொடர்ந்து, விமானம், இயந்திரங்கள் பராமரிப்பு, உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய முக்கியமான பொருட்களின் வழங்குநர்களால் துரிதமாக முன்னோக்கிச் செல்ல முடியவில்லை. இலங்கையில் தொடர்ந்து அதிகரித்து வந்த உல்லாசப் பிரயாணிகளின் வருகையினால், இலங்கை விமானக் கைத்தொழில் துறையும் இந்த சவால்களை எதிர்கொண்டது. குறிப்பாக, விமானப் போக்குவரத்துச் சேவைகளின் அதிகரித்த கேள்வி, தேவையான சேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தின. விமானத்துறை இந்தச் சூழ்நிலையை நெகிழ்வுத் தன்மை, ஏற்றுக்கொள்ளல் தன்மை ஆகியவற்றுடன் ஓரளவு சமாளித்து, சாதகமான தொழிற்பாட்டுப் பெறுபேறுகளை அடைந்து கொண்டது. இந்தப் பாதையில் தொடர்ந்து மேடு பள்ளங்கள் காணப்பட்ட போதிலும், எமது அட்டவணையின் நம்பகத்தன்மை சில சந்தர்ப்பங்களில் எமது வரலாற்று ரீதியான உயர்தரங்களை விட சற்று சரிவடைந்தது.

### பெரும்பாக பொருளாதார சூழ்நிலை

விமானப் போக்குவரத்தின் தகைமைகள் சாதாரண நிலைக்குத் திரும்பியமையினால், பலதரப்பட்ட சவால்களை விமானப் போக்குவரத்துத் துறை எதிர்கொண்டது. திறமையான நிபுணர்களின் பற்றாக்குறை, விமானப்படையின் பற்றாக்குறை, உதிரிப்பாகங்கள், இயந்திரங்கள் என்பவற்றின் அதிகரித்த செலவுகள் என்பன இவற்றில் முதன்மையானவைகளாகும். தொற்றுநோய் காலப்பகுதியின் போது பல பணியாட்கள் தொழிலை விட்டு விலகியிருந்தனர். இதன் காரணமாக, தொழிலாளர் பற்றாக்குறை, குறிப்பாக, விமானிகள், பொறியியலாளர்கள், தரை கையாளும் ஊழியர்கள், விமானத்தை அனுப்புபவர்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், கணக்காளர்கள் மற்றும் பகுப்பாய்வாளர்கள் ஆகியோருக்குப் பற்றாக்குறை காணப்பட்டது.

அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, விமானப் படைகளை நிர்வகிப்பதில் சவால்கள் இருந்தமையினால், உலகளாவிய தகைமை பிரச்சினைகள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்க்கும் கடினமான சூழ்நிலைகளை ஏற்படுத்தின. விமானங்களின் குத்தகைக் காலம் முடிவடைந்தமையினால், அவற்றுக்காக புதிதாக மேற்கொள்ளப்பட்ட அகலமான உடலமைப்பைக் கொண்ட மற்றும் குறுகிய உடலமைப்பைக் கொண்ட விமானங்களை குத்தகைக்குப் பெறுவதற்கு 2022 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்ட போதிலும், விமான நிறுவனத்தினால் அகலமான உடலமைப்பைக் கொண்ட விமானத்தினைப் பாதுகாக்க முடியவில்லை. இதற்குரிய காரணம் என்னவெனில், தேசமும், தேசத்தின் விமான நிறுவனமும் நிதி இடரில் இருந்தமையினால், குத்தகைதாரர்கள் விமானங்களைக் குத்தகைக்கு வழங்க விரும்பவில்லை. உலகளாவிய சந்தையில் ஏற்பட்ட தட்டுப்பாடு A320/321 எயார்பஸ்,

**ரூ 339.6 பில்.**
**குழு வருமானம்**

**ரூ 39.7 பில்.**
**செலாவணி மாற்று இலாபங்களுக்கு முன்னர் குழும தொழிற்பாட்டு இலாபம் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத இயந்திர மற்றும் பழுதுபார்த்தல் செலவு**



நியோ விமானங்களுக்கான இயந்திரங்களைப் பராமரித்தல் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக அதனைப் பூர்த்தி செய்வதற்கு அதிக காலம் தேவைப்பட்டமையினால், விமானப்படைகளை தயார்நிலையில் வைத்திருப்பதில் பிரச்சினைகள் காணப்பட்டன. இதன் காரணமாக, எயார்லைன்ஸ் நிறுவனம், ஆயிரத்திற்கும் மேற்பட்ட விமானப் பயணங்களை கடந்த வருடம் இரத்துச் செய்தது. (அட்டவணைப்படுத்தப்பட்ட விமானப் பயணங்களில் இது 10% ஆகும்) இது, 60 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட செலவை ஏற்படுத்தியது.

**உபாயநுட்ப அணுகுமுறை**

விமானப் படைத் தடைகளைக் குறைக்கவும், திறன் மற்றும் தேவையான இடங்களைப் பராமரிக்கவும், விமான நிறுவனம் குளிர்கால உச்ச பருவத்தில் விமானங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டது. வருமானம் ஈட்டுதல் தொடர்பில் விமான நிறுவனம் அதன் உலகளாவிய இருப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தின. இதற்காக புதிய ஆட்களுடன் குறியீடு பகிர்வுகளை நிறுவுதல் மற்றும் வன்வேட் எயார்லைன்சுடன் ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களை வலுவாக்குதல், அதேபோன்று, கூட்டிணைப்பை மேம்படுத்துவதற்கும், வலையமைப்பை விஸ்தரிப்பதற்கும், ஏனைய பங்காளர்களுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டது. விமான நிறுவனம் அதனுடைய வரையறுக்கப்பட்ட திறனை மேம்படுத்துவதற்கும், வலுவான வழிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் இலாபத்தை அதிகரிக்கும் பொருட்டு தந்திரோபாய ரீதியில் செயற்பட்டது.

விமான நிறுவனம், அதன் முக்கியமான தொழிற்பாட்டு முறைகளைப் பதிலீடு செய்து மற்றும் புதுப்பித்து, அதனுடைய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் தரத்தை உயர்த்தியது. இவை, வருமானக் கணக்கியல், பராமரிப்பு மற்றும் பொறியியல், தொடர்ச்சியான விமான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சரக்கு மற்றும் வருவாய் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகளில் விமான நிறுவனம் தொடர்ந்தும் பணியாற்றி வருகிறது. விமானத்திற்கு வழங்கும் சேவைகளில் விமான நிறுவனம் இலங்கையின் துறையுடன் கூடிய உணவுத் தேர்வுகளைப் பிரசாரம் செய்வதற்கான விருது வழங்கும் பிரசாரம் ஒன்றை மேம்படுத்தி வருகிறது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால், விமான நிலையத்தைக் கையாளும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நாம் பாரிய ஆட்சேர்ப்புப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றோம். அதேநேரத்தில், உச்ச நேரங்களில் பரிசோதனைச் செயன்முறையைத் துரிதப்படுத்தவும், வரையறுக்கப்பட்ட விமான நிலைய இடத்தை அதி உச்ச அளவில் பயன்படுத்தவும் நாம் சுய பரிசோதனைச் சேவை வசதிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயணிகளுக்கு வசதிகளை வழங்கியுள்ளோம். தற்போது எயார்லைன்ஸ் நிறுவனம், விமான நிலையம் மற்றும் இலங்கை விமான அதிகார சபை ஆகியவற்றுடன் இணைந்து, பரிசோதனைக் கருமபீடங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது, அடுத்த குளிர்கால உச்சநிலை காலத்தில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையை உல்லாசப் பிரயாணத்துறையில் முன்னேற்றுவதற்கும், எயார்லைன்ஸ் நிறுவனம் முக்கிய பங்கு வகித்து வருகின்றது. இது, நாட்டிற்கும், விமான நிறுவனத்திற்கும் சிறந்ததாகும். நாம் விமான நிறுவனத்தின் உலகளாவிய சேவைகள் வலையமைப்பு மற்றும் நிகழ்நிலை சந்தைப்படுத்தல் என்பன மூலமாக வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளையும், இலங்கை வெளிநாட்டவர்களையும் இலங்கைக்குள் வருகைதருவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். நாம் இலங்கையில் இருக்கக்கூடிய பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் இயற்கைக் காட்சிகளை முன்னிலைப்படுத்தும் சந்தைப் பிரசாரங்களுடன், உள்நாட்டிற்கு பார்வையிட வருபவர்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளோம். இங்கு நம் குறிப்பாக, நாட்டின் நிலப்பரப்புகள் மற்றும் சாகச விளையாட்டுக்களைக் காண்பிக்கும் இடங்கள் என்பவற்றை சிறப்பாக எடுத்துக்காட்டி வருகின்றோம்.

**குழுமத்தின் செயற்திறன்**

இந்த வருடத்தின் போது, குழுமம் ரூபா 39.7 பில்லியன் தொழிற்பாட்டு இலாபத்தை பெற்றுள்ளது. (அந்நியச் செலாவணி பரிமாற்ற ஆதாயங்கள் மற்றும் திட்டமிடப்படாத இயந்திர திருத்தச் செலவுகள் என்பவற்றிற்கு முன்னராக) 2024 ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் ரூபா 7.9 பில்லியன் ஆகும்.

# தலைவரின் செய்தி தொடர்ச்சி.



இவ்வருடத்தின் போது, ரூபா 276.2 பில்லியன் பிரயாண செயற்பாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வருடத்தின் போது, சரக்குகளைக் கொண்டு செல்லும் நடவடிக்கை குறைந்தமையினால், சரக்கு வருமானம் ரூபா 31 பில்லியன் குறைவடைந்து 39% சரிவைக் காட்டியுள்ளது. இதற்குரிய காரணம், பயணிகள் போக்குவரத்து மீண்டமையினால், கைத்தொழில் துறையின் தாங்கும் திறன் அதிகரித்தது. எனினும், கொவிட் தொற்றுக்கு முன்னர் இருந்த மட்டத்தை விட சரக்கு வருமானம் நல்ல நிலையில் இருந்தது. வெளிநாட்டுச் சரக்குகளும் எண்ணிக்கையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்குத் திரும்பியமையினால், குழுமம் விமான முனையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளில் இருந்து மொத்தமாக ரூபா 21.2 பில்லியனைப் பெற்றுக்கொண்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது, 37% அதிகரிப்பாகும். (2022/23 : ரூபா 15.5 பில்லியன்) விமானத்திற்குள் பெறப்பட்ட உணவு வழங்கும் சேவையில் இருந்து பெற்ற வருமானம் ரூபா 6.4 பில்லியன் ஆகும். இது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 33% அதிகரிப்பாகும்.

குழுமத்தினுடைய தொழிற்பாட்டுச் செலவு ரூபா 43.6 பில்லியனினால் குறைவடைந்தது. இதற்குரிய காரணம், இது, நாணய மாற்று விகிதத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள், விமான எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட சரிவுகள் மற்றும் ஏனைய சிக்கனமான மற்றும் வினைத்திறனான நடவடிக்கையினால் ஏற்பட்டனவாகும்.

### முக்கியமான மைல்கற்கள்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், உயர்தர சேவையை வழங்கியமைக்காக பாராட்டப்பட்டு, இவ்வருடத்தில் பல விருதுகளையும் வென்றுள்ளது. இவற்றில் APEX IFSA சிறந்த விமானத்திற்குள்ளான உணவு மற்றும் பானங்கள் 2024 விருதினை எங்களுடைய இலங்கை உணவு சுவைகளுக்காகப் பெற்றுக்கொண்டது. மேலும், சந்தைப்படுத்தல் பிரிவில் 28வது பசிபிக் ஆசிய பிரயாண அமைப்பில் (PATA) தங்க விருதினையும் பெற்றுக்கொண்டது. இவ்விருது, எயார்லைன்ஸ் நிறுவனத்தின் உலகளாவிய சந்தைப்படுத்தல் தொடர்பு முயற்சிகளில் அதனுடைய சிறந்த சந்தைப்படுத்தல் சாதனையை அங்கீகரித்து வழங்கப்பட்டது. விமான நிறுவனத்தின் சரக்குகள் கையாளல் அணியும், அதன் வலுவாய நிலையை நிலைநிறுத்திக்கொள்ளும் வகையில் அராபிய கார்கோ விருதுகள் 2023 இல் “வளர்ந்துவரும் கார்கோ எயார்லைன்ஸ்” விருதைப் பெற்றது.

### விமான சேவைகளை நிலையாதார வகையில் வழங்குதல்

விமான நிறுவனம், கிரகத்தைப் பாதுகாப்பதற்கான அதன் பகிரப்பட்ட பொறுப்பில் 2050 ஆம் ஆண்டளவில் விமானப் போக்குவரத்து பூச்சிய காபன் வெளியேற்றத்தை அடைவதற்கான அதன் உறுதிப்பாட்டை தொடர்ந்தும் பேணி வருகிறது. இவற்றின் பெரும்பகுதி, கைத்தொழில்துறை மற்றும் உலகளாவிய தொழில்நுட்ப முயற்சிகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆயின், விமான நிலையம், உள்நாட்டு முன்னெடுப்புகளையும் கருத்திற் கொள்கின்றது. இந்த நடவடிக்கையானது, மீள் சுழற்சி செய்யப்பட்ட கடல் பிளாஸ்டிக்கில் இருந்து தயாரிக்கப்பட்ட சூழல்-நட்பு தரை விரிப்புகளை அறிமுகப்படுத்த வழிவகுத்தது. அதேபோன்று, சதுப்பு நிலப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு சமூகத்தை ஒன்றுதிரட்டும் முயற்சியில் பயிற்சி அளிப்பதற்காக நீர்கொழும்பு பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு “எக்கோ ரெயிலர்” பயிற்சி வழங்கப்பட்டது. எயார்லைன்ஸ் நிறுவனத்தின் புதிய முயற்சியான “மத்தக” திட்டம், விமான நிலையத்தின் கழிவுப் பொருட்களை பல்வேறுபட்ட நவீன வாழ்க்கைக்குப் பொருத்தமான தயாரிப்புகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது.

### வலுவான நிருவாகம்

எயார்லைன்ஸ் நிறுவனத்தின் வலுவான நிருவாகக் கட்டமைப்பு, நிறுவனத்தின் அடித்தளமாக அமைவதோடு, நிறுவனத்தின் உபாயநுட்ப பாதையை நீண்டகால விருத்தியை உருவாக்கும் வகையில் வழிநடத்துகிறது. இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனம், சமத்துவம், பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மை என்பவற்றை நிறுவனத்திற்குள் உருவாக்கக்கூடிய வகையில் நிருவாகத்தில் உயர் தரத்தைப் பேணுகிறது. இந்த அர்ப்பணிப்பு, அதனுடைய பணி நெறிமுறைகள் முக்கியமான பெறுமதிகள் மற்றும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் தொடர்பான கடுமையான கட்டமைப்பு என்பற்றின் மூலம் பிரதிபலிப்பதன் மூலம் அவை தொடர்ந்து மதிப்பிடப்பட்டு தரம் உயாத்தப்படுகிறது.

### எதிர்காலத் தோற்றப்பாடு

பெரும்பாகப் பொருளாதார குறிகாட்டிகளில் ஏற்பட்டுள்ள நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி ஆகியன ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனம்



வளர்ச்சியடைவதற்கு உகந்த சூழலை உருவாக்கியுள்ளது. சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி, பொருளாதாரத்தை மெருகூட்டுவதுடன், விமான சேவைகளைப் புதுப்பிக்கவும், வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கவும் வழிவகுக்கும். இந்திய துணைக்கண்டம் மற்றும் தூரகிழக்கு மற்றும் ஏனைய பிராந்தியங்களில் தன்னுடைய இருப்பை விரிவாக்குவதற்கும், இந்தப் பிராந்தியங்களில் இருந்து அதிகரித்து வரும் கேள்வியைப் பூர்த்தி செய்யவும், விமான நிறுவனம் முதன்மை சந்தைகளில் முதலீடு செய்ய ஒரு மையமாகவுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருககின்றன. அதனுடைய ஆரம்பக் கட்டமாக, மறுசீரமைப்பு முயற்சியில், இலங்கை அரசாங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய கடனைத் தீர்த்துக்கட்டுவதற்காக ரூபா 102.5 பில்லியன் மூலதனத்தைப் பயன்படுத்தியது. இந்தச் செயற்பாடானது, நிறுவனத்தின் மொத்த பொறுப்புக்களையும் 21% ஆல் குறைத்துள்ளது. இதனைவிட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், 2024 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து ரூபா 5 பில்லியனை பங்கு மூலதனமாகப் பெற்றது. இது, நிறுவனத்தினால் எதிர்கொள்ளப்பட்ட அவசர பணப்புழக்கப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. அரசாங்க வங்கிகளின் கடன் மறுசீரமைப்புத் திட்டங்களுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம், விமான நிறுவனத்தின் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கும், முதலீட்டாளர்களை ஈர்த்துக் கொள்வதற்குமான அதன் நடவடிக்கைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஒப்புதல்கள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணிகள், அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், எமது நிறுவனம் சேவை வழங்கும் என எம்மீது நம்பிக்கை வைத்துள்ளமைக்காக நான் எமது விசுவாசமுள்ள வாடிக்கையாளர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றேன். நீங்கள் எம்மீது வைத்துள்ள விசுவாசம், எமது தொடர்ந்து செல்லும் பயணத்தில் ஊக்கமளித்து வருகிறது. உபாயநுட்பமான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கிய பணிப்பாளர்கள் சபைக்கும், கஷ்டமான காலப்பகுதிகளில் விமான நிறுவனத்தை தனது திறமையான தலைமைத்துவத்துடன் வழிநடத்திய பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரிச்சர்ட் நட்டால் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன். குறிப்பிடத்தக்க தடைகளுக்கு மத்தியில், விமான நிறுவனத்தைத் தொழிற்பட தொடர்ந்து ஆதரவையும், அர்ப்பணிப்பையும் வழங்கிய முகாமைத்துவக் குழு மற்றும் ஊழியர்களை நான் பாராட்டுகிறேன்.

எனது ஆழ்ந்த பாராட்டுகள், இலங்கை அரசாங்கம், அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர், திறைசேரியின் செயலாளர், துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு தொடர்ந்து வழங்கி வருகின்ற சேவைகளுக்காகப் பாராட்டுத் தெரிவிக்கின்றேன். மேலும், எமது அனைத்துப் பங்குதாரர்களும், தொடர்ந்து வழங்கி வரும் சேவைகளையும் பாராட்டுகிறேன். சுற்றுலா மேம்படுத்துகை மற்றும் தேசிய பொருளாதாரத்தை உயர்த்துதல் ஆகிய எமது நிறுவனத்தின் விசாலமான இலக்கை நோக்கி நாம் முன்னேறி வருகிறோம். எனவே, நிச்சயமற்ற சூழ்நிலைகளில் பயணிப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு உங்கள் அனைவரினதும் ஆதரவும் கைகோர்த்தது.

**திரு. அசோக பத்திரகே**
*தலைவர்*

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

**எனினும், உலகளாவிய விமானக் கைத்தொழில்துறை தொடர்ந்தும் சவால்களைச் சந்தித்து வருகிறது. தொழிலாளர் பற்றாக்குறை, அதிகரித்து வரும் செலவுகள், விமானங்களின் பற்றாக்குறை என்பன பாரிய சவால்களாகக் கருதப்படுகின்றன.**

விமானக் கைத்தொழில் துறை இன்னுமொரு முக்கியமான வருடத்தைப் பூர்த்தி செய்வதுடன், கொரோனா தொற்றுக்குப் பின்னரான காலப்பகுதியில் அதனுடைய மீட்சியைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவதுடன், இலங்கையின் பொருளாதார மீட்புக்கு தொடர்ந்து பங்காற்றி வருகிறது. இந்தப் பின்னணியில் 2023/24 நிதி வருடத்திற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உடைய வருடாந்த அறிக்கையையும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் நான் முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கொவிட் தொற்றுக்குப் பின்னர் உலகப் பொருளாதாரத்தில் தொடர்ந்து மீண்டு வந்த ஆண்டாகும். விமானக் கைத்தொழில்துறை கொவிட் தொற்றுக்கு முன்னரான காலப்பகுதியில் அதனுடைய பயணத்தில் குறிப்பிடத்தக்களவு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திருந்தது. இலங்கையில் 2022 ஆம் ஆண்டு "பரபரப்பான சர்வதேச அறிக்கையிடல் காரணமாக, கைத்தொழில்துறை பாதகமான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டது. அத்துடன், பயண ஆலோசனைகளுக்கும் தீங்கினை விளைவித்தது. எனினும், கடந்த வருடம் பொது அறிவு மேலோங்கியதுடன், உல்லாசப் பிரயாணத்துறை மெதுவாகவும், படிப்படியாகவும் இந்த சூழ்நிலையைக் கடந்து வந்தது. மறுபுறம் உக்ரேன் மற்றும் காசா மோதல்கள் உலகளாவிய அடிப்படையில் விநியோக வலையமைப்புகளை அதிகமாகப் பாதித்ததுடன், அந்த சவால்கள் அனைத்துப் பொருளாதாரங்களிலும் செலவுகளை அதிகரிக்க வழிவகுத்தது.

தொடர்ந்து அதிகரித்து வந்த கேள்வியின் காரணமாக, பெரும்பாலான விமான நிறுவனங்கள் தமது விமான சேவைகளை மீள ஆரம்பித்ததுடன், துரிதமாக இலங்கைக்கும் அதனால் தகுதிகள் அதிகரிக்கப்பட்டன. விமான திறன் குறைபாடு காரணமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கொவிட் தொற்றுக்கு முந்திய காலத்தில் இருந்தது போன்று துரிதமாக விமான சேவைகளை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது. இதன் காரணமாக, எமது சந்தைப்பங்கு 50% ஆல் வீழ்ச்சிடைந்தது. எனினும், தொடர்ந்தும் இலங்கை பொருளாதாரத்தில் உல்லாசப் பிரயாணிகளை, வர்த்தகர்களை, வெளிநாட்டுப் பணியாட்களை மற்றும் பொருட்களை வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லவும், கொண்டுவரவும் பங்காற்றுகின்ற பாரிய விமான நிறுவனமாகக் கருதப்படுகின்றது. மேலும், பல்வேறுபட்ட சவால்கள், அதிகரித்து வந்த போட்டி என்பவற்றுக்கு மத்தியிலும், எயார்லைன்ஸ் நிறுவனம் தொடர்ச்சிசாக நேர்மறையான செயற்பாட்டு விளைவுகளை வழங்க பங்களிப்புச் செய்து வருகிறது.

**தொழிற்துறை நிலப்பரப்பு**

தொற்று நோய்க்குப் பின்ரான மீள் எழுச்சி 2023 இல் பிரயாணிகளின் சந்தை நிலவரத்தை தொடர்ந்து மேலெடுத்துச் செல்லக்கூடிய வகையில் அமைந்திருந்தது. உலகளாவிய ரீதியில் 2023 ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்து நெரிசல் 94.1% ஐ பதிவு செய்தது. இது, வலுவான மீட்புக்கு உதாரணமாக அமைந்தது. (IATA, செய்தி வெளியீடு 6, 2024). மக்கள் வர்த்தகம், கல்வி, விடுமுறைகள மற்றும் இன்னோரன்ன தேவைகளுக்காக தொடர்ந்து பிரயாணம் செய்தமையினால், உலகளாவிய பொருளாதாரம் தொடர்ந்து மீட்சி பெற்று வருகிறது.

எனினும், உலகளாவிய விமானக் கைத்தொழில்துறை தொடர்ந்தும் சவால்களைச் சந்தித்து வருகிறது. தொழிலாளர் பற்றாக்குறை, அதிகரித்து வரும் செலவுகள், விமானங்களின் பற்றாக்குறை என்பன பாரிய சவால்களாகக் கருதப்படுகின்றன. கொவிட் காலப்பகுதியின் போது பல்வேறுபட்ட ஆட்கள் கைத்தொழில் துறையையும், பயிற்சித் திட்டங்களையும் கைவிட்டுள்ளனர். இதன் விளைவாக, தொழிலாளர் பற்றாக்குறை, குறிப்பாக, விமான ஓட்டிகள், பொறியியல் ஊழியர்கள், விமான பணிக் குழுவினர், விமான நிலைய பணியாட்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட பற்றாக்குறை, இக்கைத்தொழில் துறையின் தொழிற்பாட்டுத் தகைமையில்

## ரூ 333.6 பில்.



**எயார்லைன் வருவாய**

## ரூ 33.9 பில்.



**எயார்லைன் வருவாய், செலாவனி மாற்று இலாபங்களுக்கு முன்னர் எயார்லைன் தொழிற்பாட்டு இலாபம் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத இயந்திர மற்றும் பழுதுபார்த்தல் செலவு**



தடைகளை ஏற்படுத்தியதோடு, வளர்ச்சித் திறன்களையும் குன்றச் செய்தது. இந்த சவால்கள், இலங்கை போன்ற குறைந்தமட்ட சம்பளம் வழங்குகையினால் மேலும் தீவிரமடைந்தது. மேலும். உலகெங்கிலுமுள்ள பாரிய நிறுவனங்களும் திறமையான தொழிலாளர்களை உள்வாங்கிக்கொண்டது.

இதேவகையான சவால்கள், விமானங்களுக்கும் பொருந்தும். தொற்று நோய் காலப்பகுதியில், உலகளாவிய அடிப்படையில் உற்பத்திகள் நிறுத்தப்பட்டன அல்லது தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் மந்தகதியை அடைந்தன. மேலும், பணிப்படையில் இருந்து திறமையான தொழிலாளர்கள் வெளியேறினர். இவற்றின் காரணமாக, புதிய விமானங்களை உருவாக்குவதில் தாமதம் ஏற்பட்டதோடு, உதிரிப்பாகங்களிலும் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த நிலைமை, புதிய விமான உற்பத்திகளில் மேலதிக தாமதத்தையும் ஏற்படுத்தியது. அதேவேளை, புதிய உற்பத்திகளுக்கான இயந்திரங்கள் சிறிய அளவில் உருவாக்கப்பட்டதன் காரணமாக, அவற்றின் மீது நம்பிக்கை கொள்வதற்கும் ஆட்கள் தயங்கினர். மேலும், உலகளாவிய வகையில் பொருட்களைக் கொண்டு செல்பவர்கள், விமானப்படையின் பெரும்பகுதிகள் இயந்திரப் பற்றாக்குறையின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்ததை அவதானித்தனர். இது, பெருமளவில் பழைய விமானங்களைப் பயன்படுத்துவதற்கு வழிசமைத்தமையினால், சந்தையில் பெரும் பிரச்சினைகள் எழுந்தன. சந்தைக்கு வந்த பெரும்பாலான ஒவ்வொரு விமானமும் பல்வேறுபட்ட விமான நிறுவனங்களினால் பயன்படுத்த முயற்சித்தமையினால் அவர்களில் பலர் இச்சூழ்நிலைக்கு முன்பு இரண்டாம் தர விமானங்களைக் குத்தகைக்குப் பயன்படுத்தாதவர்களாவர்.

நாம் எமது விமானங்களை மீளமைக்க முயற்சி செய்த காலத்தில், மேலே குறிப்பிட்ட சூழ்நிலை சவால் மிக்கதாக அமைந்திருந்தது. பல்வேறுபட்ட குத்தகையாளர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிதிநிலைமை மற்றும் நாட்டின் நிதிநிலைமையில் இருந்து வேறுபட்டன. ஆகவே, அவர்கள், நிதி இடர் குறைந்த ஏனைய நிறுவனங்களிடம் இருந்து விமான சேவைகளைப் பெற விரும்பினர்.

### நிலையான செயற்திறன்

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், இந்த நிதியாண்டில் எயார்லைன்ஸ் நிறுவனம் ரூபா 333.6 பில்லியனை வருமானமாகப் பெற்றுக்கொண்டது. அத்துடன், ரூபா 33.9 பில்லியனை தொழிற்பாட்டு இலாபமாகப் பெற்றது. (பரிமாற்ற ஆதாயத்திற்கு கணக்கிட முன்னரும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திருத்தச் செலவுகள் என்பனவற்றுக்கு முன்னரும்) எயார்லைன்ஸ் ரூபா 11.6 பில்லியன் தீர்மானிக்கப்படுவது, இயந்திரத் திருத்தங்களுக்காகச் செலவிடப்பட்ட பின்னரும் ரூபா 36.6 பில்லியன் தேறிய நிதிக் கட்டணங்களாகக் கருத்திற் கொள்ளப்பட்ட பின்னரும் ரூபா 3.9 பில்லியனை தேறிய இலாபமாகப் பதிவு செய்துள்ளது.

பிரயாணிகளிடம் இருந்து பெறப்பட்ட வருமானம் 6% ஆல் குறைவடைந்து, ரூபா 276.2 பில்லினாக வீழ்ச்சியடைந்தது. இங்கு குறிப்பிடப்பட்ட விமானக் கட்டணங்கள் அனைத்தும் USD அல்லது ஏனைய வெளிநாட்டு நாணயங்களை அடிப்படையாகக் கொண்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, குறிப்பிட்ட வருடத்திற்கான சராசரி பிரயாணிகளின் வருமானம் USD க்கு எதிராக 10% ஆல் வலுவடைந்தது. வெளிநாட்டு நிறுவனங்கள் தமது விமானங்களை அதிகரித்ததன் காரணமாக, வருடம் பூராகவும் போட்டி மிக்க சூழ்நிலை இருந்த போதிலும், இங்கு குறிப்பிடப்பட்ட தொகை, பிராந்தியங்களின் சில வேறுபாடுகளுடன் ஓரளவுக்கு அதிகரித்த தொகையாக அமைந்திருந்தது. நாம் எமது பிரயாணிகளுக்கான மேலதிக சேவைகளின் தரத்தை உயர்த்தியமையினால், துணை வருமானங்கள் ரூபா 10.8 பில்லியனினால் அதிகரித்தன.

இந்தக் குறிப்பிட்ட வருடம், சரக்குகள் தொடர்பில் மிகவும் சவால்மிக்க ஆண்டாகும். சாதாரண காலங்களில் பெரும்பாலான விமானப் போக்குவரத்துப் பயணிகளின் பொருட்கள் விமானங்களிலேயே கொண்டு செல்லப்பட்டன. ஆண்டு முழுவதும் பயணிகள் போக்குவரத்து மற்றும் விமானங்கள் குறைவடைந்ததன் காரணமாக, உலகளாவிய தரத்தின் திறனில் வலுவான வளர்ச்சி காணப்பட்டது. இது, போட்டி அதிகரிப்பை ஏற்படுத்தியதோடு, சந்தைப் பெறுபேறுகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. எவ்வாறாயினும், தற்போது இலாபம் அதிகமாகவோ அல்லது உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலோ உள்ளது. தொற்றுநோய்க் காலப்பகுதிக்கு முன்னரை விட சராசரியாக 50% ஆல் அதிகரித்துள்ளது. இந்த வருடத்தின் போது, சரக்குப் போக்குவரத்து ரூபா 31 பில்லியனைப் பெற்றுக்கொடுத்தது. இது, விமான நிறுவனத்தின் வருமானத்தில் சுமார் 9% ஆகும்.

ஏனைய வருமானங்கள் 26% ஆல் அதிகரித்து, ரூபா 26.1 பில்லியனைப் பதிவு செய்தது. இந்த வருமானங்கள் பெரும்பாலும் தரை மற்றும் ஏனைய விமானங்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளில் இருந்து பெறப்பட்டனவாகும். கடந்த வருடங்களோடு ஒப்பிடுகையில், இலங்கை சவால்களில் இருந்து மீண்டு வந்து கொண்டிருக்கின்றது.

இந்த வருடத்தின் போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், முக்கியமான தொழிற்பாட்டுச் சவால்களைச் சந்தித்தது. இது, குறிப்பாக, நிதியாண்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. முன்னர் குறிப்பிட்டது போன்று, இந்தக் கைத்தொழில் துறை விநியோக சங்கிலி மற்றும் விமான இருப்பு ஆகிய சவால்களினால் பாதிக்கப்பட்டுள்ளது. Leap 1A இயந்திரங்களுக்கான இடங்களைப் பெற முடியாமை மற்றும் உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை, திறமையான தொழிலாளர்களின் பற்றாக்குறை என்பன காரணமாக, முக்கியமான சோதனைகள் மற்றும் விமானத் தூண்டுதல்களில் ஏற்பட்ட தாமதம் என்பவற்றினால் விமான நிறுவனம் மிகமோசமாகப் பாதிப்படைந்தது.

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு தொடர்ச்சி.



இந்த வருடத்தின் போது, பிரயாணிகளின் கேள்வி அதிகரித்த அதேவேளை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் காணப்பட்ட திறன் கட்டுப்பாடுகள் காரணமாக, முழுமையான அனுலங்களைப் பெற முடியவில்லை. குத்தகைக் காலம் முடிவடைந்தமையினால், விமானப் படையை விட்டு வெளியேறிய விமானங்களைப் பதிலீடு செய்வதற்கு நாம் போராட வேண்டியிருந்தது. ஐந்து பரந்த - உடல் மற்றும் ஐந்து குறுகிய உடல் விமானங்களைக் குத்தகைக்கு எடுக்க 2022 இல் அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது. எனினும், இதனை நிறைவேற்ற முடியவில்லை. பரந்த உடலமைப்பைக் கொண்ட விமானங்களுக்கு அதிகமான கேள்வி இருந்ததன் காரணமாக, எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் குறிப்பிட்ட விமானங்கள் எதனையும் பாதுகாக்க முடியவில்லை. நாட்டின் நிலைமை மற்றும் நிறுவனத்தின் நிதிநிலைமை என்பவற்றினைக் கருத்திற் கொண்டு, குத்தகைதாரர்கள் இடரைச் சந்திக்க விரும்பவில்லை. ஏனெனில், அவர்களுக்கு ஏனைய நிறுவனங்களிடம் இருந்தும் அதிகமான கேள்வி காணப்பட்டன. எயார்லைன்ஸ் நிறுவனம், குறுகிய உடலமைப்பைக் கொண்ட விமானங்கள் மூலம் வெற்றியடைந்தது. இங்கு மூன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விமானங்களை மாற்றக்கூடியதாக இருந்தது. அத்துடன், அந்த விமானத்தில் ஒன்று 2024 இல் விமான சேவைகளை ஆரம்பித்ததுடன், இரண்டாவது விமானம் 2024 நடுப்பகுதியில் விமான சேவையை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது விமான நிலையத்திடம் இருக்கின்ற விமானங்களின் தொகை 21 ஆகும். இது, தற்காலிக விமானத்தை நீக்குகிறது. (குறுகிய உடலமைப்பைக் கொண்ட 12 விமானங்களும், அகலமான அமைப்பைக் கொண்ட 9 விமானங்களும்) கொவிட் 19 க்கு முன்னர் 27 விமானங்கள் (குறுகிய உடலமைப்பைக் கொண்ட 13 விமானங்களும், அகலமான உடலமைப்பைக் கொண்ட 14 விமானங்களும்) இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு குறிப்பிட்ட சூழ்நிலை கட்டாயமான பராமரிப்புப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கே நீண்ட காலம் எடுத்தமையினாலும், உலகளாவிய ரீதியில் விமானங்களைப் பரிசோதனை செய்வதற்கு வேண்டிய பொருட்கள் இல்லாமை காரணமாகவும் A320/321 இலக்கம் கொண்ட விமான பஸ்ஸிற்கான இயந்திரங்களில் காணப்பட்ட பராமரிப்புக் குறைபாடுகள் மற்றும் தட்டுப்பாடுகள், உலகளாவிய சந்தைகளில் காணப்பட்ட பற்றாக்குறை என்பன நிலைமையை மேலும் மோசமாக்கியதுடன், விமானங்களைத் தரையிறக்குவதிலும் சிரமங்களை ஏற்படுத்தியது. இதேபோன்று, உயர் எண்ணிக்கையான பணியாளர்களின் இருப்பு மற்றும் தொழிற்பாட்டிற்கான உயரிய செலவுகள் என்பன தொழிற்பாடுகளைக் கொண்டு நடத்துவதற்கு மேலும் சவால்களை உருவாக்கியது. இதன் காரணமாக, கடந்த வருடம் ஆயிரம் விமான சேவைகளை விமான நிறுவனம் இரத்துச் செய்ய வேண்டியிருந்தமையின் காரணமாக (திட்டமிடப்பட்ட விமான சேவைகளில் 10%) கடந்த வருடம் 60 மில்லியன் USD க்கு மேலதிகமான தொகை நட்டமாகப் பதிவு செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இந்த சாவல்களை எதிர்கொள்ள செயலூக்கமுள்ள அணுகுமுறையைக் கையாண்டதுடன், பல வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தியது. இவை, அதனுடைய விமான சேவை அட்டவணையை மேம்படுத்துதல், இலாபத்தை அதிகரிக்க விமானங்களை மீள் ஒதுக்கீடு செய்தல், அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய விமானங்களை குறுகியகால குத்தகைக்கு விடுதல் மற்றும் பணியாட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய உபாய நுட்பங்களை ஆராய்தல் என்பனவாகும்.

இந்த நிதியாண்டில் அதன் விமானத்தினுள் வழங்கும் சேவைக்கு விருது பெற்ற தயாரிப்புகளை மேம்படுத்துவதில் விமானச் சேவை கவனம் செலுத்தியுள்ளது. சர்வதேச பயணிகளுக்கு இலங்கையின் சிறந்த விருந்தோம்பல் மற்றும் இலங்கையர்களுக்கு "வீடு" என்ற உணர்வை வெளிப்படுத்தும் உண்மையான இலங்கை அனுபவத்தை வழங்க நாங்கள் முயல்வதால், விமான நிறுவனம் அதன் இலங்கை உணவுகளின் வரிசையை மேம்படுத்தியுள்ளது. இலங்கைக்கு போக்குவரத்து விரைவாக திரும்பியதால், தொற்றுநோய்க் காலத்தின்போது தொழில்துறையிலிருந்து பல அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் வெளியேறியமை விமானநிலையத்தில் இது சவால்களை ஏற்படுத்தியது. விமான நிறுவனம் நிலைமையை மேம்படுத்த கடுமையாக உழைத்து, ஆண்டு முழுவதும் நூற்றுக்கணக்கான தரை ஊழியர்களை பணியமர்த்திப் பயிற்சி அளித்தது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சேவை, வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் விமானமேறும் கூடங்கள் இல்லாததால், விமான நிறுவனம் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சுயமாக இருக்கை ஒதுக்கும் வசதிகளையும் சேர்த்தது. விமானமேறும் செயல்முறையை விரைவுபடுத்தவும், நெரிசல் கூடிய நேரங்களில் வரிசைகளைக் குறைக்கவும் இது எங்களை அனுமதித்தது. தற்போது, விமான நிறுவனம் விமான நிலையத்துடன் இணைந்து செயல்படுகிறது

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி (AASL) தொடர்ச்சியான பயணிகளின் வளர்ச்சியை நிர்வகிக்க அடுத்த ஆறு மாதங்களில் விமானமேறும் கூடங்களின் எண்ணிக்கையை 50% இனால் அதிகரிக்கவுள்ளது. இலங்கை விமான சேவையானது உலகளவில் இலங்கையை ஒரு சுற்றுலா தலமாக ஊக்குவிக்கும் மிகப்பெரிய நிறுவனமாகும். நாங்கள் பயணிக்கும் எல்லா இடங்களிலும் மற்றும் நாங்கள் பயணிக்காத பல இடங்களிலும் நமது விற்பனைக் குழுக்கள் உள்ளன, முக்கிய சுற்றுலாப் பயண செயற்படுத்துநர்களுடன் தொடர்புகொண்டு, இலங்கையை உலகம் முழுவதும் ஒரு சுற்றுலாத் தலமாக காட்சிப்படுத்துகிறோம்.



எங்களிடம் எங்கள் நிகழ்நிலை அலைவரிசைகள் உள்ளதுடன், மேலும் முழு இலங்கையையும் சிறப்பித்துக் காட்டி டிஜிட்டல் இருப்பை விரிவுபடுத்த நாம் கடுமையாக உழைத்து வருகிறோம்.,.

நவீன விமானப் போக்குவரத்தில் தொழில்நுட்பத்தின் முக்கிய பங்கைக் கருத்தில் கொண்டு, விமான நிறுவனம் காலாவதியாகிவிட்ட அதன் முக்கிய செயல்பாட்டு அமைப்புகள் பலவற்றினை மாற்றியமைத்து வருகிறது, இந்த மேம்படுத்தல் திட்டத்தில் வருமான முகாமைத்துவம், வருமானக் கணக்கீடு, சரக்கு, பராமரிப்பு, உதிரிபாகங்கள் இருப்பு முகாமைத்துவம், அடிக்கடி பறக்கும் திட்டம் மற்றும் விமானத் திட்டமிடல் போன்ற சில பெயர் குறிப்பிட்டுக் கூறக் கூடிய திட்டங்கள் உள்ளடங்கும். விமான நிறுவனம் 150க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை இயக்குவதுடன் விமான நிறுவனமானது, தானியக்க மற்றும் புதிய தொழில்நுட்பங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதை உறுதிசெய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

**முக்கியமான மைல்கற்கள்**
சவால்களுக்கு மத்தியிலும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ந்து விருதுகளை வென்றுள்ளது. இந்த ஆண்டுக்கான சில சிறப்பம்சங்கள்கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- PATA தங்க விருதுகள் 2023 - சந்தைப்படுத்தல்
- ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் APEX FOUR STAR™ MAJOR AIRLINE என்பதை தக்க வைத்துக்கொண்டது.
- சிறந்த Wi-Fi ஸ்ரீலங்கன் 2024 - மத்திய / தெற்காசியா
- சிறந்த உணவு மற்றும் பானம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2023 மத்திய / தெற்காசியா
- சிறந்த இருக்கை வசதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2023 - மத்திய / தெற்காசியா
- வருடத்திற்கான தகவல் தொழில்நுட்ப அணி விருது - தகவல் தொழில்நுட்ப விருதுகள் ஆசிய பெண்கள்
- சிறந்த சர்வதேச சரக்கு விமான நிறுவனம் - இந்தியா கார்கோ விருதுகள் - 2023

**நிலையாதாரத் தன்மையை ஒருங்கிணைத்தல்**
ஒருபோதும் இல்லாதவாறு சுற்றாடல் நிலையாதாரத் தன்மை முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், விமானத்துறைக் கைத்தொழில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதனால், எமக்கு ஏற்படும் பாதிப்புகளையும், அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கான தகவல் தொழில்நுட்பங்களையும் அறிந்து கொள்வது அவசியமாகும். IATA நிறுவனத்தின் நீண்டகால இலக்கான 2050 இல் பூச்சிய $CO_2$ உமிழ்வுகளைக் குறைக்கின்ற இலக்கை நோக்கி எயார்லைன் செயற்பட்டு வருகிறது. நாம் தொடர்ந்து வளங்களைத் திறனாகப் பயன்படுத்துதல், கண்காணிப்பு அறிக்கையிடல், உமிழ்களைச் சரிபார்த்தல் ஆகியவற்றை தொடர்ந்து மேம்படுத்துவதை உறுதி செய்வதோடு, SAF தொடர்பான அறிவு விருத்தியையும் கண்காணித்து வருகின்றோம். மேலும். IATA உடைய $CO_2$ Connect நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக, புதிய முன்னெடுப்புகளை மேற்கொண்டு அவற்றைக் கண்காணித்து வருகின்றோம்.

உள்ளூர் மட்டத்தில் எமது தயாரிப்புகளில் அதிக மீள்சுழற்சி மற்றும் சுற்றுச் சூழலுக்குப் பொருத்தமான தெரிவுகளை நாம் பயன்படுத்துகிறோம். மீள்சுழற்சி செய்யப்பட்ட சமுத்திர பிளாஸ்டிக்குகளில் இருந்து விமானத்திற்கு உகந்த தரை விரிப்புகள், வணிக வகுப்பிலுள்ள பிரயாணிகளுக்கான ஓய்வு உறைகள் மற்றும் தலையணை உறைகள் என்பவற்றைத் தயாரித்தலானது, எங்களின் புதிய முயற்சிகளில் ஒன்றாகும்.

இதேவேளை, பசுமை மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்திற்காக கொண்டாடப்படுகின்ற ஒரு நாட்டில் நாம் வாழ்ந்து வருகின்றோம். இந்தப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து பாதுகாப்பதில் பங்கெடுக்க நாம் உறுதிபூண்டுள்ளோம். மேலும், இந்த விடயத்தை எவ்வாறு சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பில் புதிய கற்றலை மேம்படுத்தி வருகின்றோம். சதுப்புநில மற்றும் கடல் புற்கள் பாதுகாப்பை நாம் ஆதரித்து வருவதோடு, கல்வி நிறுவனங்கள் இவை தொடர்பான அறிவுத் திறன்களை மேம்படுத்துவதற்கு அவர்களின் பாதுகாப்பு முயற்சிகளில் திறம்பட செய்ய தொடர்ந்து உதவி வருகின்றோம்.

சுற்றுச் சூழல் “ரெயிலர்கள்” போன்ற சுற்றாடலுக்கு உகந்த வாய்ப்புகளை சமூகத்திற்கு வழங்குவதன் மூலம் நிலையாதார அபிவிருத்தியைத் தக்க வைத்துக்கொள்ள உதவுகிறோம். இந்த முயற்சியானது, சதுப்புநில இட ஒதுக்கீட்டு சுற்றுப்புறத்தில் வாழுகின்ற சமூகங்களை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், எயார்லைன்ஸ் நிறுவனம் பெற்ற மீள்சுழற்சித் திட்டமான “மத்தக” என்பது, பெண்களின் மேம்பாட்டிற்கு உதவியது. விமான நிறுவனத்தின் அனைத்து வெளிக்கள செயற்பாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையாதார அபிவிருத்தி இலக்குகளைக் கருத்திற் கொண்டு திட்டமிடப்படுகிறது.

**முன்னோக்கிய நகர்வு**
இறுதி நிதியாண்டின் கடைசிக் காலாண்டுப் பகுதியில் தென்பட்ட சாதகமான பெரும்பாக பொருளாதாரத் தோற்றப்பாடு நம்பிக்கையைத் தருகிறது. இலங்கையின் பொருளாதாரம், திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளதுடன், சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்று வேகமாக வளர்ந்து வருகிறது. விமானக் கைத்தொழில் துறையில் இன்று வேகமாக வளர்ந்து வருகின்ற இந்தியாவுக்கு அருகாமையில் நாம் இருப்பதும் மேலே குறிப்பிட்ட இரண்டு காரணிகளும் அடுத்த 10 ஆண்டுகளில் விமான நிறுவனத்திற்கு சிறந்த எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்கும் எனக் கருதுகின்றோம். இது, எமது நிதிச் செயற்பாடுகளை மீளக் கட்டமைப்பதிலும், எதிர்காலத்தில் முதலீடு செய்வதிலும் தங்கியுள்ளது. ஒரு வலுவான விமான நிறுவனம், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்வதோடு, இது கூட்டு உறவையும் ஏற்படுத்துகிறது.

தற்போது அரசாங்கத்தின் முயற்சிகள் ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்தைத் தனியார் மயப்படுத்தும் முயற்சியில் உள்ளது. விமான நிறுவனங்களின் நீண்டகாலக் கடன்களில் 30% நீக்கப்பட்டு, எஞ்சியுள்ள கடன்களுக்கு ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளன. இதன் மூலம், புதிய முதலீட்டுக்கான வாய்ப்புக்களையும், நிலையாதார விருத்தியையும் ஏற்படுத்தும். இம் முயற்சி, பல்வேறு வழிகளில் நாட்டிற்கு முக்கியமான ஒன்றாக உள்ளது. நாம் எங்கு செல்ல வேண்டும் என்பது தற்போது தெளிவாகத் தெரிகிறது. அதன் முதல் படிகளை நாம் முதலில் எடுத்துள்ளோம். நாம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. ஏனெனில், எதிர்காலத்தில் ஆபத்துக்களும் சவால்களும் ஏற்படலாம். ஆனால், நாம் நமது ஆற்றல்களையும், உள்ளார்ந்த பின்னடைவுகளையும் சரியாகப் பயன்படுத்தி, இணைந்து செயற்பட்டால் சிறந்த எதிர்காலம் ஒன்று காத்திருக்கிறது.

**ஒப்புதல்கள்**
முடிவுரையில் நாம், நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர் சபை, எமது வர்த்தகப் பங்காளர்கள், இலங்கை அரசாங்கம் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி செலுத்துவதோடு, நாம் தொடர்ந்து செயற்பட அவர்களின் ஆதரவு கிடைக்குமென நம்புகிறேன். மேலும், எமது விசுவாசத்திற்குரிய வாடிக்கையாளர்கள், அவர்களின் எதிர்பார்ப்புகளை நாம் பூர்த்தி செய்யத் தகுதி உள்ளவர்கள் என நம்பி தொடர்ந்து எம்முடன் பயணித்தமையை நான் பாராட்டுகின்றேன். பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலும், நிலையான தொழிற்பாடுகளையும் எமது பெறுமதிகளையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கும் நான் பாராட்டுகிறேன். உலக பொருளாதாரத்துடன் இலங்கையின் இணைப்பை மீளமைப்பதில் ஸ்ரீலங்கன் எயார்லை நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கும் என நாம் நம்புவதோடு, அதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான மேம்படுத்தப்பட்ட வாயப்புக்களை உருவாக்க முடியும்.

**திரு. ரிச்சட் நட்டால்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

# பணிப்பாளர்கள் சபை

## 01

**திரு. அசோக பத்திரகே**

திரு. அசோக பத்திரகே அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பணிப்பாளர் சபைக்கு 2019 டிசம்பர் 16 ஆந் திகதி நியமிக்கப்பட்டு, அதன் பின்னர், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர், சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பீஎல்சி, ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பீஎல்சி, ஆசிரி சர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல் பீஎல்சி மற்றும் ஒடெல் பீஎல்சி ஆகிய நிறுவனங்களின் தலைவர் /முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவார். இவர், சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பீஎல்சி மற்றும் சொவ்ட்லொஜிக் லை.்.வ் இன்சூரன்ஸ் பீஎல்சி மற்றும் குழுமத்திலுள்ள ஏனைய கம்பனிகளுக்கும் தலைவராக சேவையாற்றி வருகின்றார். இவர், NDB கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் நிறுவனத்தின் தலைவருமாவார்.

இவர், இலங்கையின் கூட்டாண்மை உலகத்தின் தொலைநோக்குத் தலைவராவதுடன், இலங்கையின் முன்னணி பன்கூட்டாண்மையான சொவ்ட்லொஜிக் குழுமத்தின் ஸ்தாபக அங்கத்தவருமாவார். இவர் 50 கம்பனிகளை நடைமுறை நோக்கோடு முகாமைப்படுத்துவதுடன், 10,000 க்கும் அதிகமான பணியாட்களுக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கியுள்ளார். திரு. பத்திரகே அவர்கள், நான்கு செங்குத்துத் துறைகளான, சில்லறை மற்றும் தொலைத்தொடர்பு, சுகாதாரச் சேவைகள், நிதியியல் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஓய்வு மற்றும் வாகனம் ஆகியவற்றின் முன்னணி சந்தைப் பிரசன்னத்தைக் கொண்டு குழுமத்திற்கு மூலோபாய வழிகாட்டலை வழங்கி வருகின்றார்.

## 02

**திரு. மலிக் ஜே. பர்னாந்து**

திரு. மலிக் பர்னாந்து அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் 2024 ஜூன் 25 வரை கணக்காய்வுக் குழு உறுப்பினராகவும், மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் தலைவராகவும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் நிறுவன இடர் முகாமைத்துவக் குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

திரு. பர்னாந்து, MJF ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் இணைத்தலைவராகவும், MJF/ரெஸ்பிளென்டென்ட் சிலோன் நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளார். இது முதலாவது உள்ளூர் ஆடம்பர உல்லாசக் கழிப்பிட வணிக நாமமாகும். இது, நாடுபூராவுமான குறிப்பிடத்தக்க சுற்றுலா தளங்களை விருத்திசெய்வதோடு, நம்பத்தகுந்த பல்வேறு அனுபவங்களையும் வழங்குகின்றது. MJF ஹோல்டிங்ஸ் நிறுவனம் மற்றும் டில்மா பாதுகாப்பினூடாக உள்ளூர் சமூகத்திற்கும் சூழலுக்கும் பங்களிப்பு வழங்கப்படுகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், திரு. பர்னாந்து அவர்கள் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறைக் கூட்டமைப்பிற்கு தலைமைதாங்கி 'ஸ்ரீலங்காவை விரும்புங்கள்' பதாகையின் கீழ் ஒற்றைக் குரலுடன் தனியார்துறை உல்லாசப் பிரயாணத் துறையினை ஒன்றுதிரட்டினார்.

திரு. பர்னாந்து அவர்கள், அமெரிக்காவின் பெப்சன் கல்லூரியில் வணிக முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

## 03

**கலாநிதி ஸ்ரீதர் சாரிபுத்த ஹன்ச விஜயசூரிய**

கலாநிதி. ஹன்ச விஜேசூரிய அவர்கள் 2020 ஜனவரி 23 ஆம் திகதி முதல் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் உறுப்பினராகவுள்ளார், அவர் 2024 ஜூன் 25 வரை கணக்காய்வுக் குழு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் சேவையாற்றினார்.

இவர் தற்போது அக்ஷியாட்டா குழுமத்தின் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவதுடன், மலேஷியா, இந்தோனேஷியா, பங்களாதேஷ், கம்போடியா மற்றும் இலங்கை போன்ற பிராந்தியங்களின் சந்தைகளிற்கான குழுமத்தின் தொலைதொடர்பு செயற்பாட்டிற்கு தலைமை தாங்குகின்றார். அக்ஷியாட்டா என்பது ஆசியாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு குழுமங்களில் ஒன்றாகும்.

இவர் டயலொக் அக்ஷியாட்டா பீஎல்சி இன் பணிப்பாளர் சபையில் சேவையாற்றுவதுடன், அக்ஷியாட்டா குழுமத்தின் ஏனைய பல பிராந்திய துணைக் கம்பனிகளிலும் சபை அங்கத்தவராகவுள்ளார். 2016 ஆம் ஆண்டு வரை கலாநிதி. விஜேசூரிய அவர்கள் டயலொக் அக்ஷியாட்டா பீஎல்சி குழுமத்தின் (டயலொக்) குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார். இவர் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீஎல்சி இன் பணிப்பாளர் சபையின் ஓர் சுயாதீனப் பணிப்பாளராக சேவையாற்றுகின்றார். டொக்டர் விஜயசூரிய, குளோபல் மொபைல் இன்டஸ்ட்ரியின் ஆளும் குழுவான GSM அசோசியேஷன் குழுவில் பணியாற்றி வருகிறார்.

கலாநிதி விஜேசூரிய, 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய செல்லிடத் தொலைபேசித் தொழிற்துறைக்கு வழங்கிய உன்னதமான பங்களிப்பை அங்கீகரித்து "தலைவர்கள் விருது" இன் மூலம் GSM அமைப்பினால் கௌரவிக்கப்பட்டார். முன்னர் 2017 இல் கலாநிதி விஜேசூரிய, அதன் அங்குரார்ப்பண விருது ஆண்டில் "ஆசிய செல்லிடத் தொலைபேசித் துறைக்கான உன்னதமான பங்களிப்பு" விருதையும் பெற்றுக்கொண்டார். இவர், GSM அமைப்பின் பிராந்திய நலக் குழுமமான GSM ஆசிய பசிபிக்கின் முன்னாள் தலைவருமாவர். கலாநிதி விஜேசூரிய அவர்கள் 2008 இல் இலங்கையின் முன்னணி வர்த்தக சஞ்சிகையான LMD இனால் 'வருடத்திற்கான இலங்கையர்' என்று பெயர் சூட்டப்பட்டார். கலாநிதி விஜேசூரிய அவர்கள், இலங்கையின் முன்னணி வணிகச் சம்மேளனமான இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் கடந்தகால தலைவராவார்.

# 04

**திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா**

திரு. ஜே.எம். ஜயந்த் பெரேரா, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பணிப்பாளர் சபைக்கு 2021 மார்ச் 27 முதல் நியமிக்கப்பட்டதுடன், அதன் பின்னர், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சபையின் நிறுவன இடர் முகாமைத்துவக் குழுவின் தலைவர் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தினது கணக்காய்வுக் குழுவின் புரோட்டம் தலைவர் மற்றும் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் அங்கத்தவருமாவார்.

திரு. பெரேரா, நிதியியல் துறையில் 40 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இவற்றில் பெரும்பாலானவை சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் சபை மட்டங்களிலாகும்.

இவர், பட்டய வங்கியாளர்கள் நிறுவகத்தின் (இலண்டன்) சக அங்கத்தவர் மற்றும் இலண்டன், நியூ யோர்க், சன் பிரான்சிஸ்கோ, ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற சர்வதேச நிதியியல் மத்திய நிலையங்களில் பரவலான பயிற்சியினைப் பெற்றுள்ளார்.

இவர் சிங்கர் பைனான்ஸ் பீஎல்சி, மெக்லரன்ஸ் குழுமக் கம்பனிகள் - பிரதான சபை, இன்டர் ஓசியன் எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட், குவெஸ்ட் டெஸ்ட்டினேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், குவெஸ்ட் குரூஸஸ் லிமிட்டட், ஒடெல் பீஎல்சி, ஹொரண பிளான்டேஷன்ஸ் பீஎல்சி மற்றும் சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்களில் ஒரு சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

திரு. பெரேரா, ஒரு நீண்ட மற்றும் சிறப்புமிக்க தொழில் வாழ்க்கையினை ஹட்டன் நஷனல் பேங்க் பீஎல்சி (HNB) இல் கழித்ததுடன், இவர் திறைசேரி செயற்பாடுகள் உள்ளடங்கலாக சர்வதேச, வணிக அபிவிருத்தி மற்றும் கூட்டாண்மை கடன் ஆகியவற்றுக்கான சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் எச்என்பி அசூயரன்ஸ் பீஎல்சி இன் ஸ்தாபக பணிப்பாளரும் ஆவார். எச்என்பி இல் இவரது சேவைக்காலத்தின்போது, இலங்கை மத்திய வங்கியுடன் ஒருங்கிணைந்து சீர்திருத்தங்களைக் கொண்டுவரக் கூடியதாயிருந்தது. இவர் எச்என்பி மற்றும் டிஎவ்சிசி வங்கியினால் கூட்டாக உரித்துடைய எக்யுட்டி செக்கியுரிட்டீஸ் மற்றும் எக்யுட்டி பார்ட்னர்ஸ் உள்ளடங்கலாக எக்யுட்டி ஸ்டொக் புரொக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இந்தப் பதவிகளில் இவர் வணிக வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளார். இவர் லங்கா வென்சர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் எல்விஎல் எனர்ஜி இன் பணிப்பாளராகவும், இலங்கையின் கடன் தகவல் மையத்தின் சபை அங்கத்தவராகவும் சேவையாற்றியுள்ளார்.

# 05

**திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர**

திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பணிப்பாளர் சபைக்கு 2023 மார்ச் 16 இல் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர், ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சபைக்கு பணிப்பாளர் உடனாக திறைசேரியின் பிரதிநிதியாகவும், மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு, கணக்காய்வுக் குழு மற்றும் குழும இடர் குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் சேவையாற்றி வருகின்றார்.

திரு. அரந்தர அவர்கள் தொழில் ரீதியாக ஒரு வழக்குரைஞர் மற்றும் நிதி அமைச்சின் சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றுகின்றார்.

அவர், ஸ்ரீலங்கா டெலிகொம் (சேவைகள்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவராக உள்ளார்.

# பணிப்பாளர்கள் சபை தொடர்ச்சி.

## 06

**திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மால் ரத்நாயக்க**

திரு. லக்மால் ரத்நாயக்க அவர்கள் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு 2023 ஏப்ரல் 10 முதல் நியமிக்கப்பட்டு பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் மனித வளங்கள், ஊதியங்கள் குழு மற்றும் அதன் துணை நிறுவனங்களின் உறுப்பினராகவுள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் மற்றும் சுமார் 20 வருடங்களாக தனிப்பட்ட தொழிலில் பொது மற்றும் தனியார் கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களை ஒரு வழக்கறிஞராக பிரதிநிதித்துவம் செய்துள்ளதுடன், ஆரம்ப மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஒரு முன்னணி சட்டவுரைஞராக குடியியில் மற்றும் குற்றவியல் விடயங்கள் மற்றும் பொதுச் சட்ட வழக்காடல்களிலும் ஈடுபட்டுள்ளார்.

அவர் தற்போது 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியில் கூட்டுறவு அபிவிருத்திக்கான தேசிய நிறுவகத்தின் தலைவர் பதவியினை வகித்துள்ளதுடன், இவரது காலப்பகுதியில் தலைவராக கூட்டுறவு அபிவிருத்திக்கான தேசிய நிறுவகத்தின் (கூ.அ.தே.நி.) உட்கட்டமைப்பினை விருத்தி செய்ததுடன், கூ.அ.தே.நி. இனை ஒரு சர்வதேச தரமுடைய வசதியாக தரமுயர்த்தினார். மேலும் அவர், 2011, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் கென்குன் மெக்சிக்கோ, ஐக்கிய இராச்சியத்தின் மென்செஸ்டர் மற்றும் தென் ஆபிரிக்காவின் கேப் டவுன் ஆகிய இடங்களில் இடம்பெற்ற சர்வதேச கூட்டுறவு கூட்டணி பொது மன்றங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவம் செய்துள்ளார். அத்துடன், இவர் 2014 இல் கனடாவிலுள்ள கியூபெக்கில் இடம்பெற்ற சர்வதேச கூட்டுறவுக் கூட்டணி கருத்தரங்கில் நாட்டினைப் பிரதிநிதித்துவம் செய்தார்.

அத்துடன் அவர், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் தலைவர் (C.W.E.), இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட (தனியார்) இலங்கை துறைமுக முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைச் சேவைகள் நிறுவனத்தின் தலைவர், வரையறுக்கப்பட்ட (தனியார்) அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகச் சேவைகள் கம்பனி, வரையறுக்கப்பட்ட கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட (தனியார்) அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமம் ஆகியவற்றின் சபை அங்கத்தவரும் ஆவார்.

திரு. ரத்நாயக்க, தற்போது இலங்கை துறைமுக அதிகார சபையின் முழுவதும் உரித்துடைமையான துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட ஜயா கொள்கலன் முனையங்களின் தலைவர் பதவியினை வகித்து வருகிறார்.

## 07

**திரு. ஆனந்த டப்ளியூ அத்துகோரல**

திரு. ஆனந்த அத்துகோரல, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் பணிப்பாளர் சபைக்கு 2023 பெப்ரவரி 03 இல் நியமிக்கப்பட்டு, பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

இவர் (ஐக்கிய இராச்சியத்தின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தின்) இளமானி விஞ்ஞானப் பட்டதாரி, (அமெரிக்காவின் நோர்த் கரோலினா ஸ்டேட் பல்கலைக்கழகத்தின்) MTT. மற்றும் வணிக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர், வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை வங்கிகள் சங்கம் மற்றும் இலங்கையின் கடன் தகவல் மையம் ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் இலங்கையின் வங்கியாளர்கள் கழகத்தில் செயற்குழு அங்கத்தவரும் ஆவார். இவர் 40 வருடங்களுக்கும் மேற்பட்ட நீடித்த வங்கியியலில் பரவலான அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன், லண்டனின் ANZ கிரீன்லேஸ் பேங்கிங் குழுமத்தில் மற்றும் ஏனைய வெளிநாட்டுப் பகுதிகளில் மற்றும் ANZ கிரின்லேஸ் பேங்க் இலங்கையின் பிரதிப் பொது முகாமையார் மற்றும் இலங்கையின் மஸ்ரெச் வங்கி பீஎல்சி இன் வதிவிடப் பிரதிநிதியாகவும் சேவையாற்றினார்.

இவர், கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சின் முன்னாள் ஆலோசகரும் ஆவார். கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் ஒரு USAID நிதியளிக்கப்பட்ட திட்டத்தினது தனியார் துறைக்கான தொழில்நுட்ப முன்னெடுப்பின் அங்கத்தவராகவும் சேவையாற்றியுள்ளதுடன், நிதி மற்றும் வங்கியியலில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் வர்த்தக வங்கியியல் துறையின் ஒரு அங்கத்தவரும் ஆவார்.

இவர் தற்போது NAPPP இன் தலைவராகவும் சேவையாற்றி வருகின்றார். இவர் NDB கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட், NDB செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட், NDB செபிர் பார்ட்னர்ஸ் லிமிட்டட், மொரீசியஸ், யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா பீஎல்சி, யுனிமோ என்டர்பிரைசஸ் லிமிட்டட், கொழும்பு சிட்டி ஹோல்டிங்ஸ் பீஎல்சி., ஆர்னி ஹோல்டிங்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்டஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் உனவட்டுன புட்டிக் ரிசோர்ட் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் சுயாதீன நிறைவேற்றுனர் அல்லாத பணிப்பாளரும் ஆவார்.

இவர் NDB பேங்க் பீஎல்சி மற்றும் டிஎச்பிஎல் லிமிட்டட் ஆகியவற்றின் முன்னாள் சுயாதீன நிறைவேற்றுனர் அல்லாத தலைவராவார். இவர் டிஎவ்சிசி பேங்க் பீஎல்சி, டிஎவ்சிசி வர்தன பேங்க் லிமிட்டட், யூனியன் பேங்க் பீஎல்சி, UB பைனான்ஸ் கம்பனி லிமிட்டட், ஒரியன்ட் பைனான்ஸ் பீஎல்சி, தாஜ் லங்கா ஹொட்டேல்ஸ் பீஎல்சி மற்றும் வுஏளு லங்கா லிமிட்டட் ஆகியவற்றின சுயாதீன நிறைவேற்றுனர் அல்லாத பணிப்பாளரும் ஆவார்.

# 08

**திரு. நிரஞ்சன் அருள்பிரகாசம்**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் நிறுவனத்தின் சபைக்கு 2024 ஜூன் 11 இல் நியமிக்கப்பட்டார். இவர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் கணக்காய்வுக்குழு மற்றும் இடர்நேர்வுக்குழு என்பவற்றின் உறுப்பினராவார்.

திரு. நிரஞ்சன் அருள்பிரகாசம், இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராவதுடன், 12 ஆண்டுகளுக்கும் மேல் தனிப்பட்ட ரீதியில் சட்டத்தொழில் புரிந்து வருகின்றார். இவர் முன்னர் நிவ்யோர்க்கில் மெரில் லின்ஸ் இல் முதலீட்டு வங்கியாளர் ஒருவராக இருந்துள்ளதுடன், அதன் பின்னர் மூடீஸ் பகுப்பாய்வாளர்களின் உப தலைவராகவும் இருந்தார். திரு. நிரஞ்சன், நிதியமைச்சின் ஆலோசகராக இருந்துள்ளதுடன், பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளராக இருந்துள்ளார். இவர், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்.

திரு. நிரஞ்சன், ஐக்கிய அமெரிக்காவின் மெஞ்செஸ்டர் கல்லூரியில் பொருளியலில் கலைமாணியினைக் கற்பதற்கு கொபி அனன் சர்வதேச புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொண்டவர் என்பதுடன், பொருளியலில் சர்வதேச கௌரவ அமைப்பான ஓமிக்ரோன் டெல்டா எப்ஸிலோன் இன் உறுப்பினருமாவார். இவர், பிரான்ஸ் / சிங்கப்பூர் INSEAD வியாபார பாடசாலையில் இருந்து வர்த்தக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்று கொண்டார். இலங்கை சட்டக் கல்லூரியில் இருந்து கௌரவ சித்திகளுடன் வெளியாகியதன் பின்னர் 2012 இல் சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து கொண்டார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி

## 01

**திரு. ரிச்சர்ட் நட்டால்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*
2021 ஆம் ஆண்டு நவம்பர் மாத தொடக்கத்தில் விமான நிறுவனத்தில் பிரதம வணிக அதிகாரியாக இணைந்து கொண்ட திரு. ரிச்சர்ட் நட்டால், 2022 ஜனவரி 01 முதல் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பதவியேற்றுக் கொண்டார். பின்னர், இவர் 2022 ஏப்ரல் 29 முதல் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவர், விமானப் போக்குவரத்து துறையில் 30 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், பல்வேறு விமான நிறுவனங்களில் பலதரப்பட்ட சிரேஷ்ட பதவிகளை வகித்ததுடன் இவை உலகெங்கிலும் பல்வேறு செயற்பாட்டு மாதிரிகளை உள்ளடக்கியதாகும்.

இவர் சவூதி எயார்லைன்ஸில் பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார். ஆரம்பத்தில் இவர், வணிக உருமாற்ற பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டு, பின்னர் பிரதித் தலைவர் விற்பனைக்கு முன்னேற்றமடைந்து உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்கான மேலதிகப் பொறுப்புக்களை ஏற்றார். இவர் USD 6 பில்லியன் வருடாந்த வருவாயினையுடைய விமான நிறுவனத்திற்கான வர்த்தக மூலோபாயத்தில் உரித்துவத்தினைப் பகிர்ந்து கொண்டதுடன், உலகளாவிய ரீதியில் 2,700 பணியாட்களை வழிநடத்தினார். பிராந்திய சராசரிகளுக்கும் மேலான சர்வதேச பயணிகள் வளர்ச்சியாக 30% இனை 03 வருடங்களில் விநியோகித்தார், விநியோகச் செலவில் 25% குறைப்பினை அடைந்து கொண்டார். மற்றும் துறையில் சிறப்பான புள்ளிக்கு ஏற்றாற்போல் விமான நிறுவனத்தின் தேறிய ஊக்குநர் புள்ளியினை உயர்த்துவதற்கான சேவை முன்னெடுப்பில் முன்னணி பங்கினை வகித்தார். இவர் சவூதி எயார்லைன்ஸின் பிரதிநிதியாக ஸ்கைடீம் (Skyteam) மேற்பார்வைச் சபையில் இருந்துள்ளதுடன், பின்னர் ஒரு புதிய ஆளுகை மாதிரியின் கீழ் நிறைவேற்று சபையில் இணைந்து கொண்டார்.

முன்னர் இவர் றோயல் ஜோர்தானியன் விமான நிறுவனத்தில் பிரதம வர்த்தக மற்றும் மூலோபாய அதிகாரியாக நியமிக்கப்பட்டு, அங்கு ஒரு திருப்புமுனை மூலோபாயத்தினை வழங்குவதற்காக வணிகத் தலைவர்கள் மற்றும் சர்வதேச ரீதியாக பிரசித்திபெற்ற ஆலோசகர்கள் குழுவினை வழிநடத்தியதுடன், 70 முன்னெடுப்புகளை இனங்கண்டு மற்றும் செயற்திறனைப் பின்தொடர்ந்து அளவிடுவதற்காக ஒரு வரம்புறுகையினை உருவாக்கினார். விமான நிறுவனத்தினை இலாபகரத் தன்மைக்குத் திருப்பி, தேறிய இலாபத்தில் USD 80 மில்லியன் மேம்பாட்டினையும் 12% இலாப வரம்பு வளர்ச்சியினையும் ஏற்படுத்தினார்.

இவரது ஏனைய பதவிகளாவன, பஹ்ரேன் எயாரின் பிரதம நிறைவேற்று அதிகாரி, கென்யா எயார்வேஸில் வர்த்தகப் பணிப்பாளர், பிலிப்பைன்ஸ் எயார்லைன்ஸில் சிரேஷ்ட வர்த்தக ஆலோசகர், போலர் எயார் கார்கோ மற்றும் அமெரிக்கா பிரதித் தலைவர் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் கெத்தே பசிபிக் எயார்லைன்ஸில் பரவலான முகாமைத்துவப் பதவிகளையும் வகித்துள்ளார்.

திரு. நட்டால், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து கணிதப் பட்டத்தினையும், லண்டன் வணிகக் கல்லூரியிலிருந்து ஒரு ஸ்லோன் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

## 02

**திரு. யசந்த திஸாநாயக்க**
*குழுமவின் பிரதம நிதியியல் அதிகாரி*
திரு. யசந்த திஸாநாயக்க, 2004 ஆம் ஆண்டு கம்பனியில் இணைந்து கொண்டார். இவர், தற்போது பிரதம நிதியியல் அதிகாரி பதவியினை வகித்து வருகின்றார். கம்பனியின் நிதியியல் மற்றும் வணிகக் கொள்முதல், ஏற்பாட்டியல்கள் மற்றும் சொத்துக்களது செயற்பாடுகள் இவருக்கு அறிக்கையிடுகின்றன.

இவர் முதலாவது சர்வதேச முறிகள் வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியளித்தல் உள்ளடங்கலான, கம்பனியின் பல்வேறு முன்னோடி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்குத் தலைமைதாங்கினார். இவ்விரண்டு நிதியளிப்புகளும், இரண்டு ஆசிய பிராந்திய விருதுகளால் அங்கீகரிக்கப்பட்டன.

மேலும், இவர் புதிய A330-300 விமானங்களுக்கான முன் விநியோக நிதியளித்தலை (மு.வி.நி.) உருவாக்குவதற்குக் காரணகர்த்தாவாயிருந்ததுடன், இக்கொடுக்கல் வாங்கலானது, 2014 இல் ஏயார் பைனான்ஸ் சஞ்சிகையினால் “வருடத்திற்கான மு.வி.நி. நிதியளித்தல் வாணிபமாக” அங்கீகரிக்கப்பட்டது.

கம்பனியில் இணைந்துகொள்ள முன்னர், இவர், வங்கியியல் மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளில் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். இவர் தொழில் ரீதியாக ஒரு கணக்காளர் ஆவார் (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவர்) மற்றும் கார்டிப் இலுள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

## 03

**திருமதி டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனியின் செயலாளர்/கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுமத் தலைவர்*
திருமதி டெல்ரீன் திருக்குமார் அவர்கள் 2013 ஆம் ஆண்டு கம்பனியில் இணைந்து கொண்டார். அவர், கம்பனியின் செயலாளர் மற்றும் கூட்டாண்மை செயலகச் சேவைகளின் தலைவருமாவார். இப்பிரிவானது, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் எயார்லங்கா (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றிற்கு கூட்டாண்மை செயலகச் சேவைகளை வழங்கி வருகின்றது. இவர், சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களான, விமான நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு, மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு மற்றும் குழும சபை இடர் குழு ஆகியவற்றின் செயலாளராகக் கடமையாற்றுகின்றார். இவர் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நம்பிக்கை நிதியத்தின் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளராவார்.

இவர் 25 வருடங்களுக்கும் மேலான தகைமையின் பின்னரான அனுபவத்தினைக் கம்பனி செயலக நடைமுறைத் துறையில் கொண்டுள்ளார். இலங்கையில் பொதுப் பட்டியலிடப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பன்கூட்டுக் கம்பனிகளில் மிகவும் சிரேஷ்ட பதவிகளை வைத்துள்ளார். இவர் ஐக்கிய இராச்சியம் மற்றும் அயர்லாந்தின் பட்டய ஆளுகை நிறுவகத்தின் இணை அங்கத்தவராவார். இவர் அவுஸ்திரேலியாவிலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர், இலங்கை பணிப்பாளர்கள் நிறுவகத்தின் (இ.ப.நி.) அங்கத்தவரும் மற்றும் இ.ப.நி. இணைப் பிரதிநிதித்துவம் செய்யும் சபை செயலாளர்கள் மன்றத்தின் செயற்பாட்டுக் குழுவின் ஒரு செயலிலுள்ள அங்கத்தவருமாவார்.

## 04

**திரு. சாமர பெரேரா**
*தகவல் தொழில்நுட்பக் குழுவின் தலைவர்*
திரு. சாமர பெரேரா, விமானத்துறை தொழில்நுட்பம் மற்றும் வியாபார செயன்முறைப்படுத்தல், தன்னியக்கப்படுத்தல் என்பனவற்றில் பரந்த அறிவுடனும், அனுபவத்துடனும், விமானத் தொழிற்துறையைச் சேர்ந்த விசேட நிபுணர் ஒருவராவதுடன், எயார்லைன்ஸ் குழுமத்தின் தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் மாறுதல் என்பவற்றுக்கு உபாய ரீதியான தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றார்.

திரு. சாமர பெரேரா, 1999 இல் விமான சேவை தொழிற்துறையில் இணைந்து, தேசிய விமான சேவையுடன் இரண்டு தசாப்த கால அனுபவத்தைக் கொண்டுள்ளார். தகவல் தொழில்நுட்பத்தினுள் பல்வேறு துறைகளிலும் அவர் செயலூக்கம் மிக்க அனுபவத்தைப் பெற்றுள்ளதுடன், எயார்லைன்ஸின் பல்வேறு முகாமைத்துவப் பதவிகளிலும் சேவையாற்றியுள்ளார். 2012 இல் இவர், தகவல் தொழில்நுட்ப பிரதானி பதவிக்கு இனங்காணப்பட்டு, அதனைத் தொடர்ந்து எயார்லைன்ஸ் குழுமத்தின் தகவல் தொழில்நுட்பத் தேவைப்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்ற தகவல் தொழில்நுட்ப குழுமப் பிரதானியாக மீள் பதவி குறிக்கப்பட்டார்.

குழுமத்தின் விமானத்துறை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும், டிஜிட்டல் சூழல் அமைப்பு முறைமைகளும் கள தகவல் தொழில்நுட்ப தொழிற்பாடுகள் தொடக்கம் விமானத்தில் ஏறுதல் தொடர்புகை வரை விரிவடைந்து, எயார்லைன்ஸ் தொழிலுக்கும், தொழிற்பாடுகளுக்கும் பல்வேறு வகையான தகவல் தொழில்நுட்ப முறைமைகளை இயலச் செய்கின்றது.

திரு. பெரேரா பயணிகளை மையப்படுத்திய சேவைகளை நிறுவுவதற்கு பல்வேறு தொழில்நுட்ப புத்தாக்கத்தின் முன்னோடி நடைமுறைப்படுத்தல்களுக்கு தலைமை வகித்துள்ளார். அவற்றில் சில, வான் போக்குவரத்தில் விரைவான பயணப் புத்தாக்கத் தீர்வுகளுக்காக தொழில் நிகழ்ச்சித் திட்டத்தை IATA எளிமைப்படுத்தலாக அமைந்திருந்தது. இவர், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப தர நியமங்களின் இணங்குவித்தலையும் வழிநடத்தி எயார்லைன்ஸ்க்கான முழுமையான தகவல் தொழில்நுட்ப நிர்வகித்தல் தளத்தினை உறுதி செய்தார். ஸ்ரீலங்கன் தொழில்நுட்பமானது, தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு ISO/ IEC 27001:2013, மென்பொருள் தர முகாமைத்துவத்திற்கு ISO 9001:2015 மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவத்திற்கு ISO/ IEC 20000:2018.

இவரது தலைமைத்துவத்தின் கீழ் தொழில்நுட்ப அணி மாறுதலடைவதற்கு வெற்றிகரமாக வழிகாட்டியதுடன், தேசிய விமான நிறுவனத்தின் ஒட்டுமொத்த தொழில்நுட்ப செலவுகளையும் மறுசீரமைக்கும் பொருட்டு, குறைந்த செலவுப் பிரயோகப் பொறிமுறைகளைக் கொண்டு செலவுமிக்க மரபுசார்ந்த விமான சேவை முறைமைகளை மாற்றீடு செய்துள்ளார். மேலும், பல உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட பிரயோகங்கள் அவரது வழிகாட்டலில் மற்றும் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய மற்றும் சர்வதேச பாராட்டுக்களை வென்றெடுத்தன.

திரு. பெரேரா, ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் விசேடத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தினைக் கொண்டுள்ளார். இவர் தொழில் ரீதியாக ஒரு பொறியியலாளர் என்பதுடன், இலங்கையின் மொறட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் இளமாணி விஞ்ஞான பட்டதாரியாவார். இவர் பல்வேறு தகவல் தொழில்நுட்ப விசேடத்துவங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து தொழில்சார் தகைமைகளையும் அங்கீகாரங்களையும் பெற்றுள்ளார்.

## 05

### திருமதி. புத்திக மானகே

*மனித வளங்களின் குழுமத் தலைவர்*

திருமதி. புத்திக மானகே அவர்கள் 2003 ஆம் ஆண்டில் விமான நிறுவனத்தில் முகாமைப் பயிற்சியாளராக இணைந்து அவரது தொழிலை 2004 இல் வர்த்தகக் கொள்முதல் திணைக்களத்தில் நிறைவேற்று உத்தியோகத்தராக ஆரம்பித்தார். இவர், விமான நிறுவனத்தின் வர்த்தக கொள்முதல் நிறைவேற்றுநர் (திட்டங்கள்), சிரேஷ்ட விமானத்தினுள்ளான சேவைகள் நிறைவேற்றுநர் (நிர்வாகம் மற்றும் வானறைப் பணியாள் சேவைகள்), விமானத்தினுள்ளான சேவைகள் முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் வானறை பணியாள் அட்டவணைப்படுத்தல்), முகாமையாளர் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் வணிகப் பங்குடைமைகள், சிரேஷ்ட முகாமையாளர் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் வணிகப் பங்குடைமைகள், மற்றும் வானறைச் சேவைகளின் தலைமை போன்ற பிரிவுகளில் 20 வருட அனுபவத்தினைக் கொண்டுள்ளார். வானறைச் சேவைகள் தலைமைப் பதவிக்கும் மேலாக 2020 ஜனவரியில் இவர் மனித வளங்களின் மாற்றாள் தலைமையாக நியமிக்கப்பட்டார். 2020 ஜுலை மாதம் முதல் இவர் மனித வளங்கள் மற்றும் வானறை சேவைகள் ஆகிய இரண்டிற்கும் தலைமையாக நியமிக்கப்பட்டு "தலைமை மனித வளங்கள் மற்றும் தலைமை வானறைச் சேவைகள்" என்ற பதவிகளை வகித்துள்ளார்.

வானறைச் சேவைகளின் தலைமைப் பதவிக்கு மேலதிகமாக இவர் 2020 செப்டம்பரில் மனித வளங்களின் குழுமத் தலைவராக நியமிக்கப்பட்டு, விமான நிறுவனத்தின் கடமைகளுக்கும் மேலாக ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் மனித வளப் பிரிவிற்கும் தலைமைத்துவத்தினை வழங்கினார். இரண்டு பதவிகளிலும் இவர் சேவையாற்றுவதுடன் விமான நிறுவனத்தின் வரலாற்றில் மனித வளங்களின் குழுமத் தலைமையாக முதல் தடவையாக பிரதான முன்னணி சேவைப் பிரிவான வானறைச் சேவைகள், இது குழுமத்தின் மொத்த மனித வளங்கள் செயற்பாடு மற்றும் வானறைப் பணியாட்கள் நிர்வாகம் மற்றும் விமான நிறுவனத்தின் விமானத்தினுள்ளான சேவைகள் செயற்பாட்டினையும் உள்ளடக்குகின்றது. இவர் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவில் ஒரே நேரத்தில் இரண்டு பிரதான பிரிவுகளுக்கு தலைமை வகிக்கும் ஒரே அங்கத்தவராவார். 2023 நவம்பர் முதல், அவர் மனித வளங்களின் குழுமத் தலைவர் பதவியை வகித்து வருகிறார்.

இவர் துறைசார் உறவுகளை முகாமைப்படுத்தல், பணியாட்களுடனான பணியாட்களை மையப்படுத்திய பயிற்சி, நலன்புரி முன்முயற்சிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகிய பிரிவுகளில் அவரது முன்மாதிரியான தலைமைத்துவத்தினைக் காண்பித்துள்ளார். இது, விசேடமாக பணியாட்களின் தொழில் தொடர்பான திறன்கள் மற்றும் தொழில் வாழ்க்கை சமநிலையினை முகாமைப்படுத்தல் என்பதில் முன்னிறுத்தம் செய்தது. இவரது முன்னெடுப்புகளான விசேடமாக பணியாள் சேனைகளின் மீள்கட்டமைப்பு மற்றும் பணியாளர் நலன் திட்டங்கள் மற்றும் நிறுவனத்தின் வெகுமதிகள் மற்றும் அங்கீகாரங்கள் கொள்கை என்பன பாராட்டத்தக்கதாகும்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து புள்ளிவிபரவியலில் விசேட பட்டத்தில் இளமாணி விஞ்ஞானப் பட்டத்தையும், மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் முதுமாணி விஞ்ஞானப் பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் தனியாள் முகாமைத்துவத்திற்கான பட்டய நிறுவகத்தின் பட்டய அங்கத்தவருமாவார். இவர் மனித வள முகாமைத்துவத்திலான தொழில்சார் தகைமையினை தனியாள் முகாமைத்துவத்திற்கான பட்டய நிறுவகத்திடமிருந்து பெற்றுள்ளதுடன், தொழிலாளர் சட்டம், வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றிலும் தகைமை பெற்றுள்ளார். (இவர் மனித வளங்கள் தொழில்வல்லுநர்கள் சங்கத்தின் ஒரு தொழில்சார் அங்கத்தவருமாவார்). அவர் ஒரு அங்கீகாரம் பெற்ற திட்டமான, சர்வதேச பயிற்சிக் கூட்டமைப்பு (ICF) கோச் மாஸ்டர்ஸ் அகடமி குளோபலின் "சான்றளிக்கப்பட்ட தொழில்முறை மாற்றுப் பயிற்சியாளர்" ஆவார். மேலும், அவர் இலங்கையின் சார்ட்டட் இன்ஸ்டிடியூட் ஒப் பெர்சனல் மேனேஜ்மென்ட்டில் (CIPM) வருகைதரு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது, "சார்ட் மேனேஜ்மென்ட் இன்ஸ்டிடியூட், UK" மூலம் நடத்தப்படும் தொழில்முறை ஆலோசனைத் திட்டத்தை, சார்ட்டட் இன்ஸ்டிடியூட் ஒப் பெர்சனல் மேனேஜ்மென்ட் (CIPM) மூலம் பின்பற்றி வருகிறார்.

திருமதி மானகே, பட்டயம் பெற்ற ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தின் பட்டயம் பெற்ற உறுப்பினரும், மனித வள தொழில்சார் அமைப்பின் தொழில்சார் நிபுணர் ஒருவருமாவார். இவர், சர்வதேச பயிற்சியளித்தல் சம்மேளனம், தராதரம் அளிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமான கோச் மாஸ்டர் எக்கடமி குளோபல் இன் "சான்றுபடுத்தப்பட்ட தொழில்சார் மாறுதலடையச் செய்தல் பயிற்றுவிப்பாளர்" ஆவார். மேலும், இவர், இலங்கை பட்டயம் பெற்ற ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தில் வருகைதரு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 2024 ஆம் ஆண்டில் இவர், 2024/2025 ஆம் ஆண்டுக்கான பட்டயம் பெற்ற ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தின் நிறைவேற்று சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி தொடர்ச்சி.

## 06

**திரு. திமுத்து தென்னக்கோன்**
*உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத் தலைவர்*
திரு. திமுத்து தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவன பயணிகள் விற்பனைகள், நிதியியல் முகாமைத்துவம், வருவாய் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகத் திட்டமிடல் ஆகியவற்றிலான விசேடத்துவத்துடன் விமான நிறுவனத் துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் அதிக கால அனுபவத்தினைக் கொண்டுள்ளார். திரு. தென்னக்கோன், தற்போது விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனைகள் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ின் விநியோகத்திற்கும் தலைவராக 2017 முதல் செயற்பட்டு வருகிறார். இவர் விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனைகள், வழங்குவழி முகாமைத்துவம் மற்றும் விற்பனைச் செயற்பாட்டுக் குழுக்களுக்குத் தலைமை தாங்கி வருகிறார்.

விமான நிறுவனத்தில் 1992 ஆம் ஆண்டு முதல் இணைந்ததிலிருந்து இவர் நிதியியல், வருவாய் திட்டமிடல், வலையமைப்பு திட்டமிடல், செல்வழி முகாமைத்துவம் மற்றும் விலையிடல் பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். இவர் டுபாய் மற்றும் கனடாவில் விற்பனை முகாமையாளர், மஹாராஸ்திரா மற்றும் குஜராத்தில் முகாமையாளர், ஆசிய பசிபிக், அவுஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களுக்கு பிராந்திய முகாமையாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார். இவரது வெளிநாட்டு பணியினைத் தொடர்ந்து, இவர் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பொது முகாமையாளராக, பிராந்திய விற்பனைகள், விற்பனை அபிவிருத்தி, கருவிகளது அபிவிருத்தி, வாடிக்கையாளர் அலுவல்கள், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், துறைசார் அலுவல்கள், விமான நிறுவனத்தின் விசுவாசத் திட்டம் உள்ளடங்கலான வாடிக்கையாளர் உறவுகள், இ-வர்த்தகம், உலக தகவல் அழைப்பு மையம், செல்வழி முகாமைத்துவம் ஆகியவற்றில் சேவையாற்றி விமான நிறுவனத்தின் வர்த்தகச் செயற்பாடுகளில் அவரது திடமான அனுபவத்தினை எடுத்துக்காட்டினார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ ில் பணிபுரிந்த காலத்தில், பம்பாய், டெல்லி, லக்னோ மற்றும் ஜெய்பூர் ஆகிய நகரங்களின் செயல்பாட்டை மேற்பார்வையிட்டு, வட இந்தியாவுக்கான வதிவிடப் பிரதிநிதியாக ஓமான் எயார் நிறுவனத்தில் பணியாற்றினார்.

இவர் கடுமையான துறைசார் போட்டி உள்ளடங்கலான சமகால சவால்களை வெற்றிகொள்வதற்கான அவரது புரட்சிகரமான விற்பனை வளர்ச்சி மூலோபாயங்களுக்காக விமானப் போக்குவரத்துத் துறையில் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தவர். புத்தாக்க மற்றும் வினைத்திறனான வர்த்தக நடைமுறைகளின் நியாயவாதியான இவர், விமான நிறுவனத்தின் வர்த்தகக் குறிக்கோள்களை அடைவதற்கு அவரது மூலோபாய திட்டமிடல் மற்றும் செயன்முறை மேம்பாட்டுக் கண்ணோட்டத்திற்கு நன்கு தெரிந்து கொள்ளப்பட்டவருமாவார். இவர், அவரது குழுவினை ஊக்கமளித்தல் மற்றும் வலுவூட்டுவதன் மூலம் நிறுவன வளர்ச்சியினை கற்பனை செய்யும் ஒரு அர்ப்பணிப்பான தலைவராவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் இளமானி பட்டம் மற்றும் பக்கிங்ஹம்சயர் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் சர்வதேச முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். திரு. தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவனங்களது பிரதிநிதிகளின் இலங்கை சபையின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

## 07

**கெப்டன் பெட்ரிக் பெர்னாண்டோ**
*வானூர்தி செயற்பாடுகளின் தலைவர்*
கெப்டன் பெட்ரிக் பெர்னாண்டோ அவர்கள் 1992 இல், முன்னர் எயார் லங்கா என அறியப்பட்ட ஸ்ரீலங்கன் நிறுவனத்தில், L1011 விமானத்தின் ஒரு பயிற்சி விமானியாக இணைந்து கொண்டார். இவர் L1011, A320, 330 மற்றும் A340 விமானங்களை இயக்கியுள்ளார். இவர் ஒரு கெப்டனாக 20 வருடங்களுக்கு மேலாகவும் ஒரு பயிற்றுவிப்பாளராக 15 வருடங்களுக்கு மேலாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் 2011 இல் முகாமைத்துவத்தில் இணைந்து பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களது பிரதி பிரதம விமானியாக இருந்து பின்னர் பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களது பிரதம விமானியாகவும் சேவையாற்றி வருகிறார்.

தற்போது இவர், A320/330 விமானங்களின் கட்டளைத்தளபதி, சிமுலேட்டர் மற்றும் பயணவழிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் CAASL இற்கான நியமிக்கப்பட்ட பரிசோதனை விமானியும் ஆவார்.

## 08

**திரு. சமிந்த பெரேரா**
*சந்தைப்படுத்தலின் தலைவர்*
திரு. சமிந்த பெரேரா அவர்கள், 2015 ஜுன் மாதத்திலிருந்து ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் மூலோபாயத் தொடர்பாடல் சாலை வரைபடத்தினை வழிநடத்தி வருகின்றார். இவர், மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் உலகளாவிய விற்பனையில் விசேடத்துவத்துடன் விமானப் போக்குவரத்துத் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர், விமான நிறுவனத்தின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு அங்கமான, ஸ்ரீலங்கன் கெயார்ஸ், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் மற்றும் நிலைபேறுடமை முன்னெடுப்புகளை மேற்பார்வை செய்கின்றார். இவர் எமிரேட்ஸ் யுகத்தின்போது, விமான நிறுவனத்தில் முகாமைத்துவப் பயிற்சியாளராக இணைந்து, விமான நிறுவனத்தின் கூட்டாண்மை தொடர்பாடல்களின் பதிலாள் தலைவர், வர்த்தக முகாமையாளர் - பிரான்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவிற்கான பிராந்திய முகாமையாளர் மற்றும் உலகளாவிய விற்பனைகளின் பொது முகாமையாளர் ஆகிய முக்கிய பதவிகளை வகித்தார்.

இவரது நிபுணத்துவமானது, புதிதாக நிறுவப்பட்ட சந்தைகள்/பயண இலக்குகளில் வணிக நாமத்தினை நிறுவுதல், புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய முற்றான தொடர்பாடல்களை சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கும் பரந்துள்ளது. சர்வதேச மன்றங்களில் அங்கீகரிக்கப்பட்ட உலகளவில் பாராட்டைப்பெற்ற பல்வேறு சந்தைப்படுத்தல் தொடர்பாடல் முயற்சிகளில் விமான நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் குழுவினை வழிநடத்தியுள்ளார்.

இவர் மும்பாய் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் கணக்கீடு மற்றும் கணக்காய்வில் இளமாணி வர்த்தகப் பட்டத்தினையும், சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்திலிருந்து (IATA) விமான நிறுவன கற்கைகளில் (விமான நிறுவன சந்தைப்படுத்தல், விமான நிறுவன நிதி, கணக்கீடு, நிலைய முகாமைத்துவம்) டிப்ளோமா பட்டத்தையும் கொண்டுள்ளார்.

## 09

**திரு. சுமுது உபதிஸ்ஸ**
*மூலோபாயத்தின் தலைவர்*
திரு. சுமுது உபதிஸ்ஸ அவர்கள் 2000 ஆம் ஆண்டில் கம்பனியில் ஒரு முகாமைப் பயிற்சியாளராக இணைந்து, பயிற்சித் திட்டத்தினை வெற்றிகரமான நிறைவேற்றியதன் பின்னர், 2001 இல் வர்த்தகப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். 22 வருடங்கள் துறைசார் அனுபவத்துடன் இவர் சர்வதேச உறவுகள், அட்டவணைகள் திட்டமிடல், வலையமைப்பு மற்றும் வருவாய் திட்டமிடல், விலையிடல் மற்றும் வருவாய் முகாமைத்துவம் மற்றும் பொது விற்பனை முகவர் நிர்வாகம் உள்ளடங்கலான பல்வேறு பிரிவுகளில் 16 வருடங்களுக்கும் அதிகமான முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 2017 இல் இவர் வருவாய் முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் வர்த்தக உறுதுணை ஆகியவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டார். இரண்டு வருடங்கள் கொடுப்பனவற்ற லீவினை நிறைவு செய்ததன் பின்னர், 2023 இல் இவர் மூலோபாயத்திற்கான தலைமைப் பதவியினை பொறுப்பேற்றார்.

இவர் சந்தைப்படுத்தல் முகாமைவத்துவத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு இளமானி விஞ்ஞானப் பட்டதாரியாவார். மேலும், இவர் விமான நிறுவன கற்கைகளில் IATA (மொன்ரியல்) டிப்ளோமா பட்டத்தையும், ஐக்கிய இராச்சியத்தின்

பட்டயச் சந்தைப்படுத்தல் நிறுவகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இங்கு இவர் ஒரு இணை அங்கத்தவரும் (ACIM) ஆவார்.

## 10

**திரு. சமிந்த பெரேரா**

*சரக்குகள் தலைவர்*

திரு. சமிந்த பெரேரா அவர்கள் 2022 ஜனவரி மாதம் விமான நிறுவனத்தில் இணைந்து கொண்டார். இவர், வான்வழிப் போக்குவரத்துத் துறையில் வர்த்தக வானூர்திச் சரக்கு மற்றும் தரை கையாளுதல் செயற்பாடுகளில் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் தரை கையாளுதல் துறையில் அவரது தொழிலை ஆரம்பித்ததுடன், வானூர்திச் சரக்கின் வர்த்தகக் கண்ணோட்டத்தினைக் கையாளுவதில் அவரது தொழில் நாட்டமானது லுவ்தான்சாவுக்கு அவர் நகர்வதற்கு வழிசமைத்தது. அடுத்ததாக, அவர் வானூர்திச் சரக்கு விற்பனைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் முகாமையாளராக வர்த்தக மற்றும் தரை கையாளுதல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு குழுவினை முகாமைப்படுத்துவதற்காக சைனா எயார்லைன்ஸிற்கு முன்னேறினார். இதன் பின்னர், அடுத்த நகர்வு எமிரேட்சுக்குக் காணப்பட்டதுடன், அங்கு இவர் 16 வருடங்கள் சேவையாற்றி பதவி விலகும்போது இலங்கைக்கான வானூர்தி சரக்கிற்கான முகாமையாளராகச் சேவையாற்றினார்.

திரு. பெரேரா, ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து டிஜிட்டல் யுகத்தில் வான்வழிப் போக்குவரத்து முகாமைத்துவத்தில் முதுமாணி விஞ்ஞானப் பட்டத்தையும், மலேஷியாவின் ஏசியா இ-பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் முதுமாணி விஞ்ஞானப் பட்டத்தையும், ஐக்கிய இராச்சியத்தின் போக்குவரத்திற்கான பட்டய நிறுவகத்திலிருந்து போக்குவரத்தில் ஒரு டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஏற்பாட்டியல் மற்றும் போக்குவரத்துப் பட்டய நிருவகத்தின் பட்டய அங்கத்தவரும் ஆவார்.

## 11

**திரு. விபுல் மிஸ்ரா**

*பொறியியல் பிரதானி*

திரு. விபுல் மிஸ்ரா, பொறியியல் பிரதானியாக கடமைகளை ஏற்று 2024 இல் எயார்லைன்ஸ் உடன் இணைந்து கொண்டார். வானூர்திப் பொறியியலில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட கால அனுபவத்துடன் திரு. மிஸ்ரா பல்வேறு வகையான வர்த்தக ரீதியான விமான சேவைகளில் அனுபவம் பெற்றவர் ஆவார். எயார் இந்தியா, ஸ்பைஸ்ஜெட், விஸ்தாரா, இன்டிகோ, எயார் டெக்கான் மற்றும் கிங்பிஸர் எயார்லைன்ஸ் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

உரிமம்பெற்ற பொறியியலாளர் சான்றுப்படுத்தல் வானூர்தி தொடக்கம் பிரதிப் பொது முகாமையாளர் வரை பல்வேறு வகையான அவரது வகிபாகங்களிலும், ஏனைய அத்தகைய சிரேஷ்ட பதவிகளிலும் இவர் செலவுச் சிக்கன வானூர்திகள், முழுமையான சேவை வானூர்திகள், தொடக்கநிலை வானூர்த்திகள் மற்றும் மரபுசார் வானூர்திகள் தொடக்கம் பல்வேறு வகையான மட்டங்களில் பல்வேறு வகை விமான சேவைகளின் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் ஈடுபட்டு, பரந்த அளவிலான அனுபவத்தினையும், நிபுணத்துவத்தையும் பெற்றுள்ளார்.

திரு. மிஸ்ரா, வான் பரப்புச் சட்டத்தில் முதுமாணிப் பட்டத்தையும், வியாபார நிருவாகத்தில் பட்டப் பின்படிப்பையும் கொண்டுள்ளதுடன், அதனுடன் சேர்த்து வானூர்திப் பராமரிப்புகள் பொறியியலாளர் உரிமத்தினையும் பெற்றுள்ளார்.

## 12

**லெப்டினன்ட் கொலோனல் பந்துல வேரகம**

*பொது முகாமையாளர் - குழுமப் பாதுகாப்பு*

லெப்டினன்ட் கொலோனல் பந்துல வேரகம அவர்கள் இலங்கை தரைப்படையின் கறைபடாத 23 வருடங்கள் சேவையுடன் 2012 இல் கம்பனியில் இணைந்து கொண்டார். முப்படைச் சேவைகள் சூழலிலான கட்டளை மற்றும் பயிற்சிகளின் விரிவான அனுபவத்திற்கு அப்பால் இவர் ஐக்கிய நாடுகள் திணைக்களத்தினது அமைதி காத்தல் செயற்பாடுகளிலிலும் சேவையாற்றியுள்ளார். மனித வளங்கள், விமானத்தினுள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் என்பவற்றில் தொழில்புரிந்ததன் பின்னர், 2016 பெப்ரவரி மாதம் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் பிரிவினை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்டார். பந்துல அவர்கள் 2020 ஏப்ரல் மாதத்தில் பொறுப்பேற்ற குழுமப் பாதுகாப்புப் பிரிவிற்கு தற்போது தலைமை தாங்கி வருகின்றார். இவர், களனி பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கையில் ஒரு முதுமாணிப் பட்டத்தினையும், பாக்கிஸ்தானின் க்குவேட்டா பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

## 13

**திரு. தீபால் பல்லேகங்கொட**

*சிரேஷ்ட முகாமையாளர் - விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள்*

திரு. தீபால் பல்லேகங்கொட அவர்கள் 1991 இல் விமான நிறுவனத்தில் இணைந்து கொண்டார். 1994 ஆம் ஆண்டில், இவர் விமான நிறுவனத்திலிருந்து விலகி டோஹா விமான நிலையத்துடன் இணைந்து கொண்டார் எயார்வேஸ் கையாளுகையினை நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தார். பின்னர் இவர் மீண்டும் விமான நிறுவனத்தில் 1995 இல் இணைந்து கொண்டார். இவர் விமான நிலையச் செயற்பாட்டின் அனைத்துப் பிரிவுகளிலும், கடமை முகாமையாளர், விமானம் அனுப்புபவர், விமான நிலைய சேவைகளுக்கான பயிற்றுவிப்பாளர் (உள்ளூர் / வெளிநாடுகள்) மற்றும் நிலைய முகாமையாளர் ஆகிய பொறுப்புகளில் சேவையாற்றியுள்ளார். இவர் 2010 இல் வர்த்தகக் குழுவில் இணைந்து விற்பனை நிறைவேற்றுநர், உதவி விற்பனை முகாமையாளர், வதிவிடப் பிரதிநிதி, அரசாங்க பிரயாணம் மற்றும் பொது அலுவல்களுக்கான முகாமையாளர் போன்ற பல்வேறு பிரிவுகளில் கடமையாற்றினார். பின்னர் 2023 மே மாதத்தில் இவர் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகளுக்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவச் சேவையில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும், ஐக்கிய இராச்சியத்தின் கார்டிவ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தினையும் கொண்டுள்ளார். மேலும், சிட்டி அன்ட் கிள்ட்ஸ் இலிருந்து சான்றளிக்கப்பட்ட ஒரு பயிற்றுவிப்பாளருமாவார்.

## 14

**திரு. ஷானக சப்பரமாது**

*சிரேஷ்ட முகாமையாளர் - வருவாய் முகாமைத்துவம்*

திரு. ஷானக சப்பரமாது அவர்கள் 2000 இல் விமான நிறுவனத்தில் ஒரு முகாமைத்துவப் பயிலுநராக இணைந்து வர்த்தகப் பிரிவில் அவரது சேவைக்காலம் முழுவதும் பல்வேறு தலைமைத்துவப் பங்கினை வகித்துள்ளார். இவர் 15 வருடங்கள் முகாமைத்துவத் தரம் உள்ளடங்கலாக 02 தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் வர்த்தக விமானப் பிரயாணத்தில் அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன், வருவாய் திட்டமிடல், வலையமைப்பு உகப்பாக்கம் மற்றும் வருவாய் முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளில் விசேடத்துவத்தினையும் கொண்டுள்ளார்.

திரு. சப்பரமாது அவர்கள் 2001 இல் வருவாய் திட்டமிடல் திணைக்களத்தில் இணைந்து வருவாய் திட்டமிடல் முகாமையாளராக ஒரு குழுவினை வழிநடத்தினார். இதன்பின்னர் இவர் 2010 இல் வருவாய் திட்டமிடல் மற்றும் வலையமைப்பு திட்டமிடல் குழுக்கள் இரண்டையும் மேற்பார்வை செய்யும் முகாமையாளர் திட்டமிடல் பங்கினை பொறுப்பேற்றார். இவர் வருவாய் முகாமைத்துவப் பிரிவின் வர்த்தக முகாமையாளராக நியமிக்கப்பட்டு, பின்னர் ஐரோப்பிய பிராந்தியத்துக்கான வருவாய் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்கின்றார். அதன்

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி தொடர்ச்சி.

பின்னர் ஐரோப்பா மற்றும் தூர கிழக்கு பிராந்தியங்களுக்கான கையிருப்பு மற்றும் விலையிடல் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் வருவாய் முகாமைத்துவத்திற்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்போது, வருவாய் முகாமைத்துவம், வலையமைப்பு திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவுகளையும், விமான நிறுவனத்தின் சர்வதேச உறவுகள் பிரிவினையும் வழிநடத்துகின்றார்.

இவர், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகத்தில் விசேடத்துவம் கொண்ட இளமானி பட்டத்தையும் (மொன்ரியலின்) விமான நிறுவனக் கற்கையில் IATA டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்களது பட்டய நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவருமாவார்.

## 15

**திருமதி துஷாரி பெரேரா**

*சிரேஷ்ட முகாமையாளர் - குழும சட்ட அலுவல்கள்*

திருமதி துஷாரி பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் குழுமத்தில் குழும சட்ட அலுவல்களுக்கான சிரேஷ்ட முகாமையாளர் பதவியினை வகித்து வருகின்றார். இவர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் மனித வளங்கள் பிரிவில் இவரது தொழிலினை ஆரம்பித்து, மனித வள முகாமைத்துவத்தின் பல்வேறு கூறுகளில் கூட்டாண்மை மற்றும் முறைமைப்படுத்தல் விடயங்கள், பிணக்கு தீர்த்தல், பன்முக நியாயாதிக்க வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வழக்காட்டல்கள், அறிவுசார் சொத்து, கைத்தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் குழுமத்தின் நொத்தாரிசுப் பணிகள் ஆகியவற்றைக் கையாண்டு வருகின்றார்.

திருமதி பெரேரா, தொழில் ரீதியாக ஒரு வழக்கறிஞர் ஆவார். இவர் ஆங்கில மற்றும் சிங்கள மொழிகளில் நொத்தாரிசு உரிமைத்துவத்தினைப் பெற்றுள்ளார். இவர் சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்தினால் (IATA) நடாத்தப்பட்ட விமானக் கையகப்படுத்தல் மற்றும் நிதியளித்தல் பாடக்கோப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். இவரது சட்டக் கல்விக்கும் மேலாக, ஆளணி முகாமைத்துவ நிருவகத்தில் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமாவினையும், பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார்.

## 16

**திரு. டிலந்த வீரரத்ன**

*சிரேஷ்ட முகாமையாளர் - குழுமப் பாதுகாப்பு*

திரு. டிலந்த வீரரத்ன, எயார்லைன்ஸில் 1984 இல் இணைந்து, தேசிய விமான சேவையுடன் சுமர் 40 ஆண்டு கால சேவையினைக் கொண்டு, முகாமைத்துவப் பதவியில் 24 ஆண்டுகள் உள்ளடங்கலாக விமானத் தொழிற்பாட்டுப் பிரிவினுள் பல்வேறு தலைமைத்துவ வகிபாகங்களில் பணியாற்றியுள்ளார். பயிலுநர் விமானம் அனுப்புனர் ஒருவராக அவரது தொழிலைத் தொடங்கி, தொழிற்பாடுகள் கட்டுப்பாடு மற்றும் விமான அனுப்புகையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஒருவராக முன்னேற்றமடைந்து, அவரது தொழில் வாழ்க்கை முழுவதும் நிபுணத்துவத்தையும், திறமையினையும் எடுத்துக்காட்டினார்.

2000 ஆம் ஆண்டில் பயணவழி திட்டமிடல் மற்றும் எரிபொருள் முகாமைத்துவ முகாமையாளரின் பதவிக்கு முன்னேறினார். விமான எரிபொருள் பயன்பாட்டை நிறுவி மேற்பார்வை செய்தல், நுகர்வை உகப்பாக்கம் செய்வதற்காக சிறந்த நடத்தைகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் முக்கிய பங்காற்றினார். அதனைத் தொடர்ந்து, இவர், விமானத் தொழிற்பாடுகள் பயிற்சிப் பிரிவை முகாமை செய்வதற்கான பொறுப்பை ஏற்று, விமானத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் பயிற்சித் தேவைப்பாடுகளிலும் ஒருங்கிணைப்பை உறுதி செய்தார். இவர், 2006 ஆம் ஆண்டில் வலையமைப்புக் கட்டுப்பாட்டு முகாமையாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டார். அங்கு விமான அனுப்புகை மற்றும் தொழிற்பாடுகள் கட்டுப்பாட்டுக் கடமைகளை மேற்பார்வை செய்தார். 2012 இல் விமான சேவை தொழிற்பாட்டுக் கட்டுப்பாட்டு நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு தலைமைத்துவத்தை வழங்கி, விமான அட்டவணைகளையும், தொழிற்பாட்டுக் கட்டுப்பாட்டையும் முகாமை செய்வதற்கான மத்திய மயப்படுத்தப்பட்ட கட்டளை மையத்தை முன்னோடியாக நிறுவினார். 2023 நவம்பர் தொடக்கம் இவர் சிரேஷ்ட குழுமப் பாதுகாப்பு முகாமையாளராகப் பணியாற்றி, பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் மீது உபாய ரீதியான வழிகாட்டலை வழங்குகின்ற அதேவேளை, நிறுவனத்தினுள் பாதுகாப்புக் குடையினை மேற்பார்வை செய்து, தொழிற்பாடுகளின் அனைத்து நோக்குகளுக்கிடையிலும் பாதுகாப்புக்கான அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறையினை வலியுறுத்தினார்.

## 17

**திரு. ரவி சமரசிங்க**

*சிரேஷ்ட முகாமையாளர் வானறை சேவைகள்*

திரு. ரவி சமரசிங்க, 1988 ஆம் ஆண்டில் விமானப் பணி உறுப்பினராக எயார்லைன்ஸ் உடன் இணைந்து, வானூர்தி உள்ளக சேவை போதனாசிரியர் வரை அவரது பதவியில் முன்னேறினார். இவர், விமானப் பணியாளர் செயலாற்றுகை முகாமையாளராகவும், அதனைத் தொடர்ந்து வானூர்த்தி உள்ளக சேவை முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டார். 2024 இல் இவர் கெபின் சேவைகளுக்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டு, வானூர்தி உள்ளக சேவைகள் பிரிவுக்குத் தலைமை வகித்தார். தேசிய விமான சேவையுடன் இணைந்துகொள்ள முன்னர் இவர், வங்கித் தொழில்துறையிலும் முன்னைய அனுபவத்தைப் பெற்றிருந்தார்.

இவர் தற்போது எயார்லைன்ஸின் பரவலாக அறியப்படுகின்ற விமானத்தில் ஏறுவதற்கான சேவைகளுக்குப் பொறுப்பாக இருப்பதுடன், அதனுடன் தொடர்புடைய கடமைகளை முகாமை செய்துள்ளார். ஏனையவற்றுக்கு மத்தியில், மிகவும் முக்கியத்துவம் மிக்க பணியாக விளங்குகின்ற பணிவுமிக்க விமானப் பணியாளர்கள் குழுவை முகாமை செய்கின்றார். இதற்கு மேலதிகமாக, வானூர்த்தி உள்ளகத் தீர்வையற்ற வசதிகளுக்கும், உணவு மற்றும் குடிபானங்களை விமானத்தில் பரிமாறுவதற்கும் பொறுப்பாக இருக்கின்றார்.

திரு. சமரசிங்க, சப்ஃபல்க் (Suffolk) பல்கலைக்கழகத்தில் இருந்து வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றவராவார்.

## 18

**திரு. காலிங்க ஹிரண்ய**

*பிரதிப் பொது முகாமையாளர் - ஸ்ரீலங்கன் விமான சேவைக் கல்லூரி*

திரு. காலிங்க ஹிரண்ய, ஸ்ரீலங்கன் பயிற்சி நிதி முகாமையாளராக 2013 இல் கம்பனியில் இணைந்து கொண்டார். இவர் தற்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டடின் பயிற்சிப் பிரிவான ஸ்ரீலங்கன் விமான சேவைக் கல்லூரியில் பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார். திரு. காலிங்க, கம்பனியுடன் இணைந்து கொள்ள முன்னர், இலங்கையிலுள்ள பன்முகப்படுத்தப்பட்ட பல்கூட்டு நிறுவனம் ஒன்றில் நிறைவேற்றுத் தர பதவியை வகித்துள்ளார்.

திரு. காலிங்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் முகாமைத்துவப் பட்டப்படிப்பு நிறுவகத்தில் இருந்து (PIM) வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன், அதே பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர், ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற சான்றுபடுத்தப்பட்ட கணக்காளர்கள் அமைப்பின் (ACCA) சக உறுப்பினர் ஒருவராவதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இணை உறுப்பினரும் ஆவார்.

**முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு**

தொழிற்படுகின்ற சூழல் / 26
எமது தொழிற்பாடுகள் / 26
எமது மக்கள் / 28
வாடிக்கையாளர் அனுபவம / 31
சமூகங்களை மேம்படுத்துதல் / 33
நிலையாதார செயற்திறன் / 35
தரமான காப்புறுதி / 36
நிதி மீளாய்வு / 37
வியாபாரப் பிரிவு செயலாற்றுகை / 40

**கூட்டாண்மை பாரபத்தியம்**

கூட்டாண்மை ஆளுகை அறிக்கை / 45
தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவம் / 47


# சிறந்த வாடிக்கையாளர் சேவையினை நாம் கொண்டு சேர்க்கின்றவாறு

# **எமது எதிர்காலத்தைத் திசைப்படுத்துகின்றோம்**



# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும்

## தொழிற்படுகின்ற சூழல்

### உலகளாவிய பேரண்டப் பொருளாதாரச் சூழல்

உலகளாவிய பொருளாதாரமானது, உலகளாவிய நோய்த் தொற்று, உக்ரேன் - ரஷ்யப் போர் அத்துடன் அதிகரித்து வரும் பணவீக்கம் என்பவற்றின் பின்னடைவில் இருந்து மீட்சிப் பாதையில் காணப்படுவதுடன், தோற்றம் பெறுகின்ற தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியது. எவ்வாறாயினும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, உலகளாவிய நாணயக் கொள்கை நிலைமைகளை இறுக்கமாக்குதலானது, வளர்ச்சியைத் தடைப்படுத்தி, பொருளாதாரங்கள் மெதுவான, அத்துடன், ஒழுங்கற்ற வேகத்தில் முன்னோக்கி நகர்வதற்குக் காரணமாகி, உலகளாவிய வளர்ச்சி நிலவிச் செல்வதைக் குறித்துக்காட்டின. முதன்மை மற்றும் மையப் பணவீக்கம் இரண்டும் கட்டுப்பாட்டிற்குள் காணப்படுகின்றமைக்கு மத்தியில், அநேகமான பொருளாதாரங்கள் விசேடமாக, வளர்ந்து வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைகின்ற சந்தைகள், நோய்த் தொற்றுக்கு முந்திய போக்குகளுக்குத் திரும்பலடைவதற்கு தொடர்ச்சியாகப் போராடுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது, எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வலிமையாக இருந்து வருகின்றமைக்கு மத்தியிலும், இறுக்கமான நிதியியல் நிலைமைகள், நலிவான வர்த்தக வளர்ச்சி, குறைவான வியாபாரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை என்பவற்றின் பின்னணியில் அது தொடர்ந்தும் மிதமாகவே காணப்படுகின்றது.

உலகளாவிய விமானப் போக்குவரத்துத் துறையும் 2023 காலப்பகுதியில் ஏறத்தாழ நோய்த் தொற்றுக்கு முந்திய மட்டங்களுக்குத் திரும்பி, தொழிற்துறையின் நிதியியல் இலாபத் தன்மையினை மீளச் செய்கின்றது. வருமானப் பயணி கிலோ மீற்றர்களில் (RPK) அளவிடப்படுகின்ற தொழிற்துறை முழுவதுமான பயணிப் போக்குவரத்து 2023 செப்டம்பர் வரையிலும், ஆண்டுக்கு ஆண்டு (YoY) 40.1% ஆல் வளர்ச்சியடைந்து, ஏறத்தாழ 94% கொண்ட நோய்த் தொற்றுக்கு முந்திய மட்டங்களை எட்டியது. ஆசிய பசிபிக் தவிர அனைத்துப் பிராந்தியங்களும் 2040 ஆம் ஆண்டளவில் உலகளாவிய பயணிப் போக்குவரத்தை இரட்டிப்பாக்கும் எதிர்கால எதிர்வுகூறலுடன் 2023 இல் அவற்றின் 2019 ஆம் ஆண்டின் அளவினைத் தொடர்ந்தும் எட்டின அல்லது விஞ்சிச் சென்றன. எனினும், சரக்குத் துறையானது, பேரண்டப் பொருளாதார நிச்சயமின்மைகள் மற்றும் உலகளாவிய வணிகத்தில் குறைந்த செயலாற்றல் என்பன காரணமாக, கேள்வியில் மெதுவடைதல் மூலம், தொடர்ந்தும் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன.

### உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதாரத் தோற்ற அமைப்பு

2023 காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் மீட்சிப் பாதைக்குள் நுழைந்து ஒரு ஆண்டுக்கு முன்னர் பேரழிவுமிக்க பொருளாதார நெருக்கடி ஒன்றுக்குப் பின்னர் மீண்டு வருகின்றது. இம்மீட்சிக்கு மேம்பட்ட வெளிநாட்டுத் தாக்குப் பிடிக்கும் தன்மை, வலுவான அரசிறை மிகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பன துணையளித்திருந்தன. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் மூலமான கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுடன் ஒன்றிணைத்து, இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி மூலமான உரியகால மற்றும் பொருத்தமான கொள்கை வழிமுறைகளைப் பின்பற்றுகின்றமை இவ் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார ஒருமைப்பாட்டுக்குப் பங்களித்தன.

இலங்கை சுற்றுலாப் பயணி வருகைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை அனுபவித்து 2023 டிசம்பரில் அதன் உச்சத்தை எட்டி, இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான சாதகமான பயணப் பாதையினைப் பிரதிபலித்தது. சார்பான பேரண்டப் பொருளாதாரச் சூழலில், அதேபோன்று பயணம் தொடர்புடைய நிறுவனங்களால் முதல் அடைவிடங்களில் ஒன்றாக இலங்கை அங்கீகரிக்கப்பட்டமை என்பன இத்திடீர் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இந்நிதியாண்டின் போது, நாடு பிரதானமாக, இந்தியா, ரஷ்யா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற முக்கிய சந்தைகளில் இருந்து ஏறத்தாழ 1.8 மில்லியன் சுற்றுலாப் பயணி வருகைகளை அவதானித்தது. சுற்றுலாப் பயணி அடைவிடம் ஒன்றாக இலங்கை பற்றிய அதிகரித்த பிரபல்யமும், சர்வதேச விமானங்களை ஈர்த்து, குறிப்பாக ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும், பயண வழிகள் மீது தீவிரமடைந்த போட்டிக்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, புகழ்பெற்ற விமான நிறுவனங்கள், கொழும்புக்கான அவற்றின் போக்குவரத்து எண்ணிக்கையையும், இயலளவையும் அதிகரித்து கட்டணங்கள் மீது கீழ்நோக்கிய அழுத்தத்தை நோக்கி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் வருவாய்களில் தாக்கம் ஏற்படுத்தின.

*மூலங்கள்:*

1. *World Economic Outlook. Navigating Global Divergences, 2023 ஒக்டோபர்*
2. *Restoring growth. OECD Economic Outlook, 2023 நவம்பர்*
3. *Global Outlook for Air Transport — A local sweet spot, 2023 டிசம்பர், IATA*
4. *இலங்கை மத்திய வங்கி ஆண்டு பொருளாதார மீளாய்வு*
5. *தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களம், தேசிய மதிப்பீடுகள் 4ஆம் காலாண்டு*
6. *Sri Lanka tourism triumphs to new heights in 2023, Daily FT, 2024 டிசம்பர் 01*
7. *மாதாந்த சுற்றுலாப்பயணி வருகைகள் - அறிக்கை, 2023 டிசம்பர்*

## எமது தொழிற்பாடுகள்

எயார்லைன்ஸின் இரு முக்கிய வருமான வழிகள் என்ற வகையில், பயணி மற்றும் சரக்குத் தொழிற்பாடுகள் செயல்திறன் வாய்ந்த விதத்தில் முக்கிய பங்காற்றி எயார்லைன்ஸின் நிதியியல் வலிமையினையும், நீண்டகால நிலைபெறு தன்மையினையினையும் உறுதி செய்கின்றன. இவ்விரு தொழிற்பாடுகளும், எயார்லைன்ஸின் இரட்டை மையப்படுத்தலுக்கு அதாவது, இலாபத்தன்மையினை இயக்குவதற்கு உலகம் முழுவதும் வினைத்திறனுடனும், பாதுகாப்பாகவும் பயணிகள் போக்குவரத்துச் செய்வதற்கும், பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் ஆதரவளிக்கின்றன. ஆகையினால், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழலில், நிச்சயமற்ற பேரண்டச் சூழலுக்கு மத்தியில் கம்பனியானது, துரிதமாக பரிணாம வளர்ச்சியடைகின்ற தொழிற்துறை தோற்ற அமைப்புடன் அணிசேர்கின்ற விதத்தில் தொடர்ந்தும் உபாயங்களை நடைமுறைப்படுத்தியது.

### பயணி தொழிற்பாடுகள்

பயணக் கேள்வியில் குறிப்பிடத்தக்க மீட்சியொன்று காணப்பட்டது. இது, இக்காலப்பகுதியில், உலகளாவிய பயணி மீட்சிக்கு சாதகமாகப் பங்களித்தது. சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பின் (IATA) பிரகாரம், உலகளாவிய பயணிப் போக்குவரத்து 2023 இல் நோய்த் தொற்று மட்டங்களுக்கு முந்திய 94% ஆக மீட்சியடைந்தது. எனினும், பயணி தொழிற்பாடுகளின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்திய குறிப்பிடத்தக்க மட்டுப்பாடுகள் மூலம் இச்சாதகமாக உத்வேகம் சவாலுக்குள்ளானது. வனூர்திகள் பற்றாக்குறை, பராமரிப்புக்கான உதிரிப்பாகங்கள், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் உயர்வடைகின்ற செலவுகள் என்பன எயார்லைன்ஸின் தொழிற்பாட்டு எல்லைகளிலும், இலாபத் தன்மையிலும் குறிப்பிடத்தக்க அழுத்ததை இடம்பெறச் செய்தன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இதேநிலைமையினை எதிர்கொண்டு, வளர்ச்சியடைந்த கேள்வியிலிருந்து முழுமையாகப் பயன்தர முடியாதிருந்தது. கிடைக்கப் பெறுகின்ற ஆசன கிலோ மீற்றர்கள் (ASK) மிதமான 2% ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பினை அனுபவித்த அதேவேளை, ஒட்டுமொத்த இயலளவு நோய்த் தொற்றுக்கு முந்திய மட்டங்களுக்கு கீழ் 18% ஆகக் காணப்பட்டன. தொழிற்படத்தக்க வானூர்தித் தொகுதியின் பற்றாக்குறை இதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப ஆளணியினரை ஆட்சேர்ப்பதிலும், தக்க வைப்பதிலும் காணப்பட்ட இடர்பாடுகள், இந்நிலைமையினை மேலும் மோசமாக்கி, தொழிற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுப்பதன் மீது மேலும் அழுத்தத்தைச் சேர்த்தன. இதற்குப் பதிலிறுத்தி, எயார்லைன்ஸ்,

இலாபத்தன்மையினை உச்சப்படுத்துவதற்கு வானூர்திகளை மீள ஒதுக்கீடு செய்வதன் மூலம் அதன் அட்டவணையினை உகப்பாக்கம் செய்தல், வளர்ச்சியடைகின்ற கேள்வியினை நிறைவு செய்வதற்கு வானூர்திகளைக் குத்தகைக்குப் பெறுதல் மற்றும் ஊழியர் பற்றாக்குறையினைத் தீர்ப்பதற்கு மாற்றுவழி ஆட்சேர்ப்பு உபாயங்களைக் கண்டறிதல் என்பன உள்ளடங்கலாக, பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. பயணி அசௌகரியத்தைக் குறைப்பதையும், தொழிற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுப்பதை உறுதி செய்வதையும் நோக்காகக் கொண்ட இச்செயலூக்கம் மிக்க வழிமுறைகள் நம்பகமானதும், தங்குதடையற்றதுமான பயண அனுபவத்தை வழங்குவதற்கான எயார்லைன்ஸின் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டின.

இத்தடைகளுக்கு மத்தியில், நாட்டிற்கான பயணி வருகைகளின் ஒட்டுமொத்த அதிகரிப்பின் காரணமாக, எடுத்துச் செல்லப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையை சிறிதளவு அதிகரிப்பதற்கு எயார்லைன்ஸ் இயலுமாக இருந்தது. ஆண்டு முழுவதும் எயார்லைன்ஸ் 3.6 மில்லியன் பயணிகளைக் கொண்டு சென்று முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4% வளர்ச்சியை எடுத்துக்காட்டியதுடன், 79.1% கொண்ட ஆசனக் காரணியை எய்தி, அதன் வலையமைப்பின் செயற்திறன் வாய்ந்த தன்மையினையும், உகப்பாக்க உபாயங்களையும் எடுத்துக்காட்டியது. எனினும், எயார்லைன்ஸின் பயணி வருவாய் ரூபா 276.2 பில்லியனாக இருந்தது. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் (ரூபா 293.3 பில்லியன்) 6% வீழ்ச்சியாகும். இக்குறைவானது, ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் 865 மில்லியன் கொண்ட பயணி வருவாயினை எயார்லைன்ஸ் பதிவு செய்தமையினால், நாணய உயர்வின் காரணமாக வெறுமனே அமைந்து கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது.

### உபாய ரீதியான பங்குடமைகள்

எயார்லைன்ஸின் உபாயப் பங்குடமைகள், மேலதிக வருமான வாய்ப்புக்களை உருவாக்கி, சந்தைச் செயற்பரப்பை அதிகரிப்பதனால், அதன் போட்டி அனுகூலத்திற்கு அவை மிக முக்கியமாக விளங்குகின்றன. ஆகையினால், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், தொடர்புகையினை அதிகரிப்பதற்கும், அதன் வலையமைப்புச் செயற்பரப்பை விரிவுபடுத்துவதற்கும் ஏற்கனவே காணப்படுகின்றவைகளை வலுப்படுத்துவதுடன், ஒருங்கிணைந்து புதிய கூட்டமைப்புகளை தொடர்ந்தும் பாவித்து வருகின்றது.

இவ்வாண்டின் போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், வேர்ஜின் அவுஸ்திரேலியா நிறுவனத்துடன் விமான நிறுவனங்களுக்கிடையிலான பங்குடமையினை நிறுவி, அவுஸ்திரேலியா மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கிடையில் முக்கிய அடைவிடங்களுக்கு தொடர்ச்சியான இணைப்புகளை வழங்கி வருகின்றது. அவுஸ்திரேலியாவில் வதிகின்ற அநேகமான வெளிநாட்டு வாழ் இலங்கையர்களுக்கு வசதியான பயணத் தெரிவுகளை வழங்குதல் உள்ளடங்கலாக, எயார்லைன்ஸின் வலையமைப்புச் செயற்பரப்பினை இப்பங்குடமை மேம்படுதியுள்ளது. மேலும், எமிரேட்ஸுடன் பரஸ்பர விமான நிறுவனங்களுக்கிடையிலான ஒப்பந்தங்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஏற்படுத்தி மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் வட அமெரிக்கப் பிராந்தியங்கள் முழுவதும் கொழும்பு மற்றும் டுபாய் ஊடாக அவற்றின் தொடர்புடைய வலையமைப்புகளுக்கிடையில் பல்வேறு அடைவிடங்களுக்கு இரு விமான நிறுவனங்கள் மீதுமான பயணிகளுக்கு தங்குதடையற்ற பயணத்தை வசதிப்படுத்துகிறது.

இதற்கு மேலதிகமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், தெற்காசியாவில் புதிய சந்தைகளை ஏற்படுத்தி, கொரியன் எயார் நிறுவனத்துடன், வணிகப் பங்குடமையினை உருவாக்கியது. பிராந்தியத்திலுள்ள பிரபல்யமான சுற்றுலாப் பயணி அடைவிடங்களுக்கும், வணிக மையங்களுக்குமான மேம்படுத்தப்பட்ட அணுகுவழி உள்ளடங்கலாக, சியோலுக்கான பயணத் தெரிவுகளை அதிகரிப்பதற்கு இவ்வுடன்படிக்கை பயணிகளை இயலச் செய்துள்ளது.

மேலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், முன்னணி உலகளாவிய விமான நிறுவனப் பரம்பல் வலையமைப்பான APG உடனும் பங்குடமையினைத் தாபித்தது. சமநிலைத் தளம் ஒன்றில் நடுநிலையான தளத்தில் அதன் பயணச்சீட்டுக்களை விற்பனை செய்வதற்கு பயண முகவர்களினதும், பங்காளர்களினதும் APG யின் விரிவான வலையமைப்பினைப் பயன்படுத்துவதன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அதன் விநியோக இயலளவுகளை செயல்திறன் வாய்ந்த விதத்தில் மேம்படுத்துவதற்கு இயலுமாகவிருந்து பரந்த வாடிக்கையாளர் தளத்தினை அடைந்து கொள்கின்றது. பல்வேறு சந்தைகளிலுமுள்ள பயணிகளுக்கு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானப் பயணங்களுக்கான இவ்விலகுவான அணுகுவழி பயணச்சீட்டு விற்பனைகளையும், வருமானம் ஈட்டலையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

2014 தொடக்கம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வன்வேர்ள்ட் அலயன்ஸின் பெறுமதிமிக்க உறுப்பினராக இருந்து வருகின்றது. இது, இரு புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டதன் மூலம், அதன் சர்வதேச அடைவினை விரிவுபடுத்துவதைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. ஓமான் எயார் நிறுவனமும், பிஜி எயார் நிறுவனமும் 2024 இன் இறுதிக் காலாண்டு அளவில் பங்குடமைதாரர் அல்லாத உறுப்பினர்களாகக் கூட்டமைப்புடன் இணைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயணிகளுக்குக் கிடைக்கப்பெறுகின்ற வலையமைப்பு மற்றும் பயணத் தெரிவுகளை மேலும் மேம்படுத்தும்.

### சரக்குத் தொழிற்பாடுகள்

பயணிகள் விமானப் பயணங்களுக்கான திடீர் அதிகரிப்புடன் சரக்கு கிடைக்கப் பெறுகின்ற தொன் கிலோ மீற்றர்கள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இயங்கிய குறைவான 376 விமானப் பயணங்களுக்கு மத்தியில் ஆண்டுகாலப் பகுதியில் 2% ஆல் அதிகரித்தன. எனினும், தொழிற்துறையின் மேலதிக களஞ்சிய இயலளவு வளங்கள், ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில், சரக்கு வருவாயின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. எவ்வாறாயினும், நிதியாண்டின் இறுதியை நோக்கி இறக்குமதித் தடைகளைத் தளர்த்தல் மற்றும் இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றம் என்பன இறக்குமதிச் சரக்குகளுக்கான கேள்வியில் அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. அதேபோன்று, உயர்வான பணவீக்க வீதத்தை நிலைநிறுத்தல் மற்றும் வங்கி வட்டி வீதங்களில் குறைவு என்பன, குறைவான உற்பத்திச் செலவுகளுக்குப் பங்களித்து, நாட்டிலிருந்தான ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்குத் தூண்டுதல் அளித்தது. எவ்வாறாயினும், இலங்கையில் அதிக விமான நிறுவனங்கள் தொழிற்பாடுகளை தொடங்கியதன் மூலம், அதிகரித்த போட்டி மற்றும் பொருளாதாரக் கொள்கைகளில் துரிதமான மாற்றங்கள் காரணமாக, உள்நாட்டு சந்தை மாறுதல்கள் என்பன இப்பிரிவுக்கான கரிசனைகளாகக் காணப்பட்டன. உயர்வான வட்டி வீதங்கள் மற்றும் உலகளாவிய சந்தைகளில் கொள்வனவு சக்திகளின் வீழ்ச்சி என்பன மூலம் பிரதானமாக தூண்டப்பட்டு, சரக்கிற்கான கேள்வியும் சுருக்கமடைந்தன. நிதியாண்டின் போது, சரக்குத் தொழிற்பாடுகள் ரூபா 31 பில்லியன் மொத்த வருமானத்திற்கு வகைகோலின.

சரக்குத்துறை சந்தைக்கு நான்கு உற்பத்திகளைத் தொடங்கியது. அதாவது, பிரஸ்னஸ் கிளாஸ் (Freshness Class), பிரீசியஸ் கிளாஸ் (Precious Class), வெல்னஸ் கிளாஸ் (Wellness Class) மற்றும் கார்டியன் கிளாஸ் (Guardian Class) என்பனவாகும். முன்னோக்கிச் சென்ற ஸ்ரீலங்கன் கார்கோ, நூதனமான உற்பத்திகளை அறிமுகப்படுத்துகின்ற அதேவேளை, ஏற்கனவே காணப்படுகின்ற அதன் உற்பத்திகளில் சந்தை ஊடுருவலை அதிகரிப்பதற்குத் திட்டமிட்டு வருகின்றது. சந்தைக் கேள்விகளுக்கு அமைய, மூன்றாம் தரப்பு சரக்குத் தொழிற்பாடுகளை ஆரம்பித்து, உலகளாவிய பங்காளர்களுடனான கூட்டிணைப்பை மேம்படுத்துவதற்கும் எயார்லைன் திட்டமிட்டு வருகின்றது. மேலும், ஸ்ரீலங்கன் கார்கோ தனது 6வது முனையத்திலிருந்து அதன் இறக்குமதித் தொழிற்பாடுகளைத் தொடங்கவுள்ளதுடன், சரக்குகள் கையாளுதலை உகப்பாக்கம் செய்து, வினைத்திறனை அதிகரிப்பதற்கு CEIV சான்றிதழைப் பெற்றுக்கொள்வது (மருந்து, லித்தியம் மற்றும் புதியவை) உள்ளடங்கலாக, தனியான பொதிச் சேவை மற்றும் அழியக்கூடிய பொருட்களுக்கான நிலையங்களையும் தாபிக்கவுள்ளது.

வினைத்திறனையும், வருமானத்தை உச்சப்படுத்துவதனையும் தூண்டுவதற்கு, தொழில்நுட்பத்தின் மூலம் இயக்கப்படும் முறைமைகளையும், தீர்வுகளையும் நடைமுறைப்படுத்துவதிலும் கணிசமான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.

### தொழில்நுட்பத்தின் மூலம் தொழிற்பாடுகளை உகப்பாக்கம் செய்தல்

தொழிற்பாடு சார்ந்த உன்னதத்தையும், போட்டி அனுகூலத்தையும் இயக்குவதில், டிஜிட்டல் ரீதியான மாறுதலைத் தழுவிக்கொள்வதையும், துரிதப்படுத்துவதையும் எயார்லைன்ஸ் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. இவ்வர்ப்பணிப்பில் நிலையுறுதியாக இருந்து எயார்லைன்ஸ் ஆண்டின் போது அதன் மைய முறைமைகளினதும், செயன்முறைகளினதும், சிலவற்றை டிஜிட்டல் தளம் ஒன்றுக்கு மாறுதலடையச் செய்து, உள்ளக வினைத்திறனை அதிகரித்து, வாடிக்கையாளர்களுக்கான அதன் சேவைத் தரத்தை மேம்படுத்தி, அவர்களின் நம்பிக்கையை மேலும் திடப்படுத்தியது.

- **வருவாய் முகாமைத்துவ அனுகூலம்**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இணையத்தில் சேவையகம் அமைந்த, செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் என்பன மூலம் இயக்கப்படும் வருவாய் உகப்பாக்கத் தீர்வு ஒன்றான PROS வருவாய் முகாமைத்துவ அனுகூலம் (PROS, RMA) என்ற முறைமையுடன் நேரலையாகச் சென்றது. எயார்லைன்ஸின் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் வருவாய் முகாமைத்துவ இயலளவுகளில் உபாயரீதியான மேம்படுத்தலினை இந்நகர்வு குறித்துக் காட்டுகின்றது.

PROS RMA என்பது, வருவாய் வாய்ப்புகளை உச்சப்படுத்துவதற்குத் தேவைக்கேற்றவாறு அமைக்கப்பட்ட இயக்கவாற்றல் மிக்க விலையிடல், எதிர்வுகூறல் மற்றும் பொருள் பதிவேட்டுக் கட்டுப்பாடு என்பவற்றை வழங்குவதற்காக, நவீன செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் தொழில்நுட்பவியல்களில் இருந்து அனுகூலம் பெறுவதற்கு வடிவமைக்கப்பட்டதாகும். முன்னேற்றகரமான இக்கருவியினை ஒருங்கிணைத்தலானது, நிகழ்நேரத்தில் சந்தைக் கேள்விகளுக்கான அதன் பதிலளிப்பு இயலளவுகளை மேம்படுத்தி, இருக்கை விலையிடலை உகப்பாக்கம் செய்து, ஒட்டுமொத்த வருவாய் செயலாற்றத்தையும் அதிகரிப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை இயலச் செய்கின்றது. ஆகையினால், எயார்லைன்ஸின் வருமான முகாமைத்துவச் செயன்முறைகளைச் சீரமைத்து, மாற்றமடைகின்ற சந்தை நிலைமைகளை எதிர்கொள்வதற்கு ஏற்றவாறு, ஆக்கக்கூடிய உபாயங்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. விமான நிறுவனங்கள், அவற்றின் போட்டி அனுகூலத்தையும், இலாபத்தன்மையினையும், துரிதமான பரிணாம வளர்ச்சியடைகின்ற சூழலில் நிலைநிறுத்துவதற்காக, செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் தீர்வுகளை அவை முன்னேற்றகரமாகப் பின்பற்றி வருகின்ற தற்போதைய ஒட்டுமொத்த தொழிற்துறைக்கும் ஒத்திசைவாக இது காணப்படுகின்றது.

- **Amadeus குழும முகாமையாளர்**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குழு, முன்பதிவுகளின் முகாமைத்துவத்தைச் சீரமைத்து, மேம்படுத்துவதற்கு, வடிவமைக்கப்பட்ட, முன்னேற்றகரமான தீர்வு ஒன்றாக Amadeus குழும முகாமையாளருடன் நேரலையாக இணைந்து, தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கும், வருவாயினை அதிகரிப்பதில் குழுமப் பயணத்திற்கான வாடிக்கையாளர் சேவைக்கும் எயார்லைன்ஸின் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டியது. இதனை நடைமுறைப்படுத்தலானது, தொழிற்பாட்டு உன்னதத்தையும், வாடிக்கையாளர் சௌகரியத்தையும் தூண்டுவதற்கு, பிந்திய தொழில்நுட்பத்தைத் தழுவிக்கொள்வதில் எயார்லைன்ஸின் ஒட்டுமொத்த உபாயத்தினது முக்கிய பாகம் ஒன்றினைத் தோற்றுவித்து, தொழிற்துறையினுள் அதன் போட்டி நிலையினை நிலைநிறுத்துகின்றது.

- **PRA V20**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வருமானக் கணக்கீட்டில் செம்மையினையும், வினைத்திறனையும், இணங்குவித்தலையும் மேம்படுத்துவதற்கான பிந்திய வருமானக் கணக்கீட்டுத் தீர்வான எக்ஸலின் PRA V20 தீர்வுக்கு நகர்ந்து, அதன் நிதியியல் தொழிற்பாடுகளைத் தரமுயர்த்தியது. இந்நவீன தீர்வானது, நிகழ்நேர செயன்முறைப்படுத்தல், தானியக்கம், விகித சமப்படுத்தல் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கையிடல் என்பனவற்றை உள்ளடங்கியதாக பயணி வருவாய்க் கணக்கீட்டில் ஈடுபடுகின்ற சிக்கலான செயன்முறைகளைச் சீர்படுத்தி தானியங்கப்படுத்துகின்றது.

- **சரக்கு டிஜிட்டல் முன்பதிவுத் தளங்களுடனான பங்குடமைகள்**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் WebCargo, Cargo.One மற்றும் CargoAi ஆகிய டிஜிட்டல் முன்பதிவுத் தளங்களுடன் பங்குடமைகளை உருவாக்கி, பயணிகளுக்காக ஒட்டுமொத்த முன்பதிவுச் செயன்முறையினதும், இலத்திரனியல் ரீதியான செயன்முறைப்படுத்தலையும் இயலச் செய்தது. ஆகையினால், பயணர்கள் தேடல் பெறுபேறுகள் மூலம் வழங்கப்படும் விமான நிறுவனங்களின் பட்டியல் ஊடாக சரக்கு ஏற்றல் விபரங்களைப் பதிவு செய்து, அவர்களுக்கு விருப்பமான தீர்வினைத் தெரிவு செய்யலாம் என்பதுடன், கொடுப்பனவுகளை இணைய வழியில் தீர்ப்பனவு செய்யலாம். அதன் பின்னர், கட்டணம் மற்றும் இடவசதி உறுதிப்படுத்தல் என்பன விமான நிறுவனத்திற்கும், பயணருக்கும் இடையில் நிகழ்நேரத்தில் தொடர்பூட்டப்பட்டு, தற்போது செயற்பாட்டிலுள்ள நேர தீவிர செயன்முறைப்படுத்தலை இல்லாதொழிக்கின்றது. இது, சரக்கு ஏற்றுபவர்கள், வானூர்திகள் மற்றும் ஏற்பாட்டுச் சேவை வழங்குநர்கள் உள்ளடங்கலாக, பங்குதாரர்கள் மத்தியில் சிறந்த தொடர்பாடலுக்கும், ஒருங்கிணைப்பிற்குமான தளத்தினை ஸ்ரீலங்கன் கார்கோ இயலச் செய்து, ஏற்பாட்டுச் சேவை மற்றும் வழங்கள் சங்கிலி முகாமைத்துவத்தின் சீரமைப்புக்கு வழிவகுக்கின்றது.

## எமது மக்கள்

அதன் வெற்றியினதும், வளர்ச்சியினதும் அடித்தளத்தினை கம்பனியின் ஊழியர்கள் உருவாக்கி, அனைத்துப் பங்குதாரர்களுக்குமான பெறுமதி உருவாக்கத்தை இயக்குகின்றனர். கம்பனியின் தொலைநோக்கையும், பணியையும் அவர்கள் வெளிப்படுத்தி, உலகிற்கு எயார்லைன் பற்றிய பகிரங்க எண்ணப்பாங்கினை வடிவமைக்கின்றனர். பல்வேறுபட்ட கடமைகள் மீதும், கூட்டாக பணியாற்றுவதன் மூலமும், ஊழியர்கள், வாடிக்கையாளர் அனுபவத்திற்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தி, சவால்களுக்கு மத்தியில், எயார்லைன்ஸின் நற்பெயரைப் பேணி முன்னேற்றமடைவதற்கான அதன் இயலுமையினை வலிமைப்படுத்துகின்றனர். கம்பனியின் தொடர்ச்சியான முன்னேற்றத்தில் அவர்கள் ஆற்றுகின்ற உன்னதமான இவ் வகிபாகத்தினைக் கருத்திற்கொண்டு, அவர்களது நல்வாழ்வுக்கு ஆதரவளிப்பதற்கும், பணியாற்றும் இடத்தின் திருப்திக்கும், அர்ப்பணிப்பு மிக்கதாக நிறுவனம் விளங்குகின்றது.

2023/24 நிதியாண்டில் உள்ளவாறு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 5,935 ஊழியர்களைக் கொண்ட மொத்த தொழிற்படையினை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இதில் 66% ஆண்களும், 34% பெண்களுமாவர். அவர்கள் வேறுபட்ட உபாயரீதியான தொழிற்பிரிவுகளுக்கிடையில் பரந்து காணப்படுகின்றனர்.

| வகை | பெண் | | ஆண் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| முகாமையாளர்கள் | 111 | 2% | 182 | 3% | 293 | 5% |
| விமானப் பயண பணியாட்கள் | 18 | 0.3% | 241 | 4% | 259 | 4% |
| வானறைப் பணியாட்கள் | 665 | 11% | 310 | 5% | 975 | 16% |
| விமானப் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் | 21 | 0.4% | 555 | 9% | 576 | 10% |
| பயிற்சியாளர், தரப்படுத்தப்பட்ட மற்றும் நிறைவேற்று பணியாட்கள் | 1179 | 20% | 2653 | 45% | 3832 | 65% |
| மொத்தம் | 1994 | 34% | 3941 | 66% | 5935 | 100% |

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் மனிதவளக் கொள்கை

எயார்லைன்ஸின் மனிதவளக் கொள்கையானது, கம்பனியின் ஒட்டுமொத்த தொழில் குறிக்கோள்களை இயக்குவதில் சரியான தொழில் வகிபாகத்திற்காக பொருத்தமான ஆற்றல் படைத்தோரை ஆட்சேர்ப்புச் செய்வதன் மீது கவனம் செலுத்துகின்றது. மோசமான பொருளாதார நிலைமைகள், நிதியியல் தடைகள், மூலவள மட்டுப்பாடுகள் மற்றும் இக்காலப்பகுதியில் எயார்லைன்ஸின் தொழிற்பாடுகளின் அனைத்து நோக்குகள் மீதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்த புத்திஜீவிகள் வெளியேறுதல் போன்ற மையச் சவால்களைக் கருத்திற்கொண்டு எயார்லைன்ஸின் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளுக்கும், ஆதரவளிப்பதற்கு மனிதவள பிரிவு உபாய ரீதியான தொழில் பங்குடமை அணுகுமுறையினைப் பின்பற்றியது.

மனிதவள உபாயம், பின்வரும் முக்கிய உபாய முக்கியத்துவம் மிக்க துறைகளில் கவனம் செலுத்தியது:

- தொடர்ச்சியான ஈடுபாட்டுக் கலாசாரத்தைப் பேணி வளர்ப்பதன் மூலம், அலுவலர் தக்கவைப்பு மற்றும் முக்கிய துறைகளுக்காக இலக்கிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்துதல்.
- ஊழியர்களை ஊக்கப்படுத்தவும் ஈடுபடுத்துவதற்கும் போட்டிமிக்க வெகுமதிகள் மற்றும் ஊதியத்திட்டங்கள்.
- இயலளவு விருத்தியும், மேலதிகத் தேர்ச்சிகளைக் கற்பித்தலும்.
- உற்பத்தித்திறன் மிக்க தொழிற்படை ஒன்றினை உறுதி செய்வதற்கு, ஊழியர்களின் ஆரோக்கியமும், நல்வாழ்வும்.
- தொழிற்துறைசார் ஐக்கியமும், சார்பான பணிச்சூழலைப் பேணி வளர்ததலும்.
- கரிசனைகளைச் செயலூக்கத்துடன் தீர்ப்பதற்கு, தொழிற்சங்கங்களுடனும், தொழிலாளர் பிரதிநிதிகளுடனும் உத்வேகம் மிக்க உறவுகளைப் பேணுதல்.

### ஆட்சேர்ப்பும் தக்கவைத்தலும்

பதவி வெற்றிடங்களுக்கு மிகப்பொருத்தமான அபேட்சகர்களைக் கவர்வதற்காக, நியாயமான, பக்கச்சார்பற்ற ஆட்சேர்ப்பு செயன்முறையினை கம்பனி இடம்பெறச் செய்துள்ளது. இதனால், பதவிகளை வகிப்பதற்கு முழுமையாக அவர்களது தகைமைகள் மற்றும் பொருத்தப்பாடு என்பனவற்றின் அடிப்படையில் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். பதவிகளுக்குப் பொருத்தமான ஆற்றல் மிக்கோரைத் தேடுகின்ற போது, உள்ளக ரீதியாக வெற்றிடங்கள் முதலில் விளம்பரப்படுத்தப்பட்டு, கமபனிக்குள் வளர்ச்சியடைந்த, ஆற்றல் படைத்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். வெளிவாரியாக நிரப்பப்பட வேண்டிய தேவையுடைய பதவிகளும், நுழைவுமட்டப் பதவிகளும், அவற்றின் தொழிற்பாட்டு மற்றும் அலுவலர் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, கம்பனிக்கு வெளியில் விளம்பரப்படுத்தப்படுகின்றது. தொழில் வகிபாகத்தைச் சார்ந்து தேடுகின்ற வழிகள் வேறுபடுகின்றன. தெரிவு நடைமுறையானது, ஒவ்வொரு பதவி வகைக்குமெனக் கணிப்பிடப்பட்ட தேர்ச்சிகளின் அடிப்படையில் அபேட்சகர்கள் கடுமையான மதிப்பீட்டுக்கு உட்படுவதை வேண்டுகின்றது.

டிஜிட்டல் விண்ணப்பங்களை இயலச் செய்கின்ற அதிநவீன ஆட்சேர்ப்பு முறைமை (பதவிக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்) தானியங்கப்பட்ட பரிசோதனைத் (முன்கூட்டியே நிர்மாணிக்கப்பட்ட பிரமாணத்தின் அடிப்படையில், பொருத்தமான அபேட்சகர்களின் தன்னியக்கமான அடையாளப்படுத்தல்) தரவுகளினால் தூண்டப்படும் தீர்மானம் மேற்கொள்ளல் (தரவுப் பகுப்பாய்வுகள் ஊடாக ஆட்சேர்ப்பு உபாயங்களின் செயற்திறன் வாய்ந்த தன்மையினை மதிப்பீடு செய்தல்) என்பன வாயிலாக ஆட்சேர்ப்புச் செயன்முறை மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### ஊழியர் புரள்வு

உலகளாவிய மற்றும் உள்நாட்டு மட்டத்தில் காணப்படும் சவால்களைக் கருத்திற் கொள்கையில், கம்பனி புரள்வு ஆண்டின் போது 10% ஆக உயர்வாகக் காணப்பட்டது. கனிசமான எண்ணிக்கையிலான தேர்ச்சி பெற்ற விமானத் தொழில்சார் நிபுணர்கள், வெளிநாடுகளில் தொழிலை நாடியதன் மூலம், விமானப் போக்குவரத்துத் தொழிற்துறையும், நாட்டின் புத்திஜீவிகள் வெளியேற்றத்தினால் வருந்தியது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதில், எயார்லைன்ஸ் புதிய அபேட்சகர்களின் ஆட்சேர்ப்பினைத் தொடங்கிய அதேவேளை, சமகாலத்தில் பல்வேறு தக்கவைத்தல் உபாயங்களை நடைமுறைப்படுத்தியது. ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு பதவிகளுக்காகவும் 1,055 புதிய ஊழியர்கள் இணைந்து கொண்டனர்.

ஊழியர் தக்கவைத்தலை உறுதி செய்யும் பொருட்டு, கம்பனி நிதியாண்டு முழுவதும் பல்வேறு முக்கிய உபாயங்களை நடைமுறைப்படுத்தியது.

- 2023 ஜுன் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், சிறப்பாகச் செயலாற்றும் அலுவலர்களுக்குப் பொருத்தமான செயலாற்றுகைப் படியேற்றங்கள் வழங்கப்பட்டன.
- சந்தை மற்றும் தொழில்துறை வீதங்களைக் கருத்திற் கொண்டு, 2023 ஜுன் மாதத்தில் சம்பள அளவுத் திட்டங்கள் சீரமைக்கப்பட்டன.
- தேர்ச்சி மற்றும் பயணித்தல் தொடர்புடைய பல்வேறு கொடுப்பனவுகளுக்குத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- அதிகரித்த பறக்கும் மணித்தியாலங்களை ஊக்குவிப்பதற்காக, விமான மற்றும் விமானப் பணிக்குழுக்களுக்காக புதிய மணித்தியால உற்பத்தித்திறன் கொடுப்பனவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### செயலாற்றுகை மதிப்பீடு

அவர்களின் பதவிகளில் உந்துசக்தி அளிப்பதற்கு ஊழியர்களை ஊக்குவிப்பதில் கம்பனியினுள் செயலாற்றுகையினால் தூண்டப்படும் கலாசாரம் ஒன்றை கம்பனி உருவாக்கி, செயலாற்றுகை எதிர்பார்க்கைகளை விஞ்சுகின்ற உயர்ந்தளவான உற்பத்தித்திறனை விளைவிக்கின்றது. ஆகையினால், ஒவ்வொரு ஆண்டும் உபாயமட்டத்தில் இனங்காணப்பட்ட முக்கிய செயலாற்றுகைத் திட்டங்களின் அடிப்படையில் அமைந்த இரு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (மத்திய ஆண்டு மற்றும் வருடாந்த மீளாய்வுகள்) ஊழியர்களின் பயிற்சித் தேவைகளை இனங்காண்பதற்கு செயலாற்றுகைப் பின்னூட்டலின் அடிப்படையில் பயிற்சித் தேவைப் பகுப்பாய்வும் நடத்தப்படுகின்றது. செயலாற்றுகைச் சுழற்சிக்காக பிரிவுசார் முக்கிய செயலாற்றுகைச் சுட்டெண்களுடன் அணிசேர்கின்ற தனிப்பட்ட ரீதியான இலக்குகள், குறைவாகச் செயலாற்றுகின்றவர்களுக்காக செயலாற்றுகை மேம்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தல், செயலாற்றுகை இடைவெளிகளைக் குறைப்பதற்கு நிரல் முகாமையாளர்களுடன் மற்றும் குறைவாகச் செயலாற்றுபவர்களுடன் கலந்துரையாடல்களை வசதிப்படுத்தல் போன்ற பல்வேறு முயற்சிகள் ஊடாக செயலாற்றுகையினால் தூண்டப்படும் கலாசாரம் மேலும் வலுப்படுத்தப்பட்டது.

தொழிலாளர் ஊதியம் செயலாற்றுகை மதிப்பீட்டுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றது. இங்கு செயலாற்றுகைத் தரப்படுத்தலின் அடிப்படையில், வருடாந்த படியேற்றங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. பதவி உயர்வுகளுக்காக ஊழியர்களைத் தெரிவு செய்வதிலும், தொழில் விருத்தியின் அடுத்த மட்டத்திற்கு முன்னேற்றுவதற்கு தனிப்பட்டவர்களைத் தயார்படுத்துவதிலும் இச்செயலாற்றுகைத் தரப்படுத்தல்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

### நன்மைகள்

பணியாற்றும் இடத்தில் அவர்களின் ஊக்குவித்தலையும், திருப்தியினையும் நிலைநிறுத்தி, உயர்வான உற்பத்தித் திறனுக்கும், பெறுபேறுகளுக்கும் பங்களிப்புச் செய்வதற்கு, ஊழியர்களுக்கு கவர்ச்சிகரமான நன்மைப் பொதியொன்று வழங்கப்படுகின்றது. ஆகையினால், ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக வழங்கப்படும் நியதிச்சட்ட நன்மைகளுக்குப் (பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்) புறம்பாக, அலுவலர் நலனோம்புகை சங்கத்தின் ஊடாக, நன்மைப் பொதியொன்று ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றது. சில்லறை விற்பனை நிலையங்கள், வங்கிச் சேவைகள், பழ விற்பனை நிலையங்கள், வருடாந்த மற்றும் பண்டிகைக்கால விற்பனைகள், தவணைக்கொள்வனவு வசதிகள், அதேபோன்று, சுற்றுலா விடுதி வசதிகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.

மேலும், ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விசார் முயற்சிகளை அங்கீகரித்தும், அதரவளிப்பதற்கும் நலனோம்புகை சங்கத்தினால் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களும் வழங்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, மருத்துவச் செலவுகளை மீள் நிரப்பல், விசேட ஆலோசனை மற்றும் மருத்துவ முகாம்கள் என்பனவற்றுடன் இணைந்து, மருத்துவச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு 24 மணி நேர மருத்துவ நிலையம் என்பன ஊழியர்களுக்கு

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.

கம்பனியினால் வழங்கப்படும் மருத்துவ நன்மைத் திட்டங்களாகும். 24 மணி நேர உணவக வசதி மற்றும் போக்குவரத்துச் சேவைகள் என்பனவும், கட்டுநாயக்கவை தளமாகக் கொண்ட அலுவலர்களுக்குக் கிடைக்கப் பெறுகின்றன.

### கற்றலும் அபிவிருத்தியும்

கம்பனியின் நிலைபெறத்தக்க முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமாக விளங்குகின்ற ஊழியர் செயலாற்றுகையையும், இயலளவுகளையும் மேம்படுத்துவதற்கு, கற்றலும் அபிவிருத்தியும் பயன்படுகின்றன. நிறுவனத்தின் செயலாற்றுகை தர நியமங்களை நிறைவு செய்வதற்கு தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதை மையப்படுத்திய மென்திறன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக, அனைத்து வகையான ஊழியர்களுக்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகிறது. மேலும், புதிதாகப் பதவி உயர்த்தப்பட்ட அலுவலர்களுக்காக, மேற்பார்வைத் தேர்ச்சி அபிவிருத்தியுடனும், அதேபோன்று திறன் அபிவிருத்தியுடனும் தொடர்புடைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இப்பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும்பாலானவை, தகைமைபெற்ற உள்ளக பலதரப்பட்ட ஆளணியினால் வசதிப்படுத்தப்படுகின்ற அதேவேளை, நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ அலுவலர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள், அரச பல்கலைக்கழகங்கள் ஊடாக வசதிப்படுத்தப்பட்டன.

### ஆரோக்கியமும் பாதுகாப்பும்

ஊழியர்களின் ஆரோக்கியத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதை நெறிமுறைசார்ந்த கடப்பாடாக எயார்லைன்ஸ் கருதுவதுடன், இதனால் ஊழியர்களின் உடலியல் மற்றும் உளவியல் நல்வாழ்வுக்கு ஆதரவளிப்பதற்கு அர்ப்பணித்து அதற்காக முயற்சிகளை மேற்கொள்கின்றது. இதன்மூலம், புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் பற்றி இற்றைப்படுத்தப்பட்டிருப்பதற்கு தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் தேசிய முகவராண்மைகளுடன் கம்பனி நெருக்கமாக ஒருங்கிணைகின்றது. அதனைப் பின்பற்றி, பரிந்துரைக்கப்பட்ட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்கள்/தரநியமங்கள் நடப்பு சர்வதேச மற்றும் உள்நாட்டு தரநியமங்களுக்கு இசைவாக முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு, இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலைப் பேணுவதற்கும் தொழிற்பாட்டுச் செயன்முறைகளைத் திருத்தியமைக்கின்றது.

இதற்கு மேலதிகமாக, தொடர்ச்சியான தொடர்பூட்டல்கள், விழிப்புணர்வுப் பிரசாரங்கள், செயலமர்வுகள் மற்றும் மருத்துவ முகாம்களை நடத்துதல் ஊடாக, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஊழியர்களின் விழிப்புணர்வும் அதிகரிக்கப்படுகின்றது. உணவகங்கள், மதிய உணவு அறைகள், மலசல கூடங்கள் என்பன உள்ளடங்கலாக, முழு பணி வளாகங்களும் கிரமமாகக் கண்காணிக்கப்பட்டு, சுகாதார தரநியமங்களை உகப்பாக்குவதற்கு சீரமைக்கப்படுகின்றன. மேலும், சர்வதேச ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களுடன் அணிசேர்த்து, அவர்களின் பணித் தேவைப்பாடுகள் மற்றும் தொழிற்பாடுசார்ந்த பதவி ஆகிய ஒவ்வொன்றுக்கும் இசைவாக, அவசியமான அலுவலர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம்/கருவி வழங்கப்படுகின்றது.

மேலும், அனைத்து அலுவலர்களினதும் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பை, நிறுவனப் பாதுகாப்புப் பிரிவு உன்னிப்பாகக் கண்காணித்து, கம்பனியின் மருத்துவ நிலையம் ஊடாக அவர்களது உடனடி மருத்துவத் தேவைபபாடுகளுக்கு 24 மணி நேர தயார் உதவியும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

### ஈடுபாடும் பணி - வாழ்க்கை ஒருங்கிணைப்பும்

அவர்களைத் தக்கவைத்தலை உறுதி செய்வதற்கு ஊழியர் ஒழுக்கம் மற்றும் திருப்தியினை மேம்படுத்துவதற்கு மேலதிக முயற்சி வேண்டப்பட்ட காலமாக இது அமைந்திருந்தது. தொழிற்துறைப் புரள்வு, கணிசமாக, உயர்வாக இருந்த அந்நேரத்தில் ஊழியர்களை ஈடுபடுத்துவதும் ஒட்டுமொத்த அவசியமாக இருந்தது. ஆகையினால், கம்பனியானது, அவர்களின் மனவுறுதி, குழுவாகப் பணியாற்றும் மற்றும் வேலை - வாழ்க்கை ஒருங்கிணைப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கு, நிறுவன மற்றும் கருப்பொருள் கொண்ட ஊழியர் ஈடுபாட்டு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தது. இதேபோன்று, தொழில் தேவைப்பாடுகளின் அடிப்படையில், வருடாந்த திட்டமிடப்பட்ட நிகழ்வுகள், நுண்ணறிவு சார்ந்த நிகழ்வுகள் மற்றும் ஈடுபாட்டு செயற்பாட்டு செயற்பாடுகள் என்பவற்றையும் கம்பனி முன்னெடுத்தது.

மேலும், ஆண்டு முழுவதும் விழிப்புணர்வுப் பிரசாரங்களையும், நிறுவன சமூகப் பொறுப்பு முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் உள்ளடங்கலாக, சமூக நிகழ்வுகளையும் விசேட நாட்களையும் கொண்டாடுவதை கம்பனி வசதிப்படுத்தியது. பிரிவுகளுக்கிடையிலான மற்றும் திணைக்களம்சார் கூட்டுமுயற்சிகள், அதேபோன்று ஊழியர் சங்கங்களுடனான கூட்டு முயற்சிகள் என்பன ஊழியர் ஈடுபாட்டு நிகழ்வுகளை உச்சப்படுத்தின.

இதற்கு மேலதிகமாக, தொழிற்துறைப் பங்காளர்களுடன் மற்றும் வெளிவாரி நிறுவனங்களுடன் கூட்டிணைந்து, அனுபவத்தையும், கலாசாரம் கடந்த அனுபவங்களையும், அறிவுப் பகிர்வு நிகழ்வுகளையும் வெளிக்கொணர்வதற்கு கம்பனி விசேட கூட்டுமுயற்சி ஏற்பாடுகளை ஒழுங்கமைத்தது. திணைக்களங்களுக்கிடையிலான கிரிக்கட் சுற்றுப்போட்டியான SWS கிரிக்கட் பாஷ், அன்னையர் தினம் மற்றும் மகளிர் தின அலுவலர் நினைவூட்டல் புத்தாண்டுக்கான பல் சமய வைபவங்கள் மற்றும் கம்பனியின் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் என்பன விலைமதிப்பற்ற கூட்டு முயற்சியுடனும், எமது தொழிற்சங்கங்களுடனும், தொழிற்துறைப் பங்காளிகளுடனும் இணைந்து, கடந்த ஆண்டின் போது இடம்பெற்ற பல எண்ணிக்கையான நிகழ்வுகள் மத்தியில் காணப்படுகின்றன.

மேலும், ஒட்டுமொத்த பணி - வாழ்க்கை ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்காக, ஊழியர்களின் நல்வாழ்வுக்கும், ஊக்கப்படுத்தலுக்கும் ஆதரவளிக்கின்ற பல்வேறு வகையான முயற்சிகளை நாம் நடைமுறைப்படுத்தினோம். பல்வேறு விழிப்புணர்வுப் பிரசாரங்கள், செயலமர்வுகள், பிரத்தியேகமான ஆலோசனைச் சேவை, அதேபோன்று காலமுறையாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன.

### மனக்குறைகளைக் கையாளுதல்

கம்பனி, நியாயமான மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்ட குறை மற்றும் பிணக்குகள் கையாளல் கொள்கையினைக் கொண்டுள்ளது. இது, தேவையான போது இற்றைப்படுத்தப்படுகின்றது. அனைத்து ஊழியர்களுக்கும் சமத்துவமான பரிகாரத்தினை இது உறுதி செய்து, இக்கரிசனைகளை எதிர்மறையான பழிவாங்கல் பற்றிய கவலையின்றி உடனடி மேற்பார்வையாளருக்கு அல்லது மனிதவளங்கள் குழுமத் தலைவருக்குத் தெரியப்படுத்துவதை ஊக்குவிக்கின்றது. எழுப்பப்பட்ட கரிசனைகள் தொடர்பில் கம்பனி உடனடியாக நவடிக்கைகளை மேற்கொண்டு, விடயம் பற்றிய முறையான விசாரணையை/புலனாய்வை மேற்கொண்டு, இதனூடாகப் பிரச்சினையைத் தீர்க்கின்றது. கம்பனியில் பன்முகத்தன்மை மிக்க ஊழியர் குழுக்களைக் கருத்திற் கொள்கையில், குறை மற்றும் பிணக்குகள் கையாளும் செயன்முறைகள் அனைத்து வகையான கரிசனைகளையும் முழுமையாகத் தீர்க்கின்ற செயன்முறையாகக் காணப்படுகின்றது.

வேறுபட்ட ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் பழிவாங்கும் அச்சமின்றி தெரிவிப்பதற்கு வசதியினையும், பாதுகாப்பினையும் உணருமாறு ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். பாலியல் தொல்லை தொடர்புடைய குறைகளைக் கையாள்வதற்கு குழுவொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

### பன்முகத்தன்மையும் அனைவரையும் உட்சேர்த்தலும்

சமத்துவ வாய்ப்பு தொழில் தருநர் ஒருவராக பாலினம், வயது, இனம், மாற்றுத்திறன், மதம், பாலியல் நோக்கு அல்லது கலாசாரப் பின்னணி என்பவற்றுக்கு எதிராக அல்லது மூலம் தனிப்பட்டவர்கள், பாரபட்சத்திற்கு உட்படாத பணியிடத்தினுள் பன்முகத்தன்மையினையும், சமத்துவத்தையும், அனைவரையும் உட்சேர்த்தலையும் உறுதி செய்வதற்கு கம்பனி உறுதிபூண்டுள்ளது. ஆகையினால், ஊழியர்கள் அவர்களது ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு இடையறாது ஊக்குவிக்கப்பட்ட இதன் ஊடாக பன்முகத்தன்மை நோக்குகளுக்கு மதிப்பளித்து வரவேற்கின்ற பாதுகாப்பான மற்றும் ஆதரவுமிக்க பணிச்சூழலைப் பேணி வளர்க்கின்றது.

## வாடிக்கையாளர் அனுபவம்

உயர் போட்டிமிக்க தொழிற்துறைத் தோற்ற அமைப்பினுள் இயங்கி, உன்னதமான சேவையினை வழங்குதல் என்பது, எயார்லைன்ஸின் நிலைபேறான வளர்ச்சியையும், நீண்டகால கீர்த்தியினையும் உறுதி செய்வதற்கு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. பயணிகளுடனான தொடர்புகளைப் பேணி வளர்த்து, பெறுமதிமிக்கவர்களாக அவர்களை உணரச் செய்கின்ற தனிப்பட்ட தேவைக்கேற்றவாறான வாடிக்கையாளர் பயணங்கள் ஊடாக நினைவில் நீடிக்கும் பயண அனுபவம் உறுதி செய்யப்படுகின்றது. ஆகையினால், பயணச்சீட்டை முன்பதிவு செய்வது தொடக்கம், விமானத்தில் இருந்து இறங்கும் வரை பயண அனுபவம் என்பது விமான நிறுவனம் பற்றிய வாடிக்கையாளரின் எண்ணப்பாங்கினை கூட்டாக வடிவமைக்கின்ற பல்வேறு இடைத்தொடர்புகளை உள்ளடக்கி, அவர்களின் எண்ணத்தில் மக்கள் தக்க வைக்கும் வர்த்தக நாம எண்ணப்பாங்கினை வளர்க்கின்றது.

இவ் இன்றியமையாத நோக்கினைப் புரிந்துகொள்வதில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ந்து இடம்பெறுகின்ற அடிப்படையில் வாடிக்கையாளர் அனுபவத்தைப் பேணுவதற்கும், மேம்படுத்துவதற்கும் பாடுபட்டு பன்முகத்தன்மை கொண்ட சேவை நாடிகளின் படிப்படியாக வளர்ச்சியடைகின்ற கேள்விகளை நிறைவேற்றுகின்றது.

### உற்பத்தி மற்றும் சேவைப் படைப்புகள்

வாடிக்கையாளர் திருப்தி மீது கவனம் செலுத்துகின்ற எயார்லைன்ஸ் என்ற வகையில், உயர்தரம் மிக்க சேவையினைப் பேணுவதற்கும், அதன் சேவைநாடிகளின் பன்முகத்தன்மை கொண்டு சேவைகளை நிறைவேற்றுவதற்கும் கம்பனி அதன் உற்பத்திப் படைப்புக்களை இடையறாது மேம்படுத்தி வருகின்றது. இதன் விளைவாக, மேம்படுத்தப்பட்ட விமானத்தில் ஏறும் அனுபவம், விமானப் பயணி அனுபவ அமைப்பு மற்றும் சர்வதேச விமானப் பயண சேவை அமைப்பு என்பன மூலம் 2024 இல் "சிறந்த விமானப்பயண உணவு அல்லது குடிபான புத்தாக்க விருது" வழங்கி அங்கீகரிக்கப்பட்டு, இலங்கையின் சுவைகள் பிரசாரத்தை எடுத்துக்காட்டியது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உற்பத்திப் படைப்புகளின் தனித்துவம் மிக்க அம்சம் ஒன்றாக விளங்குகின்ற இலங்கையின் உணவினை ஊக்குவிப்பதற்கு, விருதை வென்ற இலங்கை சுவைப் பிரசாரம் வடிவமைக்கப்பட்டது. "எண்ணத்தை, உடலை மற்றும் ஆத்மாவைத் தூண்டுதலாக" இலங்கை உணவு வகைகளை உணவுத் தெரிவுப்பட்டியல் அறிமுகப்படுத்தி, அதன் பயணிகளுக்கு இலங்கை வழங்குகின்ற நாட்டிற்கே உரிய, சமையல் அனுபவத்தை எடுத்துக்காட்டுகின்றது. இப்பிரசாரம் விமானப் பயணிகளுக்கும் மற்றும் வியாபார வகுப்புப் பிரிவுக்கும் நீடிக்கப்பட்டு, அதன் வாடிக்கையாளர்களுக்கு இலங்கைக்கே உரிய அனுபவத்தை வழங்கும் எயார்லைன்ஸின் தொலைநோக்கிற்கு மேலும் மெருகூட்டியது.

அத்துடன், எயார்லைன்ஸ் பயணி அனுபவ அமைப்பு (APEX) மூலம் சிறந்த Wi-Fi மத்திய / தெற்காசியாவுக்கான "பயணி பிரிவு விருது" எயார்லைன்ஸ்க்கு வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக 6வது ஆண்டுக்காகவும் APEX உத்தியோகபூர்வ விமான நிறுவனத் தரப்படுத்தல் மூலம் 2024 ஆம் ஆண்டில் நான்கு நட்சத்திர பாரிய விமான நிறுவனம் என்ற அங்கீகாரத்தையும் எயார்லைன்ஸ் பெற்றுக்கொண்டது.

### ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ்

கம்பனி, இலங்கைக்கும், இலங்கையில் இருந்தும் பயணத்தை தொடர்ச்சியாக ஊக்குவித்து, தேசிய விமான சேவையின் ஓய்வுப் பிரிவான ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் ஊடாக அதன் வலையமைப்பின் மீது அனுகூலம் அடைந்தது. அதற்கமைய, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், தேவைக்கேற்றவாறான அனைத்தையும் உள்ளடக்கிய விடுமுறைப் பொதிகள் உள்ளடங்கலாக பரந்த வகையான விடுமுறைத் தெரிவுகளை பயணிகளுக்கு வழங்கி, முக்கிய ஹொட்டேல்கள், பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய சுற்றுலா தொடர்புபட்ட அமைப்புகளுடன் கூட்டிணைகின்றது.

வெளிச்செல்லும் சுற்றுலா தொடர்பில், எயார்லைன் வியாபார வளர்ச்சிக்கு புதிய பங்காளர்களுடன் கூட்டிணைப்புக்களைப் பேணி வளர்ப்பதற்கு புதிய வாய்ப்புக்களைக் கண்டறிவதன் மூலம், அதன் செயன்முறைகளை புத்தாக்கம் மிக்கவாறு மேம்படுத்தியுள்ளது. அதற்கமைய, புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தி, கப்பல் பயணக் கம்பனிகளுடன் கூட்டிணைந்தது. இவற்றுடன் சேர்த்து, ஐக்கிய அரபு இராச்சியம், சிங்கப்பூர், மலேசியா, மாலைதீவுகள் போன்ற சந்தைகளுக்காக போட்டிமிக்க வீதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் நிலத் தொழிற்பாட்டாளர்கள் மத்தியில் போட்டியினை வளர்ப்பதற்கு பல ஸ்ரீலங்கன்ஸ் ஹொலிடேஸ் நிலத் தொழிற்பாட்டாளர்களையும் எயார்லைன்ஸ் நியமித்துள்ளது. ஆபிரிக்கா, ஓமான், சவூதி அரேபியா, ஜியோஜியா, கம்போடியா மற்றும் வியட்னாம் போன்ற இணையம் ஊடாகக் கையாளப்படாத சந்தைகளில் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு இணையம் ஊடாக அற்ற அமைவிடங்களிலும் ஸ்ரீலங்கன்ஸ் ஹொலிடேஸ் நிலத் தொழிற்பாட்டாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், பயணிகளுக்கு விடுமுறைப் பொதிகளை வழங்கி, சிங்கப்பூருக்கான நிலைபேறான பயணம் மீது கவனம் செலுத்தி, எயார்லைன்ஸ் அடைவிட முகாமைத்துவக் கம்பனியொன்றுடன் பங்குடமையினை ஏற்படுத்திக் கொண்டது. அதேபோன்று, பன்முகத்தன்மையுடைய வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கும், தேவைகளுக்கும் இடமளிப்பதற்கு, வியாபார வகுப்புக்கான தெரிவுகள் உள்ளடங்கலாக, சொகுசு தொடக்கம் சிக்கனம் வரையான பல்வேறு வகையான பயணிகளுக்கும் சேவையளிப்பதற்கு பொதிகளின் தெரிவு ஒன்றும் வடிவமைக்கப்பட்டது.

போட்டியாளர் போக்கு பகுப்பாய்வு ஒன்றின் பின்னர் எயார்லைன்ஸ் நேரடியாகத் தொழிற்படுகின்ற அத்துடன், எயார்லைன்ஸ் நேரடியாகத் தொழிற்படாத இணைய வழி சந்தைகளில் பயனடைவதற்கும், புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆயினும், வேறு விமான நிறுவனங்களுடன் உபாயரீதியான பங்குடமைகள் ஊடாகவும் வசதிப்படுத்துகின்றது. எனவே. நாட்டிற்கான முகாமையாளர்கள் மற்றும் சமூக ஊடக வலைத்தளங்கள் ஊடாக குறைவான விமானப்பணி காரணிகளுடன் பயண வழிகளை ஊக்குவிப்பதற்கான பொதிகளை உருவாக்குவதற்குப் புறம்பாக, வியட்னாம், கம்போடியா, மியன்மார், லிஸ்பான் மற்றும் பிலிப்பீன்ஸ் போன்ற இணைய வழி அல்லாத அடைவிடங்களுக்காக புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மதுரை, கோலாலம்பூர், பாங்கொக், டுபாய் மற்றும் மாலே போன்ற அடைவிடங்களின் சந்தை நிலையை மேலும் வலிமைப்படுத்தியது. உள்வரும் சுற்றுலாத் துறைக்காக ஸ்ரீலங்கன்ஸ் ஹொலிடேஸ் விமான நிறுவன வலையமைப்புக்களுக்கிடையில் அதன் நேரடியான பிரசன்னத்தை வலிமைப்படுத்துவதற்கு, சென்னை, திருவனந்தபுரம், கட்மண்டு மற்றும் கொச்சின் ஆகிய இடங்களில் புதிய ஸ்ரீலங்கன்ஸ் ஹொலிடேஸ் அங்கீகாரம் பெற்ற தொழிற்படுத்துநர்களை நியமிப்பதன் மூலம் அதன் வலையமைப்பினை விரிவுபடுத்தக்கூடியதாக இருந்தது.

பல்வகையான விசேட பொதிகளைக் கொண்ட தொகுதி ஒன்றுடன் ஸ்ரீலங்கன்ஸ் ஹொலிடேஸ், பயணிகள் தங்குதடையற்ற பயண அனுபவத்தை அனுபவிக்கின்ற அதேவேளை, இலங்கையின் உள் இயல்கை கண்டறியக்கூடியதாகதவர்களாக இருக்கின்றனர் என்பதனை உறுதி செய்கின்றது. இணைய வழிப் பொதிகளுக்காக, முழுமையாக தன்னியக்கமாக்கப்பட்ட தீர்வினை வசதிப்படுத்துவதற்காக புதிய முன்பதிவு இயக்கம் முன்னெடுக்கப்பட்டு, நேரடிப் பயணிகளுக்கும், வியாபாரத்தில் இருந்து வியாபாரத்திற்கான முகவர்களுக்கும், நாள் முழுவதும் பொதிகளைக் கொள்வனவு செய்வதற்கும், விற்பனை செய்வதற்குமான சுதந்திரத்தை வழங்குகின்றது.

பல்வேறு தொழிற்துறைகளில் இருந்தும், தொழில்சார் நிபுணர்களை ஒன்றிணைப்பதற்கு, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (MICE) சுற்றுலா நிகழ்வுகளையும் ஊக்குவித்து, தொடர்புகளையும் மனங்கவரத்தக்க புத்தாக்கங்களையும் பேணி வளர்த்து வளர்ச்சியினை ஊக்குவிக்கின்றது. இதனால், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் பங்களாதேஷ், டில்லி, சென்னை, இந்தோனேசியா, சீனா, ஹைதராபாத் ஆகிய இடங்களில் "உங்களையும் நாட்டையும்" (MICE) பிரபல்யப்படுத்தல் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கு இலங்கை மாநாட்டுப் பணியகத்துடன் (SLCB) பங்குடமையினை ஏற்படுத்திக்கொண்டது. அதற்குப் புறம்பாக, நேபாளம், கேரளா மற்றும் தெற்காசியப் பிராந்திய சமவாயங்களில் இருந்து தொழில் முயற்சியாளர் அமைப்புக் குழுக்களுடன் ஸ்ரீலங்கன்ஸ் எயார்லைன்ஸை இணைத்து 60க்கு மேற்பட்ட

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.

நாடுகளில் 213 கிளைகளுடன்கூடிய 17,000 க்கு மேற்பட்ட செல்வாக்கு மிக்க வியாபார உரிமையாளர்களின் இணைத்தரப்பு வலையமைப்பு ஒன்றான தொழில்முயற்சியாளர் அமைப்புடன் ஸ்ரீலங்கன்ஸ் ஹொலிடேஸ் பங்குடமையினை வெற்றிகரமாகப் பெற்றுக்கொண்டது.

### சந்தைப்படுத்தலும் தொடர்பூட்டலும்

நாட்டில் சுற்றுலாத் துறையினை முக்கியமாக ஊக்குவிக்கின்ற நிறுவனம் என்ற வகையில், எயார்லைன்ஸ் இலங்கைக்கான முன்னணி சுற்றுலா உருவாகும் சந்தைகள் உள்ளடங்கலாக, அதன் உலகளாவிய வலையமைப்பு முழுவதும் இலங்கையினை நிலைநிறுத்துவதற்கு அர்ப்பணித்து வருகின்றது. நீடித்த திறனுக்கும், சாகச விளையாட்டுக்களுக்குமான அமைப்பாக இலங்கையின் பன்முக மற்றும் அழகிய நிலத்தோற்றத்தை மையப்படுத்தி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பல்வேறு வகையான முயற்சிகளை எடுத்த ஆண்டாக மீளாய்வு செய்யப்படும் ஆண்டு அமைந்திருந்தது.



200 முன்னணி விமான நிறுவன சர்வதேச முகவர்களினதும், பயணத் தொழிற்பாட்டாளர்களினதும் பங்கேற்புடன், 2023 நவம்பரில் ஹம்பாந்தோட்டையில் உலகளாவிய விற்பனை மாநாடு.

### *'Ride Sri Lanka 2023' நிகழ்வை விரிவுபடுத்தல்*

2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற Ride Sri Lanka 2023 நாடு முழுவதுமான சைக்கிள் சுற்றுலாவின் வெற்றியில் இருந்து தோன்றி, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பயண ஊக்குவிப்பாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள், தலைவர்கள் மற்றும் இணை எழுத்தாளர்கள் போன்றோரை உள்ளடக்குகின்ற குழு 2023 ஜுன் மாதத்தில் சைக்கிள் சவாரி நீடிப்பினைப் பெற்றுக்கொண்டது. கவனமாக வழிநடத்தப்பட்ட சைக்கிளோட்டப் பாதையில் இலங்கை முழுவதும் அவர்கள் சவாரி சென்று, நாடு முழுவதும் பல்வேறு வகையான உயிர்ச் சூழலியல் மற்றும் வரலாற்றுச் சுற்றுலா அமைவிடங்களை எடுத்துக்காட்டி, நீர்கொழும்பில் தொடங்கி ஹம்பாந்தோட்டையில் நிறைவு செய்துள்ளன. பங்கேற்றவர்களின் அடைவினைக் கருத்திற் கொள்கையில், சைக்கிள் சவாரி செய்தவர்களின் அனைத்து மட்டங்களுக்கும் மிகவும் நாடப்படும் சைக்கிள் சவாரி அடைவிடமாக இலங்கையினை ஊக்குவிப்பதில் இந்நிகழ்வு மிகவும் காட்டமாக அமைந்திருந்தது. இதற்கு மத்தியில், மென் சைக்கிள் சவாரி சுற்றுலாப் பயணங்களை வழங்குகின்ற ஐக்கிய இராச்சியத்திலுள்ள சைக்கிள் சவாரி கழகங்கள் மற்றும் சுற்றுலாத் தொழிற்படுத்துநர்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சைக்கிளோட்ட வீரர்கள் இம்முயற்சிக்கு விற்பனை ஊக்குவிப்புப் பெறுமதியினைச் சேர்ந்தனர்.

### *'The Colours of Jaffna' பிரசாரம்*

எயார்லைன்ஸ், அதன் "The Colours of Jaffna" பிரசாரத்தின் ஊடாக, உலக அரங்கில் யாழ்ப்பாணத்தை எடுத்துக்காட்டியது. அதன் அழகிய தோற்றம்மிகு கட்டட அமைப்பு, வலிமையான கலாசாரப் பண்புகள் மற்றும் தனித்துவமான சமையல் அம்சங்கள் என்பவற்றுடன், நாட்டின் வடக்கின் சுற்றுலா வளத்தைக் கருத்திற் கொண்டு இப்பிரசாரத்தின் ஊடாக இவ்வம்சங்கள் ஒவ்வொன்றினதும் வசீகரத்தினைக் கவருவதற்கு எயார்லைன்ஸ் முயற்சித்து, ஆழ்ந்த ஈடுபாட்டு அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பயணிகளுக்கு அழைப்பு விடுத்தது.

### *யாழ்ப்பாணத்தின் வசீகரத்தை வெளிக்கொணரும் காணொளியைத் தொடங்கி வைத்தல்*

"The Colours of Jaffna" பிரசாரமானது, யாழ்ப்பாணத்தின் வசீகரமிக்க அம்சங்களை வெளிக்கொணர்ந்த காட்சிமிகு காணொளியுடன் தொடங்கி வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து பதிவிடல்கள் மற்றும் விளையாட்டு வினாடி வினா தொடர் இடம்பெற்று யாழ்ப்பாணத்தின் பலவேறு சுற்றுலா அமைவிடங்கள் பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டது. இவ் ஊக்குவிப்புச் செயற்பாட்டிற்கு நிறைவளித்து, பிரத்தியேகமான விருந்தோம்பல் பங்காளரான ஜெட்வின் ஹொட்டேல்களுடனான கூட்டிணைப்புடன் யாழ்ப்பாணத்தின் சிறப்பினை உள்ளடக்குகின்ற விடுமுறைப் பொதி தொடர் ஒன்றை ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் அறிமுகப்படுத்தியது. யாழ்ப்பணத்தை அனுபவிப்பதற்காக இக்கவர்ச்சி மிக்க அழைப்பு 09 இந்திய நகரங்களில் வாரத்திற்கு 80 விமானப் பயணங்களுடன் நாட்டுடன் இணைந்துள்ள தனியோரு பாரிய சந்தையான இந்தியா உள்ளடங்கலாக, எயார்லைன்ஸின் பரந்த வலையமைப்பு முழுவதும் கொண்டு செல்லப்பட்டது. பின்வரும் QR குறியீட்டினை ஸ்கான் செய்வதன் மூலம் இக்காணொளியினைக் கண்டுகளிக்கலாம்.

### *உலகக் கிண்ணம் 2023 ரசிகர்கள்*

இதற்கு மேலதிகமாக, வாமி ஆமியுடனான (Barmy Army) கூட்டிணைப்பில், உலகக் கிண்ணம் 2023 ரசிகர்களுடன் எயார்லைன்ஸ் காலி மரபுரிமை நகருக்கு உலகின் கவனத்தை ஈர்த்தது. அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சிய நாடுகளைச் சேர்ந்த கிரிக்கட் ரசிகர்கள் 2023 நவம்பர் ஒன்று மற்றொன்றுக்கு எதிராக விளையாடியதுடன் வாமி ஆமி ரசிகர்கள் உலகக் கிண்ணம் 2023 இல் முதன்மைப் பங்காளராக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிகழ்வை நடத்தும் நகரமாக காலியைத் தெரிவு செய்வதற்கான தீர்மானத்திற்குப் பங்களித்தது.

சாகசத்திற்கும், விளையாட்டிற்குமான தற்கால அடைவிடமாக இலங்கையில் உலகளாவிய ஆர்வத்தை ஒன்றுசேர்ப்பதற்கான தளமாகச் செயற்படுவதற்கு இச்சர்வதேச நிகழ்வுகள் பங்களித்தன.

### *உலகளாவிய விற்பனை மாநாடு 2023*

200 முதன்மை விமான நிறுவன சர்வதேச முகவர்கள் மற்றும் சுற்றுலா தொழிற்பாட்டாளர்களின் பங்கேற்புடன், 2023 நவம்பர் மாதத்தில் ஹம்பாந்தோட்டையில் அதன் பிந்திய உலகளாவிய விற்பனை மாநாட்டுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உலகளாவிய பயண வர்த்தகத்தை மனங்கவரத்தக்க வகையில் நடத்தியது. இந்நிகழ்ச்சின் போது, அழகான அடைவிடமாக இலங்கையை எடுத்துக்காட்டுகின்ற இலங்கையின் வியத்தகு நிலத்தோற்றம், வனவிலங்கு, வரலாறு, உணவு மற்றும் கலாசாரம் பற்றி வசீகரம் மிக்க காட்சி உள்ளடங்கலான அதன் தொழிற்பாட்டுத் திட்டங்கள் பற்றிய தகவல்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் சர்வதேச பங்கேற்பாளர்களுக்கு வழங்கியது.

இந்திய துணைக்கண்டம், தென் கிழக்காசிய மற்றும் தூரகிழக்கு, ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வரை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் நேரடி வலையமைப்பை பங்கேற்பாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன்,

பொதுவான விற்பனை முகவர்கள், பயண முகவர்கள், பயண தொழிற்படுத்துநர்கள் மற்றும் ஸ்ரீலங்கன் ஹொலிடேஸின் விமான நிறுவனத்தின் பயண தொழிற்பாட்டுப் பிரிவின் அங்கீகாரம் பெற்றவர்கள் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். கவனமாக வழிநடத்தப்பட்ட பயணங்களுடன் எயார்லைன்ஸின் உலகளாவிய விற்பனை அபிவிருத்தி உறுப்பினர்கள் இணைந்தும் பங்கேற்பாளர்கள் இலங்கையின் மிக முக்கிய அமைவிடங்களில் சிலவற்றுக்கு வருகைதரக்கூடியவர்களாக இருந்தனர்.

*விளையாட்டுக்கள் மற்றும் கலாசார சுற்றுலா*

பல ஆண்டுகளாக அலைச்சறுக்கல் விளையாட்டு, சைக்கிள் சவாரி, மலைச் சைக்கிள் சவாரி, கோல்ப் மற்றும் ஓடுதல் போன்ற பல நிகழ்வுகள் ஊடாக சாகச மற்றும் விளையாட்டுச் சுற்றுலாவுக்காக நாட்டை ஊக்குவிப்பதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இயக்கு சக்தியாக இருந்து வருகிறது. சமகாலத்தில் முன்னெடுக்கப்படுகின்ற இரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளான ஆசியக் கிண்ணம் மற்றும் வரலாற்றுப் புகழ்மிக்க கண்டி எசெல பெரஹர என்பவற்றை மையப்படுத்தி பல்வேறு வகையான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை எயார்லைன்ஸ் நிறைவேற்றியது. இந்நிகழ்வுகள் ஒவ்வொன்றின் ஊடாகவும், நாட்டின் உன்னதமான வசீகரம் மற்றும் செழிப்புமிக்க கலாசாரம் என்பவற்றை வெற்றிகரமாக கம்பனி எடுத்துக்காட்டி, நாட்டிற்கு பல்லாயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தது. அவுஸ்திரேலியாவில் முக்கியத்துவம் வாய்ந்த மெல்போன் மரதன் ஓட்டம் மற்றும் மெல்போனில் மகா சமுத்திர வீதி ஓட்ட நிகழ்வு ஆகியன அதன் இரு முக்கிய நிகழ்வுகளுக்காகவும், வர்த்தக நாம அனுசரணையாளராகவும் எயார்லைன்ஸ் செயற்பட்டது.

### சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்திற்காக முறைமை மேம்படுத்தல்கள்ந

- **வாடிக்கையாளர் விவகாரங்களும் சேவைக் கணக்காய்வும்**

நிதியாண்டு காலப்பகுதியில் தங்குதடையற்ற பனிப்பாய்ச்சல் முகாமைத்துவ முறைமையினை வழங்குவதற்கு நவீன மென்பொருள் தீர்வான வாடிக்கையாளர் விவகாரங்களும், சேவைக் கணக்காய்வும் அறிமுகப்படுத்தப்பட்டு, சேவைநீட்பினை நாடுகின்ற வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கு அலுவலர்கள் இயலுமாகவிருந்தனர். ஒட்டுமொத்த செயன்முறை தானியக்கப்படுத்தலானது, எயார்லைன்ஸ ின் வாடிக்கையாளருக்குப் பதிலிறுக்கும் தன்மை அளவுகளை மேம்படுத்துகின்ற அதேவேளை, ஒருங்கிணைக்கப்பட்ட பணிச் செயன்முறையினை வசதிப்படுத்துகின்றது.

- **வாடிக்கையாளர் உறவு தகவல் முறைமை - லோயல்டி முகாமைத்துவத் தீர்வு**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2024 ஜனவரியில் அதன் லோயல்டி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வாடிக்கையாளர் உறவு தகவல் முறைமைக்கு வெற்றிகரமாகக் கால்பதித்தது. இம்முன்னேற்றகரமான முறைமை, விமான நிறுவனத்தின் அடிக்கடி பயணிப்பவர் நிகழ்ச்சித் திட்டத்தினை மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டு, மேம்பட்ட வாடிக்கையாளர் ஈடுபாட்டினையும், மிகவும் தனிப்பட்ட தேவைக்கேற்றவாறான பயண அனுபவத்தையும் வழங்குகின்றது. இதன் நடைமுறைப்படுதலானது, உன்னதமான வாடிக்கையாளர் தேவையினை வழங்கி, நீண்டகால வாடிக்கையாளர் விசுவாசத்தைப் பேணி வளர்ப்பதற்கு முன்னேற்றகரமான தொழில்நுட்பவியலில் இருந்து அனுகூலம் அடைவதற்கான எயார்லைன்ஸின் அர்ப்பணிப்புக்கு சான்று பகர்கின்றது.

- **பயணச்சீட்டு மீளளிப்பு முகாமைத்துவத் தீர்வு**

மீளளிப்பு வினவல்களைச் சீரமைத்து, தானியக்கப்படுத்துவதற்கு உள்ளக திணைக்களங்களுக்காக மத்திய மயப்படுத்தப்பட்ட பயணச்சீட்டு மீளளிப்பு முகாமைத்துவத் தீர்வினை கம்பனி நடைமுறைப்படுத்தியது. பயணிகளின் மீளளிப்பு நிலைமைகள் பற்றிய தானியக்கமான மின்னஞ்சல் இற்றைப்படுத்தல்களை அவர்களுக்கு வழங்கி, மீளளிப்புச் செயன்முறைப்படுத்தல் குழுவுடன் நேரடியாகத் தொடர்புகொள்வதற்கான தேவையினைக் குறைப்பதன் மூலம், இத்தீர்வு வினைத்திறனை மேம்படுத்துகின்றது. தானியக்கப்படுத்தப்பட்ட மின்னஞ்சல் வாயிலாக, அவசியமான தகவல்களையும் இம்முறைமை சேகரித்து செயன்முறையினை விரைவாக்கி மேலும் வினைத்திறன் மிக்கதாக்குகின்றது. இதன் விளைவாக, பயணிகள் விரைவான, மிகவும் வெளிப்படைத்தன்மை மிக்க மீளளிப்புச் செயன்முறைகளில் இருந்து நன்மையடைந்து, எயார்லைன்ஸின் இணையவழி ஆசன ஒதுக்கு முறைமையினை அதிகரித்தளவில் பயன்படுத்துவதை ஊக்குவித்து சாத்தியமான அளவு விற்பனைகளையும் தூண்டுகின்றது.

## சமூகங்களை மேம்படுத்துதல்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், தன்னைச் சூழவுள்ள சமூகங்களுக்கு, சமூகப் பொறுப்பைப் பூர்த்தி செய்கின்ற பொறுப்பைப் பூர்த்தி செய்வதன் மூலம், நாம் வாழுகின்ற இவ்வுலகில் ஒரு மாற்றத்தைத் தொடர்ச்சியாக ஏற்படுத்த முயன்று வருகின்றது. பின்தங்கி வாழுகின்ற சமூகங்களுக்கு, அவர்களுடைய நீண்டகால முன்னேற்றத்தைத் தக்க வைத்துக்கொள்ள ஆதரவு வழங்கும் பொருட்டு, தனது சேவைகளை வழங்கி வருகிறது. இதற்காக நிறுவனம், ஒவ்வொருவரும் வெற்றி பெறக்கூடிய வகையில் செழுமையுடன் வாழ்வதற்கான, சமத்துவமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது. சுகாதாரம், கல்வி, இளைஞர்களை வலுவூட்டுதல் போன்ற முக்கியமான விடயங்களில் அவதானம் செலுத்தி, எயார்லைன்ஸ் நிறுவனம், அதனுடைய முக்கிய திட்டமான ஸ்ரீலங்கன் கெயார்ஸ் ஊடாக, சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்களுடைய முன்னேற்றத்தை உயர்த்தும் பொருட்டு, தனது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம், சிறுவர்களுடைய கல்வி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதிலும், தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டங்களுக்குரிய பெரும்பாலான நிதிகள், பணியாட்களின் பங்களிப்புகள் மற்றும் இதனை ஒத்த நிறுவனங்களுடைய கூட்டு முயற்சியினால் ஏற்படுத்தப்படுகின்றது.

### சுகாதாரத்துக்கான உதவி

அத்தியாவசியமான சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்ள இயலாத, பின்தங்கிய சமூகங்களின் ஒட்டுமொத்த நலன்களையும் கருத்திற் கொண்டு, ஸ்ரீலங்கன் கெயார்ஸ் திட்டம், சுகாதாரத் துறைக்கான அனுசரணைகளை விரிவுபடுத்தியுள்ளது. இவ்வகையில், ஸ்ரீலங்கன் கெயார்ஸ், சீமாட்டி சிறுவர் றிஜ்வே வைத்தியசாலையின் மனித இருதய வால்வுக்கான மற்றும் திசு வங்கிக்கான நன்கொடைகளை வழங்குவதற்கு உதவுகின்றது. மேலும். இறந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட இருதய வால்வுகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான முக்கிய இரசாயனப் பொருட்களை ஐக்கிய இராச்சியத்திலுள்ள நன்கொடையாளர்கள் குழுவிடமிருந்து பெற்று, வைத்தியசாலைக்கு வழங்குகிறது. மேலும், ஐக்கிய இராச்சியத்திலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வைத்தியசாலை அறக்கட்டளையில் இருந்து, சீமாட்டி றிஜ்வே மருத்துவமனைக்கு அத்தியாவசியமான இரசாயனப் பொருட்களை விரைவாகப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்வதன் மூலம் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் பின்தங்கிய சமூகங்களின் ஆரோக்கிய மற்றும் நல்வாழ்வு என்பவற்றுக்குச் சேவையளிப்பதை உறுதிப்படுத்துகிறது.

### மருத்துவ முகாம்கள்

நாடு பூராகவும் உள்ள பின்தங்கிய பகுதிகளில் மருத்துவ முகாம்களை நடத்துவதன் மூலம், அத்தியாவசிய மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்ற சமூகங்களுக்கு உதவியளிக்கிறது. மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழிவகையாக இந்த மருத்துவ முகாம்களில் சிறுவர்களுக்கும், பெரியோருக்கும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் உட்பட இலவச மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இந்த நிதி வருடத்தின் போது, ஹிக்குராக்கொடை - ஹதமுன ஆரம்பப் பாடசாலை, சேருவில - மங்கள ரஜ மகா விகாரை மற்றும் இராணுவ மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் மேற்கூறப்பட்ட மருத்துவ சேவை நிகழ்வுகள் இடம்பெற்றன. இத்தகைய மருத்துவ முகாம்களில், மேலதிகச் சேவைகளாக, பின்தங்கிய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு பொதுவான மருத்துவப் பரிசோதனைகள், கண் பார்வைத் தேர்வுகள் மற்றும் அனைத்துப் பங்குபற்றுநர்களுக்கும் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. இந்த மருத்துவ முகாம்களுக்காக ஸ்ரீலங்கன் கெயார்ஸ், லிக்குயுட் ஐலன்ட் (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் இலங்கை இராணுவ மருத்துவக் கல்லூரி என்பவற்றுடன் இணைந்து சேவைகளை வழங்கியது.

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.




உலக சிறுவர் தினம் 2023 கேளிக்கைமிக்க நாள் ஒன்றையும், கொழும்பு நகரம், விமான நிலையம் மற்றும் வானூர்தியின் உட்புறம் என்பவற்றுடனான பயணத்துடன், இலங்கையின் பயண மற்றும் சுற்றுலாத் தொழிற்துறை பற்றிக் கற்றுக்கொள்வதையும், அவர்களுக்கு வழங்கி, சிறுவர்களுக்கு விசேட நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

### தலைமைத்துவத் திட்டங்கள்

எதிர்காலத்தில் திறமைமிக்க தலைவர்களை உருவாக்கும் வகையில், பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான திறன்களை உருவாக்கும் பொருட்டு, தலைமைத்துவ மற்றும் அணிகளைக் கட்டியெழுப்பும் திறன்கள் என்பன தொடர்பான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இங்கு குறிப்பிடப்பட்ட தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் / பயிற்சிப் பட்டறைகள், கொழும்பு புனித பீட்டஸ் கல்லூரி, ஹிங்குராக்கொடை ஆனந்த பாலிகா தேசிய பாடசாலை, கொழும்பு விஷாகா மகளிர் வித்தியாலயம் என்பவற்றில் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் தலைமைத்துவ அபிவிருத்தி, குழுப் பணித்திறன், உணர்வு நுண்ணறிவு, மனநலன் / உளவியல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை என்பவற்றை மையப்படுத்தியிருந்தது.

### கவனிப்பு வழங்கும் முயற்சிகள்

தேவையுள்ள நோயாளர்களுக்காக, ஸ்ரீலங்கன் கெயார்ஸ், பல்வேறு பராமரிப்பு முன்னெடுப்புகளை ஒழுங்கமைத்தது. அத்தகைய முதலாவது முன்னெடுப்பு, மஹரகமயில் உள்ள விரிவான புற்றுநோய் மையத்தில் (CCC) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மையத்திற்கு நீண்ட தூரம் பிரயாணம் செய்ய இயலாதவர்கள், வெளிநோயாளர்கள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் ஆகியோர் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு இடமாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் 44வது வருட ஆண்டு நிறைவை முன்னிட்டு ஸ்ரீலங்கன் கெயார்ஸ், வைத்தியசாலையில் தங்கியிருக்கும் புற்றுநோயாளர்களுக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டிகளை வழங்கி மாலை நேரத்தை கழித்த மகிழ்ச்சித் தருணத்தைப் பகிர்ந்து கொண்டது.

ஸ்ரீலங்கன் கெயார்ஸ், சுவசெரிய அறக்கட்டளையுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறது. இவ் அறக்கட்டளை, நாடளாவிய ரீதியில், அனைத்து இலங்கையர்களுக்கும் இலவச மருத்துவமனை அவசர சிகிச்சையை வழங்கி வருகிறது. ஸ்ரீலங்கன் கெயார்ஸ் இச்சேவையில் ஈடுபடுபவர்களுக்கு விசேட பயிற்சியை வழங்குவதற்காக, ஐக்கிய இராச்சியத்திலுள்ள பக்கிங்ஹாம்ஷெயர் நியூ பல்கலைக்கழகத்திலிருந்து 06 நிபுணர்களை இலங்கைக்கு வரவழைப்பதற்கான பயணச் செலவுகளை ஏற்றுக்கொண்டது.

மேலும், மூன்று பராமரிப்பு நிகழ்ச்சிகள் ஜா-எலயிலுள்ள "மாபிய செவன" முதியோர் இல்லத்தில் நடைபெற்றது. விமானத்திற்குள் சேவையாற்றும் சேவையாளர்களுக்கு, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளை அறிந்து, அவர்களுக்குக் கருணையுடன் விமானத்தில் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான அறிவை மேம்படுத்த இந்தத் திட்டம் உதவியது.

வத்தளை, "வின்சன்ட் டீ போல் இல்லத்தில்" இதேபோன்ற இரண்டு நிகழ்வுகள் விமானப் பணிக்குழுவினருடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இது, விமானத்தில் பிரயாணம் செய்யும் முதியோர்களுக்கு காலை உணவு வழங்குதல் மற்றும் அவர்களுக்கு உகந்த சூழலை உருவாக்குதல் என்பவற்றை மையமாகக் கொண்டது. காலை உணவைத் தொடர்ந்து விமானப் பணியாட்கள் குழு பாடல்களைப் பாடி மற்றும் சிரிப்பூட்டும் வேடிக்கை விளையாட்டுக்கள் போன்ற உற்சாகமான செயல்களிலும் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையானது, விமானப் பணிக்குழுவின் நாளாந்த கடமைகளுக்கு அப்பால் வருகைதருபவர்களுக்கு நேர்மறையான அனுபவத்தையும், ஒன்றுகூடுகின்ற உணர்வையும் வழங்குகின்ற ஒரு திறனை உருவாக்கியது.

### கல்விசார் சுற்றுப்பயணங்கள்

இந்த வருடத்தின் போது, ஸ்ரீலங்கன் கெயார்ஸ், அமந்தொலுவ ஆரம்பப் பாடசாலை, கொழும்பு விஷாகா வித்தியாலயம் மற்றும் ஆனந்தா கல்லூரி ஆகியவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர் குழுக்களுக்கு சுற்றுலாப் பயணங்களை ஏற்பாடு செய்தது. இந்தச் சுற்றுலாப் பயணங்கள், விமான உட்புறம், செயற்பாட்டு விடயங்கள், தொழிற்பாடுகள் ஆகியவற்றைப் பற்றியும், விமானப் பராமரிப்பு நிலையங்கள் பற்றியும் மாணவர்களுக்கு அறிந்துகொள்ள வாய்ப்பை வழங்கியது.

அதேபோன்று, ஆண்டியம்பலம தேசிய பாடசாலையின் பசுமைக் கழகத்தின் அங்கத்தவர்கள், மீதிரிகல நிஸ்ஸரண வன பாதுகாப்புப் பகுதியிலுள்ள பல்வேறுபட்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்வதன் மூலம், சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள கள விஜயம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. காடுகளில் இருந்து குப்பைகளைச் சேகரிக்கும் பணியில் சிறுவர்கள் பங்கேற்பு செய்தமை மூலம், துப்புரவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்துடன் இப்பயணம் நிறைவு பெற்றது.

### சர்வதேச தினக் கொண்டாட்டங்கள்

ஸ்ரீலங்கன் கெயார்ஸ், பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த சிறுவர்களுடன் தனது பிணைப்பை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது. இவ்வகையில், 2023 ஆம் ஆண்டின் உலகளாவிய ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு, ஹம்பாந்தோட்டை பிரதேசத்திலுள்ள பின்தங்கிய சமூகங்களுக்காக தொடர்ந்து ஐந்தாவது வருடமாக மருத்துவ முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இங்கு இம்முயற்சி ஹம்பாந்தோட்டை சங்கிரி-லாவுடன் இணைந்து நடத்தப்பட்டது. மருத்துவப் பரிசோதனைகள், ஆலோசனைகள், கண்பார்வைத் தேர்வுகள் என்பன 700 பங்குபற்றுநர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு, இரத்தினபுரி வின்சன்ட் இல்லத்தில் உள்ள

சிறுவர்களுக்கு ஒரு விசேட நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் அச் சிறுவர்களை கொழும்பு நகரம், விமான நிலையம் மற்றும் விமானத்தில் உள்ளே சுற்றுப்பயணம் போன்ற விடயங்களைக் கொண்ட இலங்கையின் சுற்றுலாத்துறை பற்றிய கட்டக் கற்றலை வழங்கியது. மேலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் உலகப் புகழ்பெற்ற விருந்தோம்பல் இச்சிறுவர்களுக்கு வழங்கப்பட்டது. பாம் ஸ்ரிப் ரெஸ்டோரன்டில் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவில் கோல் பேஸ் ஹொட்டேலில் தேநீர் விருந்துபசாரம் வழங்கப்பட்டது. இந்த முன்னெடுப்பு, கோல் பேஸ் ஹொட்டேல் மற்றும் ஈபர்ட் சில்வா ஹொலிடேஸ் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடைபெற்றன.

மேலும், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, ஆண்டியம்பலம தேசிய பாடசாலையில் மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை குறித்து, நிறுவனத்தின் மருத்துவ அதிகாரியினால் நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்பட்டது. இந்நிகழ்சித் திட்டம், பெண்கள் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும் பேசப்பட்டது. மேலும், விமானப் பணிமனை பொறியியலாளரினால் பெறப்பட்ட வெற்றிகரமான வாழ்க்கை பற்றிய விடயங்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

கோல் பேஸ் ஹொட்டேல் மற்றும் ஈபர்ட் சில்வா ஹொலிடேஸ் உடன் இணைந்து, மஹரகம CCC யில் நத்தார் தினப் பண்டிகையை முன்னிட்டு கிறிஸ்மஸ் விருந்துபசாரம் ஒன்று இடம்பெற்றது. அங்குள்ளவர்கள் இரட்டை மாடி பஸ் மூலம் கோல் பேஸ் ஹொட்டேலுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டனர். இங்கு வருகைதந்தவர்கள், இசை, நடனம் மற்றும் பாடல்கள் என்பவற்றை அனுபவித்துடன், நத்தார் தாத்தா பரிசுகளை வழங்கியதன் மூலம் சிறுவர்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர். இங்கு தேவையானவர்களின் வாழ்வு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த ஸ்ரீலங்கன் கெயார்ஸ், கோல் பேஸ் ஹொட்டேல், ஈபர்ட் சில்வா ஹொலிடே என்பன இணைந்து செயற்பட்டன. மஹரகம CCC யில் உள்ள முதியோருக்கு 450 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொதிகள் நன்கொடையாக கிறிஸ்மஸ் உற்சாகத்தைக் கொண்டாடும் வகையில் வழங்கப்பட்டது.

## நிலையாதார செயற்திறன்

எதிர்கால சந்ததியினருக்காக, சுற்றாடல் பாதுகாப்பில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. பூமியின் மீதான விமான நிறுவனத்தின் முக்கிய பொறுப்பை உணர்ந்து வாழுகின்ற சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான நிறுவனத்தின் தேசியக் கடமைப்பாட்டுடன் ஒன்றிணையும் வகையில், நிலைத்தன்மையான முயற்சிகளை உந்துவதற்கான வாய்ப்புகளைத் தேட விமான நிறுவனம் முயற்சித்து வருகிறது. இந்த இலக்கை அடைந்துகொள்ளும் பொருட்டு, நிறுவனம் சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகளை அதன் நாளாந்த நடவடிக்கைகளில் உட்பொதிதுள்ளது. விமான நிறுவனம் தொடர்ச்சியாக நிறுவனத்தினால் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்புக்களைக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்ட பல்வேறு நிலையாதார முன்னெடுப்புக்களை அமுல்படுத்துவதோடு, அதனுடைய பொறுப்பை உயர்த்துவதற்கும் மேலதிக விடயங்களை ஆராய்ந்து வருகிறது.

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் சுற்றுச் சூழல் உபாய நுட்பம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் சுற்றுச் சூழல் உபாயநுட்பம், கீழே கோடிடப்பட்ட 6 அடிப்படை அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | காபன் தடப்பதிவுக் குறைப்பு | நேரடியான மற்றும் மறைமுகமான மூலங்களில் இருந்து எழுகின்ற காபன் உமிழ்களைக் குறைத்தல் |
| 2. | வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதலும் கழிவுகளை முகாமைத்துவம் செய்தலும் | தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரம், நீர் மற்றும் ஏனைய உள்ளீடுகளின் வினைத்தி-றனை அதிகரித்தல். சுற்றுச் சூழல் நட்புடன் கூடிய உள்ளீடுகளைப் பயன்படுத்தல். |
| 3. | சுற்றாடல் இணக்கப்பாடு | அனைத்து பொருத்தமான சுற்றாடல் ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றை எயார்லைன்ஸ் நி-றுவனத்தின் தொழிற்பாட்டில் உறுதிப்படுத்தல். |
| 4. | பாதுகாப்பும் பல்லுயிர்த்த-ன்மையைப் பாதுகாத்தலும் | நாட்டினுடைய பல்லுயிர்த்தன்மை, சுற்றுச் சூழல் என்பவற்றைத் தரமுயர்த்தும் திட்டங்களை நடத்துதல். |
| 5. | சுற்றாடல் நிலையாதார இலக்குக-ளை அடையும் பொருட்டு, சிறுவர் மற்றும் இளைஞர்களை ஊக்குவித்தல் | சுற்றாடல் விஞ்ஞானத் திறன்களையும், அறிவுத் திறை-னயும் இலங்கைக்குள் வளர்ப்பதை உறுதிப்படுத்தல். |
| 6. | சமூக மேம்பாடு | பாதகமான சுற்றாடலில் வாழுகின்ற சமூகங்களின் நிலை-லயாதார வாழ்வாதாரங்களை உறுதப்படுத்தல். |

### முக்கியமான முன்னெடுப்புகள்

*சுற்றுச்சூழல் ரெயிலர்" திட்டம்*

நீகொழும்பு தடாகத்தை அண்மித்த சதுப்புநில இட ஒதுக்கீட்டின் எல்லைப்பகுதிகளில் வாழுகின்ற சமூகங்களைச் சார்ந்த இளைஞர்களுக்காக தொழிற்பயிற்சித் திட்டம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. இத்திட்டம் சதுப்புநில இட ஒதுக்கீட்டின் மூலம் நிலையான வருமானத்தை உருவாக்கக்கூடிய வழிகாட்டிகள் பற்றி அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும். புற சமூகத்தில் வாழுகின்ற ஆட்களுக்கு நடத்தப்படும் இந்தப் பயிற்சி, பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், நிலையாதார வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்துல், சமூக அடிப்படையாக பாதுகாப்பு முயற்சிகளை ஊக்குவித்தல், கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்குப் பங்களிப்பு செய்தல் மற்றும் உள்ளூர் சமூகங்களை மேம்படுத்துதல் என்பனவற்றுக்கு உதவுகிறது.

உள்ளூர் சுற்றுச்சூழல் வழிகாட்டி நெறிகளுக்கு பயிற்சி வழங்குவது, நிலையாதார தொழில் வாய்ப்புகளை வழங்குவது மாத்திரமன்றி, பாதுகாப்பு தொடர்பான செய்திகள் பரந்த ஆட்களுக்கு திறமையான வகையில் தெரிவிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துகிறது. சுற்றுச் சூழல் அமைப்புகளைச் சார்ந்திருக்கின்ற தனிநபர்களை உள்ளடக்கிய இந்த அணுகுமுறை, சதுப்புநில பாதுகாப்புக்கான நிலையாதார மற்றும் நீண்டகால அணுகுமுறையை உருவாக்குகிறது.

*சூழல் நட்புக் கம்பளங்கள்*

எயார்லைன்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி முயற்சிகளில் ஒன்றாக, நிறுவனம் தெற்காசியாவின் சூழல் நட்புடனான கம்பளங்களை முதல் முறையாக அறிமுகப்படுத்தியது. வெற்றிகரமான சோதனைக் காலப் பகுதியையும் பூர்த்தி செய்துள்ளது. இந்த இலகுரக தரை விரிப்புகள் கைவிடப்பட்ட கடல் மீன்பிடி வலைகள், மீன்பிடி நைலோன் கழிவுகள், பயன்படுத்தப்பட்ட தரை விரிப்புக் கழிவுகள் மற்றும் ஆலைகளில் வெளியேற்றப்படுகின்ற துணிக் கழிவுகள் போன்றவற்றில் இருந்து மீள் சுழற்சி செய்யப்பட்ட நைலோன்கள் மூலம் உருவாக்கப்படுகின்றன. மேலும் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலமும், வினைத்திறனான உற்பத்தி செயன்முறை மூலமும் இது குறிப்பிடத்தக்களவு கச்சாய் எண்ணெய், நீர் என்பவற்றின் பயன்பாட்டையும் குறைத்துள்ளது. இந்த இலகு தர புதிய தரை விரிப்புகளை விமானப்படையில் பயன்படுத்துவதன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஜெட் எரிபொருள் நுகர்வைக் குறைத்துள்ளது. இதன் மூலம் ரூபா 21 மில்லியன் வருடாந்தம் சேமிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறைக்கப்பட்ட எரிபொருள் பாவனை உற்பத்தி செயற்பாட்டில் மீள் சுழற்சி செய்யப்பட்ட நைலோனைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் உமிழ்வு சேமிப்பைத் தவிர அதன் வருடாந்த காபன் தடப் பதிவு சுமார் 248.79 தொன்களாகக் குறைத்துக்கொள்ள உதவும்.

*விழிப்புணர்வை ஏற்படுத்தல்*

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், தனது ஊழியர்களுக்கு கைத்தொழிலுடன் தொடர்புடைய சுற்றுச் சூழல் தொடர்பான அக்கறைகளை உரிய முறையில் அறிவிக்கும் பொருட்டு, நிகழ்நிலை மற்றும் நேரடியான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. சுற்றாடல் நிலையாதாரத் தன்மை குறித்த தன்னார்வ நிகழ்வுகள் மற்றும் தொழில் சார்ந்த பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் மேம்படுத்தப்படுகின்றது. இவ்வாண்டில் பணியாட்களிடையே சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களை உட்பொதிப்பதற்காக, விமான நிறுவனத்தின் SAF தயார்நிலையை மேம்படுத்த பொறியியல் ஊழியர்களுக்கு

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.

நிலையாதார விமான எரிபொருள் நுகர்வு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

### *காபன் நீக்க முன்னெடுப்புகள்*

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், காபன் நீக்க முயற்சிகளுக்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்திய பின்னர், அதன் செயற்பாடுகளில் உமிழ்வைக் குறைப்பதற்கான கைத்தொழில்துறை சார்ந்த விசேட நடைமுறைகளைப் பின்பற்றுகிறது. இந்த கைத்தொழில்துறை பரிந்துரை செய்த பசுமை தொழிற்பாட்டு நடபடி முறைமைகளை ஏற்றுக்கொள்வதன் மூலமும், விமானப் பயணங்களை சிறந்த வகையில் திட்டமிடுதல் மற்றும் விமானத் தொழிற்பாட்டு எடையை நிர்வகித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும். மேலும், நிறுவனம் விமான சேவை தொழிற்பாட்டுப் பிரதேசத்தில் எயார்பஸ் பசுமை தொழிற்பாட்டுக் கையேட்டினைப் பின்பற்றுவதனை ஊக்கப்படுத்துகிறது. மேலும், ICAO வினுடைய CORSIA திட்டத்தின் கீழ் விமான உமிழ்வு தரவை மேற்பார்வை செய்தல், அறிக்கையிடுதல், கண்காணித்தல் ஆகிய நடவடிக்கைகளையும் மேற்கொணடு வருகிறது.

இந்த வருடத்தின் போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், உலகளாவிய ரீதியில் உள்ள ஏனைய விமான நிறுவனங்களுடன் இணைந்து IATA வினுடைய $CO_2$ கனெக்ட் திட்டத்தில் இணைந்து கொண்டது. இந்தச் சந்தர்ப்பமானது, விமான உமிழ்வுகளுடைய தரவு தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தன்மையை அதிகரிப்பதற்கு உதவுவதுடன், பிரயாணிகள் மிகவும் துல்லியமான உமிழ்வு தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்ளவும் வழிசமைக்கிறது.

மேலும், எயார்லைன்ஸ் நிறுவனம், உட்கட்டமைப்புடன் தொடர்புபட்ட வலு வினைத்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், சிறந்த உள்ளகப் பராமரிப்பு நடவடிக்கைகள் என்பன மூலமாக அதனுடைய மின்சாரப் பயன்பாட்டைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

### *பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வு பற்றிய வெளிப்பாடு I மற்றும் II எல்லை*

நிலைத்தன்மையுடனான அறிக்கையிடலுக்கான முதலாவது முயற்சியாக நிறுவனம் GHG நெறிமுறையுடன் இணங்கிய வகையில் அதனுடைய தொழிற்பாடுகளில் இருந்து வெளியேறும் GHG உமிழ்வுகளைச் சரிபார்க்கும் முன்னெடுப்பை ஆரம்பித்துள்ளது.

GHG நெறிமுறையானது, உலக வணிக பேரவை மற்றும் உலக வள நிறுவனம் ஆகியவற்றினால் தரநிலைகள் மற்றும் வழிகாட்டிகளை ஒன்றுசேர்க்க தொகுப்பினை உருவாக்கும் கூட்டுமுயற்சியாகும். இந்த நெறிமுறையானது, சங்கிலி வலையமைப்புகள், பகிரங்க மற்றும் வர்த்தகத் துறைகளின் தொழிற்பாடுகள் என்பவற்றில் இருந்து தோன்றுகின்ற வாயு உமிழ்வுகளை அளவிடும் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகளையும், அவற்றைக் குறைப்பதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைக்கிறது.

நிறுவனம் ஒன்று அதனுடைய சொந்த தொழிற்பாடுகள் மற்றும் பரந்தளவான வலையமைப்புப் பெறுமதியில் உருவாக்குகின்ற பல்வேறு வகைப்பட்ட காபன் உமிழ்வுகளை வகைப்படுத்தும் முறையாக மேலே குறிப்பிடப்பட்ட எல்லை I மற்றும் 11 அமைகிறது.

எல்லை I உமிழ்வுகள் - இது, நிறுவனத்தினால் நேரடியாக உருவாக்குகின்ற உமிழ்வுகளை உள்ளடக்கும். உதாரணமாக, எரிபொருள், குளிரூட்டும் வாயு.

எல்லை II உமிழ்வுகள் - இவை, கொள்வனவு செய்யப்பட்ட வலு மூலமாக மறைமுகமாக உருவாக்கப்படும் உமிழ்வுகளை உள்ளடக்கும். உதாரணம் மின்சாரம்.

நிறுவனங்கள் தமது நிறுவனத்தினால் வெளியேற்றப்படும் உமிழ்வுகளின் மூலங்களை நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். மேலும், பசுமை வாய்வு உமிழ்வுகளை வகுப்பாக்கம் செய்வதன் மூலம் அவற்றைக் குறைக்க வினைத்திறனான திட்டங்களையும் உருவாக்க வேண்டும். இதனைவிட இது, குறுக்கு - துறை பரப்பளித்தல் மற்றும் ஒப்பீடு என்பவற்றை எளிதாக்குவதுடன், கூட்டுறவு நிறுவனங்களின் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையையும் ஊக்குவிக்கின்றது.

**ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குழுமத்தின் 23/24ஆம் நிதியாண்டுக்கான GHG உமிழ்வு வெளிப்பாடு**

| செயற்பாடுகளின் வகை | அலகு | செயற்பரப்பு 1 | செயற்பரப்பு 2 | மொத்தம் |
|---|---|---|---|---|
| சரக்கு செயற்பாடுகள் | MT $CO_2e$ | 10,458.30 | 1,046.36 | 11,504.66 |
| தரை கையாளுதல் | MT $CO_2e$ | 72,097.14 | 664.75 | 72,761.88 |
| ஸ்ரீலங்கன் பொறியியல் | MT $CO_2e$ | 10,587.49 | 1,815.93 | 12,403.42 |
| ஸ்ரீலங்கன் கேட்டரிங் | MT $CO_2e$ | 21,171.46 | 4,828.50 | 25,999.97 |
| எயார்லைன் (மேலேயுள்ள செயற்பாடுகள் தவிர) | MT $CO_2e$ | 1,194,926.77 | 1,862.46 | 1,196,789.23 |
| விமானக் குழுமத்தின் மொத்த GHG வெளியேற்றம் | MT $CO_2e$ | 1,309,241.16 | 10,218.00 | 1,319,459.16 |

**குறிப்பு:**

- GHG நெறிமுறையின் வழிகாட்டுதலின்படி மதிப்பீடு நடத்தப்பட்டது
- அறிக்கையிடல் காலம் 2023 ஏப்ரல் 01 முதல் 2024 மார்ச் 31 வரை.
- மெட்ரிக் டன் கார்பன் டை ஆக்சைடு சமமான ($CO_2e$) என்பது பல்வேறு பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுகளின் கணக்கை அவற்றின் புவி வெப்பமடைதல் சாத்தியத்தின் அடிப்படையில் ஒப்பிட பயன்படும் அலகு ஆகும்.
- செயற்பரப்பு 1 நேரடி உமிழ்வுகள் மற்றும் செயற்பரப்பு 2 வாங்கிய ஆற்றல் உமிழ்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
- மதிப்பீட்டுப்பொருள் 5% ஆக அமைக்கப்பட்டுள்ளது.

## தரமான காப்புறுதி

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆனது தனது சகல தொழிற்பாட்டு திணைக்களங்களிலும் சுற்றாடல் ரீதியான பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, விமானச் சேவையின் தரமான காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் மூலமாக தொழிற்பாட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மூலம் முறையான மீளாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அபாய நேர்வுகளை இனங் காணுதல் மற்றும் தணித்தல் செயன்முறைகளை நடைமுறைப்படுத்துகின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆனது சகல விதமான தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளின் கீழ், கடந்த வருடம் முழுவதும் தனது விமானச் சேவை தொழிற்பாட்டு சான்றிதழ் மற்றும் ISAGO தரச் சான்றிதழ் ஆகியவற்றை வெற்றிகரமாக மீளாய்வு செய்துள்ளது.

தரமான காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தின் படி பல்வேறு வகையான செலவுச் சிக்கன தொழில்நுட்பங்கள் அறிமகப்படுத்தப்பட்டன. இதன் காரணமாக வினைத்திறன்மிக்க நிதி ரீதியான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு கம்பனியை இயலுமையாக்கியது. இவை பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்

- தொழிலாளர்களுக்கான செலவுகளைக் குறைத்து மற்றும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்தி IOSA மற்றும் ISAGO கணக்காய்வுகளின் முறையான தேவைப்பாடுகளை பேணுவதற்காக உள்ளக கணக்காய்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டன.
- தொலை தூர கணக்காய்வு முறைகளுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் மிக அண்மைய தரை கையாளுகை நெறிமுறைகளை உள்ளடக்குவதற்கு நேர் நிலைய கணக்காய்வு சோதனை பட்டியல்களை விமானச் சேவையானது மீளாய்வு செய்து தரப்படுத்தியதுடன், நேரடியான கணக்காய்வுகளை குறைப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பு ரீதியான தராதரங்களை பேணுவதை அதிகப்படுத்தியது.

- நேரடியான கணக்காய்வுகளுக்கான தேவைகளைக் குறைத்து, தரை நிலையங்களின் வெளிநிலை சேவை வழங்குநர் கண்காணிப்பு தேவைகள் தொடர்பான ISAGO தரவு மையத்திற்கான அணுகலை பெற்றுக் கொள்வதற்காக IATA உடன் உடன்படிக்கை ஒன்றின் மூலம் விமானச் சேவைக்கான செலவு சிக்கன நடைமுறைகளுக்கான விடயங்களும் அடையப் பெற்றன.

### இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு பாதுகாப்பு

இணைய ரீதியான பாதுகாப்பு நிலைகளை மேம்படுத்தும் முகமாக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரக் கற்றல் (ML) உள்ளடங்கலாக பல்வேறு விதமான தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தி பயணிகள் தரவு பாதுகாப்பினை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முன்னுரிமைப்படுத்துகின்றது. ஐரோப்பிய ஒன்றிய பொது தரவு பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் (GDPR) மற்றும் இலங்கை 2022 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டம் உள்ளடங்கலாக தரவு பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் முகமாக விமானச் சேவையானது தொடர்ச்சியாக தொழிற்பாடுகளை மேம்படுத்தி வருகின்றது.

பிரதான தகவல் பாதுகாப்பு நடைமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியுள்ளன:-

- **பொட் கண்டறிதல் மற்றும் தணித்தல்:** சட்டரீதியான பயன்பாட்டாளர் நடவடிக்கைகள் மற்றும் குரோரத்தன்மைமிக்க பொட் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை இனங் கண்டு பிரித்தறிவதற்காக வெப் எக்ஸஸ் பயவோல் (WAF) ஆனது இயந்திர கற்றல் (ML) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகியவற்றை பயன்படுத்துகின்றது. பயன்பாட்டாளர் நடத்தை, மொவுஸ் அசைவுகள், உலாவி கைரேகை முறைகள் போன்ற பல்வேறு வகையான பண்புகளை பகுப்பாய்வு செய்து பொட் நெட்ஸ், இணைய துருவல், நம்பகத்தன்மை மோசடி முயற்சிகள் உள்ளடங்கலாக பொட் அடிப்படையாகக் கொண்ட தாக்குதல்களை இனங் கண்டு தடுக்கின்றது.
- **முடிவிட கண்டறிதல் மற்றும் பதிலளிப்பு:** அண்மைய செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றலை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை தொடர்ச்சியாக பயன்படுத்தி உரிய நேர பதிலளிப்புகள் பிரயோகித்து பல்வேறு வகையான இணைய அடிப்படையிலான அச்சுறுத்தல்களை கண்டறிந்து அவற்றை மேற்பார்வை செய்வதற்காக விமானச் சேவையின் முடிவிட கருவிகளானது பாதுகாக்கப்பட்டுள்ளன.
- **பாதிப்புறும் தன்மை மதிப்பீடு:** அமைப்பு வடிவாக்கம், குறியீடு, பாதுகாப்பு லொக்ஸ் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்து விமானச் சேவை முறைகள் மற்றும் வலையமைப்புகள் ஆகியவற்றில் நிகழக் கூடிய பாதிப்புறும் தன்மைகளை சாதகமாக இனங் காண்பதை உறுதி செய்வதற்கு இந்த மதிப்பீடுகள் உதவுகின்றன. இணைய குற்றவாளிகள் பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் அதில் காணப்படுகின்ற குறைபாடுகளை இவை இனங் காண்பதுடன், பயணிகள் தரவுகளை பாதுகாப்பது தொடர்பில் பாதுகாப்பு நடைமுறைகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் வினைத்திறனுடன் காணப்படுகின்றன என்பதை உறுதி செய்கின்றன.
- **பாதுகாப்பு தகவல்கள் மற்றும் நிகழ்வு முகாமைத்துவம் (SIEM):** SIEM ஆனது இயங்காற்றல் மிக்க பாதுகாப்பு நிகழ்வு பகுப்பாய்வு கருவியாக தொழிற்படுவதுடன் பாதுகாப்பு நிகழ்வுகள் மற்றும் லொக்ஸ் ஆகியன சேகரிக்கப்பட்டு விமானச் சேவையின் கணினி வலையமைப்பினுள் பல்வேறு வகையான மூலங்களிலிருந்து பாதுகாப்பு தரவுகளை பகுப்பாய்வு செய்து, பாதுகாப்பு நிகழ்வுகள் மற்றும் பாதிப்புறும் தன்மைகள் தொடர்பில் பயனுறுதிமிக்க முறையில் கண்டறிந்து பதிலளிக்கின்றன.
- **வலையமைப்பு நடத்தைகள் மற்றும் பகுப்பாய்வுகள்:** இணைய ரீதியான அச்சுறுத்தல்கள் மற்றும் பாதுகாப்பு நிகழ்வுகள் ஆகியவற்றை உரிய நேரத்தில் கண்டறிந்து அவற்றிற்கு பதிலளிக்கக்கூடிய விதத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றலை அடிப்படையாகக் கொண்ட இணையப் பாதுகாப்பு தளங்களை வடிவமைத்து அதனை விமானச் சேவையானது உரிய நேரத்தில் பயன்படுத்தி வருகின்றது.
- **வீண் செய்திகள் மற்றும் போலி மின்னஞ்சல் மூலம் ஏமாற்றி தகவல்களை பெறல்:** வீண் செய்திகள் மற்றும் போலியான ஏமாற்று மின்னஞ்சல்கள் ஆகியவற்றின் பண்புகளை கண்டறிவதற்காக அவற்றுடன் தொடர்புடைய பாரிய அளவிலான தரவுகளை அறிந்து கொள்வதற்காக இயந்திரக் கற்றல் எல்கோரிதம்ஸ் பயன்படுத்தப்படுகின்றன. மின்னஞ்சல் பண்புகள், அனுப்பியவரின் நம்பகத் தன்மை, தகவல்களின் உள்ளடக்கம், பெறுநரின் நடத்தை ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம், கம்பனியானது இவற்றை துல்லியமாக வகைப்படுத்தி தேவையற்ற மற்றும் பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய தகவல்களை கண்டறிந்து அவற்றினை அகற்றி வருகின்றது.
- **குறியீட்டுச் சொற்களால் மறைத்தல்:** இடைமாறல் மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றின் பொழுது கூருணர்வுமிக்க பயணிகள் தொடர்பான தரவுகளை பாதுகாப்பதற்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆனது குறியீட்டு சொற்களினால் மறைத்தல் நுட்பங்களை பயன்படுத்துகின்றது. இதன் மூலம் அதிகாரமற்றவர்கள் தரவுகளை அணுகிப் பெறுவதை தடுத்து அதனை பாதுகாப்பதை உறுதி செய்கின்றது.

## நிதி மீளாய்வு

### இழப்பிலிருந்து மீண்டெழல்

கோவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக விமானச் சேவை துறையானது மூன்று வருடங்களுக்கு மேலதிகமாக நட்டத்தை அனுபவித்தது, இருப்பினும் 2023 ஆம் ஆண்டில் மீண்டெழல் ஏற்பட்டது. அத்தோடு உலகளாவிய ரீதியில் விமானப் போக்குவரத்தானது 90% இற்கும் அதிகமாக பெருந்தொற்றுக்கு முன்னர் காணப்பட்ட நிலைமைக்கு மீண்டும் திரும்பியது. உலகளாவிய ரீதியிலான விமானப் போக்குகள் மறுமலர்ச்சி ஏற்பட்ட பொழுதிலும் கூட விமானங்களின் பற்றாக்குறை மற்றும் இயந்திர ரீதியான பிரச்சினைகள், விமானங்களை பேணுவதில் ஏற்பட்ட தாமதங்கள் ஆகிவற்றின் காரணமாக அதன் முழுமையான ஆற்றல்களை உணர்வதில் விமானச் சேவை பல சவால்களை எதிர்கொண்டது. இருப்பினும், இவற்றிற்கான தீர்வுகளை காணுதல் மற்றும் இத்துறை சார்ந்த மீண்டெழல்களை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளல் தொடர்பில் கம்பனியின் இடைவிடாத தாக்குப் பிடிக்கும் தன்மைகளின் காரணமாக கடந்த வருட மட்டங்களை பேணக் கூடியதாக இருந்ததுடன் தொழிற்பாடுகளை பேணுவதையும் இது இயலுமையாக்கியது.

குழுவானது தொழிற்பாட்டு இலாபமாக இலங்கை ரூபா. 39.7 பில்லியனை பதிவு செய்தது. (செலாவணி வருவாய்க்கு முன்னர் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத திருத்த செலவுகள்). அத்தோடு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் ஆனது குழு தேறிய இலாபமாக இலங்கை ரூபா. 7.9 பில்லியனை பதிவு செய்தது, இது ஓர் கடந்த வருடத்தை விட குறிப்பிடக்கூடிய முன்னேற்றமாகும். தாக்குப் பிடிக்கக்கூடிய உபாயமுறைகள் மற்றும் இலங்கை ரூபாயின் பெறுமதி ஏற்றம் ஆகியன இதற்கு உதவின. மேலும், விமானச் சேவையானது இலங்கை ரூபா. 3.9 பில்லியனை தேறிய இலாபமாக அடைந்தது, Neo இயந்திரங்களுக்கான அட்டவணைப்படுத்தப்படாத திருத்த செலவுகள் ரூபா. 23.4 பில்லியனாக காணப்பட்டதோடு உடன்படிக்கைகளை மீறியமைக்கான தண்டப் பணம் செலுத்துதல் செலவுகளும் இவற்றில் உள்ளடங்கிய பொழுதிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து முதலாவது தேறிய இலாபமாக இத்தொகை காணப்பட்டது.

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.

| பிரதான குறிகாட்டிகள் | 2023/24 இலங்கை ரூபா. மில் | 2022/23 லங்கை ரூபா. மில் | விலகல் லங்கை ரூபா. மில் | விலகல் % |
|---|---|---|---|---|
| வருமானம் | 339,592 | 369,470 | -29,878 | -8% |
| தொழிற்பாட்டு செலவுகள் | 301,357 | 326,957 | -25,600 | -8% |
| வட்டியுள்ள பொறுப்புகள் தொடர்பான செலாவணி வருவாய்/ (நட்டம்) | 28,660 | -63,128 | 91,788 | 145% |
| நேழ இயந்திரங்கள் தொடர்பான அட்டவணைப்படுத்தப்படாத திருத்த செலவு | 11,572 | 2,899 | 8,673 | 299% |
| தேறிய நிதி செலவு | 36,564 | 50,189 | -13,625 | -27% |
| ஊடன்படிக்கை மீறியமை தொடர்பான தண்டப் பண கட்டணங்கள் | 11,837 | - | 11,837 | 100% |
| தேறிய இலாபம் | 7,925 | -71,307 | 79,232 | 111% |

### விமானத்தொகுதி முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாட்டு உபாயமுறை

விமானச் சேவையை பேணுவதுடன் தொடர்புடைய தொழிற்பாட்டு மற்றும் நிதி ரீதியான முக்கியத்துவங்களை கருத்திற் கொண்டு காலாவதியாகின்ற குத்தகைகளுக்கான பிரதியீடுகளாக 10 விமானங்களை குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்கான அமைச்சரவை ஒப்புதலை 2022 ஆம் ஆண்டில் விமானச் சேவை பெற்றுக் கொண்டது. இருப்பினும் நாட்டிலும் மற்றும் கம்பனியிலும் நிலவிய பாதகமான நிலைமைகளின் காரணமாக, சந்தையை அணுகுவதில் தாமதங்கள் ஏற்பட்டன, விமானங்களுக்கான அதிக கேள்விகள் காணப்பட்ட சூழ்நிலையிலும் கூட அவசியமான ஐந்து அகன்ற விமானங்களை பெற்றுக் கொள்வதானது சவால்மிக்கதாக காணப்பட்டது. இது தொடர்பில் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் கூட ஐந்து குறுகிய தோற்ற விமானங்களை மாத்திரமே வெற்றிகரமாக கொள்வனவு செய்ய முடிந்தது. இருப்பினும் இதற்கு மாற்றீட்டு உபாயமுறையாக கம்பனியானது பயணிகள் தேவையை நிறைவேற்றும் முகமாக ஆளணியினருடன் விமானத்தை குத்தகைக்கு அமர்த்தி விமானச் சேவை சார் அட்டவணையை பேணி வந்தது. அதேவேளை 2023/24 ஆம் நிதியாண்டின் இறுதியில், விமானத் தொகுதியானது 21 விமானங்களை உள்ளடக்கி இருந்தது. பெருந்தொற்றிற்கு முன்னர் இது 27 ஆக காணப்பட்டது.

மேலும், A320/321 விமானங்களில் பொருத்தப்பட்ட CFM இயந்திரங்களானது அதாவது Neo விமான இயந்திரங்களானது எதிர்பார்த்ததை விட குறைவாகவே செயலாற்றியது. இதுவோர் பூகோள ரீதியான பிரச்சினையாகும். இதன் காரணமாக நூற்றுக் கணக்கான விமானங்கள் செயலிழந்து காணப்பட்டன. CFM இயந்திர உற்பத்தியாளர்களுடன் தற்சமயம் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன, சாத்தியப்பாடுள்ள மிகவும் குறைவான காலப் பகுதியினுள் இத்தகைய விமானங்கள் மீண்டும் தொழிற்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கான தெரிவுகள் ஆராயப்பட்டு வருகின்றன. இருப்பினும், ஆரம்ப மதிப்பீடுகளை விட இவற்றை திருத்துவதற்கான செலவுகள் அதிகமாக காணப்பட்டன. இதன் விளைவாக அதிகரிக்கப்பட்ட செலவானது இலங்கை ரூபா. 11.6 பில்லியன் ஆகும். அத்தோடு எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியாளர் கடன்களை பரிசீலனை செய்ததன் பின்னர், ஏற்பட்ட காசோட்ட ரீதியான பிரச்சினைகளின் காரணமாக இந்த விமானங்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டன.

### வருவாய்கள்

நாட்டின் சுற்றுலாத் துறையில் குறிப்பிடக்கூடிய அளவு மீண்டெழல்கள் ஏற்பட்டன, சுற்றுலாப் பயணிகளின் வருகை 3.9 மில்லியனாக காணப்பட்டது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 40% கணிசமான அதிகரிப்பாகும். சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட இவ்வளர்ச்சியானது, குறிப்பாக இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் ஆகிய பிரதான சந்தைகளிலிருந்து அதிகமானவர்கள் வருகை தந்ததன் காரணமாக விமானப் பயணத்திற்கான கேள்விகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது. எமது விமானச் சேவையானது 1.8 மில்லியன் உல்லாச பயணிகளது தேவையை நிறைவேற்றியது (இது மொத்தமாக வருகை தந்தவர்களில் 47% ஆகும்). அத்தோடு கடந்த வருடத்தை விட 6% அதிகரிப்பாகும்.

எல்லை ஆற்றல் அதிகரிப்புகள் காணப்பட்ட பொழுதிலும் கூட விமானச் சேவையானது 3.6 மில்லியன் பயணிகளை கொண்டு வந்தது, இது ஒவ்வொரு வருட வளர்ச்சியிலும் 4% இனை பிரதிநிதித்துவம் செய்தது, பயனுறுதிமிக்க வலையமைப்பு மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட உபாயமுறைகள் ஆகியவற்றை இது புலப்படுத்தியது. 2023/24 நிதி வருடத்திற்கான பயணிகள் வருமானமானது இலங்கை ரூபா. 276.2 பில்லியனாக காணப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 6% வீழ்ச்சியாகும் (2022/23: இலங்கை ரூபா. 293.3 பில்லியன்) இந்த குறைவிற்கான அடிப்படை காரணம் பணத்தின் பெறுமதி அதிகரித்தமையாகும், ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் நோக்குகையில் விமானச் சேவையானது பயணிகள் வருமானமாக ரூபா. 865 மில்லியனை பதிவு செய்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 5% அதிகரிப்பாகும்.

பெருந்தொற்று காலப் பகுதயின் பொழுது கம்பனியின் தொழிற்பாடுகளை நிலை நிறுத்துவதற்கு முக்கிய வகிபாகமாக திகழ்ந்த விமானச் சரக்கு வருமானது, ஏற்றிச் சென்ற விமானச் சரக்கு தொன்களின் பிரகாரம் வருடத்திலிருந்து வருடத்திற்கான 4% அதிகரிப்பு காணப்பட்டது. இருப்பினும் மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் விமானச் சரக்கு வருமானது 39% இனால் வீழ்ச்சி கண்டது. இது இலங்கை ரூபா. 31 பில்லியன் ஆகும். பயணிகள் விமானச் சேவையில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மற்றும் பயணிகள் விமானத்தில் கீழ்ப் பகுதியில் கொண்டு செல்லப்படும் விமானச் சரக்குகளின் அளவு அதிகரித்தமை ஆகியவற்றினாலும் பயணிகள் சரக்கு விளைவுகள் வீழ்ச்சி கண்டன. இருப்பினும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் பிரகாரம் நோக்குகையில், கோவிட் இற்கு முன்னரான நிலைமைகளை விட விமானச் சரக்கு வருமானம் 3% ஐ விட அதிகமாக காணப்பட்டது.
மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியினுள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தனி நில கையாளுநராக வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான வாடிக்கையாளர் நேய அனுபவங்களை வழங்கியதுடன் இதன் தன்மையையும் கம்பனியானது குறிப்பிடக் கூடியளவு மேம்படுத்தி காட்டியது. இதன் விளைவாக, விமான முடிவிடம் மற்றும் அதனோடு தொடர்புடைய சேவைகளிலிருந்து விமானச் சேவையானது மொத்தமாக இலங்கை ரூபா. 21.2 பில்லியனை இலாபமாக ஈட்டியது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இது 37% அதிகரிப்பாகும் (2022/23: இலங்கை ரூபா. 15.5 பில்லியன்). ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானங்களும் வருடத்திலிருந்து வருடத்திற்கான 13% வளர்ச்சியை காட்டியது.

### செலவு

செலாவணிக்கு முன்னரான இழப்பு/ வருமானம் தொடர்பான குழு மட்ட வருமானம் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத திருத்த செலவு 5% இனால் குறைவடைந்தது. இது தொடர்பான விரிவான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | 2023/24 | | 2022/23 | | விலகல் | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பங்களிப்பு | பெறுமதி | பங்களிப்பு | | |
| | (ரூபா மில்.) | % | (ரூபா மில்.) | % | (ரூபா மில்.) | % |
| விமானத்திற்கான எரிபொருள் செலவு | 115,119 | 35% | 155,559 | 35% | -40,440 | -26% |
| ஊழியர் செலவு | 32,261 | 10% | 26,553 | 6% | 5,708 | 21% |
| விமான நிலையம், வழி, பயணிகள் செலவுகள் | 39,187 | 12% | 40,761 | 9% | -1,574 | -4% |
| விமான பேணுதல்கள் மற்றும் பழுது பார்த்தல் செலவுகள் | 40,359 | 12% | 39,300 | 9% | 1,059 | 3% |
| தேய்மானம்/இலதாக்கல் | 14,138 | 4% | 15,154 | 3% | -1,016 | -7% |
| குறுகிய கால குத்தகை தொடர்பான விமானங்களுக்கான கட்டணங்கள் மற்றும் உதிரி இயந்திர கட்டணங்கள் | 10,723 | 3% | 504 | 0% | 10,219 | 2028% |
| விற்பனை செய்தல், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர செலவுகள் | 22,082 | 7% | 24,643 | 6% | -2,561 | -10% |
| விமானிகளுக்கான செலவுகள் | 9,701 | 3% | 7,661 | 2% | 2,040 | 27% |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | 17,786 | 5% | 16,822 | 4% | 964 | 6% |
| **தொழிற்பாட்டு செலவுகள் (செலாவணி இழப்பு/ வருமானம் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத திருத்த செலவுகளுக்கு முன்னர்)** | 301,356 | 90% | 326,957 | 74% | -25,601 | -5% |
| Neo இயந்திரங்களுக்கான அட்டவணைப்படுத்தப்படாத திருத்தச் செலவுகள் | 11,572 | 3% | 2,899 | 1% | 8,673 | 299% |
| உடன்படிக்கையை மீறியமை தொடர்பான தண்டப்பண கட்டணங்கள் | 11,837 | 4% | - | 0% | 11,837 | 100% |
| நிதிச் செலவு | 37,387 | 11% | 51,483 | 12% | -14,096 | -27% |
| செலாவணி இழப்பு/(வருமானம்) | -28,660 | -9% | 63,128 | 14% | -91,788 | -145% |
| **மொத்த செலவுகள்** | 333,492 | 100% | 444,467 | 100% | -110,975 | -25% |

விமானச் சேவை தொழிற்பாட்டு செலவுகளில் விமானத்திற்கான எரிபொருள் செலவுகளே அதிகமாக காணப்படுகின்றது. இது 35% ஆகும். மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியினுள் 2022/23 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் விமானத்திற்கான எரிபொருள் செலவுகள் 26% இனால் குறைவடைந்தன, விமானத்திற்கான எரிபொருள் விலைகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 3.39 ஆக ஒரு கலனுக்காக காணப்பட்ட விலையானது ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 2.72 ஆக குறைவடைந்தது.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப் பகுதியினுள் ஊழியர்களுக்கான செலவு 21% இனால் அதிகரித்தது, இது இலங்கை ரூபா. 32.3 பில்லியன் ஆகும். இக்காலப் பகுதியில் கம்பனியானது ஆட்சேர்த்தல் முயற்சிகள் மற்றும் வேலை செய்பவர்களை நிலைத்திருக்கச் செய்தல் ஆகியவற்றை மேம்படுத்தியது. மேலும் பெருந்தொற்று காலப்பகுதி மற்றும் பொருளாதார நெருக்கடி காலப் பகுதிகளின் பொழுது வெளியேறி ஆட்களை நிரப்புவதற்கான தொழிற்பாட்டு தாக்குப் பிடித்தல் முறைகளை மேம்படுத்தியது. இந்த முன்னெடுப்பின் காரணமாக பணியாளர் எண்ணிக்கையில் 9% அதிகரிப்பு காணப்பட்டது. அத்தோடு தற்போதைய ஊழியர்களை தொடர்ச்சியாக நிலைத்திருப்பதை உறுதி செய்யும் முகமாக சமகாலத்தில் கம்பனியானது பல்வேறு உபாயமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

மேலும், மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் பணிக் குழாத்திற்கான செலவு 27% இனால் அதிகரித்தது. இது இலங்கை ரூபா. 9.7 பில்லியன் ஆகும். பொருளாதார நெருக்கடி காலப் பகுதியின் பொழுது செலாவணி பாதிப்புறு தன்மை காரணமாக பணிக் குழாம் மீது விதிக்கப்பட்ட மூலதனவாக்க விகிதமானது 2023 மே மாதம் முதல் அகற்றப்பட்டது. இதன் காரணமாக இலங்கை ரூபாயில் செலவுகள் அதிகரித்தன.

பூகோள ரீதியாகவும் உள்நாட்டிலும் ஏற்பட்ட சவால்களை பரிசீலனை செய்து, வருட காலப் பகுதியின் பொழுதான விற்பனை புறழ்வானது 10% அதிகரித்த தொகையாக காணப்பட்டது. நாட்டிலிருந்து மூளைச்சாலிகளின் வெளியேற்றத்தின் காரணமாக விமானத் துறையும் பாதிக்கப்பட்டது. கணிசமான அளவு திறன் படைத்த விமானத் துறை தொழில்வாண்மைமிக்கவர்கள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளை நாடினர்.

விமானங்கள் மற்றும் இயந்திர உதிரிப் பாகங்களுக்கான குறுகிய கால குத்தகை வாடகை செலவானது 10.7 பில்லியனாக அதிகரித்தது. கடந்த வருடத்தில் ஒப்பிடுகையில் இத்தொகையானது 0.5 பில்லியனாகும். பரந்த தோற்றத்திலான விமானங்களுக்கான பிரதியீடுகள் இன்மையின் காரணமாக மற்றும் Neo விமானங்கள் முதிர்ச்சி காலத்திற்கு முன்னரே இயங்காமையின் காரணமாக இத்தகைய அதிகரிப்புகள் ஏற்பட்டன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இயந்திரங்களுக்கான குத்தகை கட்டணங்க்ள இலங்கை ரூபா. 1.6 பில்லியனினால் அதிகரித்தது, மேலும் ரோல்ஸ் ரோயினால் மொத்த பராமரிப்பு உடன்படிக்கை நிகழ்ச்சித்திட்டமானது செயற்படுத்தப்படாமையின் காரணமாக குறுகிய கால குத்தகை அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான A330 இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன.

மேலும் மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியினுள், குறிப்பிட்ட காலப் பகுதியினுள் இயந்திரங்கள் இயங்காமையின் காரணமாகவும் A320/321 Neo விமான இயந்திரங்களுடன் தொடர்புடைய விமானங்களுக்கான அட்டவணைப்படுத்தப்படாத செலவானது இலங்கை ரூபா. 11.6 பில்லியனினால் அதிகரித்தது. புதிய கண்டறிதல்களின் படி செலவுகளுக்கான மதிப்பீடுகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது. மேலும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் இன்மையின் காரணமாக இவ்வருட காலப் பகுதியின் பொழுது ஏற்பட்ட செலவுகள் இலங்கை ரூபா. 11.8 பில்லியன் ஆகும். 2015 ஆம் ஆண்டில் A350 விமானத்தை இரத்துச் செய்ததன் காரணமாக ஒப்பந்தம் மீறப்பட்டமை தொடர்பில் ரோல்ஸ் ரோய் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தண்டப் பணம் மற்றும் வட்டித் தொகை ஆகியனவும் இதில் உள்ளடங்குகின்றது. இந்த இரண்டு விடயங்களின் காரணமாக மொத்த செலவில் 7% அதிகரிப்பு இவற்றினால் ஏற்பட்டது.

### நிதி நிலைமைகள்

2024 மார்ச் 31 இல் கம்பனியின் மொத்த சொத்துக்களின் பெறுமதி இலங்கை ரூபா. 201.6 பில்லியன் ஆகும். சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை தொடர்பான மொத்தம் இலங்கை ரூபா. 74.8 பில்லியன் ஆகும் மற்றும் குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நீண்ட கால பிணைகள் மற்றும் ஏனைய பெறுகைகள்

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.




ஆகியவற்றிற்கான தொகை இலங்கை ரூபா. 63.3 பில்லியன் ஆகும்.

குறுகிய கால வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஆகியவற்றை தவிர குழுவானது மொத்த கடனாக இலங்கை ரூபா. 357.5 பில்லியனை முன்னெடுத்துச் சென்றது. கடந்த கால நிதியாண்டுகளுடன் ஒப்பிடுகையில், கம்பனியின் மொத்த பொறுப்புகளானது 21% ஆனால் குறைவடைந்தது. கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டின் முதல் படிமுறையாக இலங்கை அரசாங்கமானது இலங்கை ரூபா. 102.5 பில்லியனை முதலீடு செய்ததுடன் இத்தொகையை முதல் கட்டண தொகையாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவை தொகையை முழுமையாக செலுத்தியமை இதற்கான பிரதான காரணியாகும். மேலும் கம்பனி எதிர்கொண்ட உடனடி காசோட்ட குறைபாடுகளை தவிர்க்கும் முகமாக 2024 மார்ச் இல் இலங்கை அரசாங்கத்திடமிருந்து உரிமை முதல் முதலீடாக இலங்கை ரூபா. 5 பில்லியன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து கம்பனிக்கு கிடைக்கப் பெற்றது.

### நிதி நிலை

கொந்தளிப்பான தொழிற்பாட்டு சூழல் மற்றும் தொடர்புடைய விமான இடைஞ்சல்கள் ஆகிய பின்புலத்தில் நிதி வருடம் முழுவதும் குழுவானது பண ரீதியான எதிர்மறை விடயங்களுடன் காணப்பட்டது. இதன் விளைவாக பிரதான விநியோகத்தர்களுக்கான தவணை கட்டணம் செலுத்த முடியாத நிலை காணப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் முகமாக விநியோகத்தர்களுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் விமானச் சேவை காத்திரமாக ஈடுபட்டு வந்தது. இவற்றுள் விமான நிலைய குத்தகைக ம்பனிகளுடன் கொடுப்பனவுகளை பிற்போடும் படியும் கேட்டுக் கொண்டது. இந்த உபாயமுறையுடன், செலவுகளைக் குறைத்தல், போன்ற வருட காலப் பகுதியின் பொழுது நிதி நிலைமைகளை பேணுவதற்கு பங்களிப்புச் செய்தன.

## வியாபாரப் பிரிவு செயலாற்றுகை

### ஸ்ரீலங்கா விமான நிலையம் மற்றும் தரை கையாளுகை சேவைகள்

***மேலோட்டப் பார்வை***

ஸ்ரீலங்கா விமான நிலையம் மற்றும் தரை கையாளுகை சேவைகளானது இலங்கை விமானச் சேவைகளின் தனியான தரை கையாளுகை அமைப்பாகும் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA) மற்றும் மத்தளை ராஜபக்ஷ விமான நிலையம் (MRIA) ஆகியவற்றிலிருந்து தொழிற்படுகின்ற உள்ளூர் மற்றும் சர்வதேச விமானச் சேவைகளுக்கான சேவைகளை வழங்குகின்றது. தற்சமயம் இது 30 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் விமானச் சேவைகள் மற்றும் அவ்வப்போதையை விமானச் சேவைகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றது. இங்கு சுமார் 2000 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். தரை கையாளுகை தொழிற்பாடுகள் தொடர்பில் இவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். கடந்த பல தசாப்தங்களாக பெற்றுக் கொண்ட நிபுணத்துவத்தின் காரணமாக, உயர் தராதர சேவைகளை வழங்குவது தொடர்பிலும் அதன் இணை பெறுமானங்களான பாதுகாப்பு, காத்திரமான சேவை மற்றும் தனித்துவமான சிறப்பு சேவைகள் ஆகியவற்றை வழங்குவது தொடர்பிலான நற்பெயரும் A&GS இற்கு காணப்படுகின்றது.

***செயலாற்றுகை***

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் சார்ந்த உட்கட்டமைப்பு வசதி ரீதியான தடைகள் காரணமாகவும் பணியாளர்கள் மற்றும் தரை சேவை உபகரண பற்றாக்குறைவு காரணமாகவும் ஸ்ரீலங்கன் விமான நிலையம் மற்றும் தரை கையாளுகை சேவைகளானது நிர்ப்பந்தங்களுக்கு மத்தியில் தொழிற்பட நேரிட்ட பொழுதிலும் கூட மீளாய்விற்கு

| கிடைக்கப்பெறுகின்ற இருக்கை கிலோ மீற்றர்கள் | விமானங்களின் எண்ணிக்கை |
| --- | --- |
| 15,425Mn<br>+2% Vs. 2023 | 11,080<br>-3% Vs. 2023 |
| **பயணிகள்** | **விளைவு** |
| 3.6Mn<br>+4% Vs. 2023 | +1% Vs. 2023 |

| பயணி சுமைக்காரணி |
| --- |
| 79%<br>+1% Vs. 2023 |

உட்பட்ட காலப் பகுதயின் இறுதியில், பெருந்தொற்றிற்கு பின்னரான காலப் பகுதியில் நாட்டிற்கு அதிகளவிலான பயணிகள் வருகை தந்த பொழுது அதிகளவிலான விமானச் சேவைகளையும் மற்றும் பயணிகள் வந்து செல்வதையும் ஸ்ரீலங்கன் விமான நிலையம் மற்றும் தரை கையாளுகை சேவைகள் நிறுவகத்தினால் சிறப்பாக மேற்கொள்ள முடிந்தது.

மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியினுள் காத்திரமான நிதி மற்றும் சேவை தொடர்பான செயலாற்றுகைகளை ஸ்ரீலங்கன் விமான

நிலையம் மற்றும் தரை கையாளுகை சேவைகளினால் அடைய முடிந்தது. விமான நிலைய முடிவுச் சேவை மற்றும் ஏனைய சேவைகள் ஆகியவற்றினால் எமது குழுவிற்கு இலங்கை ரூபா. 21.2 பில்லியனை வருமானமாக பதிவு செய்ய முடிந்தது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 37% அதிகரிப்பாகும். அதேவேளை மொத்தமாக 48,197 விமானங்கள் கையாளப்பட்டதுடன் கடந்த நிதி வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 25% அதிகரிப்பாகும், அதேபோல் கையாளப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு காணப்பட்டது. இது மொத்தமாக 7.98 மில்லியன் ஆகும். கடந்த நிதி வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 37% அதிகரிப்பாகும்.

மேலும் வருட காலப் பகுதியின் பொழுது தரை சேவைகளினால் சுமார் 171,000 மெட்ரிக் தொன் விமானச் சரக்கு கையாளப்பட்டது. விமானச் சரக்கு கையாளுகையின் மூலமாக பெறப்பட்ட வருமானமானது விமான நிலையத்தின் மொத்த தரை சேவைகள் வருமானத்தின் 25% ஆகும். பிழையாக கையாளப்பட்ட பொதிகளின் விகிதமானது 1000 பயணிகளுக்கு 0.87% ஆகும். இந்த பிரிவானது இலங்கை கையாளுகை நம்பகத்தன்மை 99.69% ஆகவும் மற்றும் வாடிக்கையாளர் விமானச் சேவை கையாளுகை நம்பகத்தன்மை 99.83% ஆகவும் காணப்பட்டது.

**நிதியாண்டு 23/24 இல் கையாளப்பட்ட பயணிகள்**




**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கையாளப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை**






***பிரதான உபாயமுறைகள்***

வினைத்திறனை அதிகரிக்கும் முகமாகவும் தாமதங்களை குறைக்கும் முகமாகவும் காலப் பகுதியின் பொழுது நடைமுறைப்படுத்தப்பட்ட சுய சோதனை முறையானது ஒரு அறிவார்ந்த உபாய ரீதியான நடைமுறையாகும். இதன் காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஸ்ரீலங்கன் விமானச் சேவைகள் மூலமாக பயணிக்கின்ற பயணிகளில் சுமார் 20% இற்கு அதிகமானவர்கள் சுய சோதனை நிலையங்கள் மூலமாக சோதிக்கப்பட்டனர். அதிகரித்து வரும் தேவைகளுக்கு முகங் கொடுக்கும் முகமாக பணியாட்களை ஆட்சேர்ப்பதற்கான முன்னெடுப்புகளை இது சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக விமான நிலையம் மற்றும் தரை கையாளுகை நிறுவனம் நடைமுறைப்படுத்தியது. மேலும் சில அத்தியவசிய உபகரணங்களையும் A&GS கொள்வனவு செய்தது. சுமுகமான தொழிற்பாட்டினை இலகுபடுத்தும் முகமாக போதியளவு ஆட்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதனை உறுதி செய்யும் முகமாக பணியாட்களை ஆட்சேர்த்தல், அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் ஆகியன தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

***எதிர்கால தோற்றப்பாடு***

வாடிக்கையாளர் விமான சேவைகள் வந்து செல்வதில் அதிகரிப்புகள் காணப்பட்டதன் காரணமாக அதிகரித்து வரும் தேவைகளுக்கு ஏற்ப ஆற்றல்களை விரிவாக்கம் செய்வதற்கான அவசியம் ஏற்பட்டது. ஆகவே எதிர்காலத்தில் இத்தேவைகளை நிறைவேற்றக்கூடிய விதத்தில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் உபகரணங்களை அதிகரித்தல் ஆகியன பற்றிய சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து வருகின்றது. மேலும் நிலைபேறு தன்மையை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் சார் தாக்கங்களைக் குறைத்தல் ஆகியவற்றுக்காக பசுமை முன்னெடுப்பின் ஓர் அங்கமாக விமானச் சேவைகளுக்கான மின்னியல் GSE கொள்வனவு செய்வதற்கான சாத்தியப்பாடுகளையும் ஆராய்ந்து வருகின்றது.

## இலங்கை பொறியியல் (SLE)

***மேலோட்டப் பார்வை***

இலங்கை பொறியியலானது ஸ்ரீலங்கன் விமானச் சேவைகளின் பொறியியல் சார் அங்கமாகும். இது பல்வேறு வகையான சேவைகளை வழங்கி வருகின்றது. இவற்றுள் முக்கியமான பேணுதல்கள், திருத்த வேலைகள், விமானங்களை பழுது பார்த்தல் சேவைகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட விடயங்கள், 3 இடங்களிலிருந்து தொழிற்படல். அதாவது கொழும்பு, மாலைதீவு, மத்தளை விமான நிலையங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. விமானங்களை பேணுவது தொடர்பான 30 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவங்களை இது கொண்டிருப்பதன் காரணமாக இலங்கை பொறியியலானது தற்சமயம் ஸ்ரீலங்கன் விமானச் சேவைகள் மற்றும் ஏனைய பல சர்வதேச தொழிற்பாட்டாளர்களுக்கு தனது சேவைகளை வழங்கி வருவதுடன் எதிர்காலத்தில் பரந்தளவிலான வாடிக்கையாளர்களுக்கு தனது சேவைகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கின்றது. இப்பிராந்தியத்தில் பூரணத்துவமிக்க விமான சேவைகளை வழங்கியதன் காரணமாக இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார அமைப்பு, ஐரோப்பிய விமான சேவை பாதுகாப்பு நிறுவகம், ஏனைய பல்வேறு வகையான தேசிய விமானச் சேவை அதிகார அமைப்புகள் ஆகியவற்றினால் இலங்கை பொறியியலுக்கு நற்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

***செயலாற்றுகை***

மீளாய்விற்கு உட்பட்ட நிதி வருடத்தின் பொழுது பழுது பார்த்தல் செயற்பாடுகள் தொடர்பான கேள்விகள் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. இருப்பினும், உள்ளூர் விமானங்களை அட்டவணைப்படுத்தப்பட்ட பேணுதல்களுக்காக வைத்திருப்பதற்கான இடமின்மை சார்ந்த பிரச்சினைகள்

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.



காணப்படுகின்றன. இருப்பினும், இலங்கை பொறியியலானது தனது சேவையை வெளிநாட்டு விமானங்களை பொறுத்த வரையில் பேணுதல் மற்றும் பாகங்களை பேணுதல் தொடர்பான சேவைகளை விரிவாக்கம் செய்துள்ளது. வருட காலத்தின் பொழுதான தொழிற்பாடு சார்ந்த செயலாற்றுகைகளை மதிப்பீடு செய்கையில், A320 மற்றும் A330 விமான வகைகள் தொடர்பில் முறையே 98.76% மற்றும் 97.73% வீதங்களை சராசரி அனுப்புகை நம்பகத்தன்மையை இலங்கை பொறியியலினால் பேண முடிந்தது.

### *பிரதான உபாயமுறைகள்*

இலங்கை பொறியியலின் கீழ் மூன்று செங்குத்து நிலை நோக்குகையில் தற்போதைய ஆற்றல் சார்ந்த இடையூறுகனானது புதிய வாடிக்கையாளர்களுக்கான மூன்றாம் தரப்பு பேணுதல்களை வழங்குவதை மட்டுப்படுத்துவதன் காரணமாக அடித்தள பேணுதல்கள் தொடர்பில் மெதுவான முன்னேற்றமே வருடத்தின் பொழுது காணப்பட்டது. தடம் பேணுதல் தொடர்பில், இலங்கை பொறியியலானது புதிய உடன்படிக்கைகளை எயா அரேபியா, அபுதாபி, எயா பெல்ஜியம், சீன கிழக்கு, எட்ல்வெசிஸ்., ஸ்மார்ட்விங்ஸ் ஆகியவற்றுடன் மேற்கொள்ள முடிந்தது. ஆற்றல் சார்ந்த விடயங்களை நோக்குகையில், வருட காலத்தின் பொழுது பாகங்களை பேணுதல் தொடர்பான அதிக கவனத்தை இலங்கை பொறியியல் உறுதிப்படுத்தியது, வருமானம் ஈட்டுதலுக்கான புதிய வழிமுறைகளை ஏற்படுத்தியதுடன் வெளிநாட்டு விமான நிலையங்களிலிருந்து பாகங்களை பேணுவதற்கான வியாபாரங்களையும் பெற்றுக் கொள்ள முடிந்தது, இதன் மூலம் உள்ளக ரீதியான ஆற்றல்கள் விருத்தி செய்யப்பட்டன. விமானங்கள் தொடர்பான செயலாற்றுகைகளை பேணுதல் மற்றும் ஏனைய நாடுகளில் பாகங்களை பதிவு செய்தல் தொடர்பில் ஒப்புதல்களை இலங்கை விமானச் சேவை அதிகார அமைப்பிடமிருந்து இலங்கை பொறியியல் பெற்றுக் கொண்டமை முக்கிய விடயமாகும்.

### *எதிர்கால தோற்றப்பாடு*

விமானச் சேவையின் விமானத் தொகுதி சார்ந்த தொழிற்பாட்டு தேவைகளை நிறைவேற்றுவதற்காக விமானங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது தொடர்பில் இலங்கை பொறியியல் முன்னுரிமைப்படுத்தியுள்ளது. புதிய சர்வதேச வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டதன் மூலம் தடம் பேணுகை மற்றும் பாகங்கள் பேணுகை ஆகியவற்றிலிருந்து வருமானங்களை அதிகரிப்பதற்கு இலங்கை பொறியியல் எதிர்பார்க்கின்றது.

## இலங்கை விமானச் சேவை கல்லூரி (SLAC)

### *மேலோட்டப் பார்வை*

விமானச் சேவைகள் பயிற்சி தொடர்பான மூன்று தசாப்த நிபுணத்துவங்களை உள்ளடக்கி, இலங்கை விமானச் சேவைகள் கல்லூரியானது. இலங்கை விமானச் சேவைகளின் தனித்துவமான பயிற்சிப் பிரிவானது, நாட்டினதும் பிராந்தியத்தினதும் பல்வேறு விதமான பயிற்சி ரீதியான தீர்வுகளை வழங்கி வருகின்றது. இலங்கையில் காணப்படுகின்ற தனித்துவமான நிறுவகமாக SLAC காணப்படுவதுடன் தென் ஆசியாவில் தெரிவு செய்யப்பட்ட சில நிறுவனங்களில் ஒன்றாக இதுவும் காணப்படுகின்றது. பல்வேறு வகையான சர்வதேச ரீதியான நற்சான்றிதழ்கள் மற்றும் விமானச் சேவை சார்ந்த ஒப்புதல்களையும் இது  வழங்கி வருகின்றது. ஐரோப்பிய ஒன்றிய விமானச் சேவை பாதுகாப்பு நிறுவகம் (EASA), சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு (IATA), தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு (ISO), இலங்கை சிவில் விமான சேவை அதிகார அமைப்பு, பாகிஸ்தான சிவில் விமான சேவை அமைப்பு, மாலைதீவு சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை, நேபாள சிவில் விமான சேவை அமைப்பு ஆகியவற்றின் அங்கீகாரங்கள் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

ஆனால் இதற்கு மாத்திரம் இவை மட்டுப்படுத்தப்பட்டதல்ல. தனிச் சிறப்பு வாய்ந்த நிறுவனங்களான ரோயல் வான் வழி சமூகம் (RAES) மற்றும் ஐரோப்பிய விமானச் சேவை பேணுதல் பயிற்சிக் குழு (EAMTC) ஆகியவ்றறின் உறுப்பினராகவும் SLAC காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் நற்பெயர் கொண்ட பயிற்சி நிறுவனங்கள் மற்றும் கல்வி சார் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கூட்டிணைவுகளை இக்கல்லூரி மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக மாணவர்களாக வருவதற்கு விருப்பமுடையோர் மற்றும் தொழில்வாண்மை மிக்கோர் ஆகியோருக்கான பூரணத்துவமிக்க விமான சேவை மற்றும் பெறு நிறுவன பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

சர்வதேச மாணவர்களை கவர்ந்திருப்பதன் காரணமாக நாட்டின் அந்நியச் செலவாணி வருவாய்க்கு பங்களிப்புச் செய்வதில் SLAC ஆனது முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. வருட காலப் பகுதியின் பொழுது அதிகமான மாணவர்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளனர். வெளிநிலை வருமானங்களை ஈட்டுவதற்கு இது பங்களிப்புச் செய்துள்ளது, இத்துறை எதிர்கொண்ட பல்வேறு விதமான சவால்களுக்கு மத்தியில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. உள்ளூர் மாணவர்களுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விமானச் சேவை சார்ந்த தகைமைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டு நாணய வெளிச் செல்லுகையை குறைப்பதற்கு இந்த கல்வி நிறுவனம் பங்களிப்புச் செய்துள்ளது.

### பிரதான உபாயமுறைகள்

### *உபாய ரீதியான பங்காண்மைகள்*

கற்றல் வாய்ப்புகளையும் மற்றும் வழங்கலுக்கான அணுகல்களை மேம்படுத்தும் முகமாக நிதி வருடத்தின் பொழுது இரண்டு உபாய ரீதியான பங்காண்மைகளை பேணுவதற்கு SLAC இனால் முடிந்தது.

### இலங்கை விமானப் படை

விமானச் சேவை பயிற்சிகளில் கூட்டிணைவை வலுப்படுத்துவதற்காக இலங்கை விமானச் சேவைகள் கல்லூ ரி மற்றும் இலங்கை விமானப் படை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை இலங்கை விமானச் சேவை மேற்கொண்டது. இலங்கையில் முதல் முறையாக இத்தகைய பங்காண்மை ஒன்று மேற்கொள்ளப்பட்டது முக்கிய விடயமாகும், விமானச் சேவை பயிற்சி தொடர்பான இரண்டு முக்கிய நிறுவனங்களது வளங்கள் கூட்டிணைக்கப்பட்டன. இலங்கை விமானப் படையுடன் SLAC தாபித்த நீண்ட கால பயிற்சி பங்காண்மைகளை கருத்திற் கொண்டு இரண்டு தரப்புகளுக்கிடையிலான தொடர்பாடல் முறையை மேலும் மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் கல்வி

சார் பணியாளர்களை பறிமாறிக் கொள்ளுதல் மற்றும் இரண்டு தரப்பினருக்கான பயிற்சி ரீதியான தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பயிற்சி வசதிகளை வழங்குதல் உள்ளடங்கலாக விமானச் சேவை பேணுதல் மற்றும் ஏனைய விமானச் சேவை தொடர்பான பயிற்சி வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்காக இவை மேற்கொள்ளப்பட்டன. அவசியமான விடத்து இரு தரப்புகளுக்கு மத்தியில் பயிற்சி மற்றும் அதனோடு தொடர்புடைய பரஸ்பர நலன்கள் ஆகியவற்றை பரிமாறிக் கொள்ளுதல் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட தகவல்களை பரிமாறிக் கொள்வதையும் இந்த பங்காண்மை இயலுமையாக்குகின்றது. இதன் காரணமாக மேம்பட்ட அறிவை வழங்குதல், வளப் பரிமாற்றம், பயிற்சி ஆற்றல்கள் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

### British Way *ஆங்கில கல்வியகம்*

பிரித்தானிய வழி பாடத் திட்டத்தில் சீர்படுத்தல் மற்றும் ஆசாரம் சார்ந்த பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் முகமாக British way உடன் பங்காண்மைகளை SLAC மேற்கொண்டது.

### விரிவாக்கம் மற்றும் தரச் சான்றளித்தல்

பிராந்திய முழுவதும் தனது பிரசன்னத்தை விரிவாக்கி தொழிற்துறையில் தனது நற்பெயரை மேம்படுத்தும் முகமாக SLAC ஆனது இரண்டு மேலதிக தரச் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டது.

### *நேபாள சிவில் விமானப் போக்குவரத்து ஒப்புதல்கள்*

நேபாளம் சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பிடமிருந்து பயிற்சிக்கான தரச் சான்றிதழை SLAC பெற்றுக் கொண்டது. நேபாளத்தில் அங்கீகரிக்கப்பட்ட 147 அமைப்புகளுள் ஒன்றாக இலங்கை விமானச் சேவை கல்லூரியும் காணப்படுகின்றது. இதன் மூலம் நேபாளத்தின் விமானச் சேவை பயிறசித் துறையில் முக்கிய நிறுவனமாக இது திகழ்கின்றது. இதன் காரணமாக ஹிமாலய விமானச் சேவையானது இலங்கை விமானச் சேவை கல்லூ ரியுடன் இணைந்து பணியாற்றுவதற்கான ஒப்புதல்களை வழங்குவதுடன் ஐரோப்பிய ஒன்றிய விமானச் சேவை பாதுகாப்பு நிறுவனம், பேணுதல் பயிற்சி அமைப்பு (MTOE) ஆகியவற்றில் வசதிகளை சேர்ப்பதற்கான வாய்ப்புகள் கிடைப்பதுடன், நாட்டில் EASA அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அமைப்புகள் இன்மையினால் ஏற்பட்ட வெற்றிடத்தையும் இது நிரப்புகின்றது. இந்த கூட்டிணைவின் காரணமாக இலங்கை விமானச் சேவை கல்லூரியானது கோட்பாட்டு ரீதியான மற்றும் செய்முறை பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதுடன் சர்வதேச பயிற்சி தராதரங்களை பயன்படுத்தி நேபாளத்தில் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதோடு நாட்டில் விமானச் சேவை சார்ந்த திறன்களையும் தேர்ச்சிகளையும் மேம்படுத்துகின்றது.



### NVQ Level 6

தேசிய தொழில் பயிற்சி தகைமை மட்டம் 6 (NVQ Level 6) தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) வரைவுச் சட்டகத்தின் கீழ் SLAC இற்கும் NVQ 6 ஆம் மட்ட அந்தஸ்து கிடைத்தது. இதன் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேசிய ரீதியான அங்கீகாரம் அதிகரித்ததுடன் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பை மேம்படுத்தி அவர்களது தொழில் சார்ந்த தேர்ச்சிகளுக்கு பெறுமதி சேர்த்தது. ஒவ்வொரு கற்கை நெறிக்குமான NVQ தரச் சான்றிதழானது தொழில்நுட்ப மற்றும் தெழிற்பயிற்சிகளின் உயர் தேசிய டிப்ளோமாவிற்கு நிகராக காணப்பட்டது. இதனால் உள்ளூர் மாணவர்கள் பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய பிரிவுகளுக்கு பிரவேசிக்கக்கூடியதாக இருக்கின்றது. இலங்கை விமானச் சேவை கல்லூரியானது தரச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கான படிமுறைகளை மேற்கொண்டது. மாணவர்களுக்கு NVQ தகைமைகளின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

IAT உடன் பிராந்திய பயிற்சி பங்காளராக வருவதற்கான உடன்படிக்கையொன்றினை SLAC கைச்சாத்திட்டது, இந்த உடன்படிக்கையின் கீழ் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. அவையாவன, பழுது பார்ப்பவர்களுக்கான பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் மற்றும் அறிவுரை வடிவமைப்பு ஆகும்.

### எதிர்கால தோற்றப்பாடு

இந்த பிராந்தியத்திலுள்ள மாணவர்களுக்கு தனித்துவமான வாய்ப்புகளை வழங்கி சர்வதேச ரீதியாக பெயர் பெற்ற விமானச் சேவை பல்கலைக்கழகம் ஒன்றில் கற்பதற்கான வாய்ப்பினை வழங்கும் முகமாக கல்வி அமைச்சு மற்றும் பெருந்தெருக்கள் மற்றும் துறைமுகங்கள், கப்பற் போக்குவரத்து மற்றும் விமான சேவை அமைச்சுடன் பட்டம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் இலங்கை சிவில் விமானச் சேவை அதிகார சபையுடன் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அமைப்பு அந்தஸ்தினை பெற்றுக் கொள்வதற்கான செயன்முறைகளில் SLAC ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் ATO இனால் சான்றுப்படுத்தக்கூடிய ஒட்டுமொத்த விமான சேவை தொழில்வாண்மை கற்கை நெறிகளில் விசேடத்துவம் பெற்ற முதல் நிறுவனமாக திகழ்வதற்கு முடியும். இதன் மூலம் மாணவர்கள் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்..

சர்வதேச ரீதியாக தனது தொழிற்பாடுகளை விரிவாக்கம் செய்வதற்கான தெலைநோக்குடன் துரிதமாக செயற்படுகின்ற அதேவேளை பிராந்தியத்தின் விமான சேவை சார்ந்த பயிற்சித் தேவைகளை அங்கீகரித்து உணர்ந்ததன் காரணமாக, பங்களாதேஷத்தில் தனது தொழிற்பாடுகளை தற்சமயம் விரிவாக்கம் செய்துள்ளது, எனவே எதிர்கால மாணவர்களுக்கு விமான சேவை சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்பினை உறுதி செய்கின்றது. மாலைதீவில் EASA ஒப்புதல் அளிக்கப்பட்ட பரீட்சை நிலையம் ஒன்றைக் கொண்டுள்ள முதல் நிறுவனமாக SLAC காணப்படுகின்றது. மேலும் விமானங்களை பேணுவது தொடர்பான டிப்ளோமா சான்றிதழை வழங்குவதற்கான கலந்துரையாடல்களில் அவுஸ்திரேலியா விமான சேவையுடன் தற்போது SLAC ஈடுபட்டுள்ளது - அவுஸ்திரேலிய டிப்ளோமா தகைமையைப் பெற்றுக் கொள்வதினால் வெளிநாடுகளில் தமது கற்கைகளை தொடர விரும்புபவர்கள் இதனைக் கொண்டு அவுஸ்திரேலியாவில் பட்டப் படிப்பொன்றினை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் கிடைக்கின்றன.

# முகாமைத்துவக் கலந்தாராய்வும் பகுப்பாய்வும் தொடர்ச்சி.

## இலங்கை உணவளிப்பு லிமிடட் (SLC)

*மேலோட்டப் பார்வை*

இலங்கை உணவளிப்பு லிமிடட் ஆனது கம்பனிக்கு முழுமையாக சொந்தமான துணை கம்பனியாகும். இலங்கையில் விமானங்களுக்கு உணவளிக்கின்ற தனி நிறுவனமாக இது காணப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனியாகும். SLC இன் முக்கிய வியாபார நடவடிக்கைகளாக இலங்கை விமான சேவை விமானங்களுக்கான உணவுகளை வழங்குதல் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA), மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MRIA) மற்றும் கொழும்பு சர்வதேச விமான நிலையம், ரத்மலானை (CIAR) ஆகியவற்றிலிருந்து தொழிற்படுகின்ற சர்வதேச விமான சேவைகளுக்கான உணவுகளையும் இது வழங்குகின்றது. விமான நிலைய உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றுக்கு பல்வேறு வகையான சேவைகளை SLC வழங்கி வருகின்றது. இவற்றுள் உணவு வழங்குதல், சலவைத் தொழில் மற்றம் சிற்றுண்டிச் சாலை முகாமைத்துவம் ஆகியன உள்ளடங்குகின்றன. முன்னணி விமான சேவைகளுக்கு பயணிகள் தொடர்பில் காத்திரமான சேவைகளை வழங்குவது தொடர்பான 40 வருடத்திற்கு மேற்பட்ட நிபுணத்துவங்களை கொண்டுள்ள நிலையில், உலகில் உள்ள சிறப்பான உணவளிப்பு நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் SLC ஆனது பல்வேறு வகையான வாடிக்கையாளர்களுக்கு உயர்வான நிபுணத்துவத்தின் அடிப்படையில் தெழில்வாண்மைமிக்க காத்திரமான சேவைகளை சகல துறைகளிலும் வழங்கி வருகின்றது. சர்வதேச விமான உணவளிப்பு அமைப்புகள் (IFCA) மற்றும் சர்வதேச விமானங்களில் உணவளிக்கின்ற உணவுச் சேவைகள் அமைப்பு (IFSA) ஆகியவற்றுடன் காத்திரமான உறுப்பினராக SLC திகழ்கின்றது.

தனது வியாபார செயற்பாடுகளின் தன்மையை கருத்திற் கொண்டு, உயர்வான ஆரோக்கியம் பேணப்படுவதை உறுதி செய்வதற்காக அத்தராதரத்தை பேணுவதற்காக கணிசமான முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை SLC மேற்கொண்டு வருகின்றது, அத்தோடு கடும் தர கட்டுப்பாட்டு செயன்முறைகளை பேணுவதுடன் பின்வரும் பிரதான வழிகாட்டிகளுக்கும் இணங்குகின்றது.

- ISO 9001:2015 – உடனான தர முகாமைத்துவ முறை (ஐக்கிய இராச்சிய தர நிர்ணய சேவைகள்).
- ISO 22000:2018 – SAS உடனான உணவு பாதுகாப்பு முகாமைத்துவம் (சுவீடன் தர நிர்ணய முறை).
- HACCP – அபாய நேர்வு பகுப்பாய்வுகள் மற்றும் முக்கிய கட்டுப்பாட்டு புள்ளிகள் ஆகியவற்றுடன் உணவுப் பாதுகாப்பு காப்புறுதிகள்.
- ISO 14001:2015 – (சுவீடன் தரச் சான்றிதழ் முறை) உடன் சுற்றாடல் முகாமைத்துவ முறை.
- ஹலால் சான்றிதழ் - மலேசியா விமானச் சேவையினால் சான்றுப்படுத்தப்பட்டது.
- 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் மற்றும் 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உணவு (திருத்த) சட்டத்தின் பிரகாரம் திருத்தப்பட்டவாறு.

### செயலாற்றுகை

நிதி வருடத்தின் பொழுது குறிப்பிடக்கூடிய செயலாற்கைகளை SLC வெளிப்படுத்தியது. இலாபத்தை பதிவு செய்ததுடன் பணப் புரழ்வானது இலங்கை ரூபா 14 பில்லியன் ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 11% வளர்ச்சியாகும். விமானங்களினுள் உணவுச் சேவைகளை வழங்குதல் மற்றும் விமான நிலைய சிற்றுண்டிச்சாலைகள் (பொது மற்றும் இடமாற்று) ஆகியவற்றினால் ஏற்பட்ட வருமான அதிகரிப்பே இதற்கான பிரதான காரணியாகும். வருட காலப் பகுதியின் பொழுது விமான சமயலறையில் தயாரிக்கப்பட்ட உணவுகளின் எண்ணிக்கையானது 13% இனால் அதிகரித்தது, கடந்த நிதியாண்டின் பொழுது 4.5 மில்லியன் உணவுகள் தயாரிக்கப்பட்டதுடன் ஒப்புநோக்குகையில் இவ்வருடம் 5.1 மில்லியன் ஆகும். விமானத்தினுள் உணவு வழங்குதலின் பிரதான வாடிக்கையாளராக காணப்படுகின்ற ஸ்ரீலங்கன் எயாலைன்ஸ் ஆனது மொத்த விமான உணவு வழங்குதல் புறழ்வின் 65% இற்கு பங்களிப்பு செய்ததுடன் இக்காலப் பகுதியினுள் தயாரிக்கப்பட்ட மொத்த உணவுகளில் 73% ஐ பயன்படுத்தியது.

வருட காலப் பகுதியின் பொழுது தொழிற்பாட்டு இலாபமாக SLC ஆனது இலங்கை ரூபா. 5,787 மில்லியனை பதிவு செய்தது (2022/23 - இலங்கை ரூபா. 5,010 மில்லியன்). கடந்த வருடத்துடன் ஒப்பு நோக்குகையில் (இலங்கை ரூபா. 5,701 மில்லியன்) இவ்வருடம் வரிக்கு முன்னரான தேறிய இலாபமானது இலங்கை ரூபா. 4,708 மில்லியனாக குறைவடைந்தது. இது 17% ஆகும். அந்நியச் செலவாணியில் ஏற்றத்தாழ்வுகளே இதற்கான பிரதான காரணியாகும். மேலும் நிதி வருட காலப் பகுதியின் பொழுது ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்ததன் காரணமாக இலங்கை ரூபா. 1,116 மில்லியன் வீழ்ச்சி ஏற்பட்டது (2022/23 செலாவணி வருமானம் - இலங்கை ரூபா. 706 மில்லியன்).

சகல செயலாற்றுகை குறிகாட்டிகளும் கணிசமான அளவு அதிகரித்தது. பெருந்தொற்று மற்றம் பேரினப ' பொருளாதார சுற்றாடல் மேம்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக பயணிகளின் வருகை மற்றும் சில விமானச் சேவைகள் தமது சேவைகளை ஆரம்பித்தமை ஆகியனவே இவற்றிற்கான காரணிகளாகும்.

### பிரதான உபாயமுறைகள்

நிதி வருட காலப் பகுதியின் பொழுது தற்போதைய வியாபார பிரிவுகள் மூலம் வருமான ஈட்டல்களுக்கான வாய்ப்புகளை தொடர்ச்சியாக SLC ஆராய்ந்தது. மற்றும் எதிஹாட் எயார்வேஸ் மற்றும் எயா சைனா போன்ற முன்னணி நிறுவனங்களிடமிருந்து புதிய ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பெற்றுக் கொண்டது. SLC ஆனது தொடர்ச்சியாக சிறந்த உணவுகளை வழங்கியது, இவற்றை உள்ளூர் மக்களும் வெளிநாட்டு மக்களும் விரும்பி உண்டனர். இதன் பாரிய உற்பத்திகள் மற்றும் தொழிற்பாட்டு ஆற்றல்கள் விரிவடைந்தன. இதன் விளைவாக பல்வேறு வகையான உணவுகளை அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடிந்தது. அத்தோடு எதிர்காலத்தில் ஏற்றுமதி மற்றும் உள்ளூர் சந்தைகளில் இவற்றை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

வினைத்திறனை மேம்படுத்தும் முகமாக வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவது தொடர்பில் கவனத்தை செலுத்துகின்ற அதேவேளை தொழிற்பாட்டு செலவு கட்டுப்பாடுகள் தொடர்பிலும் SLC கருத்திற் கொண்டு வருகின்றது. இதன் விளைவாக உரிய அளவிலான பணியாட்கள் வேலை செய்வதுடன் ஏனைய தொழிற்பாட்டு ரீதியான செலவுகள் குறைவடைந்துள்ள தொழிற்பாட்டு ஆற்றல்களுக்கு ஏற்ப குறைக்கப்பட்டுள்ளன.

### எதிர்கால தோற்றப்பாடு

நிதியாண்டின் இறுதிக் காலப் பகுதியில் ஏற்பட்ட சாதகமான பேரினப் பொருளியல் அபிவிருத்திகளை கருத்திற் கொண்டு மற்றும் நாட்டிற்கு அதிகளவிலான உல்லாசப் பயணிகள் வருகை தந்தமை மற்றும் உலகளாவிய ரீதியில் விமானப் போக்குவரத்திற்கான கேள்விகள் அதிகரித்தமை ஆகியன, SLC இன் தோற்றப்பாடுகள் சாதகமான திகழ்வதற்கு உதவின. இத்தகைய முன்னேற்றகரமான சூழலை சாதகமாக பயன்படுத்தி, பெருந்தொற்று காலப் பகுதியில் இடைநிறுத்தப்பட்ட உணவு வழங்கல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்களை SLC ஆனது ஏனைய விமானச் சேவைகளுடன் தற்சமயம் மேற்கொண்டு வருகின்றது. சிறப்பான தொழிற்பாட்டு சாதகத் தன்மையைப் பெற்றுக் கொள்வதற்காக தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் முறைகளை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக தன்மை, வினைத்திறன், உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் தனது விநியோக தளத்தினை விரிவுபடுத்துவது தொடர்பில் SLC பரிசீலித்து வருகின்றது.

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் சபை மற்றும் முகாமைத்துவமானது, கம்பனியின் செயற்திறனின் நிலைபேறுடைமைக்குத் திடமான கூட்டாண்மை ஆளுகை அவசியம் என நம்புகின்றது. அத்துடன், பணிப்பாளர்கள் சபையானது, அடிப்படையில் பாரபத்திய பங்களிப்பினை நிறைவேற்றுபவர்களாக, அரச உடைமை நிறுவனங்களின் ஒரு அவசியமான தேவைப்பாடாக சிறந்த ஆளுகை நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் காணப்படுகின்றது.

நியாயத்தன்மை, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் ஒரு ஆரோக்கியமான சமநிலையினை மேம்படுத்தி பராமரிப்பதற்காக கூட்டாண்மை ஆளுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் நியமங்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு கம்பனியானது கடப்பாடுகளைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையினால் அமுலாக்கப்பட்ட அதன் கூட்டாண்மை ஆளுகையின் ஒரு பகுதியாக, பின்வரும் சட்டம், கோவை மற்றும் மனமுவந்த நடைமுறைகள் வரம்புறுகைகளைப் பின்பற்றுவதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இணங்கியொழுகியுள்ளது.

- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்.
- கம்பனியின் அமைப்பு அகவிதிகள்.
- 2021 நவம்பர் 16ஆம் திகதியிடப்பட்ட அரச நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வழங்கப்பட்ட அரச உடைமை நிறுவனங்களுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான வழிகாட்டிகள் மற்றும் செயற்பாட்டுக் கையேடு.
- உள்ளகக் கம்பனி விதிகள் மற்றும் செயன்முறைகள் மற்றும் துறை குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்.

## பணிப்பாளர்கள் சபை

### *சபையின் தொகுப்பு*

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், இலங்கை அரசாங்கமானது, திறைசேரிக்கான செயலாளரூடாக பணிப்பாளர்கள் சபையினை நியமிக்கின்றது. இது கம்பனியின் 50 சதவீதமான பங்குகளை அரசாங்கம் வைத்திருக்கும் வரை செயற்படும். அரசாங்கமானது, அரச உடைமை நிறுவனங்களை வெற்றிகரமான முயற்சிகளாக மேற்கொள்ளும் ஆற்றலுடனான தகைமைமிக்க மற்றும் திறமைமிக்க ஆளணியினரை சபை உள்ளடக்குவதனை உறுதிசெய்வதற்காக, ஒரு தெரிவுக் குழுவினூடாக சபைக்கு பணிப்பாளர்களை நியமிக்கின்றது. நிறுவனங்களின் பொது உரித்துடைமையானது, அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால், பணிப்பாளர்கள் சபையானது, அரசாங்கத்திற்கு நேரடியாகப் பொறுப்புக்கூறல் வேண்டும். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை வெற்றிகரமான முயற்சியாக மாற்றும் திறன் கொண்ட, தகுதி வாய்ந்த மற்றும் திறமையான பணியாளர்களை சபை கொண்டுள்ளது என்பதை உறுதி செய்வதற்காக, தெரிவுக் குழு மூலம் சபைக்கு பணிப்பாளர்களை அரசாங்கம் நியமிக்கிறது. நிறுவனங்களின் பொது உடைமை அரசாங்கத்திடமே உள்ளதனால், பணிப்பாளர்கள் குழு நேரடியாக அரசாங்கத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

### *சபையின் பங்கு*

கம்பனியின் குறிக்கோள்களை அடைவதில் துணைபுரிவதற்கு சபையானது மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றது. அத்துடன், மூலோபாயத் திட்டமானது, தேசியக் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் ஒத்திருப்பதனை உறுதிசெய்கின்றது.

சபையானது, முகாமைத்துவத்திற்கிடையே பொறுப்புக்களில் ஒரு தெளிவான வேறுபடுத்தலை மேற்கொள்வதுடன், இது சமநிலை மற்றும் அதிகார அமைப்பிற்கு வசதியளிக்கின்றது.

சபையின் அடிப்படைப் பொறுப்புக்களாவன:

- மூலோபாயப் பணிப்புரைகளை பயனுறுதியுடன் அமுலாக்குவதற்கு வசதியளிப்பதற்காக விசேடமாக செயற்பாட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதில் முகாமைத்துவத்திற்கு போதுமான அதிகார ஒப்படைப்பினை உறுதிசெய்தல்.
- தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வசதியளிக்கும் ஒரு திடமான மற்றும் நம்பகத்தன்மையான முகாமைத்துவத் தகவல் அமைப்பு முறையினை கம்பனி கொண்டிருப்பதனை உறுதிசெய்தல்.
- கணக்கீட்டு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் அமைப்பு முறைகள், இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாட்டு அமைப்பு முறைகளின் நேர்மையினை உறுதிசெய்தல் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருத்தமான நியமங்களுடனான இணக்கப்பாட்டினை நிலைபெறச் செய்தல்.
- செயற்பாடு, நிர்வாக மற்றும் நிதியியல் செயன்முறைகள் உள்ளடங்கலான முக்கிய செயலாக்கம் மற்றும் செயன்முறைகள் என்பன முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, காலாகாலம் இற்றைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- கம்பனியின் இணையத்தளத்தினூடாக ஏதேனும் நியதிச்சட்ட அல்லது செயற்பாட்டுத் தேவைப்பாடுகளை சமரசம் செய்யாது, அதன் பங்காளிகளுக்கு ஆகக்கூடிய நிதியியல் மற்றும் நிதியல்லா தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.

பணிப்பாளர்கள் தங்களது கடமைகளைச் செயலாற்றுவதற்காக நேரகாலத்துடனான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதற்காக பின்வரும் செயன்முறைகள் காணப்படுகின்றன:

- அனைத்துப் பணிப்பாளர்களும் துல்லியமான, பொருத்தமான, நேரத்திற்கேற்ற, தெளிவான மற்றும் சமநிலையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- குழுக்கள், பணிப்பாளர்கள் சபை மற்றும் ஏனைய முக்கிய முகாமைத்துவத்திற்கிடையே தகவல்கள் பரிமாற்றத்திற்கான கம்பனியின் செயலாளர் தொடர்புகொள்ளல் புள்ளியாகச் செயற்படுகின்றார்.
- பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் உரிய பிரிவுகளின் தலைமைகள் அவர்களது சமர்ப்பிப்புகளை சபைக்கு முன்னிலைப்படுத்தி சபையினால் வேண்டப்படும் அவசியமான தெளிவாக்கல்களை வழங்குகின்றனர்.
- மேலும், கம்பனியின் நிலைபேறுள்ள முன்னெடுப்புகளுக்கு அமைவாக, அனைத்து சபைப் பத்திரங்களும் இலத்திரணியல் வடிவத்தில் கிடைக்கப் பெறுகின்றன.

சபையின் செயற்பாடுகள் வலுவான தகவல் தொழில்நுட்பத்தினால் துணையளிக்கப்படுவதுடன், இது சபையின் அங்கத்தவர்கள் அவர்களது சபை பத்திரங்களை ஒரு பாதுகாப்பான இணைப்பினூடாக அணுகுவதனையும், தொலைவிலிருந்து கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் இயலுமையாக்குகின்றது.

### சபையின் உப-குழுக்களிடம் ஒப்படைத்தல

சிறந்த ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளை நிறைவேற்றுவதற்காக விமான நிறுவனமானது சபை உப-

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை தொடர்ச்சி.

குழுக்களை நிறுவியுள்ளது. இந்தக் குழுக்கள் ஒப்படைக்கப்பட்ட குழுக்களுக்கு நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினைக் கொண்டு வரக்கூடிய பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. கடமைகள் உத்தியோகபூர்வ வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சபை உப-குழுக்களுக்கான செயலாளர் கம்பனியின் செயலாளர் ஆவார்.

வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்புக்கூறலினுள் வருகின்ற விடயங்களை கருத்திலெடுப்பதற்காகவும், கலந்துரையாடுவதற்காகவும் குழுக்கள் வழக்கமாக கூடுகின்றன. அவர்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் என்பன சபைக்கு தொடர்ந்தும் தெரிவிக்கப்படுகின்றன.

## பணிப்பாளர்களுக்கான இழப்பீடுகள்

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர்கள் என்ற அவர்களது தகுதியில் அவர்களது கடமைகளைச் செயலாற்றுவதன் விளைவாக, ஆட்படும் பொறுப்புக்கள் தொடர்பாக சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு கம்பனியிலிருந்து பணிப்பாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் மோசடியாக அல்லது நேர்மையற்று செயற்பட்டிருக்கின்றார் என்று உறுதிப்படுத்தப்பட்ட அளவிற்கு இழப்பீடுகள் எவ்வித காப்பினையும் வழங்காது. கம்பனியானது வருடம் முழுவதும் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளது பொறுப்புக் காப்புறுதியினைப் பராமரித்துள்ளது.

## தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பங்கு

தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் வேறுபட்ட பொறுப்புக்களைப் பொறுத்தளவில், மூலோபாய மற்றும் செயற்பாட்டு விடயங்களிலான வேறுபாடானது தெளிவாக நிறுவப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் சபையின் தலைவர் ஒரு நிறைவேற்று அதிகாரமற்ற நியமனம் மற்றும் அவர் மூலோபாய விடயங்களில் முன்னிறுத்தம் செய்வதுடன், வணிகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவினை மேற்பார்வை செய்கின்றார். அவர் சபையின் செயன்முறைகள் பின்பற்றப்படுவதனையும், கூட்டங்களில் அனைத்து சபை அங்கத்தவர்களும் பயனுறுதியுடன் பங்குபற்றுவதனையும் உறுதிசெய்கின்றார்.

பிரதம நிறைவேற்று அதிகாரி, வணிகத்தின் நாளாந்த முகாமைப்படுத்தலுக்கும், சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கும், குழுமத்தின் மூலோபாய மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பாளியாவார். கம்பனியின் செயற்திறன், செயற்பாட்டு விடயங்கள் மற்றும் மனித வளங்கள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களை தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரியினைச் சந்தித்து வழக்கமாக கலந்துரையாடுகின்றார்.

## உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவம்

நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையானது, நிறுவன இடர் முகாமைத்துவ வரம்புறுகை, நிதியியல் கட்டுப்பாடு, உள்ளகக் கணக்காய்வு மற்றும் துணையளிக்கும் கொள்கைகள் என்பவற்றினால் நிறுவப்பட்டுள்ளது. கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையின் நோக்கமானது, செயற்பாடுகள் வினைத்திறனானவை மற்றும் அவை மூலோபாய இலக்குகளுடன் சிறப்பாக ஒருநிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்வதற்காகும். உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையானது சரியான, நம்பகமான, பூரணமான மற்றும் நேரத்திற்கேற்ற நிதி அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் உறுதிசெய்யப்படுவதனை நோக்காகக் கொண்டதாகும். இந்த வரம்புறுகையானது, நெறிமுறையான விழுமியங்கள், சிறந்த கூட்டாண்மை ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளை அங்கீகரிக்கின்றது.

## சட்டரீதியான இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் சபையானது, விமான நிறுவனத்தின் பணியாட்கள் தொடர்பான சட்டரீதியான கொடுப்பனவுகள் அனைத்தும் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரைக்கும் திருப்தியடைகின்றார்கள்.

# தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அதன் நிறுவனப் பொறுப்புகள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் அதன் தொழிற்பாடுகளின் நிலைபெறு தன்மை என்பவற்றை அடைந்து கொள்வதற்காக ஆக்கபூர்வமான இடர்நேர்வு முகாமைத்துவம் அத்தியாவசியமானது என அங்கீகரிக்கின்றது. இயக்கவாற்றல் மிக்க விமானப் போக்குவரத்துத் தொழிற்துறையில் உட்பொதிந்துள்ள இடர்நேர்வுகளைப் புரிந்துகொண்ட விமான நிறுவனம், நிறுவனத்திற்குத் தாக்கம் செலுத்துகின்ற, சாத்தியமான இடர்நேர்வுகளை செயலூக்கத்துடன் அடையாளப்படுத்தி, அவற்றின் விளைவுகளை மதிப்பீடு செய்து, அதன் தொழிற்பாடுகளுக்கான இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு உபாயங்களை வகுக்கும் விதத்தில் கம்பனிக்கு சக்தியளிக்கின்ற அனைத்து தொழிற்பிரிவுகளையும் உள்ளடக்குகின்ற கட்டமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றினைத் தாபித்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது, அங்கீகரிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத் தரநியமங்களுடனும், தொழிற்துறை தேவைப்பாடுகளுடனும் அணிசேர்த்து மிகக் கவனமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டு, உயர்மட்ட மேற்பாவை மற்றும் ஆளுகைக்கான நிறுவனத்தின் கடமைப் பொறுப்பினைப் பிரதிபலிக்கின்றது.

### இடர் ஆளுகை

குழுவின் இடர்நோக்கு மேற்பார்வைக்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். சபை துணைக்குழுவான இடர்நோக்கு குழுவிடம் கம்பனியின் வியாபாரத் தொழிற்பாடுகள் மீதும், அதன் துணை நிறுவனம் மீதும் தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய இடர்நோக்குகளை அடையாளம் கண்டு, மதிப்பீடு செய்வதற்கும், நிதிசார் மற்றும் நிதிசாரா இரு வகையான அத்தகைய இடர் நேர்வுகளின் தாக்கத்தினைக் கணிப்பிடுவதற்கும், சபையிடம் இருந்து அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சபை இடர்நோக்குக் குழுவின் கவனம் மிக்க கரிசனைகள், தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற இடர்நேர்வுகளின் தாக்கத்தினைக் கையாள்வதற்கும் ஏதேனும் பாதகமான தாக்கத்தினைத் தணிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பணிப்பாளர் சபைக்கு வசதியளிக்கின்றது.

இடர்நோக்கு முகாமைத்துவத்தில் உபாயரீதியான பணிப்புரையினை பிரதம நிறைவேற்று அதிகாரி வழங்குவதுடன், நிறுவனசார் தீர்மானம் மேற்கொள்ளலானது, இடர்நேர்வுகள் பற்றிய திட்டவட்டமான கரிசனையையும், இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்பாடுகளின் பிரயோகத்தினையும் ஈடுபடுத்துகின்றது என்பதனை உறுதி செய்கின்றார்.

நிதியியல் ஆண்டு முடிவடைந்த பின்னர், சிறந்த நிறுவன ஆளுகை நடைமுறைகளுக்கு அமைவாக, நிறுவனத்தின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் அபிவிருத்தியினையும், நடைமுறைப்படுத்தலையும் கையாள்வதற்கு, நிறுவனத்தின் இடர்நேர்வு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இடர்நேர்வு அலுவலரின் முதன்மைப் பொறுப்புகள், சாத்தியமான அச்சுறுத்தல்களை அடையாளப்படுத்தல் மற்றும் முன்கூட்டிய மற்றும் தணிக்கத்தக்க உபாயங்களை வகுத்தல் என்பன மூலம், குழுமம் முழுவதுமான இடர்நேர்வுகள் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய முகாமைத்துவத்தை உறுதி செய்வதை உள்ளடக்குகின்றது. குழுமத்தினுள் வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதில் இடர்நேர்வு அலுவலர் இன்றியமையாத பங்குவகித்து முகாமைத்துவ அணியுடனான ஒத்துழைப்பினை அவசியப்படுத்தி, இடர்நோக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்திறன் வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கு, அனைத்து திணைக்களங்களுக்கு இடையிலும் முன்னெடுக்கப்படுகின்ற ஆதரவினை வழங்குகின்றது.

தொழிற்பிரிவுகளின் உரிய இடர்நேர்வுத் தொகுப்புகளை சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மீளாய்வு செய்வதுடன், இவ்விடர்நேர்வுகளை செயன்திறன் வாய்ந்த விதத்தில் முகாமைத்துவம் செய்வதற்கான உபாயங்களை வகுக்கின்றது. அவர்களது மேற்பார்வையின் கீழ் வருகின்ற இடர்நேர்வுகளை இனங்கண்டு, அவர்களின் முகாமைத்துவத்திற்கான நடவடிக்கைத் திட்டங்களை உருவாக்கும் பொறுப்பை திணைக்கள, பிரிவுசார் முகாமையாளர்கள் கொண்டுள்ளனர்.

குழுவின் உள்ளகக் கணக்காய்வானது, சுயாதீன மற்றும் புறநிலைசார் உத்தரவாதத்தை வழங்குவதுடன், குழுவின் இடர்நோக்கு முகாமைத்துவ நடத்தைகள் பற்றிய செயற்திறன் வாய்ந்த தன்மையினை உறுதி செய்து சபைக்கு ஆலோசனை வழங்குகின்றது.

### இடர் ஆளுகைக் கட்டமைப்பு



# தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்ச்சி.

## இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையானது, இடர்நேர்வு அடையாளப்படுத்தல், இடர்நேர்வு பகுப்பாய்வு, இடர்நேர்வு பரிகாரம், இடர்நேர்வு அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இடர்நேர்வுகளை இனங்கண்டு, அளவீடு செய்து, முகாமை செய்து, அறிக்கையிடும் பொறுப்பு தொழிற்பிரிவுகளிடம் காணப்படுகின்றது. இனங்காணப்பட்ட இடர்நேர்வுகள் நிகழக்கூடிய வாய்ப்பினதும், அதன் தாக்கத்தினதும் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன், இடர்நேர்வு புள்ளியிடலுக்கு அமைவாக, முக்கியமானது, உயர்வானது, நடுத்தரமானது அல்லது குறைவானதாகத் தரப்படுத்தப்படுத்தப்படுகின்றது.




இடர்நேர்வு தரப்படுத்தல் மற்றும் இடர்நேர்வு புள்ளியிடல் என்பவற்றின் அடிப்படையில் நடவடிக்கைத் திட்டங்கள் வகுக்கப்படுகின்ற அதேவேளை, முக்கிய இடர்நேர்வுகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை பிரதம நிறைவேற்று அதிகாரி / இடர்நேர்வு அலுவலர் / தொடர்புடைய சிரேஷ்ட முகாமைத்துவக்குழு உறுப்பினர் மீளாய்வு செய்கின்றார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இடர்நேர்வுகளை மத்திய மயப்படுத்தப்பட்ட தரவுத் தளம் ஒன்றில் பதிவு செய்வதுடன், இவை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் தொழிற்பிரிவுகளின் இடர்நேர்வு உரிமையாளர்கள் மூலம் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன.

## இடர்நேர்வு தோற்ற அமைப்பு

இயக்கவாற்றல் மிக்க வியாபாரத் தோற்ற அமைப்பில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், 2023/24 நிதியாண்டு முழுவதும் பல எண்ணிக்கையான இடாநேர்வுகளை எதிர்கொண்டது. உலகளாவிய விமானத் தொழிற்துறையினுள்ளும் அதேபோன்ற இலங்கையின் பொருளாதார நிச்சயமின்மையுடனும் விமான நிறுவனம் பேரண்டப் பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள் மூலம் கணிசமான தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தது. விசேடமாக, உகப்பான வலையமைப்பு தொழிற்பாடுகளுக்குத் துணையளிப்பதற்கு விமானங்கள் போதாமை, வழங்கல் சங்கிலி முட்டுக்கட்டைகள், தேர்ச்சி பெற்ற ஊழியர்களின் உயர்வான புரள்வு மற்றும் காசுப்பாய்ச்சல் பிரச்சினைகள் என்பன காரணமாக, விமான நிறுவனம் இயலளவு தடைகளுடன் போராடியது.

இவ்வாண்டில் வானூர்திகளின் குத்தகை முடிவில் அவற்றை மாற்றீடு செய்வதில் தாமதங்கள், இயந்திரப் பிரச்சினைகள் மற்றும் நீண்ட பராமரித்தல் இலக்குகள் என்பன உள்ளடங்கலாக அதன் சிக்கன விமானப் பயண அட்டவணைகளைப் பாதித்த கணிசமான தொழிற்பாட்டுச் சவால்களை கம்பனி எதிர்கொண்டது. இவையனைத்தும், வருமானம் ஈட்டலையும், நிலையான செலவுகளை மீட்பதிலும், நற்பெயரிலும் பாதகமாக தாக்கம் செலுத்தின.

வழங்கல் சங்கிலி இடையூறுகள், தொழிலாளர் பற்றாக்குறைகள் மற்றும் அதிகரித்த கோரிக்கைகள் காரணமாக, உலகளாவிய வானூர்த்தி மற்றும் இயந்திரத் தயாரிப்பாளர்கள் அத்துடன், விநியோகத்துறை என்பன குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டன. புவிசார் அரசியல் பதற்றங்களும், கண்டிப்பான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடும் உற்பத்திக் கால வரையறைகளையும், செலவுகளையும் மேலும் சிக்கலாக்கின. இதற்குப் புறம்பாக, விமானத் தொழிற்துறையினுள் நிதிசார்ந்த தடைகள் இச்சிக்கல்களைத் தீவிரப்படுத்தி, ஒட்டுமொத்த சேவை வழங்கல் அட்டவணைகளையும் பாதித்தன. இச்சிக்கல்கள் கம்பனி மூலம் வானூர்த்திகள் மாற்றீடு செய்யப்படுவதில் இலங்கையில் பொருளாதார நிச்சயமின்மை மூலம் மேலும் தீவிரமடைந்தது.

தேர்ச்சிபெற்ற ஊழியர்களுக்கான தீவிரமடைந்த உலகளாவிய கேள்வி அத்துடன், பொருளாதார புலம்பெயர்தலில் புதிய அதிகரிப்பு என்பன தேர்ச்சிபெற்ற தொழிற்படையினை குறிப்பாக, விமானத்துறை மற்றும் தொழில்சார் வகைகளில் தக்க வைப்பதற்கும், தீர்ப்பதற்குமான நிறுவனத்தின் இயலுமையினை குறிப்பிடத்தக்களவு பாதித்தன. வானூர்தி பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் பற்றாக்குறை திட்டமிடப்பட்ட மற்றும் தேவைக்கேற்றவாறான இரு அடிப்படையில் வானூர்த்தி பராமரிப்பினை நிறைவேற்றுவதை மோசமாகப் பாதித்த கம்பனியின் வெளியிடப்பட்ட அட்டவணைத் தொழிற்பாடுகளை நேரடியாகப் பாதித்தன.

நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் நிலைமை, விமானப்பயண இடையூறுகள் அதேபோன்று, வானூர்த்தி அத்துடன், இயந்திரம் தொடர்புடைய செலவுகள் மீது இழப்புகளின் தாக்கத்தின் பிரதான காரணமாக கணிசமாகச் சீர்குலைந்தன. இதனை தணிக்கும் பொருட்டு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸினை நிதியியல் ரீதியான நிலைபெறத்தக்க நிறுவனமாக மாறுதலடையச் செய்வதை உறுதி செய்வதற்கு தனியார் மயப்படுத்தலை அரசாங்கம் நாடுகின்றது.

நிதிக் கூற்றுக்கள்


பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை / 50
சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை / 54
பணிப்பாளர்களின் பொறுப்புக்களின் கூற்று / 55
சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை / 56
நிதி நிலைமை அறிக்கை / 60
இலாபம் அல்லது நட்டக் கூற்று / 61
விரிவான வருமானக் கூற்று / 62
உரிமை மாற்றல் கூற்று / 63
காசுப் பாய்ச்சல் கூற்று / 64
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் / 65


உண்மையான இலங்கை வரவேற்பு, கவனிப்பு மற்றும் உபசரணையுடன்

# எமது எதிர்காலத்தைத் திசைப்படுத்துகின்றோம்



# பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ ின் பணிப்பாளர்கள் சபையானது, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

## பிரதான நடவடிக்கைகளும் வர்த்தக மீளாய்வும்

கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கைகள், பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக சர்வதேச, அட்டவணைப்படுத்தப்பட்ட / அட்டவணைப்படுத்தப்படாத விமானச் சேவைகளை செயற்படுத்துதல் மற்றும் சரக்கு மற்றும் அஞ்சல் என்பவற்றை எடுத்துச்செல்வதற்கு இலங்கையின் குறிப்பிடப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.நி) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி) என்பவற்றில் வான் முனைச் சேவைகளையும், விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் விடுமுறைத் தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன கம்பனியின் ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாந் தரப்பு விமானங்களுக்கு பராமரிப்புச் சேவைகளை வழங்குதல், விமான செயற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் மற்றும் வான்வழி தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும். நிதியாண்டில் கம்பனியின் நடவடிக்கைகளின் தன்மையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் காணப்படவில்லை. குழுமம் என்பது, கம்பனியினையும், முழுவதும் உரித்துடைமையினைக் கொண்ட அதன் துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தினையும் உள்ளடக்குகின்றது. கேட்டரிங்கின் பிரதான நடவடிக்கை என்னவெனில், ப.ச.வி.நி மற்றும் ம.ரா.ச.வி.நி ஊடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு, விமானத்தினுள்ளான உணவக வசதிகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகள் பொது மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான உணவகங்களை செயற்படுத்துதல் மற்றும் சலவை செய்யும் சேவைகளை வழங்குதல் மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றினை முகாமைப்படுத்தல் என்பனவாகும்.

## நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை

குழும பிரதம நிதியியல் உத்தியோகத்தர் மற்றும் இரண்டு பணிப்பாளர்களினால் உரியவாறு கையொப்பமிடப்பட்ட 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறைவான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான கணக்காய்வாளர்களது அறிக்கை என்பவை இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 65 முதல் 114 வரையான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

## குழுமத்தின் புரள்வு

குழுமத்தின் புரள்வானது, ரூபா 339,592 மில்லியன் ஆக (2022/23 : ரூபா 369,470 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் புரள்விலான விரிவான பகுப்பாய்வானது, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 20 இல் வழங்கப்பட்டுள்ளது. கம்பனி மற்றும் அதன் முழு உரித்துவத்தையுடைய துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளில் நடாத்தப்பட்டன.

## விளைவுகள்

குழுமத்தின் வருடத்திற்கான வரிக்குப் பிந்திய தேறிய இலாபமானது ரூபா 7,925 மில்லியன் ஆகும் (2022/23: ரூபா 71,307 மில்லியன் நட்டம்). குழுமத்தின் வரிச் செலவினமாக ரூபா 482 மில்லியன் காணப்பட்டது (2022/23: ரூபா 1,360 மில்லியன்). வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்றானது பக்கம் 61 இல் வழங்கப்பட்டுள்ளது.

## குழுமத்தின் முதலீடுகள்

இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிலான குழுமத்தின் மூலதனச் செலவினமாக ரூபா 1,693 மில்லியன் காணப்பட்டது (2022/23: ரூபா 1,309 மில்லியன்).

## ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

அறிக்கையிடும் திகதியிலான குழுமத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் தேறிய புத்தகப் பெறுமதி ரூபா 11,582 மில்லியன் ஆகும். (2022/23: ரூபா 11,460 மில்லியன்).

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அவற்றின் அசைவுகள் என்பன நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இல் வழங்கப்பட்டுள்ளன.

## கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 203,860,665,500 ஆகும். 2024 ஜூன் 25 அன்று நடைபெற்ற EGM இல், 50 மில்லியன் சாதாரண பங்குகளை ரூபா 100 என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கத்திற்கு ஒதுக்கியதன் மூலம், நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் 198,860,665,500 ‘ரூபாயில் இருந்து 203,860,665,500 ‘ரூபாயாக உயர்த்தப்பட்டது.

## ஒதுக்கங்கள்

2024 மார்ச் 31 இல் மொத்த திரண்ட நட்டம் எதிர்மறையான ரூபா 592,627 மில்லியன் (2022/23: எதிர்மறை ரூபா 599,606 மில்லியன்) ஆகும்.

மூலதன ஒதுக்கங்களாக ரூபா 8,542 மில்லியன் (2022/23: ரூபா 8,851 மில்லியன்) காணப்பட்டன. இந்த ஒதுக்கங்களிலான அசைவுகள் நிதிக் கூற்றுக்களில் உரித்துவத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## கூட்டாண்மை நன்கொடைகள்

இவ்வாண்டில் குழுமமானது எவ்விதமான நன்கொடையினையும் மேற்கொள்ளவில்லை.

## வரி விதிப்பு

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் 2018 ஏப்ரல் 01 முதல் கம்பனியானது, அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் வருமான வரிக்கு பொறுப்பாயுள்ளது. இரட்டை வரி ஒப்பந்தங்கள் தற்போது காணப்படாத நாடுகளிலுள்ள வெளிநாட்டுச் செயற்பாடுகளில் கம்பனி வரிக்கு பொறுப்பாளியாகும்.

முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் பிரகாரம், விமானச் சமையலறை மற்றும் இடங்கடப்பு உணவகத்திலிருந்தான வருமானமானது 2021 மே 31 வரைக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பட்டதுடன் அதன் பின்னர் 2029 மே 31 வரைக்கும் 08 வருடங்களுக்கு சலுகையான 15% இல் வரி விதிக்கப்படும். ஏனைய மூலங்களில் இருந்தான வருமானமானது வழமையான வீதத்தில் வரிக்கு பொறுப்பாளியாகும்.

### பங்குத் தகவல்கள்

2024 மார்ச் 31 இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் பின்வருமாறு:

| பங்கு உரித்துடைமை | பங்குகளின் எண்ணிக்கை | உரித்துடைமை % |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 1,984,006,469 | 99.77% |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,863,676 | 0.09% |
| ஏனைய | 2,736,510 | 0.14% |

### சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

கம்பனி அனைத்து நேரங்களிலும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதி செய்கின்றது. இணக்கப்பாட்டிற்கு பொறுப்பான முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் கணக்காய்வுக் குழுவின் காலாண்டுக் கூட்டங்களில் இணக்கப்பாட்டு அறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றனர்.

### தொடர்புடைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புடைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### எதிர்பாராப் பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

2024 மார்ச் 31 இல் உள்ளவாறான எதிர்பாராப் பொறுப்புக்கள் மற்றும் அதே திகதியிலான மூலதனச் செலவினங்களில் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 25 இல் வழங்கப்பட்டுள்ளன.

### அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 27 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர, செம்மையாக்கல் அல்லது வெளிப்படுத்துவதற்கு தேவையான எவ்விதமான சூழலும் அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் எழவில்லை.

### மனித வளம் / பணிக்கமர்த்தல் கொள்கைகள்

கம்பனியானது தொடர்ந்தும் மனித மூலதன அபிவிருத்தியில் முதலீடு செய்வதுடன், புதிய வணிக முன்னுரிமைகளுடன் சீரமைப்பட்ட பயனுறுதிமிக்க சேவையினை அமுல்படுத்துகின்றது. இது கம்பனியின் எதிர்கால வெற்றிக்கு தேவையான திறன் மற்றும் அறிவினை அதன் பணியாட்கள் விருத்தி செய்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தவும் செய்கின்றது. குழுமத்தின் பணிக்கமர்த்தல் கொள்கைகள் தனிநபருக்கு மதிப்பளிப்பதுடன், பால், இனம் அல்லது மதத்தினைப் பொருட்படுத்தாத சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. தொழில் ரீதியான சுகாதார மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமானளவு அவதானத்தினைப் பெறுகின்றது. வருடத்தின் இறுதியில் கம்பனியினால் பணிக்கமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 5,935 ஆகும் (2022/23: 5,440) என்பதுடன், அதன் துணை நிறுவனத்தில் இது 713 ஆகக் (2022/23 - 808) காணப்பட்டது.

### நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், தங்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய, பணியாட்கள் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் இத்திகதி வரைக்கும் செலுத்தப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

### சூழல் பாதுகாப்பு

குழுமத்தின் வணிக நடவடிக்கைகள், சூழலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் விளைவுகளை ஏற்படுத்தலாம். சூழலிலான மோசமான விளைவுகளை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதுடன், பொருத்தமான அதிகார சபைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒத்துழைப்பு மற்றும் இணக்கப்பாட்டினை ஊக்குவித்தல் என்பன குழுமத்தின் கொள்கையாகும்.

### நிறுவனத்தின் தொடர்ச்சியான செயல்நிலை

பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கம்பனியின் 2023/24 ஆம் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், நிறுவனம் மீள் கட்டமைக்கப்படும் வரைக்கும், அவசியமாயின் இலங்கை அரசாங்கமானது நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்ற திறைசேரி/நிதியமைச்சு, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகளது அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் பணிப்பாளர்கள் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையினைக் கடைப்பிடித்துள்ளார்கள்.

### பணிப்பாளர்கள் சபை

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 79 ஆம் உறுப்புரைக்கமைய, பணிப்பாளர்கள் திறைசேரியின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்றார்கள். தற்போதைய பணிப்பாளர்களது தோற்றுருவத்தின் சுருக்கமானது ஆண்டறிக்கையின் பக்கங்கள் 16 இலிருந்து 19 வரையான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

நிதியாண்டின்போது பன்னிரெண்டு சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டதுடன், இவற்றில் பணிப்பாளர்களின் சமூகமளிப்பு பின்வருமாறு அமைந்திருந்தது.

| நிதியாண்டு 2023/24 இல் பணிப்பாளர்களின் பெயர்கள் | பணிப்பாளர் பதவிக்காலத்தில் சமூகமளித்த சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. அசோக பத்திரகே (தலைவர்) | 12/12 |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து | 09/12 |
| கலாநிதி ஸ்ரீதர் சாரிபுத்த ஹன்ச விஜயசூரிய | 10/12 |
| திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா | 12/12 |
| திரு. ஆனந்த விஜேதிலக அத்துகோரல | 12/12 |
| திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர/ திறைசேரியின் பிரதிநிதி | 12/12 |
| திரு. ஏ.எம்.ஏ.ஏ.லக்மால் ரத்நாயக்க | 10/12 |
| திரு. டீ.டீ.ஷிரான் சமிந்த தம்மகே (2023 மே 04 இல் நியமிக்கப்பட்டு 2024 மே 31 இல் பதவி விலகினார்) | 08/12 |

*திரு. பிராங்க் நிரஞ்சன் அருள்பிரகாசம் 2024 ஜூன் 11 இல் நியமிக்கப்பட்டார்.

# பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை தொடர்ச்சி.

### கணக்காய்வுக் குழு அங்கத்தவர்கள்

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகும்.

| குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2023/24 | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா | 8/8 |
| திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர/ திறைசேரியின் பிரதிநிதி (2023 மார்ச் 16 முதல் நியமிக்கப்பட்டார்). | 7/8 |
| திரு. டீ.டீ.ஷிரான் சமிந்த தம்மகே (2023 மே 26 அன்று குழுவுக்கு நியமிக்கப்பட்டு, 2024 மே 31 இல் பதவி விலகினார். மேலும் அவர், குழுவின் தலைவராக பணியாற்றுகிறார்.) | 2/8 |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து (2024 ஜீன் 25 இல் பதவி விலகினார்) | 4/8 |
| கலாநிதி ஸ்ரீதர் சாரிபுத்த ஹன்ச விஜயசூரிய (2024 ஜீன் 25 இல் பதவி விலகினார்) | 6/8 |

* திரு. ஆனந்த விஜேதிலக அத்துகோரல 2024 ஜீன் 25 முதல் நியமிக்கப்பட்டார்
* திரு. பிராங்க் நிரஞ்சன் அருள்பிரகாசம் 2024 ஜுன் 25 இல் முதல் நியமிக்கப்பட்டார்

கணக்காய்வுக் குழுவின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் 54 வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு

ஓர் ஊதியக் கொள்கையின் அபிவிருத்தி மற்றும் ஊதியக் கட்டமைப்பினது நிறுவுதல் என்பவற்றுக்கு முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையான செயல்முறையினை நிறுவுவதற்கு தலைமை தாங்குவதே மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் பிரதான குறிக்கோளாகும்.

ஓர் ஊதியக் கொள்கையானது, சந்தை மற்றும் துறைசார் காரணிகள் மற்றும் குழுமத்திற்கான தனிப்பட்ட செயற்திறன் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவானது தேவையானபோது கூடுகின்றது.

மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவானது, சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

| குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2023/24 | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. மலிக் ஜே. பர்னாந்து - தலைவர் | 4/6 |
| கலாநிதி ஸ்ரீதர் சாரிபுத்த ஹன்ச விஜயசூரிய | 4/6 |
| திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா | 6/6 |
| திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர (2023 மே 26 இல் நியமிக்கப்பட்டார்) | 5/6 |
| திரு. ஏ.எம்.ஏ.ஏ.லக்மால் ரத்நாயக்க | 5/6 |

### சபையின் குழும இடர் குழு (BGRC)

சபையின் குழும இடர் குழுவானது, நிறுவனத்தின் வணிகச் செயற்பாடுகளில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல், நிதி மற்றும் நிதியல்லாத அத்தகைய இடர்களின் தாக்கத்தினை அளவிடுதல் என்பவற்றை மேற்கொள்ளல் வேண்டும். சபையின் குழும இடர் குழுவின் ஆழ்ந்தாராய்வுகள் நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பாதிக்கும் இடர்களின் தாக்கத்தினை பணிப்பாளர்கள் சபையானது விளித்துரைப்பதற்கும், ஏதேனும் பாதகமான தாக்கத்தினைத் தணிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் வசதியளித்தல் வேண்டும்.

சபையின் குழும இடர் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

| குழுவின் அங்கத்தவர்கள் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா - தலைவர் | 4/4 |
| கலாநிதி ஸ்ரீதர் சாரிபுத்த ஹன்ச விஜயசூரிய | 1/4 |
| திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர | 2/4 |
| திரு. ஆனந்த விஜேதிலக அத்துகோரல | 2/4 |
| திரு. டீ.டீ.ஷிரான் சமிந்த தம்மகே (2024 மே 31 இல் பதவி விலகினார்) | 3/4 |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து (2024 ஜீன் 25 இல் பதவி விலகினார்) | 2/4 |

* திரு. பிராங்க் நிரஞ்சன் அருள்பிரகாசம் 2024 ஜுன் 25 இல் முதல் நியமிக்கப்பட்டார்

### பணிப்பாளர்கள் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர்கள் சபை:

| |
|---|
| திரு. அசோக பத்திரகே |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து |
| திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா |
| திரு. ஆனந்த விஜேதிலக அத்துகோரல |
| திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர |
| திரு. ஏ.எம்.ஏ.ஏ.லக்மால் ரத்நாயக்க (2023 ஏப்ரல் 10 இல் நியமிக்கப்பட்டார்). |

* திரு. டீ.டீ.ஷிரான் சமிந்த தம்மகே (2024 மே 31 இல் பதவி விலகினார்)

### பணிப்பாளர்களின் ஊதியங்கள்

நிதியாண்டில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 3.2 மில்லியன் ஆகும்.

### பணிப்பாளர்களின் பங்குரித்துவங்கள்

இலங்கை அரசாங்கத்தினால் பெயரிடப்பட்ட பணிப்பாளர்கள் என்ற காரணத்தினால், திரு. ஏ.கே. பத்திரகே - தலைவர் அவர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளார்.

### நலன்கள் பதிவு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி நலன்கள் பதிவினை பராமரித்து வருகின்றது. கம்பனியின் அனைத்து பணிப்பாளர்களும் ஏனைய கம்பனிகளிலான தங்களது நலன்களை சபைக்கு வெளிப்படுத்தியுள்ளதுடன், அந்த நலன்கள் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 192(1) மற்றும் 192(2) க்கு அமைவாக பணிப்பாளர்களின் நலன்கள் இடாப்பில் பதியப்பட்டுள்ளன.

### ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நலன்கள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, கம்பனியின் வர்த்தகம் தொடர்பான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் எவ்வித நேரடி அல்லது மறைமுக நலன்களையும் கொண்டிருக்கவில்லை.

### ஆண்டுப் பொதுக் கூட்டம்

கம்பனியின் நாற்பத்து ஆறாவது ஆண்டுப் பொதுக் கூட்டம், 2024 செப்டம்பர் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, இலங்கை, கொழும்பு 7, பௌத்தாலோக்க மாவத்தை, 'மிஹிலக்க மெதுர' பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இடம்பெறும்.

ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல், ஆண்டறிக்கையின் 127 வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கணக்காய்வாளர்கள்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்பு 154(1) க்கு அமைய, கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் கம்பனியின் கணக்காய்வாளர்களாக இத்தால் நியமிக்கப்படுகின்றார். கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 22 இல் விளக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர்களுக்கு கம்பனியுடனோ அல்லது அதன் துணை நிறுவனத்துடனோ (கணக்காய்வாளர் தவிர்ந்த) எவ்விதமான தொடர்புகளும் இல்லை.

பணிப்பாளர்கள் சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது.

**அசோக பத்திரகே**
*தலைவர்*

**ஜயந்த் பெரேரா**
*பணிப்பாளர்*

**திருமதி டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனியின் செயலாளர்/கூட்டாண்மை செயலக சேவைகளின் குழுமத் தலைவர்*

2024 ஆகஸ்ட் 20
கட்டுநாயக்க

# சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை

### வகிபாகமும் பொறுப்புக்களும்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சபைக் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லையும், பொறுப்புக்களும், பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட சபைக் கணக்காய்வுக் குழு ஸ்தாபனத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. சபைக் கணக்காய்வுக் குழுவின் நோக்கம், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, நிதியியல் அறிக்கையிடல் முறைமை, இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறை, உள்ளகக் கணக்காய்வு மற்றும் வெளிவாரிக் கணக்காய்வும் தொழிற்பாடுகள் அத்துடன், சட்டங்களுடனும் ஒழுங்குவிதிகளுடனும் இணங்குவித்தலைக் கண்காணிப்பதற்கான செயன்முறை என்பன பற்றிய சுயாதீன மீளாய்வு ஒன்றினை வழங்குவதன் மூலம் அதன் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபைக்கு உதவுவதாகும்.

### குழுவின் உள்ளமைப்பு

2024 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது, சபைக் கணக்காய்வுக் குழுவில் பணியாற்றிய சபை உறுப்பினர்களாக திரு. ஷிரான் தம்மகே (தலைவர், 2023 மே 26 அன்று நியமிக்கப்பட்டு, 2024 மே 31 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பதவி விலகினார்) திரு. ஜயந்த் பெரேரா (உறுப்பினர், 2024 மே 31 அன்று அப்போதைய தலைவராக நியமிக்கப்பட்டார்) திரு. மலிக் பர்னாந்து (உறுப்பினர்), கலாநிதி ஹன்ச விஜேசூரிய (உறுப்பினர்), திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தர (உறுப்பினர்) ஆகியோர் காணப்பட்டனர்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வுக் கண்காணிப்பாளர் செல்வி சுரங்கி குணதிலக, சுயாதீன அவதானிப்பாளராக கணக்காய்வுக் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பார்.

### கூட்டங்கள்

சபைக் கணக்காய்வுக் குழு 2024 மார் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக் காலப்பகுதியில் எட்டுக் (08) கூட்டங்களை நடத்தியது. குறிப்பான பிரச்சினைகள் பற்றி சபைக் கணக்காய்வுக் குழுவுக்கு விளக்கமளிப்பதற்காக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முகாமைத்துவப் பிரதிநிதிகள் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்குச் சமூகமளித்தனர்.

### குழு உத்தரவாதமும் ஆலோசனைச் சேவைகள் பிரிவும்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் குழு உத்தரவாதம் மற்றும் ஆலோசனை சேவைகள் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுகளை நடத்தி, சபைக் கணக்காய்வுக் குழுவுக்கு தொழிற்பாட்டு ரீதியாக அறிக்கையிடுகின்றது.

### நிதியாண்டுக் காலப்பகுதியில் சபைக் கணக்காய்வுக் குழுவின் முக்கிய நடவடிக்கைகள்

- ஆண்டிறுதிக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை மீளாய்வு செய்து சபை அனுமதிக்காகப் பரிந்துரை செய்தது.
- அதன் அறிக்கையிடும் கடப்பாடுகளின் சுயாதீனத்தினையும், அதிகாரத்தினையும் உறுதி செய்வதற்கு, உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டினை மீளாய்வு செய்தது.
- உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்து அனுமதியளித்தது.
- உள்ளகக் கணக்காய்வு சாசனத்தையும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கணக்காய்வுக்குழு சாசனத்தையும் மீளாய்வு செய்து, சபையின் அனுமதிக்காகப் பரிந்துரை செய்தது.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்து, திணைக்களத் தலைவர்கள் மூலம் எடுக்கப்பட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளைக் கண்காணித்தது.
- தொடர்புடைய அனைத்துச் சட்டங்களும், ஒழுங்குவிதிகளும் இணங்கியொழுகப்படுகின்றன என்பதனை நிர்ணயிப்பதற்கு கம்பனியின் காலாண்டு இணங்குவித்தல் செயற்பாட்டு அங்கங்களை மீளாய்வு செய்தது.
- தகவல் பாதுகாப்பு ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான தகவல் தொழில்நுட்ப இணங்குவித்தலை மீளாய்வு செய்தல்.
- தொழிற்பாட்டு ∴ வர்த்தகக் காரணங்களின் விளைவாக வழங்கப்பட்ட தள்ளுபடி அனுமதியை மீளாய்வு செய்தது.
- தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்தது.
- கடன்படுநர் வயதுப் பகுப்பாய்வை காலமுறையாக மீளாய்வு செய்தல்.
- திருத்தப்பட்ட வருவாய் ஈட்டும் ஒப்பந்தக் கையேட்டினை மீளாய்வு செய்தது.

**திரு. ஜயந்த் பெரேரா**
*அப்போதைய தலைவர்*

சபைக் கணக்காய்வுக் குழு
2024 ஜுன் 27

# பணிப்பாளர்களின் பொறுப்புக்களின் கூற்று

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள், கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களிலிருந்து வேறுபடுவதுடன், இவை 57 வது பக்கத்தில் காணப்படும் அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமானது, பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டுமென்பதுடன், இவை உண்மையான மற்றும் நியாயமான பார்வையினை வழங்கும் கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதியாண்டின் இறுதியிலான விடயங்களின் நிலைமை மற்றும் நிதியாண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் இலாப நட்டக் கணக்கினையும் உள்ளடக்குதல் வேண்டும். நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு, தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டிருத்தல், நியாயமான மற்றும் விவேகமான நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனம், கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் நிலைமையின் நியாயமான துல்லியத்தன்மையினை வெளிப்படுத்துவதற்கு போதுமான கணக்கீட்டு ஆவணங்கள் வைத்திருக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் வேண்டப்படும் தகவல்களை வழங்குகின்றது எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். இவர்கள் குழுமத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நியாயமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் அதேபோன்று மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளைத் தடுக்கும் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறைகளை நிறுவுவதற்கு முறையான கவனத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கம்பனியின் செற்பாட்டு மற்றும் நிதியியல் நிலைமையினைப் பலப்படுத்தும் நோக்கில், கம்பனியினை மறுசீரமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளைக் கருத்திற்கொண்டு, வங்கி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஆறுதல் கடிதங்களை வழங்குவதன் மூலம், கம்பனிக்கு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் உறுதுணையளிப்பதனைக் கவனத்திலெடுத்ததன் பின்னர், நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, பணிப்பாளர்கள் "நிறுவனத் தொடர்ச்சி நிலையினை" தொடர்ந்தும் கடைப்பிடித்தனர். மேலும், இலங்கை அரசாங்கமானது, 2024 ஏப்ரல் 25 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் (மற்றும் திறைசேரி செயலாளரினால் 2024 ஜுலை 11 இல் வழங்கப்பட்ட கடிதம்) நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 2.1.1 இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்பு செயல்முறையானது, நிறைவுசெய்யும் வரை கம்பனி அதன் செயற்பாட்டினை "நிறுவனத் தொடர்ச்சி நிலையில்" தொடர்வதற்கு தேவையான நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.

நிதிக் கூற்றுக்களில் அபிப்பிராயத்தினை உருவாக்குவதினை இயலுமையாக்குவதற்கு உகந்தது எனக் கருதும் ஏதேனும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர்களுக்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கேற்ப, அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன அல்லது நிதிக் கூற்றுக்களில் போதுமானளவு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்கின்றனர்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

**திருமதி. டெல்ரீன் திருக்குமார்**
*கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைமை/கம்பனியின் செயலாளர்*

2024 ஆகஸ்ட் 20

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. AAV/B/SLAL/FA/2023/18 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 08 August 2024

**தலைவர்**
**ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்**

**2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன் லிமிட்டட் மற்றும் அதன் துணைநிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை.**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் ("கம்பனி") மற்றும் அதன் துணை நிறுவனத்தினது ("குழுமம்") 2024 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பொது நடைமுறையிலுள்ள ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் எனக்கு துணையளிக்கப்பட்டது.

கம்பனியின் மற்றும் குழுமத்தின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும், நியாயமானதுமான கருத்தினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய (SLAuSs) மேற்கொண்டுள்ளேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 விடயத்தின் அழுத்தம்

**(அ) நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றதன்மை**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.1 ஆனது, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது குழுமம் தேறிய இலாபமாக ரூபா 7,925.01 மில்லியனையும் (2023 இல் நட்டம் - ரூபா 71,306.66 மில்லியன்), திரண்ட நட்டமாக 592,626.52 மில்லியனையும் (2023 - ரூ. 599,605.96 மில்லியன்) கொண்டிருந்ததுடன், அத்திகதியில் குழுமத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறை சொத்துக்களை ரூ. 327,144.66 மில்லியனால் விஞ்சியிருந்தது. (2023 - ரூ. 418,568.67 மில்லியன்). அறிக்கைத் திகதியின்படி குழுமத்தின் மொத்த உரிமை மூலதனம் எதிர்மறையான ரூபா 381,723.67 மில்லியன் (2023 - எதிர்மறை ரூபா 494,429.99 மில்லியன்) ஆகும். மேலும், நிறுவனம் 2024 மார்ச் 31 இல் ரூபா 607,613.60 மில்லியன் (2023 - ரூபா 610,487.76 மில்லியன்) திரண்ட நட்டம் மற்றும் ரூபா 3,870.86 மில்லியன் நிகர இலாபத்தைப் (2023 இல் நட்டம் ரூபா 73,621.53 மில்லியன்) பதிவுசெய்தது. அன்றைய திகதியின்படி, நிறுவனத்தின் தற்போதைய பொறுப்புகள் அதன் தற்போதைய சொத்துக்களை ரூபா 344,130.60 மில்லியன் (2023 - ரூபா 431,624.55 மில்லியன்) தாண்டிவிட்டதோடு, அறிக்கைத் திகதியின்படி நிறுவனத்தின் மொத்த உரிமை மூலதனம் எதிர்மறையான ரூபா 400,534.71 மில்லியனாகக் (2023 -

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

எதிர்மறை ரூபா 509,174.88 மில்லியன்) காட்டிது.

குறிப்பு 2.1.1 இல் குறிப்பிட்டுள்ளவாறு, ஏனைய விடயங்களுடன் அத்தகைய நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் இருப்புரிமையானது ஒரு நிறுவனத் தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின்/கம்பனியின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தினை தூண்டும் ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை உள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றது.

**(ஆ) விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்**
2024 மார்ச் 31 இல் ரூபா 5,774 மில்லியன் தொகையான (USD 19.21 மில்லியன்) விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 05 இற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன். கம்பனியானது, வழங்குநருடனான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பிணக்குத் தீர்த்தல் பொறிமுறையினூடாக குறித்த தொகையினை சேதங்களுடன் சேர்த்து மீட்பதற்கான ஒரு கோரலை மேற்கொண்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயமானது திருத்தியமைக்கப்படவில்லை.

### 1.4 கம்பனியின் 2024 ஆம் வருட ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் கம்பனியின் 2024 ஆம் வருட ஆண்டறிக்கையிலுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றன. ஆனால், அவை நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரின் அறிக்கையினை உள்ளடக்கவில்லை. எனினும், இந்த கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுள்ளேன். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம், ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் அதில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை, அவை கிடைக்கப் பெறும்போது, வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது பொருண்மையாக இல்லாவிடின் பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

கணக்காய்வாளரின் இந்த அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்ற ஏனைய தகவல்களுக்கு அமைய, நான் செய்த பணிப்புரையின் அடிப்படையில், ஏனைய தகவல்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் தீர்மானத்திற்கு வந்தால், அவ்விடயத்தினை நான் அறியப்படுத்தல் வேண்டும். இது தொடர்பாக நான் எதுவும் தெரிவிக்கவில்லை.

### 1.5 நிதிக் கூற்றுக்களின் ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, உண்மையானதும், நியாயமானதுமான கருத்தினைத் தருகின்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஒரு நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்பட வேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்ச்சி.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனி மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு கம்பனி மற்றும் குழுமம் வேண்டப்படுகின்றது.

### 1.6 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினைப் பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது, ஒரு உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால், இது, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை கொண்டிருக்கும் அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், அது இனங்காணும் என்ற உறுதியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்புக் காணப்படுமாயின், அவை பொருண்மையானதாகக் கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறைத் தீர்ப்பினை உபயோகித்தும், தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வுச் செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஒரு தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க, மோசடியின் விளைவாக ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- கம்பனியின் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்குப் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஒரு புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இது தொடர்பான வெளிப்படுத்துதல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவு செய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றிக் காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஒரு அபிப்பிராயத்தினைத் தெரிவிப்பதற்காக குழுமத்திலுள்ள நிறுவனங்களின் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதியியல் தகவல்கள் தொடர்பாக போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல், குழுமத்தினது கணக்காய்வின் வழிநடத்தல், மேற்பார்வை

மற்றும் செயலாற்றலுக்கு நான் பொறுப்பாளியாய் உள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் மாத்திரமே பொறுப்பாயுள்ளேன்.

ஆளுமை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக, கருதத்தக்க கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

### 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

***2.1.1*** கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(a) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163(2) இன் தேவைக்கேற்ப கம்பனியானது முறையான கணக்கீட்டுப் பதிவுகளைக் கொண்டுள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

***2.1.3*** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(b)(iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை;

***2.2.1*** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் கம்பனியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களைக் கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு,

***2.2.2*** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (f) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், கம்பனியினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை எனக் குறிப்பிடுவதற்கு;

***2.2.3*** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (g) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை எனக் குறிப்பிடுவதற்கு;

***2.2.4*** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (h) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடுவதற்கு.

**டப்ளியூ. பி. சி. விக்கிரமரத்ன**
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

# நிதி நிலைமை அறிக்கை

| 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | ரூ. மில். | ரூ. மில். மீள்குறிப்பிட்ட (குறிப்பு 30) | ரூ. மில். | ரூ. மில். மீள்குறிப்பிட்ட (குறிப்பு 30) |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 3 | 11,582.46 | 11,459.71 | 7,470.61 | 7,164.89 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 4 | 74,848.14 | 70,496.87 | 74,648.10 | 70,320.69 |
| விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள் | 5 | 5,774.00 | 6,288.68 | 5,774.00 | 6,288.68 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 6 | 37,389.27 | 43,116.59 | 37,389.27 | 43,116.59 |
| விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள் | 7 | 6,129.29 | 5,713.80 | 6,129.29 | 5,713.80 |
| அருவச் சொத்துக்கள் | 8 | 51.94 | 135.79 | 44.82 | 125.72 |
| முதலீடுகள் | 9.1 | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |
| | | 135,775.50 | 137,211.84 | 131,498.53 | 132,772.81 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புகள் | 10 | 7,493.15 | 5,972.97 | 6,983.64 | 5,392.52 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 11 | 27,022.97 | 33,534.74 | 25,586.27 | 28,266.13 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 6 | 17,168.29 | 18,857.02 | 17,168.29 | 18,857.02 |
| விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புக்கள் | 7 | 2,838.31 | 2,346.66 | 2,838.31 | 2,346.66 |
| முதலீடுகள் | 9.2 | 2,508.42 | 2,253.13 | 1,715.99 | 1,826.00 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 12 | 8,842.07 | 11,000.05 | 8,466.98 | 9,993.62 |
| | | 65,873.21 | 73,964.57 | 62,759.48 | 66,681.95 |
| மொத்த சொத்துக்கள் | | 201,648.71 | 211,176.41 | 194,258.01 | 199,454.76 |
| **உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **உரித்துவம்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 202,360.67 | 96,360.67 | 202,360.67 | 96,360.67 |
| ஒதுக்கங்கள் | 14 | 8,542.18 | 8,815.30 | 4,718.22 | 4,952.21 |
| திரண்ட நட்டங்கள் | | (592,626.52) | (599,605.96) | (607,613.60) | (610,487.76) |
| | | (381,723.67) | (494,429.99) | (400,534.71) | (509,174.88) |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 15 | 133,108.77 | 154,201.38 | 132,532.88 | 153,472.18 |
| ஏனைய பொறுப்புக்கள் | 16 | 57,245.74 | 58,871.78 | 55,369.76 | 56,850.96 |
| | | 190,354.51 | 213,073.16 | 187,902.64 | 210,323.14 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| ஊர்திகளுக்கான முன்கூட்டிய விற்பனை | 17 | 44,977.47 | 53,390.92 | 44,977.47 | 53,390.92 |
| ஏனைய பொறுப்புக்கள் | 16 | 21,658.63 | 31,260.34 | 21,658.63 | 31,260.34 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 18 | 101,597.30 | 172,817.98 | 115,826.08 | 179,116.25 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | | 308.61 | 528.16 | 141.61 | 175.45 |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 15 | 224,475.86 | 234,535.84 | 224,286.29 | 234,363.54 |
| | | 393,017.87 | 492,533.24 | 406,890.08 | 498,306.50 |
| மொத்த பொறுப்புக்கள் | | 583,372.38 | 705,606.40 | 594,792.72 | 708,629.64 |
| மொத்த உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள் | | 201,648.71 | 211,176.41 | 194,258.01 | 199,454.76 |

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**யசந்த திசாநாயக்க**
*குழுமத்தின் பிரதம நிதியியல் அதிகாரி*

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும், முன்னிலைப்படுத்தலுக்கும் பணிப்பாளர்கள் சபையே பொறுப்பாகும்.
சபைக்காகவும் சபையின் சார்பாகவும் கையொப்பமிடப்பட்டுள்ளது:

**ஜயந்த் பெரேரா**
*பணிப்பாளர்*

**அசோக பத்திரகே**
*பணிப்பாளர்*

65 முதல் 114 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாகும்.

2024 ஆகஸ்ட் 02
கொழும்பு

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | குறிப்பு | 2024<br>ரூ. மில். | 2023<br>ரூ. மில். | 2024<br>ரூ. மில். | 2023<br>ரூ. மில். |
| **வருமானம்** | 20. | 339,591.65 | 369,470.04 | 333,614.09 | 365,171.77 |
| **செலவினம்** | | | | | |
| விமான எரிபொருள் செலவு | | (115,119.33) | (155,559.11) | (115,119.33) | (155,559.11) |
| ஊழியர் செலவுகள் | | (32,261.33) | (26,552.99) | (29,845.14) | (24,341.47) |
| விமான நிலையம், வழி மற்றும் பயணிகள் செலவுகள் | | (39,186.89) | (40,761.00) | (46,713.52) | (48,474.28) |
| விமானப் பராமரிப்பு மற்றும் பிரித்துச் சீராக்கல் செலவுகள் | | (40,358.53) | (39,300.04) | (40,358.53) | (39,300.04) |
| பெறுமானத்தேய்வு/பதிவழிப்பு | | (14,138.07) | (15,153.46) | (13,869.28) | (14,685.12) |
| உதிரி என்ஜின்கள் மற்றும் குறுங்கால விமானக் குத்தகைகளிலான வாடகைகள் | | (10,722.70) | (504.44) | (10,722.70) | (504.44) |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள் | | (22,082.36) | (24,643.41) | (22,077.80) | (24,627.60) |
| விமான பணிக்குழுச் செலவுகள் | | (9,701.41) | (7,660.86) | (9,701.41) | (7,660.86) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | | (17,786.36) | (16,821.96) | (12,759.04) | (12,516.36) |
| | | 38,234.67 | 42,512.77 | 32,447.34 | 37,502.49 |
| ஏனைய வருமானம் மற்றும் இலாபங்கள் | 21. | 1,485.64 | 3,758.04 | 1,485.64 | 6,140.34 |
| **பரிவர்த்தனைக்கு முன்னரான செயற்படு இலாபம்/(நட்டம்) மற்றும் திட்டமிடப்படாத பழுதுபார்ப்புச் செலவுகள்** | | 39,720.31 | 46,270.81 | 33,932.98 | 43,642.83 |
| வட்டி அறவீட்டுப் பொறுப்புக்கள் நீங்கலான பரிமாற்றல் இலாபம்/(நட்டங்கள்) | | 1,943.17 | (24,748.95) | 3,260.78 | (25,560.09) |
| நியோ என்ஜின்களின் திட்டமிடப்படாத பழுதுபார்ப்பு செலவு | 18. | (11,572.39) | (2,899.25) | (11,572.39) | (2,899.25) |
| பரிவர்த்தனைக்குப் பின்னரான செயற்படு இலாபம்/(நட்டம்) மற்றும் திட்டமிடப்படாத பழுதுபார்ப்புச் செலவுகள் | | 30,091.09 | 18,622.61 | 25,621.37 | 15,183.49 |
| **நிகர நிதிச் செலவு** | | | | | |
| நிதியியல் வருமானம் | 23.1 | 823.06 | 1,293.58 | 710.90 | 1,220.87 |
| நிதிச் செலவு | 23.2 | (37,387.22) | (51,482.84) | (37,311.84) | (51,394.83) |
| வட்டி அறவீட்டுப் பொறுப்புக்களிலான பரிவர்த்தனை மூலம் இலாபம்/(நட்டம்) | 23.3 | 26,716.81 | (38,379.05) | 26,687.55 | (38,273.72) |
| | | (9,847.35) | (88,568.31) | (9,913.39) | (88,447.68) |
| ஒப்பந்த மீறலுக்கான அபராதம் | 18. | (11,837.12) | - | (11,837.12) | - |
| **வரி விதிப்பிற்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | | 8,406.62 | (69,945.70) | 3,870.86 | (73,264.19) |
| வருமான வரிச் செலவினம் | 24. | (481.61) | (1,360.96) | - | (357.34) |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | 7,925.01 | (71,306.66) | 3,870.86 | (73,621.53) |

65 முதல் 114 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாகும்.

# விரிவான வருமானக் கூற்று

| 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | குறிப்பு | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2024<br>ரூ. மில். | 2023<br>ரூ. மில். | 2024<br>ரூ. மில். | 2023<br>ரூ. மில். |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | 7,925.01 | (71,306.66) | 3,870.86 | (73,621.53) |
| **ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்)** | | | | | |
| **அடுத்து வரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படக் கூடாத ஏனைய விரிவான வருமானம் /(நட்டம்):** | | | | | |
| பணிக்கொடையிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டம்) | 16.3 | (729.62) | (1,142.09) | (773.72) | (1,135.92) |
| பணிக்கொடை மீதான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டம்) ஒத்திவைக்கப்பட்ட வரித் தாக்கம் | 24.1 | (13.23) | 1.85 | - | - |
| விடுமுறையினை பணமாக்குவதிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டம்) | 16.3 | (460.39) | (125.63) | (456.97) | (113.57) |
| விடுமுறையினை பணமாக்குவது மீதான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டம்) ஒத்திவைக்கப்பட்ட வரித் தாக்கம் | 24.1 | 1.03 | 3.62 | - | - |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள் மதிப்பீடு | 3. | (23.54) | 5,346.90 | - | 2,733.06 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள் மதிப்பீட்டிலான ஒத்திவைக்கப்பட்ட வரித் தாக்கம் | 24.1 | 7.06 | (784.15) | - | - |
| ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம் /(நட்டம்), நிகராக வரி | | (1,218.69) | 3,300.50 | (1,230.69) | 1,483.57 |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் /(நட்டம்), வரி நிகராக** | | 6,706.32 | (68,006.16) | 2,640.17 | (72,137.96) |

65 முதல் 114 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாகும்.

# உரிமை மாற்றல் கூற்று

| 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான குழுமம் | கூறப்பட்ட மூலதனம் ரூ. மில். (குறிப்பு 13) | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. மில். | மூலதன ஒதுக்கீடு ரூ. மில். | திரண்ட நட்டங்கள் ரூ. மில். | மொத்தம் ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **2022 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 5,436.47 | 991.74 | (529,212.71) | (426,423.83) |
| கணக்கியல் கொள்கைகளில் மாற்றத்தின் விளைவு (குறிப்பு 30) | - | (1,970.48) | - | 1,970.48 | - |
| **2022 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி (மீள்குறிப்பிட்ட)** | 96,360.67 | 3,465.99 | 991.74 | (527,242.23) | (426,423.83) |
| வருடத்திற்கான அகற்றலின் காரணமாக மீள் மதிப்பீட்டு மிகையின் மாற்றம் | - | (0.06) | - | 0.06 | - |
| சொத்து உபயோகத்தின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டுக் கையிருப்பு பரிமாற்றம் | - | (205.12) | | 205.12 | - |
| வருடத்திற்கான நட்டம் | - | - | - | (71,306.66) | (71,306.66) |
| ஏனைய விரிவான வருமானம் | - | 4,562.75 | - | (1,262.25) | 3,300.50 |
| மொத்த விரிவான வருமானம் /(நட்டம்) | - | 4,562.75 | - | (72,568.91) | (68,006.16) |
| **2023 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி (மீள்குறிப்பிட்ட)** | 96,360.67 | 7,823.56 | 991.74 | (599,605.96) | (494,429.99) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13) | 3,500.00 | - | - | - | 3,500.00 |
| பங்கு வழங்கல்கள் (குறிப்பு 13) | 102,500.00 | - | - | - | 102,500.00 |
| சொத்து உபயோகத்தின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டுக் கையிருப்பு பரிமாற்றம் | - | (256.64) | - | 256.64 | - |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | 7,925.01 | 7,925.01 |
| ஏனைய விரிவான வருமானம் | - | (16.48) | - | (1,202.21) | (1,218.69) |
| மொத்த விரிவான வருமானம் /(நட்டம்) | - | (16.48) | - | 6,722.80 | 6,706.32 |
| **2024 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 202,360.67 | 7,550.44 | 991.74 | (592,626.52) | (381,723.67) |

| 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி கம்பனி | கூறப்பட்ட மூலதனம் ரூ. மில். (குறிப்பு 13) | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. மில். | மூலதன ஒதுக்கீடு ரூ. மில். | திரண்ட நட்டங்கள் ரூ. மில். | மொத்தம் ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **2022 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 3,115.82 | 991.74 | (537,505.15) | (437,036.92) |
| கணக்கியல் கொள்கைகளில் மாற்றத்தின் விளைவு (குறிப்பு 30) | | (1,713.59) | | 1,713.59 | |
| **2022 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி (மீள்குறிப்பிட்ட)** | 96,360.67 | 1,402.23 | 991.74 | (535,791.56) | (437,036.92) |
| வருடத்திற்கான அகற்றலின் காரணமாக மீள் மதிப்பீட்டு மிகையின் மாற்றம் | - | (0.06) | - | 0.06 | - |
| சொத்து உபயோகத்தின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டுக் கையிருப்பு பரிமாற்றம் | - | (174.76) | - | 174.76 | - |
| வருடத்திற்கான நட்டம் | - | - | - | (73,621.53) | (73,621.53) |
| ஏனைய விரிவான வருமானம் /(நட்டம்) | | 2,733.06 | - | (1,249.49) | 1,483.57 |
| மொத்த விரிவான வருமானம் /(நட்டம்) | - | 2,733.06 | - | (74,871.02) | (72,137.96) |
| **2023 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி (மீள்குறிப்பிட்ட)** | 96,360.67 | 3,960.47 | 991.74 | (610,487.76) | (509,174.88) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13) | 3,500.00 | - | - | - | 3,500.00 |
| பங்கு வழங்கல்கள் (குறிப்பு 13) | 102,500.00 | - | - | - | 102,500.00 |
| சொத்து உபயோகத்தின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டுக் கையிருப்பு பரிமாற்றம் | - | (233.99) | - | 233.99 | - |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | 3,870.86 | 3,870.86 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | (1,230.69) | (1,230.69) |
| மொத்த விரிவான வருமானம் /(நட்டம்) | - | - | - | 2,640.17 | 2,640.17 |
| **2024 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 202,360.67 | 3,726.48 | 991.74 | (607,613.60) | (400,534.71) |

65 முதல் 114 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாகும்.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான குழுமம் | குறிப்பு | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2024 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2024 ரூ. மில். | 2023 ரூ. மில். |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| வருமான வரிச் செலவினத்திற்கு முன்னரான நட்டம் | | 8,406.62 | (69,945.70) | 3,870.86 | (73,264.19) |
| செம்மையாக்கல்கள்: | | | | | |
| தேய்மானம்/பதிவழிப்பு/சேத நட்டம் | | 14,138.07 | 15,153.46 | 13,869.27 | 14,685.12 |
| நிதிச் செலவு | 23.2 | 37,387.22 | 51,482.84 | 37,311.84 | 51,394.83 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள (ROU) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அருவச் சொத்துக்களை அகற்றுவதில் நட்டம்/(இலாபம்) | | 0.71 | 5.05 | 0.15 | 5.05 |
| நிதியியல் வருமானம் | 23.1 | (823.06) | (1,293.58) | (710.90) | (1,220.87) |
| பெறவேண்டியவற்றுக்கான சேதநட்ட ஏற்பாடு | 11.3 | (187.97) | 205.94 | (134.44) | 190.13 |
| மெதுவாக நகரும் சரக்குக்கான கொடுப்பனவு | 10.1 | 171.54 | 408.17 | 174.81 | 362.11 |
| சேத நட்டப் பராமரிப்பு குறைபாட்டிற்கான ஏற்பாடு | 6.2 | 11,878.14 | 10,670.39 | 11,878.14 | 10,670.39 |
| சலுகை வாடகை | 15.4 | (44.97) | (203.10) | (44.97) | (122.30) |
| உணரப்படாத பரிமாற்றத்தின் விளைவு (இலாபம்)/நட்டம் | | (27,797.68) | 38,247.00 | (27,768.41) | 38,141.67 |
| முன்விற்பனையின் மீள் பதிவு | | (1,474.09) | (768.87) | (1,474.09) | (768.87) |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிற்கான ஏற்பாடு | 16.3 | 1,595.32 | 1,336.83 | 1,427.02 | 1,200.99 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | 43,249.85 | 45,298.43 | 38,399.28 | 41,274.06 |
| இருப்புக்களில் குறைவு/(அதிகரிப்பு) | | (1,691.72) | (2,092.14) | (1,765.93) | (1,718.36) |
| வண்டியின் முன்விற்பனையிலான (குறைவு)/அதிகரிப்பு | | (6,939.36) | 25,455.48 | (6,939.36) | 25,455.48 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகளிலான (அதிகரிப்பு) /குறைவு | | 6,851.88 | (11,699.33) | 2,869.85 | (7,053.04) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலான அதிகரிப்பு/(குறைவு) | | (46,039.16) | 49,492.47 | (37,936.69) | 47,261.15 |
| பராமரிப்பு ஒதுக்கங்களிலான (அதிகரிப்பு)/குறைவு | | (12,886.65) | (15,660.04) | (12,886.65) | (15,660.04) |
| விமானப் பாதுகாப்பு வைப்புக்களிலான குறைவு/(அதிகரிப்பு) | | (1,156.80) | (914.29) | (1,156.80) | (914.29) |
| **தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) காசு** | | (18,611.96) | 89,880.58 | (19,416.30) | 88,644.96 |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | | (53,051.62) | (50,800.90) | (53,051.62) | (50,800.90) |
| செலுத்தப்பட்ட ஓய்வுபெறல் நலன்கள் | 16.3 | (1,517.53) | (1,287.66) | (1,434.64) | (1,208.26) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (895.83) | (948.89) | (33.83) | (357.34) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்** | | (74,076.94) | 36,843.13 | (73,936.39) | 36,278.46 |
| **முதலீட்டு நடவடிக்கைளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 378.78 | 52.04 | 299.71 | 23.39 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (1,422.01) | (1,227.76) | (1,355.53) | (1,166.66) |
| குறுங்கால முதலீடுகளிலான (முதலீடு)/மீளப்பெறல்கள் | | (200.76) | (167.61) | 131.44 | (167.61) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | (5.48) | (14.86) | (5.48) | (12.44) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் அகற்றுகை மூலமான வருமானம் | | 7.59 | (5.05) | 0.15 | (5.05) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | (1,241.88) | (1,363.24) | (929.71) | (1,328.37) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்** | | | | | |
| இலங்கை அரசாங்கத்தினால் உட்செலுத்தப்பட்ட பங்குரிமை | | 106,000.00 | - | 106,000.00 | - |
| வரி அறவிடப்படும் பொறுப்புக்களின் மீள்செலுத்துகை | | (1,985.64) | (4,034.96) | (1,985.64) | (4,034.96) |
| குத்தகைப் பொறுப்புக்களின் மீள்செலுத்துகை | 15.4 | (34,690.31) | (23,951.12) | (34,511.69) | (23,855.88) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | | 69,324.05 | (27,986.08) | 69,502.67 | (27,890.84) |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | (5,994.77) | 7,493.81 | (5,363.43) | 7,059.25 |
| **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | 12. | (8,653.07) | (16,146.88) | (9,659.50) | (16,718.75) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | 12. | (14,647.84) | (8,653.07) | (15,022.93) | (9,659.50) |

65 முதல் 114 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**1. கூட்டாண்மைத் தகவல்கள்**
**1.1 பொதுவானவை**

**கம்பனி**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ("கம்பனி") இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது, எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், குழுமத்தின் இறுதியான தாய் நிறுவனமாகும்.

**துணை நிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் (துணை நிறுவனம்) இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு, உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் முழுவதும் உரித்துடைய ஒரு துணை நிறுவனமாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது, எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

**1.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை**

**கம்பனி**
கம்பனியின் பிரதான நடவடிக்கைகள், பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல்களை ஏற்றிச் செல்வதற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச, அட்டவணைப்படுத்தாத வான்வழிச் சேவைகளை உள்ளடக்கும் என்பதுடன், இது, இலங்கையின் நியமிக்கப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.நி) மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி) என்பவற்றில் வான் தரிப்பிட சேவைகளை வழங்குதல் மற்றும் விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விடுமுறைத் தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாம் தரப்பினருக்கான விமானப் பராமரிப்பினை வழங்குதல், விமானச் செயற்பாட்டுச் சேவைகள் மற்றும் வான் பயணவியல் தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும்.

**துணை நிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் (துணைக் கம்பனி) நிறுவனத்தின் பிரதான நடவடிக்கை ப.ச.வி.நி மற்றும் ம.ரா.ச.வி.நி ஆகிவற்றினூடாகச் செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள் உணவு விநியோகச் சேவைகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகளாக பொது மற்றும் மாற்றுப்பயணியர் உணவு விடுதிகள், சலவை செய்தல் சேவைகளை வழங்கல் மற்றும் மாற்றுப்பயணியர் ஹோட்டலினை முகாமைப்படுத்தல் என்பனவும் காணப்படுகின்றன.

**1.3 வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி**
2024 மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கான பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமானது 2024 ஆகஸ்ட் 02 இல் வழங்கப்பட்டது.

**2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்**

**2.1 தயாரிப்பின் அடிப்படை**
வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் ஓர் அட்டுறு அடிப்படையில் மற்றும் வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விலக்காக, காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணம் என்பன நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

அனைத்துப் பெறுமதிகளும், இலங்கை ரூபா மில்லியனில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதோடு, ஏனையவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

***2.1.1 தொடர்ந்து செல்லும் நிறுவன செயல்நிலை***
மீளாய்வுக்குரிய ஆண்டின்போது, குழுமமானது இலாபமாக ரூபா 7,925.01 மில்லியனை (2023 - நட்டம் ரூபா 71,306.66 மில்லியன்) பதிவுசெய்ததுடன் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான திரண்ட நட்டம் ரூபா 592,626.52 மில்லியன் (2023 - ரூபா 599,605.96 மில்லியன்) ஆகும். மேலும், குழுமத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 327,144.66 மில்லியனால் (2023 - ரூபா 418,568.67 மில்லியன்) விஞ்சியிருந்ததுடன், அறிக்கையிடப்படும் திகதியில் குழுமத்தின் மொத்த உரித்துவமானது, எதிர்மறையான ரூபா 381,723.67 மில்லியன் (2023 - எதிர்மறை ரூபா 494,429.99 மில்லியன்) ஆகவுள்ளது.

கம்பனி இலாபமாக ரூபா 3,870.86 மில்லியனை (2023 - நட்டம் ரூபா 73,621.53 மில்லியன்) பதிவு செய்ததுடன், 2024 மார்ச் 31 இல் அதன் திரண்ட நட்டம் ரூபா 607,613.60 மில்லியன் (2023 - ரூபா 610,487.76 மில்லியன்) ஆகும். மேலும், கம்பனியின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 344,130.60 மில்லியனால் (2023 - ரூபா 431,624.55 மில்லியன்) விஞ்சியிருந்ததுடன், அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியின் மொத்த உரித்துவமானது, ஒரு எதிர்மறையான ரூபா 400,534.71 மில்லியன் (2023 - எதிர்மறை ரூபா 509,174.88 மில்லியன்) ஆகவுள்ளது.

பிரதானமாக, விடாப்பிடியான நோய்த் தொற்று தொடர்புபட்ட சவால்கள் மற்றும் 2022 ஏப்ரலில் சர்வதேச கடன் வழங்குநர்களுக்குச் சொந்தமான நாட்டிற்கான படுகடனைத் தீர்ப்பதன் மீது தன்னிச்சையாக கடனை காலம் தாழ்த்திச் செலுத்துவதை அரசாங்கம் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து எழுந்த உள்ளார்ந்தங்கள் என்பன காரணமாக, நாட்டின் பொருளாதார நிலைமை 2022 ஆம் ஆண்டின் போது கடுமையாகச் சீர்குலைந்தது. அதன் பின்னர், நாட்டில் தொடர்ந்து வந்த சமூக அமைதியின்மை மற்றும் எரிபொருள் பற்றாக்குறை என்பனவும், கடந்த நிதியியல் ஆண்டில் குழுமத்தின் தொழிற்பாடுகளை எதிர்மறையாகப் பாதித்தன. எவ்வாறாயினும், 2022 செப்டம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம், அலுவலர் மட்ட இணக்கப்பாட்டினை எட்டியதில் இருந்து பொருளாதார முன்னரங்கில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு தொழிற்படுகின்ற சூழல் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக் காலப்பகுதியில், சர்வதேச விமானப் போக்குவரத்தில் நாடு வலிமையான மீட்சியினை அனுபவித்து, குழுமத்தின் முக்கிய வணிகத்தின் மீட்சிக்குத் துணையளித்தது.

2023 மார்ச் 13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கைத் தீர்மானம் ஒன்றினை அனுசரித்து அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சி மறுசீரமைப்புப் பிரிவுடன் (SOERU) இணைந்து கம்பனியில் உள்ள அதன் பங்குடமைகளை மறுசீரமைப்பதற்கு அத்துடன் அல்லது உரிமை மாற்றுவதற்கான தீர்மானம் கொடுக்கல் வாங்கல் ஆலோசகராக சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (உலக வங்கிக் குழுமத்தின் உறுப்பு நிறுவனம் - IFC) இணைந்து பணியாற்றி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சின் (நிதியமைச்சு - MoF) கீழ் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன், கம்பனியை தனியார் மயமாக்குவதற்காக முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்தல்கள் அழைக்கப்பட்டன. 06 ஆர்வ வெளிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்று மூன்று தரப்பினர்களிடமிருந்து தெளிவுபடுத்தல்களைக் கோருவதற்கும், அமைச்சரவைக்கு மீண்டும் அறிக்கையிடுவதற்கும் நிதியமைச்சுக்கு 2024 ஜூலை 09 அன்று அமைச்சரவை அனுமதியளித்ததுடன், அதற்கு ஏற்றவாறு இந்நிதியியல் கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதியன்று உள்ளவாறு தனியார் மயப்படுத்தல் செயன்முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், கம்பனியின் படுகடன் மறுசீரமைப்பின் பாகம் ஒன்றாக ரூபா 102.5 பில்லியன் கொண்ட மூலதன உட்செலுத்தல் 2023 டிசம்பர் 07 அன்று மேற்கொள்ளப்பட்டது. இது, 2023 ஜூன் 26 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) நிலுவை படுகடனை மீள் செலுத்துவதற்கு கம்பனி மூலம் உபயோகிக்கப்பட்டது. கம்பனியின் பங்குரிமை மூலதன நிலைமையினை வலுப்படுத்துவதற்கு இம்மூலதன உட்செலுத்தல் உதவியதுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூலம் முன்னர் அறவிடப்பட்ட வட்டி வீதங்களின் அடிப்படையில் ஆண்டுக்கு ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 36 மில்லியன் கொண்ட வட்டிச் செலவை மீதப்படுத்துவதற்கு வழிவகுத்தது. கம்பனியின் குறுகிய கால காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு பங்குரிமை மூலதனம் வடிவில் அரசாங்கம்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

2024 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ரூபா 5 பில்லியன் காசுப் பாய்ச்சல் உட்செலுத்தலையும் வழங்கியிருந்தது. மேலும், 2024 மார்ச் 04 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 310 மில்லியன் தொகையுடைய கம்பனியின் நிலுவையாக இருக்கின்ற படுகடன்களை அரச வங்கிகளுக்கு கைமாற்றுவதற்காக நிதியமைச்சுக்கு அனுமதி வழங்கப்பட்டது. கைமாற்றலின் அடிப்படையில் நிதியமைச்சுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மீளாய்வுக்குரிய ஆண்டின்போது, இலங்கை அரசாங்கமானது பொதுத் திறைசேரியினூடாக இக்காலத்தின்போது முதிர்வடைந்த அனைத்து ஆறுதல் கடிதங்கள் மற்றும் திறைசேரி உத்தரவாதங்களது மீள் வழங்கலை அங்கீகரித்தது. இது குறுங்கால கடன் வசதிகளது வழங்கலைத் தொடர்வதற்காக இரண்டு அரச வங்கிகளுக்கு 204 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் ரூ. 30 பில்லியன் தொகைக்காகும்.

2022 நவம்பர் 28 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசாங்கமானது மாற்றீட்டு விமானம் ஊடாக பத்து விமானங்களை விஞ்ஞாத அளவுக்கு விமானத் தொகை மாற்றீட்டு செயற்பாட்டினையும், நடைமுறையிலுள்ள விமானங்களின் குத்தகையின் நீடிப்பு அல்லது இவ்விரண்டையும் சேர்த்த ஒரு சேர்க்கைக்கு அங்கீகாரம் வழங்கியது. இதன் பிரகாரம், கம்பனியானது, இதன் பிரகாரம், கம்பனியானது தற்போது இரண்டு ஒடுங்கிய உடல் விமானங்களின் குத்தகை மற்றும் ஏற்கனவே குத்தகைக்கு எடுக்கப்பட்ட மூன்று ஒடுங்கிய உடல் விமானங்களின் குத்தகைக் காலத்தினை நீடிப்பதற்கான குத்தகை உடன்படிக்கைகள் முடிவுறுத்தப்பட்டவண்ணமுள்ளன. அகன்ற உடல் விமானத்தின் குத்தகைக்கான கொள்முதல் செயன்முறையானது நடந்தவண்ணமுள்ளதுடன் இரண்டு அகன்ற உடல் விமானங்களின் குத்தகை நோக்கங்களுக்கான ஆவணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், இலங்கை அரசாங்கமானது, 2024 ஏப்ரல் 25 திகதியிட்ட ஒரு அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலமும், 2024 ஜுலை 11 இல் பொது நிறுவனங்கள் துறைப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலமும் இலங்கை அரசாங்கத்தினால் முன் மொழியப்பட்ட மீள்கட்டமைப்பு செயன்முறையானது நிறைவடைந்து அமுல்படுத்தப்படும் வரைக்கும், ஒரு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக அதன் செயற்பாடுகளைத் தொடர்வதற்குத் தேவையான நிதியியல் உறுதுணையினை கம்பனிக்கு வழங்கும் என உறுதியளித்துள்ளது.

செயற்பாட்டுச் சூழலிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றம், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் துரித நடவடிக்கைகள் மற்றும் கடனை மறுசீரமைத்தல் உள்ளிட்ட மேலே விவரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நிறுவனத்தின் திரவத்தன்மை நிலையினை மேம்படுத்தும் என முகாமைத்துவம் நம்புகின்றது. மேற்கூறியவற்றின் அடிப்படையில், ஒரு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்டுள்ள மற்றும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் பொருத்தமானதென பணிப்பாளர்கள் சபை கருதுகின்றது.

### *2.1.2 இணங்கியொழுகுதல் கூற்று*

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இக. நி.) அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியொழுகுகின்றன.

### *2.1.3 ஒப்பீட்டுத் தகவல்கள்*

முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களது முன்னிலைப்படுத்தலும், வகைப்படுத்தலும் பொருத்தமான இடங்களில் சிறந்த முன்னிலைப்படுத்தலுக்காகவும், நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடக்கூடியதாகவும் இருப்பதற்காக திருத்தியமைக்கப்பட்டன.

### *2.1.4 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்*

குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 01 "நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்" இனால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு வேறுவிதத்தில் குறிப்பிட்டாலன்றி, அனைத்து நிதியியல் தகவல்களும் இலங்கை ரூபா மில்லியனில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.2 ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் 2024 மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. கம்பனியின் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் நிலையான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தி அதே அறிக்கையிடப்படும் ஆண்டிற்குத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### *2.2.1 வர்த்தக ஒன்றிணைப்பு*

ஒரு வணிகத்தின் வரைவிலக்கணத்தைப் பூர்த்தி செய்யும்போது, கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிக சேர்க்கைகளுக்கான குழுமம் கணக்கீடு செய்வதுடன், கட்டுப்பாடானது குழுமத்திற்க மாற்றப்படும். குறிப்பிட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமா என்பதைத் தீர்மானிப்பதில், கையகப்படுத்தப்பட்ட சொத்துகள் மற்றும் செயற்பாடுகளின் தொகுப்பில், குறைந்தபட்சம், ஒரு உள்ளீடு மற்றும் கணிசமான செயன்முறை ஆகியவை அடங்கியுள்ளனவா என்பதையும், வாங்கிய தொகுப்பில் வெளியீடுகளை உருவாக்கும் திறன் உள்ளதா என்பதையும் குழுமம் மதிப்பிடுகிறது.

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமல்ல என்பதை எளிமைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டை அனுமதிக்கும் "செறிவுச் சோதனை" ஒன்றைப் பயன்படுத்துவதற்கான ஒரு தெரிவு குழுமத்திற்கு உள்ளது. பெறப்பட்ட மொத்த சொத்துக்களின் நியாயப் பெறுமதி அனைத்தும் ஒரு தனியாக அடையாளம் காணக்கூடிய சொத்து அல்லது ஒத்த அடையாளம் காணக்கூடிய சொத்துகளின் குழுவில் குவிந்திருந்தால் விருப்பத்தெரிவுச் செறிவுச் சோதனை பூர்த்தி செய்யப்படுகிறது.

கையகப்படுத்தலில் மாற்றப்பட்ட மறுபயனானது, பொதுவாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இவை கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துக்களாக இனங்காணப்படுகின்றன. எழுகின்ற ஏதேனும் நன்மதிப்பானது, வலுக்குன்றலுக்காக வருடாந்தம் பரிசோதனை செய்யப்படுகின்றது. ஒரு மலிவான கொள்வனவிலிருந்தான ஏதேனும் இலாபங்கள் உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கடன் அல்லது உரித்துவப் பிணையங்களின் வழங்கல் தொடர்பானவை தவிர கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் ஆட்பட்டதாக செலவிடப்படுகின்றது.

மாற்றப்பட்ட மறுபயனானது முன் நடைமுறையிலுள்ள உறவுகளது தீர்ப்பனவு தொடர்பான தொகைகளை உள்ளடக்கவில்லை. அத்தகைய தொகைகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏதேனும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனானது, கையகப்படுத்தல் திகதியில் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது. ஒரு நிதியியல் கருவியின் வரைவிலக்கணத்தைச் சந்திக்கும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனைச் செலுத்துவதற்கான ஒரு கடப்பாடானது உரித்துவமாக வகைப்படுத்தப்பட்டிருந்தால், அது மீள்அளவீடு செய்யப்படாது, தீர்ப்பனவானது உரித்துவத்தினுள் கணக்கிடப்படுகின்றது. இல்லாவிடின், ஏனைய எதிர்பாரா மறுபயனானது, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் நியாயப் பெறுமதியில் மீள்அளவீடு செய்யப்பட்டு, எதிர்பாரா மறுபயனின் நியாயப் பெறுமதியில் பின்னரான மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### *2.2.2 துணை நிறுவனங்கள்*

துணை நிறுவனங்கள் குழுமத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். குழுமமானது அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையும் வருவாய்க்கான வெளிப்பாட்டினை அல்லது உரிமைகளை கொண்டிருக்கும்போது மற்றும் நிறுவனத்தின் மீதான அதன் அதிகாரத்தினூடாக அந்த விளைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலினைக் கொண்டிருந்தால், அது, அந்த நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றது. துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள், கட்டுப்பாடு ஆரம்பித்த திகதியிலிருந்து கட்டுப்பாடு நிறைவடையும் திகதி வரைக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

*2.2.3 கட்டுப்பாடற்ற நலன்கள்*

ஒவ்வொரு வணிகச் சேர்க்கைகளுக்கும், கையகப்படுத்துவதில் எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன்களை அளவிடுவதற்கு குழுமமானது பின்வருவனவற்றைத் தேர்ந்தெடுக்கிறது: நியாயப் பெறுமதியில் அல்லது பொதுவாக நியாயமான மதிப்பில் இருக்கும் கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய தேறிய சொத்துக்களின் விகிதாசாரப் பங்கில்.

கட்டுப்பாடற்ற நலன்களது கையகப்படுத்தலானது, உரிமையாளர்கள் என்ற அவர்களது கொள்திறனில் உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படுகிறது, எனவே, அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக எந்தவொரு நன்மதிப்பும் அங்கீகரிக்கப்படவில்லை. கட்டுப்பாடற்ற நலன்களுக்கான செம்மையாக்கல்கள், துணை நிறுவனத்தின் தேறிய சொத்துக்களின் விகிதாசாரத் தொகையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

கட்டுப்பாட்டினில் இழப்பை ஏற்படுத்தாத ஒரு துணை நிறுவனத்திலான குழுமத்தின் நலன்களில் ஏற்படும் மாற்றங்கள் உரித்துவக் கொடுக்கல் வாங்கல்களாகக் கணக்கில் கொள்ளப்படுகின்றன.

*2.2.4 கட்டுப்பாட்டினை இழத்தல்*

குழுமமானது, ஒரு துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்கும்போது, அது, துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மற்றும் தொடர்புடைய எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன் மற்றும் உரித்துவத்தின் ஏனைய கூறுகளையும் அங்கீகாரத்திலிருந்து நீக்குகின்றது. இதன் விளைவாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. கட்டுப்பாட்டினை இழக்கும்போது முன்னாள் துணை நிறுவனத்தில் ஏதேனும் தக்கவைக்கப்பட்ட நலனானது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

*2.2.5 ஒருங்கிணைப்பின்போது நீக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள்*

குழுமத்தினுள்ளான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் குழுமத்தினுள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் உணரப்படாத வருமானம் மற்றும் செலவினங்கள் அகற்றப்படுகின்றன. உரித்துவக் கணக்கீடு செய்யப்பட்ட முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற உணரப்படாத இலாபங்கள் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்தில் குழுமத்தின் அக்கறையின் அளவிற்கு முதலீட்டிற்கு எதிராக அகற்றப்படுகின்றன. உணரப்படாத நட்டங்கள் உணரப்படாத இலாபங்கள் போன்று அதே விதத்தில் அகற்றப்படுகின்றன, ஆனால், அது, வலுக்குன்றலுக்கான சான்று காணப்படாத அளவிற்கு மாத்திரமேயாகும்.

**2.3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், இந்த நிதிக் கூற்றுக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலங்களுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

*2.3.1 முக்கியமான கணக்கீட்டு நியமங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்*

குழுவின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது, தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, அறிக்கையிடப்பட்ட தொகைகளான வருவாய், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என்பவற்றில் முகாமைத்துவம் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்ளும் தேவையைக் கொண்டுள்ளது. இந்த நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மைகள், எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டுசெல்லப்படும் தொகையில் ஒரு பொருண்மையான செம்மையாக்கல் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தலாம்.

**(அ) நியாயப்பாடுகள்**

**(i) எதிர்பாரா பொறுப்புக்கள் - வழக்காடல்கள்**

குழுமமானது, அறிக்கையிடல் காலப் பகுதியின் முடிவில், பல்வேறு தரப்பினருடன் பல நிலுவையான வழக்காடல்களைக் கொண்டிருந்தது. பணிப்பாளர்கள் சபையானது, குழுமத்தின் சட்ட ஆலோசகருடன் முறையான ஆலோசனையின் பின்னர், ஒவ்வொரு வழக்கின் தகுதியையும் மதிப்பீடு செய்கிறது மற்றும் எதிர்காலத்தில் வளங்கள் வெளிப்பாய்ச்சல் இடம் பெறும் சாத்தியம் உள்ளது என்று தீர்மானிக்கப்படும்போது தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்கிறது.

வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் பணியாட்களினால் குழுமத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள், ஏனைய கோரல்கள் மற்றும் சாத்தியமான கோரல்கள் தொடர்பாக குழுமத்தின் வணிகப் போக்கில் எழுகின்ற எந்தவொரு எதிர்பாரா பொறுப்பு தொடர்பான ஏதேனும் குறிப்பிடத்தக்க பொறுப்பினை பணிப்பாளர்கள் எதிர்பார்க்காதபோது, சம்பந்தப்பட்ட தொகைகள் குறிப்பு 26.2 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(ii) குத்தகைகள்**

ஒப்பந்தமானது, ஓர் குத்தகையா அல்லது குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒப்பந்தமானது, ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஓர் மறுபயனுக்குப் பரிமாற்றல் செய்யப்பட்டு, அதன் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையினைத் தெரிவிக்குமாயின், அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகை எனப்படும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பீடு செய்வதற்கு, கருதப்படும் காரணிகளாக, ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கியது, குத்தகைக் காலம் முழுவதும் சொத்தின் பயன்பாட்டிலிருந்து பெறும் கணிசமான அனைத்து பொருளாதார நன்மைகளையும் பெற குழுவுக்கு உரிமை உண்டு. மேலும், சொத்தின் பயன்பாட்டை இயக்குவதற்கும் குழு அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**(ஆ) மதிப்பீடுகள்**

**(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு /பதிவழிப்பு**

முகாமைத்துவமானது, இந்த சொத்துக்களின் பொருளாதார வாழ்நாள் மற்றும் சொத்துக்களின் உத்தேச பயன்பாடு என்பவற்றின் அடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களுக்கு பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளை ஒதுக்குகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், முகாமைத்துவமானது, எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் பெறுமானத்தேய்வு /பதிவழிப்பு முறைகள் என்பவற்றை மீளாய்வு செய்து, இந்த சொத்துக்களில் பொதிந்துள்ள பொருளாதார நலன்களின் நுகர்விலான முன்னைய மதிப்பீடுகள் மற்றும் போக்குகளுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துகின்றது. இந்த சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளிலான மாற்றங்கள் எதிர்கால பெறுமானத்தேய்வு அல்லது பதிவழிப்புக் கிரயத்தில் திருத்தங்களை விளைவிக்கலாம் (கொள்கை 2.4.3 (b) மற்றும் 2.4.4 இனை பார்க்கவும்).

**(ii) அடிக்கடி பறக்கும் திட்டம்**

வருமானத்தின் பிரத்தியேகமாக இனங்காணக்கூடிய கூறாக வெகுமதி வரவுகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. வெகுமதி வரவுகளுக்கு அவற்றின் நியாயப் பெறுமதியின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள மீள்பயன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் ஒரு பொறுப்பாக (ஒத்திவைக்கப்பட்ட வருவாய்) கணக்கீடு செய்யப்படுகின்றது.

மைல்/வரவுகளின் நியாயப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு, மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதுடன், பின்வரும் காரணிகளின் நிறையிடப்பட்ட சராசரியினைப் பிரதிபலிக்கின்றது. அதாவது, துறைக்கான பயணக்கட்டணம், விமானப் பயண தரமுயர்த்தல்கள் மற்றும் பங்காளி வெகுமதிகள் என்பனவாகும். நியாயப் பெறுமதி கணிப்பீடுகளுக்கு மீட்டலிலான வரலாற்று போக்குகள் அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அங்கத்தவர்களினால் மீட்கப்படாது என எதிர்பார்க்கப்படும் மைல்கள் மற்றும் முதிர்வுற்ற மைல்கள் ஆகியவற்றுக்காக மைல்களின் நியாயப் பெறுமதிக்கு செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றன.

மைல்களின் நியாயப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு, உள்வாங்கப்படும் பன்முகமான உள்ளீடுகளின் நிமித்தம் முகாமைத்துவம் ஒரு மட்டத்திலான நியாயப்பாட்டினை பிரயோகிக்கின்றது.

**(iii) பராமரிப்பு ஒதுக்கம்**

கம்பனியானது, குத்தகைகளின் கீழ் காணப்படும் பல விமானங்கள் மற்றும் என்ஜின்களுக்கு பராமரிப்பு நோக்கி உடன்பாடு கண்ட விதிமுறைகளின் அடிப்படையில்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

குத்தகைக்கு விடுபவருக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. இந்த மாதாந்தக் கொடுப்பனவுகள், மணித்தியாலங்களின் எண்ணிக்கை அல்லது பறந்த சுழற்சிகள் அல்லது பயணவழி காலம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும். முகாமைத்துவமானது காலாகாலமாக, மீளப்பெறத்தக்க தொகைகளின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் அத்தகைய கொடுப்பனவுகளின் மீளப்பெறத்தக்க தன்மையினை மதிப்பீடு செய்கின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது, அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது, வலுக்குன்றியுள்ளது எனக் கருதப்பட்டு, மீளப்பெறத்தக்க தொகைக்குக் குறைத்தெழுதப்படுகின்றது. (குறிப்பு 6 இனை பார்க்கவும்).

**(iv) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களுக்கான ஏற்பாடு**

பராமரிப்பு நோக்கிய உடன்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில், குத்தகைகளின் கீழ், கம்பனியானது, விமானச் சட்டகம், என்ஜின்கள் மற்றும் தரையிறக்கும் பொறி ஆகியவற்றில் கனத்த பராமரிப்பினை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. கனமான பராமரிப்புச் செலவினத்திற்கான ஏற்பாடானது, சீராக்கலின் தன்மையினைப் பொறுத்து பயன்பாடு அல்லது நேரம் என்பவற்றின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்பாட்டிற்கு வருவதில், பின்வருவன கவனிக்கப்படுகின்றன: பரிசீலனை மேற்கொள்ளும் நேரத்தில், சொத்துக்களின் மதிப்பீட்டு நிலைமையில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, ஆட்படவேண்டிய மூலப்பொருட்கள் மற்றும் நிறுவனச் செலவுகள் மற்றும் எப்போது பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பனவாகும். இந்த அனுமானங்கள், கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன், அவை நியாயப்பாட்டினை உறுதிசெய்வதற்காக கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன. ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க விளைவினை உருவாக்கும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன. (குறிப்பு 16.1 இனைப் பார்க்கவும்).

**(எ) விமானத்தினை திருப்பி வழங்கும் நிலைமைகளுக்கான ஏற்பாடு**

குத்தகை உடன்படிக்கையில், குத்தகைக்கு விடுபவரினால் குறிப்பிடப்பட்ட சில நிலைமையில் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட விமானத்தினை மீள் விநியோகிப்பதற்கு கம்பனி கடமைப்பட்டுள்ளது. விமானத்தினைத் திருப்பி வழங்கும் நிலைமைகள், எதிர்பார்க்கப்படும் செலவினம் தொடர்பான அனுமானங்கள், அதிகரிப்பு வீதங்கள், எதிர்பார்க்கப்படும் கடப்பாடு முதிர்வுடன் சமமான கழிவிறக்க வீதங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. ஏற்பாட்டிற்கு வருவதில், மீள் விநியோகிக்கும் நேரத்தில் சொத்தின் மதிப்பிடப்பட்ட நிலைமை, மீள்விநியோகம் மேற்கொள்ளப்படும் நேரத்தில் ஆட்படவேண்டிய மூலப்பொருள் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன், அவை மெய்யான பெறுமதிக்கு ஒத்ததாகக் காணப்படுவதனை உறுதி செய்வதற்காக, வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் பொருண்மையான விளைவினை ஏற்படுத்தும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன. (குறிப்பு 16.2 இனைப் பார்க்கவும்).

**(vi) விமானப் போக்குவரத்துச் சேவைகள் தொடர்பான நேரடி செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள்**

விமானப் போக்குவரத்துச் சேவைகளின் செயற்படுத்தலானது, எரிபொருள், தரையைக் கையாளும் கட்டணங்கள், தரையிறக்கம் மற்றும் தரித்திருத்தல் கட்டணங்கள், விமானத்தினுள் வழங்கப்படும் உணவுகள், ஒதுக்கீட்டு முறைகள், முன்பதிவுக் கட்டணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செலவுகள் போன்ற நேரடிச் செலவுகளில் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குதல் தவிர்க்க முடியாததாகும். மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடனிணைந்த அனுமானங்கள் என்பன அந்தச் சூழ்நிலைகளில் நியாயமானது என நம்பப்படும் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உள்ளதுடன், இவற்றின் விளைவுகள் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் கொண்டுசெல்லப்படும் பொறுப்புக்களின் பெறுமதிக்கு ஏற்பாடுகள் மேற்கொள்வதன் அடிப்படையினை உருவாக்குகின்றது.

**(vii) இருப்புக்கள்**

குழுமமானது, பௌதீக சரிபார்ப்பு மற்றும் முதிர்வின் அடிப்படையில் இருப்புக்களின் உளதாம் தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவம் பழமைபட்டுப்போன இருப்பினை தீர்மானிக்கும்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(viii) நிதியியல் சொத்துக்களின் சேதநட்டம்**

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், ஒரு நிதியியல் சொத்து அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதி ஒன்று வலுக்குன்றியுள்ளது என ஏதேனும் மெய்யான சான்று காணப்படுகின்றதா என்று குழுமமானது மதிப்பீடு செய்கின்றது. நிலுவையிலுள்ள காலம் மற்றும் மீளப்பெறுந்தன்மையில் நிச்சயமற்றதன்மையினைக் குறிக்கும் பாதுகாப்பு மற்றும் ஏதேனும் வேறு காரணிகளை முகாமைத்துவம் அறிந்திருந்தால், அத்தகைய வலுக்குன்றலினை மதிப்பிடுவதில் நியாயப்பாட்டினை பயன்படுத்துகின்றது.

**(இ) அனுமானங்கள்**

**(i) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம்**

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்களது ஓய்வுபெறல் நலன் திட்டத்தின் செலவானது, ஒரு காப்பீட்டுக் கணிப்பீட்டுப் பெறுமதியிடலைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்புப் பெறுமதியானது, வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதங்கள், ஓய்வு பெறல் வயது, ஏனைய மக்கள் தொகைசார் காரணிகள் மற்றும் கம்பனியின் தொடர்ந்து செல்லும் நிறுவனச் செயல்நிலை தொடர்பான அனுமானங்களின் அடிப்படையிலானதாகும். திட்டத்தின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு ஆட்பட்டதாகும். (குறிப்பு 2.4.16(a) இனைப் பார்க்கவும்).

**(ii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு**

ஒரு சுயாதீனத் தகைமையுடைய மதிப்பீட்டாளரின் சேவைகளைப் பயன்படுத்தி, காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் என்பன மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் அளவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் நியாயப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு, அனுமானங்கள் மற்றும் பெறுமதியிடல் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றார். மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### *2.4.1 வெளிநாட்டு நாணயப் பெயர்வு*

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தில் பதிவுசெய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், அறிக்கையிடப்படும் தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்திற்குப் பரிமாற்றல் வீதத்தைப் பயன்படுத்தி திருப்பப்படுகின்றன. இதன் விளைவாக ஏற்படும் வெளிநாட்டுப் பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவிடப்படும் நிதியல்லாத உருப்படிகள், ஆரம்பக் கொடுக்கல் வாங்கல் தினங்களில் உள்ள நாணயப் பரிமாற்று வீதங்களைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

### *2.4.2 வரிவிதிப்பு*

வருமான வரிச் செலவினம் நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. இது, ஒரு வணிகக் கூட்டுடன் தொடர்புடைய அல்லது உரித்துவத்தில் அல்லது ஏனைய விரிவான வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டவை ஆகியவற்றின் அளவைத் தவிர, இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிச்சயமற்ற வரி கவனிப்புகள் உள்ளடங்கலான வருமான வரிகள் தொடர்பான வட்டி மற்றும் தண்டப்பணங்கள் வருவான வரிகளின் வரையறையினைப் பூர்த்தி செய்யவில்லை என குழுமம் தீர்மானித்துள்ளதுடன், எனவே, அவற்றை LKAS 37 ஏற்பாடுகள், எதிர்பாரா

பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா சொத்துகளின் கீழ் கணக்கிட்டுள்ளது.

**(i) நடைமுறை வருமான வரி**
நடைமுறை வரி என்பது, ஆண்டுக்கு வரி விதிக்கத்தக்க வருமானம் அல்லது நட்டத்தில் செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க எதிர்பார்க்கப்படும் வரி மற்றும் கடந்த ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரிக்கு ஏதேனும் செம்மையாக்கல் ஆகியவற்றை உள்ளடக்கும். வருமான வரிகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் ஏதேனும் இருப்பின், அதனைப் பிரதிபலிக்கும் செலுத்துவதற்கு அல்லது பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் வரித் தொகையின் சிறந்த மதிப்பீடாக, செலுத்தவேண்டிய அல்லது பெறவேண்டிய நடைமுறை வரித் தொகை காணப்படுகின்றது. அறிக்கையிடல் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட வரி விகிதங்களைப் பயன்படுத்தி இது அளவிடப்படுகிறது. நடைமுறை வரியானது, பங்கிலாபங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் வரியினையும் உள்ளடக்குகின்றது.

சில குறைநிரப்பீடுகளைச் சந்தித்தால் மாத்திரமே நடைமுறை வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுகட்டப்படுகின்றன.

**கம்பனி**

**(அ) உள்ளூர் வரிவிதிப்பு**
2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் 2018 ஏப்ரல் 01 முதல் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் வருமான வரிக்கு பொறுப்பாளியாகும்.

**(ஆ) வெளிநாட்டு வரிவிதிப்பு**
கம்பனியானது, அதன் வெளிநாட்டு நடவடிக்கைகளில் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை காணப்படாத நாடுகளில் வரிக்கு பொறுப்பாயுள்ளது.

**துணை நிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**

இலங்கை முதலீட்டு சபையுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம், விமானச் சமையலறை மற்றும் மாற்றுப்பயண உணவகத்திலிருந்து வரும் வருமானமானது 2021 மே 31 வரை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் 2029 மே 31 இல் நிறைவடையும் எட்டு வருடங்களுக்கு 15% சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படும். ஏனைய மூலங்களிலிருந்து வரும் வருமானமானது சாதாரண வரி வீதத்தில் வரி விதிக்கப்படும்.

**(ii) ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி**
ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது, பொறுப்புக்கள் முறையினைப் பயன்படுத்தி, அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித் தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவை கொண்டு செல்லும் தொகைகளுக்கும் இடையேயான தற்காலிக வித்தியாசங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஒத்திவைக்கப்பட்ட வரியானது, அறிக்கையிடப்படும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில், தற்காலிக வித்தியாசங்கள் திருப்பப்படும் போது பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.

ஒரு ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தானது, பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்கு, எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் கிடைக்கத்தக்கதாய் உள்ளதுடன், அதற்கெதிராக அவை பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியத்தின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றது. ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள், ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், தொடர்புடைய வரி நலனின் எய்தப்பெறுதல் சாத்தியப்படாது இருக்குமாயின் அந்த அளவுக்குக் குறைக்கப்படும்.

*2.4.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்*

**(அ) கிரயம் மற்றும் பெறுமதியிடல்**
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அனைத்து உருப்படிகளும், ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்படுகின்றன. கிரயமானது, கையகப்படுத்தல் மற்றும் கட்டுமானம் ஆகியவற்றுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினங்களை உள்ளடக்குகின்றது. காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து ஏதேனும் பின்னரான அவற்றிலான பெறுமானத் தேய்வு மற்றும் வலுக்குன்றல் என்பவை கழிக்கப்பட்டு, கொண்டு செல்லப்படுகின்றது. ஏனைய அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத் தேய்வு மற்றும்/அல்லது ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் என்பன கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களிலான ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகைகள், ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு, உரித்துவத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாகத் திரட்டிக் கொள்ளப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஒரு மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியினை திருப்பும் அளவிற்கு அவ்வதிகரிப்பானது இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். ஓர் மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையானது, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் நடைமுறையிலுள்ள மிகையினை ஈடுசெய்கின்றது.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது, அதன் கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து வித்தியாசப்படாததை உறுதிப்படுத்துவதற்காக, ஒரு போதுமை நிகழ்மையுடன் பெறுமதியிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னரான கிரயங்கள், சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது அல்லது ஓர் தனிப்பட்ட சொத்தாக, உகந்தவாறு அங்கீகரிக்கப்படுகின்றது. இது, அந்த உருப்படியுடன் இணைந்த, எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உள்வரும் மற்றும் கிரயமானது நியாயமானவாறு அளவிடக்கூடியதாயிருக்கலாம் எனும் சாத்தியப்பாடு காணப்பட்டால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள், அவை ஏற்பட்ட காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் கட்டணமிடப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

**(i) விமானத்தின் சுழற்சி உதிரிப்பாகங்கள்**
விமானத்தினது சுழற்சி உதிரிப்பாகங்கள், இவை உருவச் சொத்துக்களாகக் கருதப்படுகின்றன, ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்பட்டு, அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாள் காலத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றன. இந்த உருப்படியானது "விமானம் தொடர்பான உபகரணம்" இன் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.

**(ii) மூலதன நடப்பு வேலைகள்**
மூலதன நடப்பு வேலைகள், அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன், அவை கையகப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து செயல்நிலைப்படுத்தப்பட்ட திகதி வரையான கட்டணப்படுத்தப்படும் அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கும். செயல்நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், மூலதன நடப்பு வேலைகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ்வரும் பொருத்தமான வகுப்பிற்கு மாற்றல் செய்யப்படுவதுடன், அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாள் வரை பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றன.

**(ஆ) பெறுமானத் தேய்வு**
பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடானது, நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி, அதன் கிரயத்தில் அல்லது அவற்றின் பெறுமதியிடல்களில் கணிப்பிடப்படுகின்றது. இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் இது கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய தொகைகளைப் பதிவழிப்பதற்காக, சமனான தவணைகளில் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| விமானம் தொடர்பான உபகரணம் | 8 வருடங்கள் அல்லது குத்தகைக் காலம், இவற்றில் குறைந்தது |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

| | |
|---|---|
| பொறி மற்றும் உபகரணங்கள் | உபகரணத்தின் அடிப்படையில் 3 இலிருந்து 10 வருடங்கள் வரையான காலப்பகுதி |
| கட்டிடங்கள் | எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு வாழ்நாட்கள் 15 முதல் 50 வருடங்கள் வரை |
| குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் | குத்தகைக் காலம் அல்லது 10 வருடங்கள், இவற்றில் குறைந்தது |

எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் பெறுமானத் தேய்வு முறை என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, பொருத்தமானவாறு பெரும்பாலும் செம்மையாக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**(இ) அங்கீகார நீக்கம்**
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியானது, அது விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படா விட்டால், அது, அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. சொத்தினது அங்கீகார நீக்கத்தில் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் கொண்டு செல்லும் தொகைக்கும் மற்றும் அதன் தேறிய விற்பனைத் தொகைக்கும் இடையேயான வித்தியாசமாகக் கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகார நீக்கம் செய்யப்பட்ட அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

**(ஈ) மீள் விலைமதிப்பீட்டு ஒதுக்கினை சொத்து பயன்பாட்டு தொழிற்பாட்டின் அடிப்படையில் பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகளாக மாற்றுதல்**
பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மீள் விலைமதிப்பீட்டு மிகைகளில் இருந்தான வருடாந்த கைமாற்றல் குத்தகை உரித்துக் காணி மீதான கட்டணங்களுக்கான மீள் விலைமதிப்பீட்டின் காரணமாக (சொத்தின் மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட கொண்டு செல்லும் தொகையின் அடிப்படையில் பெறுமானத் தேய்வுக்கும், சொத்தின் மூல செலவின் அடிப்படையில் பெறுமானத் தேய்வுக்கும் இடையிலான வேறுபாடு) அதிகரித்துச் செல்கின்ற பெறுமானத் தேய்விற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *2.4.4 அருவச் சொத்துக்கள்*
அருவச் சொத்துக்கள், சொத்துக்களின் உடமையாக்கலுக்கு சாத்தியப்படக்கூடிய எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுதல் மற்றும் சொத்துக்களின் கிரயமானது நம்பிக்கையுடன் அளவிடப்பட முடியுமாயின், அங்கீகரிக்கப்படுகின்றன. இதற்கமைய இந்தச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதி குறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்களைக் கழித்ததன் பின்னர் குறிப்பிடப்படுகின்றது.

கையகப்படுத்தும் அல்லது விருத்தி செய்யப்படும் கணினி மென்பொருளானது, அதனுடன் தொடர்புடைய வன்பொருளிலிருந்து பிரித்தெடுக்க இயலுமாயின், அதன் கிரயமானது தனியாக மூலதனமயமாக்கப்பட்டு 5 வருடங்களுக்கு விஞ்சாத காலப்பகுதியில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்புச் செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் பெறுமதிக் குறைப்புக் காலம் மற்றும் பெறுமதிக் குறைப்பு முறையானது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், இந்தச் சொத்தின் கொண்டுசெல்லப்படும் பெறுமதியானது, சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் கொண்டுசெல்லப்படும் பெறுமதியினை மீளப்பெற இயலாது எனக் குறிப்பிடின், வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

### *2.4.5 குத்தகைகள்*
ஓர் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், குழுமமானது அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது, ஒரு இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஒரு மறுபயனுக்குப் பரிமாற்றல் செய்யப்பட்டு, அதன் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையினைத் தெரிவிக்குமாயின், அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகை எனப்படும் அல்லது இவற்றைக் கொண்டிருந்தால் குத்தகை எனப்படும். ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதற்காக குழுமமானது பின்வருவனவற்றை மதிப்பீடு செய்கின்றது:

- ஒப்பந்தம் ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை உள்ளடக்கியுள்ளது - இது வெளிப்படையாக அல்லது மறைமுகமாகக் குறிப்பிடப்படலாம் மற்றும் பௌதீக ரீதியாக வேறுபட்டிருத்தல் வேண்டும் அல்லது ஒரு பௌதீக ரீதியான வேறுபட்ட சொத்தின் கொள்திறன் அனைத்தையும் கணிசமானளவு பிரதிநிதித்துவம் செய்திருத்தல் வேண்டும். வழங்குநர் வலிமையுடைய பதிலீட்டு உரிமையினைக் கொண்டிருந்தால், சொத்தானது அங்கீகரிக்கப்படாது;
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டிலிருந்து பயன்பாட்டுக்காலம் முழுவதும் அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமானளவுக்கு பெற்றுக்கொள்வதற்கான உரிமை; மற்றும்
- குழுமமானது, சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது. குழுமமானது, சொத்தை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் என்ன நோக்கத்திற்காகப் பயன்படுத்துவது என்று மாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருந்தால் இந்த உரிமையினைக் கொண்டிருக்கும். அரிதான சந்தர்ப்பங்களில், சொத்தானது எவ்வாறு மற்றும் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தால், பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுமத்திற்கு சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும் :
  - சொத்தினைச் செயற்படுத்துவதற்கான உரிமையினை குழுமம் கொண்டுள்ளது; அல்லது
  - குழுமமானது சொத்தானது எவ்வாறு மற்றும் என்ன நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் என்று முன்தீர்மானிக்கும் விதத்தில் வடிவமைத்திருந்தால்.

ஒரு குத்தகைக் கூறினை உள்ளடக்கியுள்ள ஒரு ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் அல்லது அதன் மீள்மதிப்பீட்டில், குழுமமானது ஒப்பந்தத்திலுள்ள மீள்பயனை ஒவ்வொரு குத்தகைக் கூறுக்கும் அவற்றின் பொருத்தமான தனியான விலைகளின் அடிப்படையில் ஒதுக்குகின்றது.

எவ்வாறாயினும், காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையில் அது குத்தகையாளராக இருந்தால், குழுமமானது குத்தகையல்லாத கூறுகளைப் பிரிக்காது குத்தகை மற்றும் குத்தகையல்லாத கூறுகளை ஒரு தனியான குத்தகைக் கூறாகக் காண்பிப்பதற்கு தெரிவு செய்துள்ளது.

2.4.5.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் (ப.உ.சொ)
குழுமமானது, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள ஒரு சொத்தினையும் மற்றும் ஒரு குத்தகைப் பொறுப்பினையும் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கின்றது. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது, ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியின் ஆரம்பத் தொகையானது, ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, ஏதேனும் ஆட்பட்ட ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் உள்ளார்ந்த சொத்தினைக் கழற்றுவதற்கான மற்றும் அகற்றுவதற்கான ஒரு மதிப்பிடப்பட்ட செலவுகள் அல்லது உள்ளார்ந்த சொத்தினை திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலைக்கு புனருத்தாரணம் செய்வதற்கு, அதிலிருந்து ஏதேனும் பெறப்பட்ட குத்தகைச் சலுகைகளைக் கழித்தல் என்பனவாகும்.

**(அ) விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகை**
கம்பனியானது, விமானங்களையும், என்ஜின்களையும் அதன் வானூர்தி தொகுதியில் குத்தகைக்குப் பெற்றுக்கொள்கின்றது. விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகையானது பொதுவாக 2 முதல் 15 வருடங்களுக்குச் செல்லுபடியாகும்.

விமானக் குத்தகைகள் விமானத்தினைத் திருப்பிக் கொடுக்கும் நிலைமைக்கான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. குத்தகையாளரினால் உள்ளார்ந்த சொத்தினை நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் (குறிப்பு 15.2) தேவைப்படும் நிலைமைக்கு புனருத்தாரணம் செய்வதற்கு ஆட்படும் செலவினங்களிலான ஒரு மதிப்பீடானது, கடப்பாடு உருவாக்கப்பட்டவுடன் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துடன் கூட்டப்படுகின்றது. ஏனைய விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் (விமானத்தின் கனமான பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் பொறி சீராக்கல் செலவினங்கள் தவிர்ந்தவை) ஒரு ஆட்பட்ட அடிப்படையில், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையானது குறிப்பு 2.4.15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தகையின் ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்பானது மற்றும் ஏனைய குத்தகைக் கொடுப்பனவுகள் அனைத்தும் அதே கொடுக்கல் வாங்கலிலிருந்து உருவாகின்றது. எனவே, ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட வைப்பின் முதல் தொகைக்கும் மற்றும் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது, குத்தகையாளரால் செலுத்தப்படவேண்டிய ஒரு மேலதிகத் தொகையாகக் கருதப்படுகின்றது.

வைப்பானது, SLFRS 9 இன் நோக்கெல்லையினுள் காணப்படுவதுடன், இது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டுமென்பதுடன், முதல் தொகைக்கும், வைப்பினது நியாயப் பெறுமதிக்கும் இடையேயான மிகையானது, SLFRS 16 குத்தகைகள் நோக்கெல்லையினுள் காணப்படுதல் வேண்டும். வைப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 2.4.9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

12 மாதங்களுக்குள் குத்தகைக் காலம் நிறைவடையும் விமானக் குத்தகைகள் கருத்திலெடுக்கப்படாது குறுங்கால குத்தகைகள் போன்று கணக்கீடு செய்யப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விமானக் குத்தகை வாடகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(ஆ) காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகை**
குழுமமானது, இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அதன் காணி மற்றும் கட்டிடங்களைக் குத்தகைக்கு எடுக்கின்றது. சில காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது, இரத்து செய்யப்பட முடியாத ஒப்பந்தக் காலப்பகுதிக்கு முன்னர் குழுமத்தினால் நிறைவேற்றக்கூடிய விரிவாக்கல் தெரிவுரிமைகளைக் கொண்டிருக்கும். செயல்படுத்தத்தக்கவாறு, குழுமமானது புதிய குத்தகைகளில் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்காக விரிவாக்கல் தெரிவுரிமைகளை உள்ளடக்குவதற்கு முனைகின்றது.

குத்தகையின் ஆரம்பத்தில் குழுமமானது விரிவாக்கல் தெரிவுரிமைகளைக் கையாளுவதற்கு நியாயமான, நிச்சயம் உள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. குழுமமானது, அதன் கட்டுப்பாட்டினுள் உள்ள சூழ்நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் அல்லது குறிப்பிடத்தக்க நிகழ்வு காணப்படுமாயின், தெரிவுரிமைகளைக் கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மீள்மதிப்பீடு செய்கின்றது.

**(இ) வாகனங்களின் குத்தகை**
குழுமத்தின் வாகனக் குத்தகைகள் 2 முதல் 5 வருடக் காலப்பகுதியினைக் கொண்டதாகும்.

**பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் பெறுமானத்தேய்வு**
ஆரம்பத் திகதியிலிருந்து, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினது பயன்பாட்டு வாழ்நாளின் இறுதி அல்லது குத்தகைக் காலப்பகுதியின் இறுதி இவற்றில் எது முன்னர் வருகிறதோ அதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது, பின்னர் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. ஆதனம் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றிற்கு அதே அடிப்படையிலேயே பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது, வலுக்குன்றல் நட்டங்களினால், ஏதேனும் இருப்பின், காலாகாலம் குறைக்கப்படுவதுடன் மற்றும் குத்தகைப் பொறுப்பின் சில மீள்அளவீடுகளுக்காக செம்மையாக்கப்படுகின்றன.

2.4.5.2 குத்தகைப் பொறுப்பு
ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கொடுப்பனவு செய்யப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் குத்தகைப் பொறுப்பானது ஆரம்பத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. இது, குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றது அல்லது, அந்த வட்டி வீதமானது உடனடியாகத் தீர்மானிக்கப்பட முடியாவிடின், குத்தகையின் ஆரம்பத்தில் நிலவிய குழுமத்தின் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டி வீதத்தினாலாகும். பொதுவாக, குழுமமானது அதன் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டிவீதத்தினைக் கழிவு வீதமாகப் பயன்படுத்துகின்றது.

குத்தகைப் பொறுப்பு அளவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- பொருளிலான நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலான நிலையான கொடுப்பனவுகள்;
- ஒரு சுட்டி அல்லது ஒரு வட்டி வீதத்தில் தங்கியுள்ள மாற்றமடையும் குத்தகைக் கொடுப்பனவுகள், ஆரம்பித்த திகதியில் சுட்டி அல்லது வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி ஆரம்பநிலையில் அளவிடப்படுகின்றது;
- ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்; மற்றும்
- ஓர் கொள்வனவு தெரிவுரிமையின் கீழ் உள்ள கையாளுதல் விலையினை குழுமமானது நிச்சயமாகக் கையாளும் என நியாயமாகக் காணப்பட்டால், குழுமமானது, ஒரு நீடிப்புத் தெரிவுரிமையினைக் கையாளும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டால் ஒரு தெரிவுரிமையுள்ள புதுப்பித்தல் காலத்தில் குத்தகைக் கொடுப்பனவுகள், மற்றும் குழுமமானது முன்னரே முடிவுறுத்தும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டாலொழிய ஓர் குத்தகையினை முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப்பணங்கள்.

குத்தகைப் பொறுப்பானது, பயனுறுதிமிக்க வட்டி முறையினைப் பயன்படுத்தி, பெறுமதிக் குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது, பின்வரும் சந்தர்ப்பங்களில் மீள்அளவீடு செய்யப்படுகின்றது. ஓர் சுட்டியில் அல்லது வட்டிவீதத்திலிருந்தான ஓர் மாற்றத்திலிருந்து எழக்கூடிய எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால், ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தவேண்டிய எதிர்பார்க்கும் தொகையினது குழுமத்தின் மதிப்பீட்டில் ஒரு மாற்றம் காணப்பட்டால், அல்லது குழுமமானது ஓர் கொள்வனவினை, ஓர் நீடிப்பினை அல்லது முடிவுறுத்தல் தெரிவுரிமையினைக் கையாளுமா என்ற அதன் மதிப்பீட்டினைக் குழுமம் மாற்றியிருந்தால்.

குத்தகைப் பொறுப்பானது, இவ்வாறு மீளஅளவிடப்படும்போது, ஓர் ஏற்புடைய செம்மையாக்கலைப் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டு செல்லல் தொகையில் மேற்கொள்ளப்படும் அல்லது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது, பூச்சியத்திற்குக் குறைக்கப்பட்டிருந்தால், அது இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றது.

2.4.5.3 குறுங்காலக் குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியிலான சொத்துக்களின் குத்தகைகள்
குறைவான பெறுமதியுடைய சொத்துக்களது குத்தகைகளுக்கு அல்லது 12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குத்தகைக் காலத்தினைக் கொண்ட குறுங்காலக் குத்தகைகளுக்குப் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகைப் பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது, இந்தக் குத்தகைகளுடன் இணைந்த குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

2.4.5.4 கொவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள்
குழுமமானது, கொவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள் - IFRS 16 க்கான

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

திருத்தங்களைப் பிரயோகித்துள்ளது. குழுமமானது நடைமுறை உபாயங்களைப் பிரயோகித்துள்ளதுடன், இது கொவிட்-19 தொற்றின் நேரடி விளைவான தகைமையுடைய வாடகைச் சலுகைகள் குத்தகைத் திருத்தங்களா என மதிப்பிடாதிருப்பதற்கு அனுமதிக்கின்றது. ஒத்த பண்புகள் மற்றும் ஒத்த சூழ்நிலைகளுடனான ஒப்பந்தங்களுக்கு குழுமமானது தொடர்ச்சியாக நடைமுறை உபாயங்களைப் பிரயோகிக்கின்றது. குத்தகைகளிலான வாடகைச் சலுகைகளுக்கு நடைமுறை உபாயங்களை பிரயோகிக்காமலிருப்பதற்கு குழுமம் தெரிவுசெய்யும்போது, அல்லது நடைமுறை உபாயங்களுக்குத் தகைமையற்றுக் காணப்படும்போது, குழுமமானது ஒரு குத்தகைத் திருத்தம் உள்ளதா என மதிப்பீடு செய்கின்றது.

### 2.4.6 இருப்புக்கள்

இருப்புக்கள் விமானம் மற்றும் தரைச் சேவைகள் தொடர்பான கையிருப்புக்கள், மூலப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களை உள்ளடக்குகின்றன.

இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய கைகூடத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதில் குறிப்பிடப்படுகின்றது. இருப்புக்களின் கிரயமானது, கொள்வனவுகள் கிரயம், மாற்றுதல் கிரயம், மற்றும் இருப்புக்களை தற்போதைய இடம் மற்றும் நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு ஆட்பட்ட ஏனைய கிரயங்கள் போன்றவற்றின் கூட்டுத்தொகையாகும்.

இருப்புக்களின் கிரயத்தினைக் கணிப்பிடுவதற்கு, நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையானது பிரயோகிக்கப்படுகின்றது. தேறிய கைகூடக்கூடிய பெறுமதியானது, பின்வருவனவற்றைப் பிரதிபலிக்கின்றது. விற்பனை விலையிலிருந்து அனைத்து மதிப்பிடப்பட்ட நிறைவடைதல் கிரயங்கள் மற்றும் விற்பனையொன்றை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் கிரயங்கள் என்பவற்றை கழித்து பெறப்படும்.

### 2.4.7 நிதியல்லாத சொத்துக்களின் சேதநட்டம்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமமானது ஏதேனும் ஒரு சொத்து வலுக்குன்றக்கூடிய அறிகுறி தென்படுகின்றதா என மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் ஏதேனும் காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த சேதநட்டப் பரிசோதனை தேவைப்படின், குழுமமானது சொத்துக்களின் மீளப்பெறத்தக்க தொகையில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகையானது, அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளதாகக் கருதப்பட்டு அதன் மீளப்பெறத்தக்க பெறுமதிக்குக் குறைத்தெழுதப்படும்.

### 2.4.8 நியாயப் பெறுமதி அளவீடு

குழுமமானது, அதன் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களை நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது. நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 03 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நியாயப் பெறுமதி என்பது, அளவிடப்படும் திகதியில் சந்தைப் பங்குபற்றுநர்களிடையேயான ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்தினை விற்பனை செய்வதற்குப் பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலை எனப் பொருள்படும். நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தை விற்பனை செய்யும் கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பினை மாற்றல் செய்யும் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் உத்தேசத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில், அல்லது
- முதன்மைச் சந்தையொன்று காணப்படாவிடின், சொத்து அல்லது பொறுப்பிற்கான மிகவும் சாதகமான சந்தை.

முதன்மைச் சந்தை அல்லது மிகவும் சாதகமான சந்தை குழுமத்தினால் அணுகக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது, சந்தைப் பங்குபற்றுநர்கள் சொத்தினை அல்லது பொறுப்பினை விலையிடும்போது பயன்படுத்துவார்கள் என்ற அனுமானத்தினைப் பயன்படுத்தியும், சந்தைப் பங்குபற்றுனர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றார்கள் என்ற அனுமானம் என்பவற்றில் அளவீடு செய்யப்படுகின்றது.

நிதியல்லாத சொத்துக்களின் நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது அதனை இன்னுமோர் சந்தைப் பங்குபற்றுநருக்கு விற்பனை செய்வதன் மூலம், அச்சந்தை பங்குபற்றுநர் சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினைப் பயன்படுத்துவார், பொருளாதார நலன்களை உருவாக்கும் சந்தைப் பங்குபற்றுநரின் ஆற்றலைக் கணக்கிற்கொள்கின்றது.

குழுமமானது, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான பெறுமதியிடல்கள் நுட்பங்களைப் பயன்படுத்துவதுடன், நியாயப் பெறுமதியினை அளவீடு செய்வதற்காக இவற்றுக்குப் போதுமான தரவுகள் கிடைக்கப்பெறுதல், பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும், அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டினைக் குறைத்தல் என்பவையாகும்.

நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட அனைத்து சொத்துக்களும் நியாயப் பெறுமதி படிநிலையினுள் வகைப்படுத்தப்பட்டு, நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

- மட்டம் 1 - ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான உயிர்ப்புள்ள சந்தைகளில் உள்ள விலை கூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) சந்தை விலைகளில்
- மட்டம் 2 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்
- மட்டம் 3 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு அவதானிக்கப்பட இயலாத ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

மீளத்தோன்றும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் இறுதியிலும் வகைப்படுத்தலினை மீள்மதிப்பீடு செய்வதன்மூலம் படிநிலைகளின் மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதா (நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில்) என்று குழுமமானது தீர்மானிக்கின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் பெறுமதியிடல்களில் வெளிவாரி மதிப்பீடு செய்பவர்கள் நன்மதிப்பு, சுயாதீனத்தன்மை மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். குழுமமானது வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர், ஒவ்வொரு விடயத்திலும் எந்த பெறுமதியிடல் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகள் பயன்படுத்தப்படல் வேண்டும் எனத் தீர்மானிக்கின்றது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களது வகுப்புகளை தன்மை, சொத்து அல்லது பொறுப்பின் தனிச்சிறப்புகள் மற்றும் இடர்கள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நியாயப் பெறுமதி படிநிலையிலான மட்டம் என்பனவற்றின் அடிப்படையில் தீர்மானித்துள்ளது.

### 2.4.9 நிதியியல் கருவிகள்

#### 2.4.9.1 நிதிச் சொத்துக்கள்

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**

நிதியியல் சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி (FVOCI) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி (FVTPL) என வகைப்படுத்தப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்கள் (இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக) கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுமமானது ஒரு தரப்பினராக வந்த கொடுக்கல் வாங்கல் திகதியின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதியியல் சொத்தானது, ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப்

பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கொள்வனவு அல்லது வழங்கலுடன் நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களைக் கருத்திற்கொள்கிறது.

**பின்னரான அளவீடு**
நிதியியல் சொத்துக்களின் வகுப்பிடலானது, பொதுவாக ஒரு நிதியியல் சொத்தானது முகாமைப்படுத்தப்பட்டு, அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளையுடைய வணிக மாதிரிகளின் அடிப்படையிலானதாகும்.

ஒரு நிதியியல் சொத்தானது, அது, இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் (FVTPL) குறிப்பிடப்படாத மற்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் சந்திப்பின் அது பெறுமதிக் குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது:

- ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களைத் திரட்டுவதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கையுடைய ஒரு வணிக மாதிரியினுள் சொத்து வைத்திருக்கப்பட்டிருப்பின்; மற்றும்
- நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட குறிப்பிட்ட திகதிகளிலான காசுப்பாய்ச்சல்களுக்கு வழிசமைக்கும் நிதியியல் சொத்தின் ஒப்பந்த ஏற்பாடுகள்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத ஒரு உரித்துவ முதலீட்டின் ஆரம்ப அங்கீகாரத்தின்போது, குழுமமானது, நியாயப் பெறுமதியில் பிற்பட்ட மாற்றங்களை ஏனைய விரிவான வருமானக் கூற்றினூடாக மாற்றவியலாதவாறு முன்னிலைப்படுத்துவதற்கு தெரிவு செய்துள்ளது. இத்தெரிவானது, ஒவ்வொரு கருவி மூலம் கருவி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குழுமமானது, வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், விமானப் பராமரிப்பு ஒதுக்கம், விமானம் மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள், குறுங்கால முதலீடுகள் மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகளை நிதியியல் சொத்துக்களாக வகைப்படுத்தி பின்னர் அவை பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

**அங்கீகார நீக்கம்**
நிதியியல் சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முதிர்வடையும்போது, குழுமமானது, ஒரு நிதியியல் சொத்தினை அங்கீகார நீக்கம் செய்கின்றது, அல்லது நிதியியல் சொத்தினது உடைமையின் அனைத்து இடர்நோ்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு மாற்றல் செய்யப்படும் ஓர் கொடுக்கல் வாங்கலின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகளை மாற்றல் செய்தால், அல்லது குழுமமானது உடைமையின் அனைத்து இடர்நோ்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு வைத்திருக்காமலும், மாற்றல் செய்யாமலும் மற்றும் அது நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டினை வைத்திருக்காமல் இருக்கும் போது நீக்கம் செய்கின்றது.

ஒரு நிதியியல் சொத்தின் அங்கீகார நீக்கத்தின்போது, சொத்தின் கொண்டுசெல்லும் தொகைக்கும் (அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்ட சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்படும் கொண்டு செல்லல் தொகை) பின்வருவனவற்றின் கூட்டுத்தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது,

(i) பெறப்பட்ட மீள்பயன் (ஏதேனும் பெறப்பட்ட புதிய சொத்திலிருந்து பொறுப்பேற்ற ஏதேனும் பொறுப்பினைக் கழித்தல் உள்ளடங்கலாக) மற்றும்,
(ii) ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**நிதியியல் சொத்துக்களின் சேதநட்டம்**
ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அல்லது பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களிலான எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களுக்கு குழுமமானது ஓர் நட்ட படியினை அங்கீகரிக்கின்றது.

எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களை அளவிடுவதற்கு எளிமையாக்கப்பட்ட அணுகுமுறையினை குழுமமானது பயன்படுத்துவதுடன், அனைத்து வர்த்தக வருமதிகளுக்கும் எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் நட்ட படியினையும் பயன்படுத்துகின்றது.

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கான நட்டப் படிகள், சொத்துக்களின் மொத்தக் கொண்டுசெல்லல் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

நியாயப்பாடுகளும், இணைந்த அனுமானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், உகந்தது எனக் கருதப்படும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை பிரதிபலிப்பதுடன், இந்தச் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்கலாகும்.

2.4.9.2 நிதியியல் பொறுப்புக்கள்

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**
அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் உள்ளடங்கலாக) குழுமமானது, கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளின் ஒரு தரத்தவராக வரும் கொடுக்கல் வாங்கல் தினத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கின்றது.

குழுவானது எந்த நோக்கத்திற்காக பொறுப்பு பெறப்பட்டது என்பதைப் பொறுத்து, அதன் நிதிப் பொறுப்புகளை இரண்டு வகைகளில் ஒன்றாக வகைப்படுத்துகிறது, இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் அல்லது ஏனைய நிதியியல் பொறுப்புக்கள், பொறுப்பு கையேற்கப்பட்ட நோக்கத்தில் தங்கியுள்ளது.

ஒரு நிதியியல் பொறுப்பானது, ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாக உடமையாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கருதப்படுகின்றன.

**பிற்பட்ட அளவீடு**
குழுமமானது, வட்டி செலுத்தப்படும் கடன்கள், விமான பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஒதுக்கம், வர்த்தக மற்றும் ஏனைய கொடுகடமதிகள் என்பவற்றை நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தியுள்ளது.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் பொறுப்புக்கள் பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

ஒரு நிதியியல் பொறுப்பின் பெறுமதி குறைப்புக் கிரயமானது, ஆரம்ப அங்கீகாரத்தின்போது நிதியியல் பொறுப்பானது அளவீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து, முதலின் திருப்பிசெலுத்தல்கள் கழிக்கப்பட்டு, திரண்ட பெறுமதிக் குறைப்பு கூட்டப்பட்டு அல்லது கழிக்கப்படுகின்றது. இது பின்வருவனவற்றைப் பயன்படுத்திக் கணிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பத் தொகைக்கும், முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசத்தில் செயற்திறனான வட்டி முறையினைப் பயன்படுத்திக் கணிக்கப்படுகின்றது.

**அங்கீகார நீக்கம்**
பொறுப்பின் கீழான கடப்பாடானது, வெளியேற்றப்பட்டால் அல்லது இரத்துச் செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது.

நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது, ஆரம்பப் பொறுப்பின் அங்கீகார நீக்கமாகக் கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் கொண்டு செல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.4.9.3 நிதியியல் கருவிகளின் ஈடுசெய்கை
கீழ்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும்:

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான வலியுறுத்தத்தக்க சட்ட உரிமை நடைமுறையில் காணப்படல் வேண்டும் மற்றும்
- ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவுக்கான நோக்கம் காணப்படுகின்றது, அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை விற்று பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்

### *2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கம்*

விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது, மாதாந்த அடிப்படையில், எதிர்கால என்ஜின்கள் சீராக்கல்கள், விமானச் சட்டகம் மற்றும் விமானத்தின் பகுதிகள் என்பவற்றுக்கு செயற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுபவர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. கம்பனியானது, குத்தகைக்கு விடுபவரிடமிருந்து என்ஜின்கள் சீராக்கல்கள், விமானச் சட்டகங்கள் மற்றும் விமானத்தின் பகுதிகளில் ஆட்பட்ட கிரயத்தினைப் பராமரிப்பு நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர், அத்தகைய ஒதுக்கத்திற்கு எதிராக (ஒதுக்கத்திற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரைக்கும்) மீளப்பெறுகின்றது.

விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது, தன்மையினைப் பொறுத்து, ஒரு நிதிச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த வகையான நிதியியல் சொத்துக்களுக்கான உரிய கணக்கீட்டுக் கொள்கையானது மேலே குறிப்பு 2.4.9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### *2.4.11 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்*

வர்த்தகக் கடன்பட்டோர்கள், வைப்புகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் உள்ளடங்கலாக (கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள வைப்புகள் மற்றும் ஏனைய வருமதிகளின் கீழான நிதியல்லாத சொத்துக்கள் தவிர்ந்தவை) கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வகை நிதியியல் சொத்துக்களுக்கான தன்மையினைப் பொறுத்து உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மேலே குறிப்பு 2.4.9.1. இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### *2.4.12 முதலீடுகள்*

**துணை நிறுவனத்தில் முதலீடு**
கம்பனியின் நிதிக் கூற்றுக்களில், துணை நிறுவனத்திலான முதலீடு கிரயத்தில், தற்காலிக பெறுமதிக் குறைவு தவிர்ந்த ஏதேனும் தேறிய வலுக்குன்றலுக்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### *2.4.13 குறுங்கால முதலீடுகள்*

மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினையுடைய வங்கிகளிலுள்ள நிலையான வைப்புகள் குறுங்கால வைப்புகளாகும். குறுங்கால முதலீடுகள் அவற்றின் பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

### *2.4.14 காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்*

காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் என்பது, பின்வருமாறு பொருள்படும். கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு, அழைப்பு வைப்புகள் மற்றும் பெறுமதியில் மாற்றமேற்படும் அற்பமான இடர்நேர்கைக்கு உட்பட்ட தெரிந்துகொண்டுள்ள காசுத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுடைய குறுங்கால முதலீடுகள் ஆகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமனானவைகளும், வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களுக்கு நிகர்செய்யப்பட்டு உள்ளடக்கப்படுகின்றது. குறைந்த முதிர்வுகளைக்கொண்ட முதலீடுகளும் (கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசுக்குச் சமனானவைகளாகக் கருதப்படுகின்றன. நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மேலதிகப்பற்றுக்கள் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### *2.4.15 ஏற்பாடுகள்*

**(i) பொதுவானவை**
ஒரு கடந்தகால நிகழ்வின் விளைவாக குழுமமானது ஒரு நடைமுறைக் கடப்பாட்டினைக் (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருந்தால் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இது கடப்பாட்டின் தொகை குறித்து ஓர் நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களது வெளிப்பாய்ச்சல் என்பவற்றுக்கான நிகழக்கூடிய சாத்தியம் காணப்படல் வேண்டும். குழுமமானது, ஏற்பாட்டின் சிலவற்றை அல்லது அனைத்தையும் செலவீடு செய்தல் வேண்டும் என எதிர்பார்த்தால், அந்தச் செலவீடானது, ஒரு தனிப்பட்ட சொத்தாக அங்கீகரிக்கப்படுவதுடன், ஆனால், அந்தச் செலவீடானது, கிட்டத்தட்ட நிச்சயமாக இருந்தால் மாத்திரமே. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினங்கள் ஏதேனும் செலவீடுகள் கழிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

**(ii) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்கள்**
குழுமமானது, விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களை (விமான கனரக பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான சீராக்கல் செலவுகள் தவிர்ந்த) ஏற்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. விமான கனரக பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான சீராக்கல் செலவினங்கள் குறிப்பு 2.3.1 (B) (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு கணக்கீடு செய்யப்படுகின்றது. மூன்றாந்தரப்பு பராமரிப்பு உடன்படிக்கைகளின் “மணித்தியாலத்திற்கான சக்தி” இன் மூலம் என்ஜின் சீராக்கல் கிரயமானது, உடன்படிக்கையின் காலப்பகுதியில் உடன்பட்ட மணித்தியாலத்திற்கான நிலையான வீதத்தில் செலவு வைக்கப்படுகின்றது.

**(iii) விமானத்தை மீள வழங்கும் நிலைமையிலான ஏற்பாடுகள்**
விமானத்தினை மீள வழங்கும் நிலைமைகளுக்கான (சீராக்கல் கடப்பாடுகள்) ஏற்பாடானது, மீள் விநியோகிக்கும் நேரத்தில் சில விமானம் மற்றும் என்ஜின்களின் ஒப்பந்தக் குத்தகை இறுதிக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான மதிப்பிடப்பட்ட கிரயத்தினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. குத்தகையின் ஆரம்பத்தில், நடைமுறையிலுள்ள ஊர்திகளது திட்டம் மற்றும் நீண்டகால பராமரிப்பு அட்டவணைகளைக் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான எதிர்பார்க்கப்படும் கிரயத்தின் நிகழ்காலப் பெறுமதியானது ஒரு ஏற்பாடாக அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்பட்டு குத்தகைக் காலப்பகுதியில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றன. இணைந்த கழிவின் பிரித்தெடுப்பானது, குத்தகைக் காலத்தின் மீது ஒரு நிதிச் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான மதிப்பிடப்பட்ட கிரயத்திலான பிற்பட்ட மாற்றங்கள், விமான மீளக் கையழித்தல் நிலைமைகளுக்கான ஏற்பாட்டிற்கான மீள்அளவீடாக கணக்கிடப்படுவதுடன், கிடைக்கப்பெறுமாயின், தொடர்புடைய பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்திற்கான ஒரு தொடர்புடைய தாக்கத்துடன், எஞ்சியுள்ள குத்தகைக் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. இல்லையெனில், மீள்அளவீடானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கணக்கீடு செய்யப்படுகின்து. மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 2.3.1. (B) (v) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### *2.4.16 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு*

**(அ) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை**
பணிக்கொடையானது ஓர் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமாகும். கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனமானது, 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஊழியர்களது ஆகக்குறைந்த ஓய்வுபெறல் வயதுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. குழுமமானது, நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்காலப் பெறுமதியினை ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி அளவீடு செய்கின்றது.

வெளிநாட்டு நிலையங்களின் பணியாட்களுக்கான ஓய்வுபெறல் நலனானது பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டவாக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்து எழும் காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன், நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பணிக்கொடைப் பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில், “ஏனைய நீண்டகால பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டைத் தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சட்டங்கள் / திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

**(ஆ) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - விடுமுறையினைப் பணமாக்குதல்**
ஓய்வுபெறும்போது உள்ளூர் பணிக்கொள்ளல் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அறிக்கையிடப்படும் திகதியின் இறுதியிலிருந்து பயன்படுத்தப்படாத திரண்ட விடுமுறைக்கு குழுமம் பொறுப்பாளியாகும். பயன்படுத்தப்படாத திரண்ட விடுமுறை நோக்கிய குழுமத்தின் தேறிய கடப்பாடானது, உள்ளூர் பணியாட்களின் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்கால பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இது ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி அளவீடு செய்யப்படுகின்றது.

விடுமுறையினைப் பணமாக்குவதிலிருந்து எழுகின்ற காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள்/நட்டங்களை குழுமமானது, ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரித்து விடுமுறையினைப் பணமாக்குதல் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விடுமுறையினைப் பணமாக்கும் பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில் "ஏனைய பொறுப்புக்கள்" இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

**(இ) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**
இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்கள் பொருத்தமான நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்புகளுக்கு உரிமையுள்ளவர்களாவர். கம்பனியானது, மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது. அவ்வாறே துணை நிறுவனமும் இவற்றுக்கு முறையே 12% இனையும் 3% இனையும் பங்களிப்பு செய்கின்றது.

வெளிநாட்டைத் தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சட்டங்கள் ∴ திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

*2.4.17 அடிக்கடி பறக்கும் திட்டம்*
திரட்டிய மைல்கள் அடிப்படையில் இத்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு பிரயாண வெகுமதிகளை வழங்கும் "FlySmiLes" அடிக்கடி பறக்கும் திட்டத்தினைச் செயற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர் நலன்கள் வெகுமதிக்கு உடைமையாக்கத்தக்க பயணிகள் வருவாயின் ஒரு பகுதியானது அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்படுகின்றது. வருவாயின் ஒத்திவைப்பானது, வரலாற்று ரீதியான மீட்டல் போக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், இது பின்னர் இந்த நலன்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளைத் திட்டமிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. வெகுமதியாக வழங்கப்பட்ட வரவுகளின் நியாயப் பெறுமதியானது, வெகுமதி வரவுகள் மீட்கப்படக்கூடிய சேவைகளின் நிறையிடப்பட்ட சராசரி பெறுமதிக்கு மேற்கோள் காட்டி மதிப்பிடப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, பொறுப்பானது ஏற்றவாறு செம்மையாக்கப்படுகின்றது. திட்டத்தின் பங்காளிகளின் சேவைகளை பயன்படுத்துவதனூடாக அட்டுறு செய்யப்பட்ட மைல்கள் பங்குபற்றும் பங்காளிகளினால் செலுத்தப்படுவதுடன், அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்பட்ட வருவாயாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதிர்வடையும் என எதிர்பார்க்கும் மைல்களுக்கு ஒரு பொறுப்பானது அங்கீகரிக்கப்படுவதில்லை.

*2.4.18 வருமான அங்கீகாரம்*
வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாயினை ஐந்து-படி மாதிரியின் அடிப்படையில் குழுமமானது அங்கீகரிக்கின்றது.

ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றல் செய்வதற்கு ஈடாக ஓர் நிறுவனம் உரிமையுள்ளது என எதிர்பார்க்கும் மறுபயனைப் பிரதிபலிக்கும் ஓர் தொகைக்கு வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது.

**(அ) விமான நிறுவன வருமானம்**
பயணிகள், சரக்கு, மிகையான பொதி மற்றும் அஞ்சல் என்பவற்றை ஏற்றிச்செல்லுதல், விமான நிலைய முனையச் சேவைகள், பொறியியல் சேவைகள், வான் பட்டயங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளிலிருந்து பிரதானமாக வருவாயானது உருவாக்கப்படுகின்றது.

(i) பயணிகள், சரக்கு, மிகையான பொதி விற்பனைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள் என்பன போக்குவரத்து /சேவை வழங்கப்பட்டவுடன் செயற்பாட்டு வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.
(ii) பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன ஏற்றிச்செல்வதற்கான முன்விற்பனையாக நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன அவை நிர்ணயிக்கப்பட்ட முதிர்வின்போது பயன்படுத்தப்படாமலிருந்தால் வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.
(iii) விமான நிலைய முனையச் சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது, சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.
(iv) மூன்றாம் தரப்பு பராமரிப்பு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது, அத்தகைய நிகழ்வுகள் நிறைவடைந்தவுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.
(v) விமானச் செயற்பாட்டு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது, சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

**(ஆ) பொருட்களின் விற்பனை**
ஒரு வாடிக்கையாளருக்கு, வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையினை மாற்றல் செய்யும் செயற்பாட்டு கடப்பாட்டினை நிறுவனம் எப்போது திருப்திபடுத்துகின்றதோ, அப்போது குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது. வருவாயானது பெறுமதி சேர்க்கப்பட்ட விற்பனை வரியினை விலக்கி மற்றும் வர்த்தகக் கழிவுகளைக் கழித்ததன் பின்னர் வரும் தொகையாகும். வரவேண்டிய மறுபயன், தொடர்புடைய கிரயங்கள் அல்லது பொருட்களின் சாத்தியமான திரும்பல் மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு என்பவை தொடர்பாக குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மை காணப்படின் எவ்வித வருவாயும் அங்கீகரிக்கப்படுவதில்லை.

**(இ) பங்கிலாப வருமானம்**
கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்கான பங்குதாரரின் உரிமை நிலைநாட்டப்படும்போது, பங்கிலாப வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

**(ஈ) வட்டி வருமானம்**
பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்து நிதியியல் கருவிகளுக்கும் வட்டி வருமானம் அல்லது செலவினம் செயற்திறனான வட்டி முறையினைப் பயன்படுத்தி பதிவுசெய்யப்படுகின்றது.

**(உ) ஏனைய வருமானம்**
ஏனைய வருமானமானது, ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

*2.4.19 செலவின அங்கீகாரம்*
செலவினங்கள், குறிப்பிட்ட உருப்படிகளான வருமான உழைப்பிற்கும் அது தொடர்பாக ஏற்பட்ட கிரயத்திற்கும் இடையேயான நேரடித் தொடர்பின் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வணிகத்தினை நடாத்துவதில் ஏற்பட்ட அனைத்து செலவினங்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஒரு செயற்திறனான நிலையில் பராமரிப்பதிலான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கட்டணப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக் கூற்றினை முன்னிலைப்படுத்தும் நோக்கத்திற்காக "செலவினங்களின் தன்மை" முறையானது இவை குழுமத்தின் செயற்திறனது பிரிவுகளை நியாயமாக முன்னிலைப்படுத்துகின்றன என்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டது.

*2.4.20 கடன் பெறல் கிரயங்கள்*
பின்வருவன தவிர்ந்த கடன் பெறல் கிரயங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் பயன்பாட்டு நோக்கம் அல்லது விற்பனைக்குத் தயாராவதற்கு, கணிசமானளவு காலம் எடுக்கப்படுமாதலால், அதன் கையகப்படுத்தல், கட்டுமானம் அல்லது

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

உற்பத்தி போன்றவற்றிற்காக நேரடியாக உடைமையாக்கப்படக்கூடிய கடன்பெறல் செலவினங்கள் சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்படுகின்றன.

*2.4.21 பிரிவுவாரியான அறிக்கையிடல்*
ஒரு பிரிவு என்பது, ஏனைய பிரிவுகளிலிருந்து வேறுபட்ட இடர்கள் மற்றும் வெகுமதிகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பொருளாதார சூழலினுள் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமத்தின் ஒரு வேறுபடுத்தக்கூடிய கூறாகும்.

குழுமமானது, பல்வேறு நாடுகளில் செயற்படுவதன் நிமித்தம், குழுமத்தின் இடர்கள் மற்றும் விளைவு வீதம் என்பன முக்கியமாகப் பாதிக்கப்படக்கூடிய பூகோள விரிவாக்க செயன்முறைகளின் அடிப்படையில் அதன் பிரதான பிரிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. விற்பனையின் உருவாக்கத்தின் மூலம் பரள்வின் பகுப்பாய்வானது, எந்தப் பிரதேசத்தில் விற்பனை நடைபெற்றதோ அந்தப் பிரிவிற்கு வருவாயினை ஒதுக்குவதன் மூலம் பெறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு நேரடியாக இனங்காண முடியாத செலவினங்கள் வேறுபடுத்தப்படாது வெளிப்படுத்தப்படுகின்றன.

புவியியல் ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களை ஒதுக்குவதில் ஓர் பொருத்தமான அடிப்படை காணப்படவில்லை என முகாமைத்துவம் கருதுகின்றது. இதற்கமைய, புவியியல் ரீதியான பிரிவுகள் மூலம் பிரிவு பிரிவான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய பிரிவு பிரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

வணிகப் பிரிவுகளிலான இரண்டாந்தர அறிக்கையிடலானது, குழுமத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டதாகும். விமானப் போக்குவரத்து மற்றும் அதன் துணை நிறுவனமூடாக விமானத்திலுள்ளான உணவக சேவைகள் என்ற வகையில் குழுமமானது இரண்டு பிரதான வணிகப் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளது.

*2.4.22 கணக்கியல் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்*
குத்தகைக்கு விடப்பட்ட காணிகள் மீதான கட்டிட ஒதுக்குகளில் மீள் மதிப்பீட்டை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் கணக்கீட்டு முறையிலான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, தெரிவு செய்யப்பட்ட குழு, சொத்து பயன்பாட்டின் அடிப்படையில் வருவாய்களைத் தக்க வைத்துக்கொள்வதற்காக, பயன்பாட்டின் ஊடாக ஒதுக்குகளை மீள் மதிப்பீடு செய்வதுடன், தொடர்புபட்ட கணக்கியல் கொள்கைகளின் மாற்றம், குறிப்பிட்ட நிறுவனத்தினுடைய நிதி நிலைமை மீதான கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகள் பற்றி நம்பத்தகுந்த மற்றும் மிகப் பொருத்தமான தகவல்களை வழங்கும் என நம்புகிறது. குறிப்பிட்ட பொருத்தமான கணக்கியல் கொள்கை மேலே குறிப்பிடப்பட்ட குறிப்பு 2.4.3 (d) யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தை குழுமம் பின்நோக்கிய அடிப்படையில் பயன்படுத்துகின்றது.

**2.5 அறிக்கையிடப்படும் திகதியில் செயற்பாட்டிற்கு வராத வழங்கப்பட்டுள்ள புதிய கணக்கீட்டு நியமங்கள்**

குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் வழங்கும் திகதி வரைக்குமாக வழங்கப்பட்டுள்ள புதிய மற்றும் திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் பொருள் விளக்கங்கள் ஆனால், நடைமுறை வருடாந்த அறிக்கையிடப்படும் காலத்திற்கு விளைவுறாதவை கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குழுமமான இந்த புதிய திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் பொருள் விளக்கங்கள், பொருத்தமாயின், அவை அமுலுக்கு வரும்போது கடைப்பிடிப்பதற்கு நோக்கிலுள்ளது.

*2.5.1 நடைமுறை மற்றும் நடைமுறையற்ற என்ற வகையில் பொறுப்புகளை வகைப்படுத்தல் - LKAS 1 க்கான திருத்தம்*
பொறுப்புக்கள், நடைமுறை மற்றும் நடைமுறையற்ற என்ற வகையில் வகுப்பாக்கம் செய்யப்படுவதுடன், LKAS 1 க்கான திருத்தம் தொடர்புபடுகிறது. இந்தத் திருத்தங்களானவை, குறிப்பிட்ட எந்தவொரு நிறுவனத்திற்கும் பொறுப்பினைத் தீர்த்துக்கட்டுதலை ஒத்திப் போடுவதற்கான உரிமையானது, குறிப்பிட்ட நிறுவனத்தினுடைய அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான ஒரு திகதியில் மாத்திரமே நடைபெற வேண்டும் என்ற தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்கத் தேவைப்படுத்துகிறது. ("எதிர்கால உடன்படிக்கைகள்") அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் அத்தகைய உடன்படிக்கைகளுடன் நிறுவனம் இணங்கி நடக்காத போதும், பொறுப்புக்களைத் தீர்த்துக்கட்டுதலை ஒத்திவைக்கும் உரிமை நிறுவனத்திற்கு உள்ளது. இந்தத் தேவைப்பாடுகளானவை, கடன் ஏற்பாடுகளில் இருந்து எழுகின்ற பொறுப்புகளுக்கு மாத்திரம் பொருத்தமுடையதாகும்.

2024 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதியில் இருந்து இத்திருத்தங்கள் அமுலுக்கு வரும்.

*2.5.2 விநியோகத்தர் நிதி ஏற்பாடுகள் - LKAS 7 மற்றும் SLFRS 7 என்பவற்றுக்கான திருத்தங்கள்*
'மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்கள், விநியோகம் தொடர்பான நிதி ஏற்பாடுகளின் பண்புகளைத் தெளிவுபடுத்துவதோடு, அத்தகைய ஏற்பாடுகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், அறிக்கையிடும் காலப்பகுதியின் ஆரம்பம் மற்றும் முடிவில் உள்ளவாறு, அத்தகைய ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட பொறுப்புக்களின் அளவுத் தகவல்கள் மற்றும் அத்தகைய ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட முன்கொண்டு செல்லப்படும் தொகைகளின் காசு அல்லாத மாற்றங்கள் மற்றும் அதனுடைய வகைகள் என்பன உள்ளடங்கலாக, விநியோகத்தர் நிதி ஏற்பாடுகளில் உள்ள பொறுப்புகள் மற்றும் காசுப் பாய்ச்சல்கள் தொடர்பாக ஒரு நிறுவனத்திற்குத் தேவைப்படும் தகவல்களை வழங்குகிறது.

2024 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதியில் இருந்து இத்திருத்தங்கள் அமுலுக்கு வரும்.

*2.5.3 விற்பனை மற்றும் குத்தகைப் பொறுப்பிலுள்ள குத்தகைக் கட்டபாடு - SLFRS 16 க்கான திருத்தம்*
ஒரு விற்பனையாளர் - குத்தகைதாரர், விற்பனை மற்றும் குத்தகை உடன்படிக்கையில் இருந்து எழுகின்ற பொறுப்புகளை அளவிடுவதற்குத் தேவைப்படும் விடயங்களை SLFRS 16 க்கான திருத்தம் குறிப்பாக எடுத்துக்காட்டுகிறது. இத்திருத்தம், குறிப்பிட்ட குத்தகையைப் பயன்படுத்துவதற்கான உரிமையைத் தக்க வைத்துக்கொள்வதில் இருந்து எழுகின்ற ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டத் தொகையை விற்பனையாளர் - குத்தகைதாரர் அங்கீகரிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஒரு விற்பனையாளர் - குத்தகைதாரர் இந்தத் திருத்தத்தின் ஆரம்ப பயன்பாட்டிற்குப் பின்னர் ஈடுபடுகின்ற விற்பனை மற்றும் குத்தகை உடன்படிக்கைகளுக்கு LKAS 8 உடன் சேர்த்து இங்கு குறிப்பிடப்பட்ட திருத்தத்தில் பின்நோக்கிய வகையில் பயன்படுத்த வேண்டும்.

2024 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதியில் இருந்து இத்திருத்தங்கள் அமுலுக்கு வரும்.

*2.5.4 சர்வதேச வரி திருத்தம் - பிலர் இரண்டு மாதிரி விதி - டுமுயுளு 12 க்கான திருத்தங்கள்*
LKAS 12 க்கான திருத்தங்கள், பிலர் இரண்டு வருமான வரிகளுடன் தொடர்புபட்ட வரிச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் ஒத்தி வைப்பதுடன் தொடர்புபட்ட வரிகளை அங்கீகரித்தல் மற்றும் வெளிப்படுத்தல் தொடர்பான LKAS 12 இன் உடைய விதிவிலக்கிற்கு கட்டாயமான திருத்தம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு நிறுவனமானது, ஒத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுடன் தொடர்புபட்ட பிலர் இரண்டு வருமான வரிகளை அங்கீகரித்தல் மற்றும் வெளிப்படுத்தல் தொடர்பான தகவல்களுக்கான விதிவிலக்கைப் பயன்படுத்தியது என்பதை வெளிப்படுத்தும் தேவைப்பாட்டைக் கொண்டுள்ளது.

2024 ஜனவரி 01 ஆம் திகதியோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதியில் இருந்து இத்திருத்தங்கள் அமுலுக்கு வரும்.

*2.5.5 SLFRS 17 காப்புறுதி ஒப்பந்தங்கள்*
இந்த நியமம் குறிப்பிட்ட குழுமத்திற்கு ஏற்புடைத்தாகாது. ஆகவே, இச்சூழ்நிலைகளில் இது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

## 3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

### 3.1 குழுமம்

| | காணியும் கட்டிடங்களும் ரூ. மில். | பொறியும் உபகரணமும் ரூ. மில். | குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. மில். | விமானம் தொடர்பான உபகரணம் ரூ. மில். | முற்பணங்கள் /மூலதன நடப்புவேலை ரூ. மில். | மொத்தம் 2024 ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 6,377.51 | 11,385.89 | 1,951.78 | 10,714.45 | - | 30,429.63 | 26,488.13 |
| கையகப்படுத்தல்கள் /திருத்தங்கள்/ மேம்பாடுகள் | 20.45 | 487.27 | - | 1,161.79 | 0.27 | 1,669.77 | 1,309.33 |
| விற்பனைகள் /ஓய்வுபெறல்கள் | - | (27.80) | (1,379.63) | (351.24) | - | (1,758.67) | (87.99) |
| ஆண்டின்போதான மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - | 5,346.90 |
| **மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல்** | - | - | - | - | - | - | (2,626.73) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 6,397.96 | 11,845.36 | 572.15 | 11,525.00 | 0.27 | 30,340.73 | 30,429.65 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு ஏப்ரல் 01 இல்உள்ளவாறான மீதி** | | | | | | | |
| ஆண்டிற்கான செலவு | 93.99 | 7,938.29 | 1,906.54 | 9,031.09 | - | 18,969.91 | 20,237.39 |
| மீள்வகைப்படுத்தல்கள் | 310.79 | 482.53 | 21.34 | 418.03 | - | 1,232.68 | 1,440.88 |
| விற்பனைகள் /ஓய்வுபெறல்கள் | - | (19.80) | (1,379.63) | (44.90) | - | (1,444.32) | (81.63) |
| மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல் | - | - | - | - | - | - | (2,626.73) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 404.78 | 8,401.02 | 548.25 | 9,404.22 | - | 18,758.27 | 18,969.91 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 5,993.18 | 3,444.34 | 23.90 | 2,120.78 | 0.27 | 11,582.46 | 11,459.71 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

### 3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

**3.2** (அ) 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது கம்பனியின் காணி மற்றும் கட்டடுங்களின் நியாயப் பெறுமதியானது ரஞ்சன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்டு ஒரு மீள்மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்டுவதுடன் துணைநிறுவனத்தின் கட்டடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களது நியாயப் பெறுமதியானது 31 மார்ச் 2023 இல் திரு. ஏ.ஆர்.அஜித் பர்னாந்து, எனும் ஒருங்கிணைக்கப்பட்ட பட்டய மதிப்பீட்டாளர், அவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

**மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள குழுமத்தின் காணி, கட்டடம் மற்றும் ஏனைய பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடுப்பட்டுள்ளன**

| சொத்து | மதிப்பீட்டின் முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ.மி | அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | **திறந்த சந்தைப் பெறுமதி**<br>இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்து நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், அளவு, தன்மை மற்றும் சொத்தின் அமைவிடும் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. | 31 மார்ச் 23 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 20 மில்லியன் | 715.00 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| கட்டிடங்கள் - கொழும்பு /கட்டுநாயக்க | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட** பிரதியீட்டுக் கிரயம்<br>இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது.<br><br>மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் “இறையிலி அடிப்படை” ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். | 31 மார்ச் 23 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 850 - ரூ. 15,000 உரிய காணி குத்தகைகளது இடையூறற்ற தொடர்ச்சியான முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் | 3,804.48 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |

| சொத்து | மதிப்பீட்டின் முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ.மி | அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| ***துணை நிறுவனம்*** | | | | | | |
| கட்டிடங்கள் - கட்டுநாயக்கா | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட** பிரதியீட்டுக் கிரயம்இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான இடையூரற்ற தொடர்ச்சியான முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது.<br><br>மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் ""இறையிலி அடிப்படை"ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். | 31 மார்ச் 23 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூபா 4,000 - ரூபா 12,000<br><br>தொடர்புடைய நிலக் குத்தகைகளைத் தடையின்றித் தொடர்வதற்கான முகாமைக்கு மதிப்பீடு | 1,762.70 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| கீழ்பொறி மற்றும் உபகரணங்கள் உள்ளடங்கலான விமான சமையலறை உபகரணங்கள்- கட்டுநாயக்க | பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம் இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. | 31 மார்ச் 23 | ஒவ்வொரு உபகரணத்திற்கான நியாயப் பெறுமதியானது தேறிய மாற்றீட்டு கிரயத்தினைப் பயன்படுத்திப் பெறப்படுகின்றது | 2,532.03 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு சொத்துக்கள் கொண்டுசெல்லப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை பின்வருமாறு:

| சொத்தின் வகுப்பு | கிரயம் ரூ. மில் | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டிருக்குமாயின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. மில். | தேறிய கொண்டு செல்லல் தொகை 2024 ரூ. மில். | தேறிய கொண்டு செல்லல் தொகை 2023 ரூ. மில். |
|---|---|---|---|---|
| காணியும் கட்டடங்களும் | 1,851.43 | 1,486.13 | **365.29** | 699.26 |
| பொறியும் உபகரணமும் | 2,592.90 | 2,453.42 | **139.48** | 225.60 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

### 3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

(ஆ) இவ்வாண்டின்போது குழுமமானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மொத்த பெறுமதியான ரூ. 1.693.31 மில்லியனுக்கு (2023 - ரூ. 1303.33 மில்லியன்) கொள்வனவு செய்தது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக காசுக் கொடுப்பனவுகளாக ரூ. 1,422.01 மில்லியன் (2023 - ரூ.1,227.76 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டன.

(இ) குழு மற்றும் நிறுவனத்தின் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களில் LKR மொத்தச் சுமந்து செல்லும் தொகையைக் கொண்ட முழுத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் அடங்கும். 15,765.48 மில்லியன் (2023-ரூபா. 15,346. 53 மில்).

(ஈ)வங்கி வசதிகளுக்காக எந்த சொத்து, பொறி மற்றும் உபகரணமும் பிணையீடு செய்யப்படுவில்லை.

#### 3.3 கம்பனி

| | காணியும் கட்டிடங்களும் ரூ. மில். | பொறியும் உபகரணமும் ரூ. மில். | குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. மில். | விமானம் தொடர்பான உபகரணம் ரூ. மில். | முற்பணங்கள் /மூலதன நடப்புவேலை ரூ. மில். | மொத்தம் 2024 ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 4,614.74 | 8,818.04 | 1,951.78 | 10,714.45 | - | 26,099.01 | 23,304.15 |
| கையகப்படுத்தல்கள் /திருத்தங்கள்/ மேம்பாடுகள் | - | 464.77 | - | 1,161.79 | 0.27 | 1,626.83 | 1,248.23 |
| விற்பனைகள் /ஓய்வுபெறல்கள் | - | (19.80) | (1,379.63) | (351.24) | - | (1,750.67) | (87.99) |
| ஆண்டின்போதான மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - | 2,733.06 |
| **மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல** | - | - | - | - | - | - | (1,098.45) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீத** | 4,614.74 | 9,263.01 | 572.15 | 11,525.00 | 0.27 | 25,975.17 | 26,099.00 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 94.01 | 7,902.47 | 1,906.54 | 9,031.09 | - | 18,934.11 | 19,097.87 |
| ஆண்டிற்கான செலவு | 253.31 | 322.09 | 21.34 | 418.03 | - | 1,014.77 | 1,016.32 |
| விற்பனைகள் / ஓய்வுபெறல்கள | - | (19.80) | (1,379.63) | (44.90) | - | (1,444.32) | (81.63) |
| மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல் | - | - | - | - | - | - | (1,098.45) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 347.32 | 8,204.76 | 548.25 | 9,404.22 | - | 18,504.56 | 18,934.11 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 4,267.42 | 1,058.25 | 23.90 | 2,120.78 | 0.27 | 7,470.61 | 7,164.89 |

### 3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

**3.4** (அ) 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது கம்பனியின் காணி மற்றும் கட்டடங்களின் நியாயப் பெறுமதியானது ரஞ்சன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்டு ஒரு மீள்மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. துணைநிறுவனத்தின் கட்டடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களது நியாயப் பெறுமதியானது 31 மார்ச் 2023 இல் திரு. ஏ.ஆர்.அஜித் பர்னாந்து, எனும் ஒருங்கிணைக்கப்பட்ட பட்டய மதிப்பீட்டாளர், அவர்களால் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய மறுமதிப்பீட்டின் முடிவுகள் 31 மார்ச் 2023 முதல் நிதிநிலை அறிக்கைகளில் இணைக்கப்பட்டன.

மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள குழுமத்தின் காணி, கட்டடம் மற்றும் ஏனைய பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடுப்பட்டுள்ளன

| சொத்து | மதிப்பீட்டின் முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ.மி | அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தைப் பெறுமதி இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்து நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், அளவு, தன்மை மற்றும் சொத்தின் அமைவிடும் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. | 31 மார்ச் 23 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 20 மில்லியன் | 715.00 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| கட்டிடங்கள் - கொழும்பு / கட்டுநாயக்க | பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம் இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது.<br><br>மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் “இறையிலி அடிப்படை” ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். | 31 மார்ச் 23 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூபா. 850- ரூபா. 15,000 தொடர்புடைய நிலக் குத்தகைகளைத் தடையின்றித் தொடர்வதற்கான நிர்வாகத்தின் மதிப்பீடு | 3,804.48 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

## 3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு சொத்துக்கள் கொண்டுசெல்ப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை பின்வருமாறு:

| சொத்தின் வகுப்பு | கிரயம் ரூ. மில் | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டி -ருக்குமாயின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. மில். | தேறிய கொண்டு செல்லல் தொகை 2024 ரூ. மில். | தேறிய கொண்டு செல்லல் தொகை 2023 ரூ. மில். |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடம் | 1,246.74 | 1,009.63 | 237.10 | 262.27 |

(ஆ)இவ்வாண்டின்போது குழுமமானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மொத்த பெறுமதியான ரூ. 1,626.83 மில்லியனுக்கு (2023 - ரூ. 1,248.23 மில்லியன்) கொள்வனவு செய்தது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக காசுக் கொடுப்பனவுகளாக ரூ. 1,355.53 மில்லியன் (2023 - ரூ.1,166.66 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டன.

(இ) குழு மற்றும் நிறுவனத்தின் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களில் டுமுசு மொத்தச் சுமந்து செல்லும் தொகையைக் கொண்ட முழுத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் அடங்கும். 15,765.48 மில்லியன் (2023-ரூபா. 15,346. 53 மில்).

(ஈ) வங்கி வசதிகளுக்காக எந்த சொத்து, பொறி மற்றும் உபகரணமும் பிணையீடு செய்யப்படுவில்லை.

## 4. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

### 4.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் அசைவுகள்

| குழுமம | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூ. மில். | காணியும் கட்டிடமும் ரூ. மில். | வாகனங்கள் ரூ. மில். | விமானப் பாவனையாக்கி ரூ. மில். | மொத்தம் 2024 ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 126,389.53 | 2,121.47 | 88.67 | 3,510.95 | 132,110.62 | 130,753.01 |
| சேர்க்கைகள் | 12,795.75 | 2,044.60 | 93.73 | 2,364.69 | 17,298.76 | 1,052.66 |
| விற்பனைகள் | (7,068.24) | - | (1.61) | - | (7,069.85) | (20.44) |
| செம்மையாக்கல்கள் | (80.39) | 14.80 | - | - | (65.59) | 325.39 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 132,036.65 | 4,180.87 | 180.79 | 5,875.64 | 142,273.94 | 132,110.62 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 57,714.28 | 1,242.88 | 75.39 | 2,581.20 | 61,613.75 | 47,944.65 |
| பெறுமானத்தேய்வு | 12,117.89 | 486.14 | 23.60 | 253.57 | 12,881.20 | 13,686.18 |
| அகற்றுதல்கள் | (7,068.24) | - | (0.87) | - | (7,069.12) | (17.08) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 62,763.93 | 1,729.02 | 98.12 | 2,834.77 | 67,425.83 | 61,613.75 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 69,272.72 | 2,451.85 | 82.67 | 3,040.87 | 74,848.11 | 70,496.87 |

| கம்பனி | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூ. மில். | காணியும் கட்டிடமும் ரூ. மில். | வாகனங்கள் ரூ. மில். | விமானப் பாவனையாக்கி ரூ. மில். | மொத்தம் 2024 ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 126,389.53 | 1,499.25 | 88.67 | 3,510.95 | 131,488.40 | 130,077.20 |
| சேர்க்கைகள் | 12,795.75 | 1,972.67 | 93.73 | 2,364.69 | 17,226.84 | 1,052.66 |
| விற்பனைகள் | (7,068.24) | - | (1.61) | - | (7,069.85) | (20.44) |
| செம்மையாக்கல்கள் | (80.39) | 16.65 | - | - | (63.73) | 378.98 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 132,036.65 | 3,488.57 | 180.79 | 5,875.64 | 141,581.66 | 131,488.40 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 57,714.28 | 796.85 | 75.39 | 2,581.20 | 61,167.71 | 47,537.90 |
| பெறுமானத்தேய்வு | 12,117.89 | 439.90 | 23.60 | 253.57 | 12,834.96 | 13,646.89 |
| அகற்றுதல்கள் | (7,068.24) | - | (0.87) | - | (7,069.12) | (17.08) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 62,763.93 | 1,236.75 | 98.12 | 2,834.77 | 66,933.56 | 61,167.72 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 69,272.72 | 2,251.82 | 82.67 | 3,040.87 | 74,648.10 | 70,320.68 |

### குறுங்காலக் குத்தகைகள்

12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குத்தகைக் காலத்தைக் கொண்ட விமானம், நிலம் மற்றும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் குறுகிய கால குத்தகைக்கான சொத்துக்கள் மற்றும் குத்தகைப் பொறுப்புகளை பயன்படுத்துவதற்கான உரிமையை அங்கீகரிக்க வேண்டாம் என்று குழு தேர்வு செய்துள்ளது. இந்த குத்தகைகளுடன் தொடர்புடைய குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலத்தின் மீது நேராக வரி அடிப்படையில் ஒரு செலவாக குழு அங்கீகரிக்கிறது.

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2024 ரூ.மி | 2023 ரூ.மி | 2024 ரூ.மி | 2023 ரூ.மி |
| குத்தகை வாகனங்கள் /உதிரி என்ஜின்களிலான வாடகைகள் | 10,722.70 | 504.44 | 10,722.70 | 504.44 |
| காணி மற்றும் கட்டிடங்களிலான வாடகைகள் | 121.39 | 411.26 | 121.39 | 411.26 |
| வாகனங்களிலான வாடகைகள் | 101.68 | 104.35 | 101.68 | 104.35 |

### குறைவான பெறுமதியுடைய சொத்துக்கள்

குறைந்த மதிப்புள்ள சொத்துகளின் பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகை பொறுப்புகளை அங்கீகரிக்க வேண்டாம் என்று குழுமம் தேர்வு செய்துள்ளது. இந்த குத்தகைகளுடன் தொடர்புடைய குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலத்தின் மீது நேர்கோட்டு முறை அடிப்படையில் ஒரு செலவாக குழு அங்கீகரிக்கிறது.

## 5. விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்

31 மார்ச் 2024 இன் முன்விநியோகக் கொடுப்பனவுகளில் (PDPகள்) 2020 மற்றும் 2021 இல் விநியோகிக்கப்பட்ட நான்கு எயார்பஸ் விமானங்கள் A350-900 விமானங்களுக்காக செய்யப்பட்ட முன்விநியோகக் கொடுப்பனவுகளாகிய ரூபா. 5,774 மில்லியன் (19.21 டொலர்கள்)

வழங்குநருடனான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகராறு தீர்க்கும் பொறிமுறையின் மூலம் சேதங்களுடன் சேர்த்து மேலே உள்ள தொகையை மீட்டெடுப்பதற்கான கோரிக்கையை நிறுவனம் செய்துள்ளது. கௌரவத்தின் ஆலோசனையின் பேரில் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையின் சட்டமா அதிபர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள சொலிசிட்டர்கள் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டனர். செயல்முறைக்கான காலக்கெடு, ஒரு வருடத்திற்கும் மேலாக நீடிக்கும் கட்சிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன்படி, தொடர்புடைய மீதி நடைமுறை அல்லாததாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முன்விநியோகக் கொடுப்பனவுகளின் மீட்பதன் விளைவு நிறுவனத்திற்கு பாதகமாக இருக்கும் என்று நம்புவதற்கு இந்த நேரத்தில் நிறுவனத்திற்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37 இன் 92 வது பந்தியின்படி, இரகசியத் தேவைகள் பராமரிக்கப்பட வேண்டிய தகவலை வழங்க, சர்ச்சை தீர்க்கும் பொறிமுறையின் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் நிறுவனம் கட்டுப்படுத்துகிறது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

## 6. விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

| | குழுமம்/கம்பனி | |
|---|---|---|
| | 2024 ரூ.மி | 2023 ரூ.மி |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 97,765.31 | 75,164.56 |
| சேர்க்கைகள் | 19,484.59 | 21,213.70 |
| மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள் | (22,842.86) | (473.83) |
| மீட்டல்கள் | (6,597.94) | (5,553.66) |
| பரிமாற்றல் இலாபம் | (8,568.18) | 7,414.54 |
| | 79,240.94 | 97,765.31 |
| வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 6.2) | (24,683.38) | (35,791.70) |
| மார்ச் 31 இல் மீட்கத்தக்க தேறிய மீதி (குறிப்பு 6.1) | 54,557.56 | 61,973.61 |

### 6.1 நடைமுறை/ நடைமுறையல்லா வகைப்படுத்தல்கள்

| | மொத்தம் ரூ. மில். | வலுக்குன்றலுக்கான ஏற்பாடு ரூ. மில். | தேறியது ரூ. மில். | ஒரு வருடத்தினுள் மீட்கத்தக்க தொகை ரூ. மில். | ஒரு வருடத்தின் பின்னர் மீட்கத்தக்க தொகை ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **31 மார்ச் 2024 இல் உள்ளவாறான மீதி** | 79,240.94 | (24,683.38) | 54,557.56 | 17,168.29 | 37,389.27 |
| **31 மார்ச் 2023 இல் உள்ளவாறான மீதி** | 97,765.31 | (35,791.70) | 61,973.61 | 18,857.02 | 43,116.59 |

### 6.2 வலுக்குன்றலுக்கான ஏற்பாட்டின் அசைவு

| | குழுமம்/கம்பனி | |
|---|---|---|
| | 2024 ரூ.மி | 2023 ரூ.மி |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 35,791.70 | 27,806.67 |
| இவ்வருடத்தில் ஆட்பட்டது | 11,878.14 | 10,670.39 |
| மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள் | (22,842.86) | - |
| செம்மையாக்கல்கள்* | 3,481.06 | (5,122.39) |
| பரிமாற்றல் நட்டம்/இலாபம் | (3,624.66) | 2,437.03 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 24,683.38 | 35,791.70 |

*செம்மையாக்கலானது என்பது பராமரிப்பு இருப்பு மற்றும் எதிர்கால விமான பராமரிப்பு மற்றும் மாற்றியமைக்கும் நிகழ்வுகளின் அட்டவணை அல்லது நோக்கம் மாற்றங்களின் விளைவாக மாற்றியமைக்கும் செலவு ஆகியவற்றுக்கு இடையேயான விதிகளை மாற்றுவதைக் குறிக்கிறது. குறிப்பு 16இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் மாற்றியமைக்கும் செலவுக்கான ஏற்பாட்டில் இது தொடர்பான சீராக்கம் பிரதிபலிக்கிறது.

## 7. விமானப் பாதுகாப்பு வைப்புகள்

### 7.1 (அ).அசைவு

| | குழுமம்/கம்பனி | |
|---|---|---|
| | 2024<br>ரூ.மி | 2023<br>ரூ.மி |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 8,060.46 | 6,376.95 |
| சேர்க்கைகள் | 1,501.93 | 914.29 |
| செம்மையாக்கல்கள் | - | (379.51) |
| பிரித்தெடுத்தலின் விளைவு | 411.19 | 473.79 |
| மீட்டல்கள் | (345.14) | - |
| பரிமாற்றல் இலாபம்/ நட்டம் | (660.84) | 674.94 |
| | 8,967.60 | 8,060.46 |
| **(b).நடைமுறை /நடைமுறையல்லா வகைப்படுத்தல்** | | |
| ஒரு வருடத்தில் வருமதியானவை | 2,838.31 | 2,346.66 |
| ஒரு வருடத்தின் பின்னர் வருமதியானவை | 6,129.29 | 5,713.80 |
| | 8,967.60 | 8,060.46 |

## 8.அருவச் சொத்துக்கள்

| அருவச் சொத்துக்கள் | குழுமம் | | | | கம்பனி | | | |
